# அணிந்துரை

திரு கே. வி. குணசேகரம் அவர்கள் திருக்குறள் இலக்கிய நூலினை மக்களுக்குப் பல்வேறு வகையிலே வழங்கி வருகிறார். திருக்குறளைச் சிறிய கதைகளுடாக மனத்திலே பதிய வைக்கிறார். 1330 குறள்களுக்கும் இக்காலத்துக்கேற்ற இலகுவான தமிழில் உரை எழுதியுள்ளார். மற்ற உலகம் பற்றி எண்ணாமல் இந்த உலகத்திலேயே எல்லாம் நடைபெறுவதாக வள்ளுவன் எண்ணியது போல புதிய உரை வகுக்கின்றார். இரண்டு எடுத்துக் காட்டுக்கள் காட்டலாம். ‘‘கற்றதனாலாய பயனென்கொள் வாலறிவன் நற்றாள் தொழாஅர் எனின்’’ என்னும் குறளில் ‘‘வால் அறிவன்’’ என்பதற்கு மெய்யறிவுடைய கடவுள் என்று பொருள் கூறுவர் பரிமேலழகர். ஆனால் திரு. குணசேகரம்,

‘‘பேரறிவு மிக்க நல்ல பண்புடையவர்களை

மதிக்காத கல்வியாளனால் எந்தப் பயனும் ஏற்படாது’’

என்று உரை கூறுகிறார். இங்கு ‘கடவுள்’ என்று பொதுவாகக் கூறாமல் எங்கள் கண்ணுக்கு முன்னாலே உள்ள கடவுள் போன்ற பேரறிவு மிக்க நல்ல பண்புடையவர்களைக் குறிப்பிடுகிறார். இதே போன்று ‘‘வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வானுறையும் தெய்வத்துள் வைக்கப்படும்’’ என்னும் திருக்குறளுக்குப் பொருள் எழுதும் போது பின்வருமாறு கூறுகிறார்.

‘‘அறநெறிக்குட்பட்டு இவ்வுலகில் வாழும் இல்வாழ்வான்,

வானுலகில் வாழும் தெய்வங்களைப் போலப் போற்றப்படுவான்’’

இக்குறளில் ‘‘வானுறையும் தெய்வம்’’ என்பதற்கு ‘‘வானின்கண் உறையும் தேவர்கள்’’ என்று பரிமேலழகர் பொருட்கூறுகிறார். ஆனால் திரு குணசேகரம் அந்தத் தெய்வத்தை மண்ணுலகிலேயே வைத்துவிடுகிறார். இது எங்களால் உடனடியாக விளங்கிக் கொள்ளக் கூடியதாக உள்ளது.

திருக்குறளுக்குப் பல நூற்றாண்டுக்கு முன்னரே உரைகள் எழுதப்பட்டன. இருபதாம் நூற்றாண்டில் திருக்குறள் சுயமரியாதைக் கழகங்களுக்கும் தமிழ் மேம்பாட்டுக் கழகங்களுக்கும் வழிகாட்டியாக அமைந்தது. குறட்பாக்களை எல்லோரும் இலகுவாக விளங்கிக் கொள்ளுதற்காக எளிமையான உரைகள் எழுதப்பட்டன. டாக்டர் மு. வரதராசன் எழுதிய தெளிவுரை நூல் பல நூறு ஆயிரங்களாக அச்சிடப்பட்டன. இன்று எம்முடைய பண்டைய இலக்கியங்கள் மீள்பார்வைக்குள்ளாகின்றன. மறு வாசிப்புகளுக்கு உள்ளாகின்றன. திரு. குணசேகரத்தினுடைய திருக்குறள் உரை இத்தகையதே. ஓர் எடுத்துக்காட்டினைத் தருகிறேன்.

‘‘தெய்வந் தொழாஅள் கொழுநன் தொழுதெழுவாள்

பெய்எனப் பெய்யும் மழை'' என்னும் திருக்குறள் இப்பொழுது மறு வாசிப்புக்கு உட்பட்டுள்ளது. பரிமேலழகர் இக்குறளுக்கு

''வேறு தெய்வத்தை வணங்காது கணவனைத் தொழுது எழுபவள் 'பெய்' என்று சொல்ல மழை பெய்யும்'' என்று உரை கூறினார். இருபதாம் நூற்றாண்டின் இறுதிப் பகுதியில்,

'' அவள் எத்தெய்வத்தை தொழுவதில்லை. தன்னுடைய கணவன் தன்னைத் தொழ எழுவாள். அவள் பெய் என்று சொல்ல மழை பெய்யும்'' என்று புத்துரை சொல்லப்பட்டது. திரு. குணசேகரம் இவையிரண்டினின்றும் வேறுபட்டு, ''தெய்வத்தைப் போல தன் கணவனை மதித்து நடக்கும் பெண் பெய் என்று சொல்லும் போது பெய்யும் மழைக்கு ஒப்பானவள் ஆவான்'' என்று புதிய உரை கூறுகிறார்.

திரு. குணசேகரத்தின் திருக்குறள் உரைமுழுவதும் தூய்மையான தமிழிலேயே எழுதப்பட்டுள்ளது. இதற்காக அவர் புதிய தமிழ்ச் சொற்களை ஆக்கவில்லை.எம்முடைய மொழியின் இயல்பான தமிழ் வழக்கையே கையாண்டுள்ளார். இப்பண்பினை எல்லா உரைகளிலுமே காணக்கூடியதாயுள்ளது.

எம்மையும் எம் மொழியையும் உலகுக்குத் தந்துள்ள திருக்குறளை மக்கள் மயப்படுத்த எண்ணுபவர்களுள் திரு. குணசேகரமும் ஒருவர். அவர் பணிக்கு நாம் தலை வணங்குகிறோம். வாழ்த்துகிறோம். இந்நூலை வெளியிடுபவர்கள் தமிழ்த் தாய்க்குத் தொண்டு செய்பவர்கள். அவர்களுக்கு நாம் நன்றி கூறுகிறோம்.

பேராசிரியர் கலாநிதி அ. சண்முகதாஸ்
பணிப்பாளர் ∴ ஊடக வளங்கள் மற்றும் பயிற்சி மையம்
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.

# என்னுரை

நாவலரது கல்விப்பணியை நல்ல முறையில் செய்து முடித்துள்ளேன். அதன்பின் நாவலரது இலக்கிய, சமயப்பணியைகளைத் தொடர்கின்றேன். அதற்கு மக்களின் ஆதரவு என்றும் வேண்டும்.

திருக்குறள் கதைகள் என்ற எனது நூலுக்கு ஆதரவு பெருகிவருவதை எண்ண மிகவும் மகிழ்ச்சியாக உள்ளது. தழிழகத்திலும் இலங்கையிலும் உள்ள அறிஞர்கள் பலர் திருக்குறள் கதைகளைப் போற்றியுள்ளனர். அதற்குச் சான்றாக மணிமேகலைப் பிரசுரத்தின் பதிப்புரை விளங்குகிறது. பேராசிரியர் கலாநிதி அ. சண்முகதாஸ், பணிப்பாளர், ஊடகவளங்கள் மற்றும் பயிற்சி மையம், யாழ்ப்பாண பல்கலைக்கழகம். பேராசிரியர் நா. சுப்பிரமணியன், பேராசிரியர், எஸ். சிவலிங்கராசா, தமிழ்துறைத் தலைவர் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகப் புறநிலைப் பிரிவுத் தலைவர் டாக்டர் மா. வேதநாதன், கல்வியியல் கல்லூரி உபபீடாதிபதி, திரு. பா. தனபாலன் போன்றோரும், ஈழத்தின் தலைசிறந்த நாவலாசிரியர் செங்கை ஆழியான் அவர்களும் தந்த அணிந்துரைகள் சாட்சியாக மிளிர்கின்றன.

இக்கதைகளை நல்ல முறையில் கணினியில் பதிவு செய்து தந்த கந்தர்மடம் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த ராஜ் கொம்பியூட்டர் பிறிண்டிங் சென்ரருக்கும், கணனி உதவி புரிந்த யாழ்ப்பாண வலய ஆசிரியர் வள நிலையக் கருத்திட்ட முகாமைத்துவ உதவியாளர் திரு.கி. துஷ்யந்தனுக்கும் இதை உலகெங்கும் பெரு விழாக்களில் வெளியீடு செய்து வரும் மணிமேகலைப் பிரசுரத்தினருக்கும், அதன் முகாமைப் பணி - ப்பாளர் திரு. ரவி தமிழ்வாணன் அவர்களுக்கும் நன்றி கூறிக்கொள்கிறேன்.

கே.வி. குணசேகரம்.
கோட்டக்கல்விப் பணிப்பாளர்,
நல்லூர்,
ஸ்ரீலங்கா.

# இருகண்கள்

ஏமநாதன் நந்தவனத்திற்கு வந்தபோது அவருடன் பிரதம குருவும், புலவரும், பண்டிதர்களும், முனிவர்களும் அங்கு வந்தனர். நந்தவனத்தில் பரந்து வளர்ந்திருந்த பெரியதொரு விருச்சத்தின் கீழ் இருபது பேர் அமரக்கூடிய ஆசன வசதிகள் செய்யப்பட்டிருந்தன. வெங்கடேசரும் அரசகேசரியும் அரசனையும் பிரதம குருவையும் வணங்கினர்.

“அமைச்சரே ! பல காலமாகக் கோயில்களும் வேதாகமப் பாடசாலைகளும், பாடசாலைகளும் மூடப்பட்டிருந்தன. சிற்சில நாட்கள் அவை திறக்கப்பட்ட போதும் சேவையாற்றவில்லை. தமக்கு வழங்கப்படும் மானியங்களுக்காகத் திறக்கப்பட்டனவே தவிரச் சேவை புரிவதற்காக அவை திறக்கப்படவில்லை. நாட்டின் உயர்வுக்குக் காரணமாக இருப்பது கல்வி. மன உறுதியையும், நம்பிக்கையையும், சாதிக்க வேண்டுமென்ற உணர்வையும், ஆராய்வையும் கொடுப்பது தான் கல்வியின் நோக்கமாகும். ஒரு நாட்டின் வீழ்ச்சிக்குக் காரணம் பள்ளிகள் ஒழுங்கான கல்வியைக் கொடாமையே ஆகும். கல்வி மனிதனை வாழ வைக்கவேண்டும் மனதை ஒரு நிலைப்படுத்தும் ஆற்றலைக் கொடுக்க வேண்டும் ஆராய்ந்து அறியும் தன்மையை உண்டாக்க வேண்டும் மன உறுதியையும் வலிமையையும் நாட்டுப் பற்றையும் உண்டாக்க வேண்டும். அத்தகைய கல்வி போதிக்கப்படாமையால் தான் இந்த நாடு தாழ்த்தப்பட்டது. எல்லா விதமான அறிவும் மனிதனுக்குள்ளேயே உள்ளதென வேதாந்திகள் கூறுகிறார்கள். அதை மிளிரச் செய்வது அரசின் கடமை. பொருட்சிறப்பால் புகழ்பெற்ற பல நூல்கள் எம்மிடமுள்ளன. வேறெந்த மொழியிலுமில்லாத அளவு சிறப்பான பண்புகளை விருத்தி செய்யும் நூல்கள் பல எம்மிடமுள்ளன. அவற்றை நாம் கற்பித்தல் வேண்டும். கறிக்குதவாவற்றைக் கழித்துவடுவதைப் போல கற்றலுக்குதவாத நூல்களையும் கழித்துவிடல் வேண்டும். கொலையும் கொள்ளையும் விபச்சாரமும் மலிந்து விட்ட நிலையில்தான் நாம் இன்று இந்த நாட்டைப் பொறுப்பேற்றுள்ளோம். மிகவும் அவதானமாகக் கல்வி நடவடிக்கைகளை முன் எடுப்பதன் மூலம் தான் மக்களைத் திருத்தமுடியும். அரசன் நீதி நூல்களைத் தன்கண்களாகக் கருத வேண்டும். எனவே இங்கே இருப்பவர்கள் நீதி நூல்களை மக்களுக்குக் கோயில்களிலும், பாடசாலைகளிலும் மடங்களிலும் கற்பித்தல் வேண்டும்” என்றான் ஏமநாதன்.

“ உண்மை மன்னவா! நாம் நீதி நூல்களைக் கற்பிக்காமல் விட்டதும் அரசன் கற்றலில் ஆர்வமில்லாமல் இருந்தமையும் தான் நாடு இந்த இழிவான நிலைக்குச் செல்லக் காரணமாக இருந்தது. பழி பாவங்களுக்கு அஞ்சாமல் ஒரு மனிதன் வாழ்வானானால் அவனது குடும்பம் மட்டுமல்ல நாடும் பாழாகிவிடும். எனவே நீதிநூல்களைக் கற்பித்தலை நாம் வரவேற்கிறோம்'' என்றார் பிரதம குரு.

‘‘நன்று... நன்று இன்றே தொடங்குவோம். மன்னர் முரசு மூலம் இதை மக்களுக்கு அறிவித்தல் வேண்டும்.“ என்றார் புலவர்.

“சேனாதிபதியாரே, அதற்கான நடவடிக்கைகளை உடனே எடுங்கள்” என்றான் ஏமநாதன்.

‘‘உடனே முரசறைந்து அறிவிக்க ஏற்பாடுகள் செய்கிறேன். அத்துடன் தம் பொருளால் சிறப்புப்பெற்ற நூல்களையும் ஒற்றர்களையும் அரசன் தனது இருகண்களாகக் கொள்ளல் வேண்டும் என்பார்கள். தற்பொழுது நீதிநூல்களைக் கற்பிப்பது பற்றி முடிவு எடுத்தாயிற்று. ஒற்றர்களை நியமித்து அவர்களது திறமைகளை வளர்க்க நடவடிக்கைகளை மேற்கொள்ளப்படல் வேண்டும்“ என்றார் அரசகேசரி.

“நீதி நூல்களும், ஒற்றர்களும் மன்னரின் இருகண்கள் என்பதை நான் ஒத்துக் கொள்கிறேன். மதிநுட்பம் வாய்ந்த ஆசிரியர்களைப் போல நுட்பமாக ஆராய்ந்தறிந்து பதட்டப்படாது ஐயமின்றி முடிவுவெடுக்கக்கூடிய பல ஒற்றர்களை அரசன் கொண்டிருத்தல் வேண்டும். அதற்கான ஏற்பாடுகள் யாவற்றையும் செய்துள்ளேன். முப்படைத்தளபதிகளும் அதற்கான பயிற்சிகளை மேற்கொள்வார்கள். சிறந்த ஒற்றர்களைக் கொண்டிராத அரசன் இலகுவாக வீழ்ச்சியடைந்து விடுவான். அறிஞரின் புத்திக்கூர்மைக்கு நிகரானவர்கள் தான் ஒற்றர்கள். எனவே அவர்களுக்கு நீதிநூற் கல்வியும், சட்டக்கல்வியும், சமயக் கல்வியும், போர்ப்பயிற்சியும் அளித்தல் வேண்டும். இதற்கான ஏற்பாடுகள் யாவும் பூர்த்திடைந்து விட்டன.” என்றான் ஏமநாதன் அதைக்கேட்டு வெங்கடேசர் பூரிப்புடன் சிரித்தார்.

**581. ஒற்றும் உரைசான்ற நூலும் இவைஇரண்டும்**
**தெற்றென்க மன்னவன் கண்.**

ஒற்றர்களையும் புகழ்பெற்ற நீதி நூல்களையும் அரசன் தன் இருகண்களாகக் கருதுதல் வேண்டும்.

## அரசனின் கடமை

வெங்கடேசரும் அரசகேசரியும் மன்னரும் மட்டுமே நந்தவனத்தில் இருந்தனர். புலவரும் பிரதம குருவும் ஏனையோரும் சென்றுவிட்டனர். மன்னன் மிகவும் மகிழ்வுடன் இருந்தான். “முதலமைச்சரே, சில தினங்களுக்கு முன் நான் மிகவும் கவலைப்பட்டவனாக இருந்தேன். இன்று நாட்டு மக்கள் கொடுங்கோலனிடமிருந்து விடுதலை பெற்று மிகவும் மகிழ்வுடன் வாழ்கிறார்கள். அதை நினைக்க எனக்கு மிகவும் மகிழ்ச்சியாக இருக்கிறது. மிகவும் துன்பப்பட்ட எமது நாட்டு மக்களுக்கு ஒழுங்கான கல்வியைப் போதித்து, அவர்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்தப்பாடுபடல் வேண்டும். இது இப்பொழுது செய்ய வேண்டிய முக்கிய சேவையாகும். உயர்ந்த சிந்தனைகளை மக்களது மனங்கள் தாமாகச் சிந்தித்து செயலாற்ற வழிவகைகள் செய்தல் வேண்டும். அந்த நிலையை அவர்கள் அடைந்துவிட்டால் மற்ற நன்மைகள் எல்லாம் தாமாகவே அவர்களை வந்தடையும்.

அவர்கள் கல்விக்கூடங்களை நாடிவராவிட்டால், கல்விக்கூடங்கள் அவர்களிருக்கும் இடங்களுக்குச் செல்லுதல் வேண்டும். இப்பொழுது ஒற்றர்கள் பலரை நியமித்து மக்களின் கல்வி, ஒழுக்கம், நடவடிக்கைகளை அவதானித்து வரும் படி கூறியுள்ளேன்" என்று கூறிவிட்டு நிறுத்தினான் ஏமநாதன்.

"மக்கள் என்றுமில்லாதவாறு உற்சாகமாக உள்ளனர். மகிழ்வுடன் இருக்கும் ஒருவன் அடுத்தவர்களுக்குத் தீமை செய்யவோ, தீய செயல்களில் ஈடுபடவோ மாட்டான். அதிசயிக்கத்தக்க பல சக்திகள் மனிதனுள் உறங்கிக் கிடக்கின்றன. அவற்றை வெளிக்கொண்டு வருதல் வேண்டும். அதற்கான திட்டங்களைத் தயாரித்து முன்னெடுக்கத்தக்க நிபுணத்துவக் குழுவொன்றை அரசர் நியமித்தல் வேண்டும்" என்றார் வெங்கடேசர்.

"யாவற்றையும் செய்ய நான் தயாராக இருக்கிறேன். ஒற்றர்களை நாடு முழுவதற்கும் அனுப்பியுள்ளேன். அவர்கள் எல்லாரிடத்திலும் நிகழ்கின்ற எல்லா நிகழ்ச்சிகளையும் உடனுக்குடன் அறிந்து வந்து என்னிடம் தெரிவிப்பார்கள். ஒவ்வொரு மனிதனும் ஒவ்வொரு எரிமலையைப் போன்றவன். எரிமலையின் உள்ளே கனன்று கொண்டிருக்கும் தீ ஒரு காலத்தில் பற்றி எரிவதைப் போல மனித மனங்களில் பல்வேறு வகையான உணர்வுகள் எரிமலையாகக் குமுறிக் கொண்டிருக்கின்றன. அதை குமுற விடக்கூடாது. அதனால் மாறுவேடந்தாங்கிய ஒற்றர்கள் பலர் மக்களுடன் மக்களாக இருந்து அவர்களது உணர்வுகளைப் புரிந்து எனக்கு அறியத்தருவார்கள். அவர்களின் தகவல்களுக்கேற்ப நடவடிக்கைகளை எடுக்கலாமென நினைத்திருக்கிறேன்"

"திருநகரில் அருளாளன் என்பவன் நந்தி தேவனைக் கடவுளாக நினைத்திருக்கிறான். பல வருடங்களுக்கு முன்பு தான் செய்யாத கொலைக்காக அவன் தண்டனை அனுபவித்திருகிறான். அவன் வீரன். அவனது திறமைகளை அறிந்த கதிர்வேலவன் நந்தி தேவனுக்கு அவனை அறிமுகஞ் செய்து வைத்திருக்கிறான். அவனை நந்தி தேவன் பருத்தி மலைக்கு அனுப்பி உளவுபார்த்திருக்கிறான். அதனால் அவனுக்கு அதிக சம்பளம் வழங்கியுள்ளான். அதனால் அவன் என்னைக் கோபிக்கிறான். அவனுக்கு நண்பர்கள் பலர். எல்லோருக்கும் நான் தீயவனாக இருக்கிறேன். அத்துடன் தாராக்குளத்தில் வசிக்கும் நாட்டு வைத்தியருக்கு நந்திதேவன் ஏராளமான நிலம் மருந்துச்செடிகொடிகளை வளர்க்கக் கொடுத்துள்ளான். அவர் தான் சிறந்த மூலிகைகளை அரண்மனைக்ககுக் கொடுப்பவர். அவரது சீடர்களும், அவரது வாடிக்கையாளரும் அவரோடு சேர்ந்து என்னை எதிர்க்கிறார்கள். வானம்பாடிக் கிராமத்தில் வாழும் திருடர்கள் சிலர் கதிர்வேலவனின் நண்பர்கள். தாம் கொள்ளையடிக்கும் பொருட்களில் கதிர்வேலவனுக்குப் பங்கு கொடுப்பவர்கள். இப்பொழுது அவர்களால் கொள்ளையிட முடியவில்லை. அதனால் அவர்கள் மக்களைத் துன்புறுத்துகின்றனர். இலகடி என்ற கிராமத்தில் வாழும் வணிகர்கள் கள்ள வியாபாரஞ் செய்பவர்கள். இவர்களால் இப்போது கள்ள வியாபாரஞ்செய்ய முடிவதில்லை. இதனால் என்னை வெறுக்கின்றனர். இவர்களை விடப்பலதில்லுமுல்லுகளைச் செய்யும் பலர் பாதிக்கப்பட்டுள்ளனர். அவர்களின் நீண்ட

பட்டியலொன்று என்னிடமுண்டு. இவர்களைத் திருத்த வேண்டும். இல்லாவிட்டால் தண்டனை அளிக்கப்படல் வேண்டும். தொடர்ந்து அவர்களை ஒற்றர்கள் அவதானித்து வருகிறார்கள்" என்றான் ஏமநாதன்.

"எல்லா இடங்களிலும் நடக்கின்ற எல்லா நிகழ்ச்சிகளையும் ஒற்றர்கள் மூலம் அறிந்து கொள்ளும் அரசன் தான் சிறந்தவன்" என்றார் வெங்கடேசர்.

**582. எல்லார்க்கும் எல்லாம் நிகழ்பவை எஞ்ஞான்றும்**
**வல்லறிதல் வேந்தன் தொழில்.**

எல்லாரிடத்திலும் நிகழ்கின்ற எல்லாவற்றையும் எக்காலத்திலும் ஒற்றரைக் கொண்டு விரைவாக அறிந்து கொள்வது அரசனது தொழிலாகும்.

## வெற்றி பெறும் வழி

"தொடர்ந்து ஒருவனை அவதானிப்பதன் மூலம் அவனது நிலையை நாம் உணர்ந்து கொள்ள முடியும். உணர்ந்து கொண்ட பின் அவனது மனதில் உருவாகி, அவனைச் செயற்படுத்திக் கொண்டிருக்கும் தீய எண்ணங்களைக் களைவதற்கு முயற்சி எடுத்தல் வேண்டும். எப்பொழுதும் எந்த மனிதனும் தீயவனாக இருக்கமாட்டான். அவன் வாழ்நாளில் ஓரிரு தடவையேனும் நல்லதைச் சிந்தித்திருப்பான். நான் முன்பு குறிப்பிட்டோர் நந்திதேவனால் நன்மையடைந்து இருக்கிறார்கள். கடமைப்பட்டவன் உதவியவனைத் தீயவனென்று ஏற்றுக்கொள்ள மாட்டான். மீண்டும் மீண்டும் நல்ல கருத்துக்களைச் சொல்லுவதன் மூலம் அவனைத் திருத்தலாம். இடையறாத முயற்சியின் மூலம் அவனிடம் குடிகொண்டிருக்கும் தீய குணங்களை விலக்க முடியும். ஒருவனைத் திருத்த வேண்டுமானால் அவன் செய்த குற்றங்களைப் பற்றிப் பேசக்கூடாது. எந்த ஒரு மனிதனும் தொடர்ச்சியாக இல்லாவிட்டாலும் என்றோ ஒரு முறை குற்றங்களைச் செய்திருப்பான். அவனது குற்றங்களைப்பாராது அவன் செய்த நல்ல செயலலொன்றைப் பார்க்க வேண்டும். அச்செயல் அவனது நல்ல இயல்பை வெளிப்படுத்துவதாக இருக்கும். அந்தச் செயலினூடாக அவனைத் திருத்தி உயர்ந்த நிலைக்குக் கொண்டு வரலாம் என்று நான் நினைக்கின்றேன்." என்றான் ஏமநாதன்.

"உண்மைதான் அரசே! எந்த ஒரு மனிதனும் தீயவனாகப் பிறப்பதில்லை. அவன் சேரும் இனந்தான் அவனை மாற்றியமைக்கின்றது. பன்றியோடு சேர்ந்த கன்றும் மலம் தின்னும் என்பார்கள். சந்தண மரத்திற்கு அருகே நிற்கும் மரங்கள் யாவும் சந்தணவாசம் வீசும் என்றும் சொல்வார்கள். தீயவர்களைத் தொடர்ந்து தீயவழியிற் செல்லவிடுவதோ அல்லது அவர்களைப் பிடித்துத் தண்டனை வழங்குவதோ நன்மை தராது. அவர்களைத் திருத்தி நற்பிரஜைகளாக்குதல் வேண்டும். நீங்கள் மிகுந்த புத்திசாலித்தனமுள்ள மன்னர். அதனால்தான் இப்படிச் சிந்திக்கிறீர்கள். ஒற்றர்கள் மூலம் நாட்டில் நடைபெறும் நிகழ்ச்சிகளை ஆராய்ந்து, அவற்றிற்கேற்ப

நடவடிக்கைகள் எடுக்காவிட்டால் அரசன் நாட்டை நல்லபடி அரசாள முடியாது. அவனால் எதிரிகளை வெல்ல முடியாது" என்றார் அரசகேசரி.

"தராக் குளத்தில் வசிக்கும் நாட்டு வைத்தியன், தனது நண்பர்களுடன் சிவபுரிக்குத் தப்பிச் சென்றுவிட்டான். ஆனால் சிவபுரியில் அவன் கைதுசெய்யப்பட்டு விட்டான். எம்மைப் பகைக்க விரும்பாத சிவபுரி அரசன் அவர்களைக் கைது செய்து எம்மிடம் ஒப்படைத்து விட்டான். அந்த வைத்தியனை நான் சிறையில் இன்று சந்தித்தேன். மாறு வேடத்தில் நான் சென்று அவனுடன் உரையாடினேன். அவனுக்கு நந்தி தேவன் பல உதவிகளைச் செய்துள்ளான். அரச சபைக்கு வேண்டிய மருத்தவ மூலிகைகள் அனைத்தையும் அவனே அரசனுக்குக் கொடுத்து வந்தான். பருவ மழை பொய்த்த போது மூலிகைச் செடிகள் அழியாமல் இருப்பதற்காக மகத நாட்டிலிருந்து நீர் பெற வசதிகள் செய்து கொடுத்திருக்கிறான். அந்த நீர் மூலம் அவ் வைத்தியன் ஏராளமான பணத்தைச் சம்பாதித்திருக்கிறான். அவன் இரவுவேளைகளில் பெரும் பெரும் பணக்காரர்களுக்கு நீரைக்கொடுத்து விட்டு பெரும் தொகையான திரவியங்களைப் பெற்றுள்ளான். அதனால் தனக்கு நாம் தண்டனை கொடுத்துவிடுவோ மெனப் பயந்து சிவபுரிக்குத் தப்பிச் சென்றிருக்கிறான். என்னை அவனுக்கு அடையாளங் காட்டாமல், நான் அவனுக்கு நல்வற்றை எடுத்துரைத்தேன். அரசரிடம் சொல்லி மீண்டும் மூலிகைச் செடிகள் பயிரிட அனுமதி பெற்றுத்தருகிறேன் என்றும் சொன்னேன். அவன் அதற்கு ஒத்துக்கொள்ளவில்லை. அவனைத்திருத்துவது கஷ்டம் போலத் தெரிகிறது. அதனால் அவனைச் சிறையிலே அடைத்துள்ளேன்." என்றான் ஏமநாதன்.

"அவன் மிகவும் பொல்லாதவன். கருணை என்பதே அவனது மனதில் இல்லை. அவனைத் திருத்தமுடியாது. அவன் வைத்தியம் என்ற போர்வையில் பல சமூகவிரோத நடவடிக்கைகளில் ஈடுபட்டவன். அதனால் அவனைக் கைது செய்து விசாரிக்க நினைத்திருந்தேன்" என்றார் வெங்கடேசர்.

"இலகடியில் ஒரு போதைப்பொருள் வியாபாரி இருக்கிறான். அவனைக் கைது செய்து விசாரித்தல் வேண்டும்" என்றார் அரசகேசரி.

"அவனைக் கைது செய்தாகி விட்டது. விசாரணை செய்ய வேண்டும்" என்றான் ஏமநாதன்.

அரசகேசரி அதைக் கேட்டுத் திகைத்துப் போனார்.

**583. ஒற்றினான் ஒற்றிப் பொருள்தெரியா மன்னவன்**
**கொற்றம் கொளக்கிடந்தது இல்.**

ஒற்றார் மூலம் நாட்டில் நடைபெறும் நிகழ்ச்சிகளைஅறிந்து அவற்றின் பயனை ஆராய்ந்து அதற்கேற்றபடி செயற்படாத அரசன் வெற்றி பெற வழியே இல்லை.

## ஆராய்பவன்

பொழுதுமெல்லச் சாய்ந்தது. சூரியன் புதைந்து மறைந்து விட்டான். ஏமநாதன் நாவலர் ஸ்ரீவித்தியா மகாகணபதி ஆலயத் தண்ணீர்ப்பந்தலின் கிழக்குப் பக்கமாக நின்ற வேப்ப மர நிழிலில் சோதிடன் போல வேடமிட்டு அமா்ந்திருந்தான். அப்பொழுது அங்கே பிச்சைக்காரனின் உருவில் நக்கீரன் வந்தான். அவன் வெங்கடேசரின் வீட்டில் கூலியாக வேலை செய்து வந்தான். மீண்டும் முதலமைச்சா் பதவியை வெங்கடேசா் ஏற்றுக் கொண்டதும், அவா் விரும்பிய தொழிலாளா்களைத் தெரிந்தெடுக்குமாறு ஏமநாதன் கூறியிருந்தான். பின் அவரின் தொழிலாளி ஒருவனைச் சந்தித்து அவனுக்கு ஏராளமான பொருட்களைக் கொடுத்து அவனை ஒற்றனாக நியமித்திருந்தான்.

“அரசே இன்று காலை முதலமைச்சரின் வீட்டுக்கு அரசகேசரியாா் வந்தாா். இருவரும் தனிமையில் இருந்து வெகுநேரம் பேசிக்கொண்டிருந்தனா். அவா்கள் பேசுவது எனக்குக் கேட்கவில்லை. அத்துடன் நான் கூலியாளாக இருப்பதால் அவா்களுக்குக் கிட்டச் செல்ல முடியாது. நான் அங்கு பணிபுரிபவா்கள் பலருடன் அன்பாகவும் கல கலப்பாகவும் பழகுவேன். அதனால் எல்லோரும் என்னை விரும்புவாா்கள். முதலமைச்சரின் அருகில் இருந்து அவரது பணிகளைக் கவனிக்கும் குமரனோடு நான் நெருங்கிப் பழகுவேன். அவன் இன்று சொன்னான் “வெங்கடேசருக்கு உங்களின் மீது அவ்வளவு பிடிப்பு இல்லையென்றும், நந்திதேவனது தகப்பனாா் மீதும் பாட்டனாா் மீதுமே அவா் விசுவாசம் வைத்திருப்பதாகவும்” கூறினான். ஆனால் அரசகேசரி உங்கள் மீது பூரண விசுவாசம் வைத்திருக்கிறாா். அவா் வெங்கடேசருடன் நட்புப்பூண்டிருந்தபோதும் அவரால் வெங்கடேசரின் மனதை மாற்ற முடியவில்லை என்று கவலையுடன் சொன்னான்”

“எனக்குத் தெரியும். இருந்த போதும் உடனடியாக அவரை மாற்றினால் அவரின் மீது நம்பிக்கை வைத்துள்ள பல பெரிய மனிதா்களுக்கு என்மீது வெறுப்புண்டாகும். நான் கவனித்துக் கொண்டுதானிருக்கிறேன்.” என்றான் ஏமநாதன்.

நக்கீரன் எழுந்து மெல்ல நடந்தான். அவன் கோயிலின் வடக்குப் பகுதிக்கு வந்தபோது தான் வைத்திருந்த நீண்ட தாடியை எடுத்து விட்டான். வடக்கு வீதியில் ஒரு மண்டபம் இருந்தது. திருவிழாக்காலங்களில் அம்மண்டபத்தின் அருகே சுவாமியை நிறுத்தி விட்டு மண்டபத்துள் மேளச்சமா நடைபெறும்.

மன்னன் வருமுன்பு தினகரன் வந்து மன்னருக்காகக் காத்திருந்தான் “அரசே, அரசகேசரியாா் உங்கள் மீது உயிரையே வைத்திருக்கிறாா். தன்னால், தனது உயிா் நண்பனான வெங்கடேசரைத் திருத்த முடியவில்லை. அவா் மன்னருக்குத் துரோஞ் செய்து விடுவாரோ எனப் பயமாக இருக்கிறது. உயிா் நண்பரான அவரைக் காட்டிக் கொடுக்கவும் முடியவில்லை.” என்றாா்.

“சரி, நீ போ” என்றான் ஏமநாதன். தினகரன் சென்று விட்டான். சாமக்கோழி கூவியது. மன்னன் சிவன் கோயிலுக்கு வந்தான். அங்கே வீரா்கள் பலா் நின்றனா். ஏமநாதன் தனது வேஷத்தைக் கலைத்து விட்டு, அரச உடையில் அரண்மனைக்குப்

புறப்பட்டான். அரச சபையைக் கடந்து அரங்கப் பகுதிக்குள் நுழைந்த போது கதிரவன் நின்றான். அவன் வணிகனாக இருந்து உளவு அறிபவன் ''அரசே! உங்கள் நண்பரான தில்லைப் பாண்டியன், உங்களின் மீது காழ்புணர்ச்சி கொண்டுள்ளார். நீங்கள் தன்னுடன் வாணிபம் செய்யும் காலத்தில் பல தீய செயல்களில் ஈடுபட்டீர். பல கப்பல்களைக் கொள்ளையிட்டீர். இப்போது சுந்தரசேனனுக்கு நாட்டை விற்று விட்டீர்கள் என்று தரக்குறைவாக பேசுகிறான்'' என்றான்.

ஏமநாதன் பெருமூச்சு விடான். எத்தனையோ தரம் அவனுக்கு ஏமநாதன் உதவிகள் செய்திருக்கிறான் ''நன்றியில்லா விட்டாலும் செய்யாதவற்றையாவது சொல்லாமல் இருக்கலாம்'' என்று நினைத்தவாறு படுக்கையறைக்குள் நுழைந்தான். அவனுக்கு நித்திரை வர மறுத்தது. அதனால் நிலா முற்றத்துக்கு வந்து உலாவினான். அங்கு காவலுக்கு நின்ற வீரன் ஒருவன் அவனின் அருகே வந்து ''அரசே!'' என்றான்.

''சொல்'' என்றான் ஏமநாதன்.

''உங்களது மைத்துனரின் போக்குச்சரியில்லை. அவரும் வெங்கடேசரும் அடிக்கடி சந்தித்துக் கதைக்கிறார்கள். மெதுவாகக் குசுகுசுக்கிறார்கள். அவதானியுங்கள். நாம்பட்ட கஷ்டம் வீணாகக் கூடாது'' என்றான் அவ்வீரன்.

''தொழில் செய்பவர், சுற்றத்தவர், பகைவர், நண்பர் ஆகிய அனைவரையும் ஆராய்பவன்தான் ஒற்றன். நீ ஒற்றர்களில் சிறந்தவன்.'' என்று பாராட்டினான் ஏமநாதன்.

**584. வினைசெய்வார் தம்சுற்றம் வேண்டாதார் என்றாங்கு**
**அனைவரையும் ஆராய்ந்து ஒற்று.**

தொழில் செய்கிறவர், தமது சுற்றத்தவர், பகைவர் ஆகிய எல்லோரையும் ஆராய்வதே ஒற்றனின் தொழிலாகும்.

### ஒற்றன்.

மகத நாட்டிலிருந்து வெங்கடேசரின் உறவினன் என்று சொல்லிக்கொண்டு சூரியன் என்பவன் வெங்கடேசரின் வீட்டுக்கு வந்திருந்தான். வெங்கடேசருக்கு அவனின் வருகை பிடிக்கவில்லை. எனினும் முன்பிருந்த தொடர்பால் அவனை விலக்கவும் முடியவில்லை. நந்திதேவனது ஆட்சிக் காலத்தில் மகதநாட்டு மன்னன் அவர் மீது அளவற்ற நம்பிக்கை வைத்திருந்தமையால் அவருக்கு ஏராளமான திரவியங்களை அள்ளிக் கொடுத்திருந்தான். நந்திதேவன் நாட்டின் நலன்களையெல்லாம் விட்டு விட்டு இளையராணியில் மயங்கி, அவளே தஞ்சமெனக் கிடந்த போது மங்கள புரியை அவன் கைப்பற்ற முயற்சித்தான். அதற்கு வெங்கடேசரும் ஆதரவளித்தார். ஆனால் பருத்திமலை அரசன் தலையிட்டதால் மகத நாட்டரசன் ஒதுங்கிக் கொண்டான். அதனால் ஏமநாதன் ஆட்சிக்கு வந்தான். ஏமநாதனை வெங்கடேசருக்கு ஏனோ பிடிப்பதில்லை.

''சூரியா! முன்பிருந்த நிலை வேறு. இப்போதுள்ள நிலை வேறு. ஏமநாதன் மதிநுட்பமுள்ளவன். அதனால் எல்லாவற்றையும் இரகசியமாகவே செய்து வருகிறான்.

அவன் எதையும் அரசசபையில் சொல்வதில்லை. அத்துடன் மந்திரி பிரதானிகளுடன் கலந்தாலோசிப்பதும் இல்லை. அவனுக்கு நம்பிக்கையானவர்களாகப் பருத்தி மலையரசரும், அவனது நண்பர்கள் சிலரும் இருக்கிறார்கள். எந்த ஒரு செயலை யார் செய்தாலும் அது அவனுக்குத் தெரிந்து விடும். அதனால் நீ கொஞ்ச நாட்களுக்கு இங்கேவராதே'' என்றார் வெங்கடேசன்.

சூரியன் வந்த நாள் முதல் நக்கீரன் அவனுக்குப் பின்னால் இயன்றவரை செல்வான். அவனது செயல்களைப் பார்க்க சூரியனுக்கு வேடிக்கையாக இருக்கும். மூளை வளர்ச்சி குறைந்தவனைப் போல அவன் இருந்தான். வேலைகளை நன்றாகச் செய்வான். ஆனால், திருத்தமாகச் செய்ய மாட்டான். மூன்று பேர் உண்ணும் உணவை உண்பான். ஒழுங்காகக் குளிக்க மாட்டான். அதனால் வெங்கடேசர் அவனைக் கருத்திற் கொள்வதேயில்லை.

எனினும் சூரியனுக்கு அவன்மீது சந்தேகமிருந்தது. ஒரு நாள் மாலை அவனை அவ்வூர்க் குளத்திற்கு அழைத்துச் சென்றான். இருவரும் குளத்தில் குளிக்கும் போது சூரியன் நக்கீரனை நீருள் அமுக்கினான். அவன் திமிறியபடி நீரைக் குடித்தான். மயக்கமடைந்த நக்கீரனைச் சூரியன் தூக்கி வந்து கரையிற் போட்டான். நக்கீரன் செத்தவனைப்போல நடித்தான். மறுநாள் சூரியன் , நக்கீரனை விசாரித்துப் பார்த்தான். அவன் விசரனைப் போல ஏதேதோ கதைத்தான். இருப்பினும் சூரியனுக்கு அவன்மீது இலேசான சந்தேகமிருந்தது. அதை வெங்கடேசருக்குச் சொன்னான். வெங்கடேசர் வாய்விட்டுச் சிரித்தார் ''மகதநாட்டு ஒற்றன் என்று சொல்ல உனக்கு வெட்கமில்லையா? அவன் வலது குறைந்தவன். முகத்தைப்பார், பேய்அடித்தவன் போல இருக்கிறான். நான் ஏன் அவனைத் தொழிலாளியாகத் தேர்ந்தெடுத்தேன் தெரியுமா? அவனைப் பக்கத்தில் வைத்துக்கொண்டு எதையும் கதைக்கலாம். அது அவனுக்கு விளங்காது. அத்துடன் இருவரின் வேலையைச் செய்வான்'' என்றார்.

''எம்மைச் சுற்றிச்சுற்றி வாறான். நாம் கதைக்கும் போது அவ்விடத்தால் அடிக்கடி செல்கிறான். ஏன் அப்படி நடக்க வேண்டும்.'' ''என்று கேட்டான் சூரியன்.

''உனது தொழில் அப்படி. ஒற்றன் என்பவன் சகலரையும் சந்தேகிக்க வேண்டும் என்பார்கள். அதன்படி நீ நடந்து கொண்டிருக்கிறாய். மூளை வளர்ச்சி குறைந்த அவனால் எதையும் கிரகிக்க முடியாது. நீ பயப்படத்தேவையில்லை'' என்றார். வெங்கடேசர்.

அதன்பின் சூரியன் நக்கீரனைப் பல முறை அவதானித்துப் பார்த்தான். வெங்கடேசர் சொல்வது சரியெனப்பட்டது. அவனைச் சந்தேகித்ததை நினைக்க அவனுக்குச் சிரிப்பு வந்தது.

''சூரியா, இனிமேல் இங்கு வராதே. மகத நாட்டு மன்னருக்கு நான் சொன்னவற்றையெல்லாம் சொல். இங்கு நீ வந்தால் உனது உயிருக்கு மட்டும் அல்ல எனது உயிருக்கும் ஆபத்துஏற்படும். ஏமநாதன் என்னை முழுமையாக நம்பியுள்ளான். பருத்திமலை அரசருக்குப் பயந்து எமது நாட்டைக் கைப்பற்றுவதைக் கைவிட்ட

உங்கள் மன்னா், இப்பொழுது என்ன நோக்கத்திற்காக உன்னை இங்கு அனுப்பியுள்ளாா்'' என்று கேட்டாா்.

நக்கீரனுக்குச் சிரிப்பு வந்தது ''இன்னும் இரண்டு தினங்களுக்குப் பின்புதான் மன்னரைச்சந்திக்க முடியும். அதற்கிடையில் இதை எப்படிச் சொல்வது'' என்று யோசித்தான் நக்கீரன். அவன் கடமையை ஏற்ற போது மன்னன் சொன்னவை அவனது நினைவுக்கு வந்தது ''நக்கீரா, ஒற்றனாக வேலை செய்வது மிகவும் கஷ்டமானது. யாரும் ஐயப்படாத உருவத்தோடும், அச்சமற்ற தன்மையோடும் எந்தச் சூழ்நிலையிலும் உள்ளத்தில் உள்ளவற்றை யாருக்கும் வெளிப்டுத்தாமல் இருக்கக் கூடியவனே ஒற்றன். எனவே நான் சொன்னவற்றை நினைவில் வைத்திரு''

**585. கடாஅ உருவொடு கண் அஞ்சாது யாண்டும்**
**உகா அமை வல்லதே ஒற்று.**

எவரும் சந்தேகிக்க முடியாத உருவத்தோடு, அச்சமற்ற தன்மையோடும் எந்தச் சந்தா்பத்திலும் உள்ளத்தில் உள்ளதை வெளிப்படுத்தாத தன்மையோடும் இருப்பவனே ஒற்றன் ஆவான்.

## காட்டிக்கொள்ளாதவன்

மங்களபுரிச் சிவன்கோவிலில் பல காலமாக ஒரு துறவி இருந்தாா். அவருக்கு நான்கு சீடா்கள் இருந்தனா். அந்த நாட்டு மக்கள் அனைவரும் அவரைச் 'சுவாமியாா்' என்று அழைத்தனா். அவா் யாா்? அவரது பெயரென்ன என்பது யாருக்கும் தெரியாது. அவா் முக்காலமும் உணா்ந்தவா். மங்கள புரியின் அனைத்துப் பிரதேசங்களில் இருந்தும் மக்கள் வந்து அவரைத் தரிசித்து ஆசி பெற்றுச் செல்வா். அவா் மக்களது எதிா்காலத்தைப் பற்றிச் சொல்வாா். நந்திதேவன் ஆட்சி செய்யும் போது, நந்திதேவனது வேண்டுகோளுக்குக்கிணங்கி அவா் மகத நாட்டிற்கும் சிவபுரிக்கும் சென்று வருவாா். நீண்ட நேரம் நிஷ்டையில் இருப்பாா். இரண்டு மூன்று தினங்களுக்கு உணவு உண்ணாமலும் இருப்பாா். அந்த நாட்டு மக்கள் அனைவரும் அவரை நம்பிக்கையுடன் தொழுது வந்தனா்.

ஏமநாதனுக்கு அவரிடம் ஆசிபெற வேண்டுமென்ற ஆசை,அவனது மனதில் இருந்தது. அவன் வாணிபஞ் செய்யும் காலத்தில் அவன் சுவாமியாரிடம் வந்து ஆசி பெற்ற பின்புதான் கடற் பயணத்தை ஆரம்பிப்பான். கடலிற் பயணம் செய்ய வேண்டிய தினங்கள் எவையெவையென அவா் குறித்துக் கொடுப்பாா். அதன்படி தான் அவன் கடற்பயணத்தை மேற்கொள்வான். ஒரு முறை மிகவும் அவசரமாக அவனது கப்பல் அயல்நாடொன்றிற்குச் செல்ல வேண்டிய நிலை ஏற்பட்டது. அன்று சுவாமியாா் கோயிலில் இருக்கவில்லை. அவா் திடீரென்று புறப்பட்டுச் சென்றுவிடுவாா். ஐந்து பத்துத் தினங்களுக்குப் பின்புதான் திரும்பி வருவாா். அதனால் ஏமநாதன் சுவாமியாரை நாலைந்து தினங்களாகக் காணாமையால் அவன் கப்பலில் பொருட்களை ஏற்றி அனுப்பி விட்டான். அந்தக் கப்பலைக் கடல் கொள்ளையா்கள் கடத்திச் சென்று விட்டாா்கள். சுவாமியாா் வந்த பின்பு அவன் அச்சம்பவத்தைச் சுவாமியாரிடஞ்

சொல்லச் சுவாமியார் சொன்னார் ‘‘மகனே உனக்கு முன்பு ஒருமுறை இத்திகதியில் வாணிபஞ் செய்தால் கஷ்டம் ஏற்படும் என்று குறித்துத் தந்துள்ளேன். போய்ப் பார்’’ என்றார். அதன்படி ஏமநாதன் வீட்டிற்குச் சென்று பார்த்தபோது அச்சம்பவத்தைப் பற்றிக் குறிப்பிருந்தது. அன்றுமுதல் ஏமநாதன் சுவாமியாரை தெய்வமாக மதித்து வந்தான். அதனால் அவன் தனது ஒற்றனொருவனுக்குத் தனது விருப்பத்தைப் பற்றி சொன்னான். பத்து நிமிடங்களுக்குள் சுவாமியார் அரண்மனைக்கு வந்து விட்டார். அவன் சொன்ன ஒற்றன் எங்கும் செல்லவில்லை. அது ஏகநாதனுக்கு ஆச்சரியத்தைக் கொடுத்தது.

‘‘அரசே! என்னைச் சிறிது நேரத்திற்கு முன் நினைத்தீர்கள். எனக்கு அது ஞானதிருஷ்டியில் தெரிந்தது. ஆசி வழங்க வந்துள்ளேன். உனக்கு நண்பர்கள் எதிரிகளாவர் எவரையும் நம்பாது உனது வழியில் நட’’ என்று ஆசீர்வதித்து விட்டுக் கோயிலுக்குச் சென்றார் சுவாமியார்.

அன்று இரவு சூரியன் துறவிபோல வேடமிட்டுச் சிவன்கோயிலுக்கு வந்தான். சுவாமியாரின் முக்கிய சீடன் அவன் ‘‘சுவாமியாரே, வெங்கடேசா் அவரது வீட்டில் நான் இருப்பதனால் பயப்படுகிறார். அவர்மீது ஏமநாதனுக்குச் சந்தேகமிருக்கிறது. அதனால் நான் இங்கு சில நாட்கள் தங்கலாமென நினைக்கின்றேன்’’ என்றான்.

‘‘வெளியே செல்லாதே. யாருடனும் கதைக்காதே. மகத நாட்டு ஒற்றனாக நான் பத்து வருடங்களாகக் கடமை புரிகின்றேன். ஏமநாதன் வணிகனாக இருந்தகாலத்திலும் என்னை நம்பியவன். இப்பொழுது முழுமையாக நம்பியுள்ளான். அவனது மாளிகையில் இருவர் எனதாட்கள். அவர்களுள் ஒருவனுக்குத்தான் ஏமநாதன் என்னைச் சந்திக்கவேண்டுமென்று சொன்னனான். அதை அவன் எனக்குச் சொல்லி அனுப்பி விட்டான். அதனால் நான் அங்கு சென்று வந்தேன். ஏமநாதன், அரண்மனைக்கு நான் எந்த வேளையிலும் வரலாமென்றும், எங்கும் செல்லலாமென்றும் கூறியுள்ளான். எனவே அச்சம் கொள்ளத் தேவையில்லை. எமது மன்னரின் திட்டம் விரைவில் நிறைவேறும். ஏமநாதன் புத்திசாலிதான் ஆனால் எனது விடயத்தில் தோற்றுவிட்டான். தகுந்த நேரம் வந்ததும் சில வீரர்கள் வந்தால் போதும். அவனைக் கைது செய்து விடலாம். பருத்திமலை அரசன் கௌசல்ய குமாரியைச் சிறையிலடைத்த பின்பு பழைய உற்சாகமில்லாதவனாகக் காணப்படுகிறான். அவனை இலகுவில் வெல்லலாம்’’ என்றார்.

‘‘செல்லமுடியாத இடங்களுக்கெல்லாம் துறவிக்கோலத்தில் மறைந்து சென்று, ஆராய்ந்து, எத்தகைய இடர்கள் வந்தாலும் தான் இன்னான் என்பதைக் காட்டிக் கொள்ளாதவன்தான் தலைசிறந்த ஒற்றன் என்று எமது குரு கூறுவார். அது உங்களுக்குப் பொருந்தும் . கடந்த பல ஆண்டுகளாக துறவுக்கோலத்தில் மறைந்திருக்கிறீர்கள். உங்களை யாரும் கண்டுகொள்ளவில்லை” என்று சிரித்தான் சூரியன்.

**586. துறந்தார் படிவத்தர் ஆகி இறந்து ஆராய்ந்து**

**என்செயினும் சோர்வுஇலது ஒற்று.**

செல்ல முடியாத இடங்களுக்கெல்லாம் துறவிக் கோலத்தில் மறைந்து சென்று ஆராய்ந்து எத்தகைய துன்பங்கள் நேர்ந்தாலும் மனச்சோர்வு அடையாமல் செயலாற்றுபவனே ஒற்றன்.

## செய்தி அறிபவன்

வெங்கடேசரின் உதவியாளராகப் பணிபுரியும் குமரனுக்கு வெங்கடேசர் மீது சந்தேகம் ஏற்பட்டது. சூரியன் திடீரென்று காணாமற் போய்விட்டான். அவன் முன்பு நந்திதேவன் அரசனாக இருக்கும் போது வெங்கடேசரின் வீட்டில் இருப்பதைக் குமரன் கண்டுள்ளான். அப்போது அவர் அவனுடன் கலகலப்பாகக் கதைப்பார்.அப்பொழுது அவனைத் தனது மனைவியின் உறவினன் என்று காண்பவர்களுக்குச் சொல்வார். இப்பொழுதும் அப்படித்தான் சொல்கிறார். இருப்பினும் அவனைக் காணும் வேளைகளில் அவரது முகத்தில் ஒரு பீதி ஏற்படுவதைப் போலவும், இருவரும் கதைக்கும் போதுஅவன் சென்றால் அவர் தடுமாறுவதையும் உணர்ந்தான்.

“அமைச்சரே! உங்கள் மைத்துனர் சென்றுவிட்டாரா?” என்று பேச்சை ஆரம்பித்தான் குமரன்.

எதிர்பாராத அக்கேள்வியால் வெங்கடேசர் சற்றுத் தடுமாறுவதை உணர்ந்தான் குமரன். தேவையில்லாமல் அவன் அக்கேள்வியைக் கேட்டமையால் அவனின் மீது வெங்கடேசருக்குக் கோபம் வந்தது. அதனால் அவரது முகம் சிவந்ததையும் அவன் அவதானித்தான். எனினும் அவர் அதைக் காட்டிக்கொள்ளாது “அவன் ஒரு நாடோடி. மனைவி, பிள்ளை குட்டிகள், இனத்தவர்கள் என்று சொல்லிக்கொள்ள யாரும் இல்லை. ஊரூராகத்திரிவான், கோயில்களில் தங்குவான். எப்போதாவது எமது நினைவு வந்தால் இங்கு வருவான்” என்று சிரித்தார் வெங்கடேசர்.

குமரன் எதுவும் பேசவில்லை. சில கணங்கள் யோசித்தான். அவனது மனதுள் வெங்கடேசனின் முகத்தில் ஏற்பட்ட மாறுபட்ட உணர்வுகளுக்கு ஏதோ ஒரு காரணம் இருக்கிறது என்று தோன்றியது. அது என்ன என்பதைக் கண்டுபிடித்துவிட வேண்டும். என்று நினைத்ததான். உளவுப் பிரிவில் அவனுக்கு வேலை கொடுத்தபோது ஏமநாதன் சொன்னதுஅவனது நினைவுக்கு வந்தது “குமரா, மறைந்த செய்திகளை, அதாவது பல ஆண்டுகளுக்கு முன் நடந்த சம்பவங்கள் தொடர்பான செய்திகள் மறைந்திருக்கலாம். ஆனால் அவை தற்பொழுது நடைபெறும் சம்பவங்களுடன் தொடர்புடையனவாகவும் இருகலாம். அதனால் அவற்றைக் கண்டு பிடித்து

ஆராய்ந்தறிந்து உறுதிப்படுத்தக்கூடிய வல்லமை உள்ளவனாக இருப்பவன் தான் ஒற்றன். எனவே எந்த ஒரு சிறு நிகழ்வையும் ஆராய்ந்து பார்க்கத் தவறாதே''

வெங்கடேசருடன் முன்பு கதைத்தவற்றை மறந்து கலகலப்பாகக் கதைக்கத் தொடங்கினான் குமரன் ''தங்களின் ஒப்புயர்வில்லாத் திறமைகளை உணர்த்த அரசர் மீண்டும் தங்களுக்கு முதல் அமைச்சர் பதவியைத் தந்து கௌரவித்துள்ளார். நாம், யாரும் அரசர் மீண்டும் உங்களுக்கு முதல் அமைச்சர் பதவியைத் தருவாரென நினைக்கவில்லை. உண்மையில் நீங்கள் திறமைசாலி தான். எல்லோரும் புலவரை, அல்லது பிரதம குருவைத் தான் அரசர் முதலமைச்சராக்குவாரென எண்ணியிருந்தனர்'' என்றான். குமரன்.

மனதில் உள்ள அனைத்து உணர்வுகளையும் மறந்து மகிழ்வுடன் சிரித்தார் வெங்கடேசர் ''நானும் எதிர்பார்க்கவில்லை. அரச சபையில் மன்னர் கூறியதும் மறுத்தேன். மன்னர் பிடிவாதமாக என்னை முதலமைச்சராக இருக்கும் படி கேட்டமையால் ஒப்புக் கொண்டேன். புலவருக்குக் கவிதைபாடத்தான் தெரியும். பிரதம குருவுக்குக் கற்பிக்கத்தான் தெரியும். மதிநுட்பமாகக் காரியமாற்றத் தெரிந்தவர்கள் தான் முதலமைசர்களாக முடியும். நான் சிவன் கோயிலுக்குச் சென்று வருகிறேன்'' என்று கூறிவிட்டுச் சென்றார் வெங்கடேசர்.

குமரன் தனது வீட்டுக்குச் சென்று தனது கறுகறுவெனக் கறுத்திருந்த ஒட்டு மீசையை எடுத்துவிட்டு நடுத்தர வயதுள்ள பிராமண வடிவம் பூண்டு சிவன்கோயிலுக்குச் சென்றான். அங்கு பூசை செய்யும் அந்தணன் தனது உறவினன் என்று வெங்கடேசருக்கு அவனை அறிமுகஞ்செய்து வைத்தார். வெங்கடேசர் சிவனை வணங்கிவிட்டுச் சுவாமியாரிடஞ் சென்றார். தினகரன் அவரைப் பார்த்துக் கண்சிமிட்டினான். சுவாமியார் மகதநாட்டு ஒற்றர் என்பது வெங்கடேசருக்குத் தெரியும். அமைச்சர் சுவாமியாரைத் தரிசிக்கச் சென்றால் சீடர்கள் எல்லோரும் எழுந்து சென்றுவிடுவார். பின் இருவரும் உரையாடுவார்கள். உரையாடல் முடிந்ததும் சீடர்கள் அங்கு வந்து முதலமைச்சருடன் பேசுவார்கள். அன்று எல்லாச் சீடர்களும் சென்ற பின்பு சூரியன் சுவாமியாரோடு இருந்தான். மூவரும் வெகு நேரமாகப் பேசினார். அதை பிராமண உருவில் இருந்த குமரன் கவனித்தான். அவனது நினைவுகள் அவ்விடத்தைச்சுற்றி நின்றன. வெங்கடேசர் சுவாமியின் பாதங்களைத் தொட்டு வணங்கினார். அவர் அப்படி வணங்கினால் அவர்களது உரையாடல் முடிந்துவிட்டதென்று அர்த்தம். அதனால் அந்தணர் குமரனை அழைத்துக் கொண்டுஅங்கே வந்தார்.

''அமைச்சரே! இவன் எனது மனைவியின் சகோதரியின் கணவன். எட்டுப்பிள்ளைகள். குடும்பத்தில் மூதேவி குடியிருக்கிறாள். திடீரென்று இங்குவந்து நிற்கிறான். அவனுக்கேதாவது உதவி செய்யுங்கள். அத்துடன் இங்குள்ள ஒரு கோயிலில் பூசை செய்ய அரசரிடம் அனுமதிபெற்றுக் கொடுங்கள்'' என்று கேட்டார் அந்தணர். வெங்கடேசர் அவனை நிமிர்ந்து பாராது "சரி" என்றார். குமரன் சுவாமியாருக்கு அருகில் இருந்த சீடனைப் பார்த்தான். அவனது இடதுகண் புருவத்தில்

ஒரு காயம் இருந்தது. உற்று அவனது கண்களைப் பார்த்தான். நன்றாகப் பழகிய கண்கள் அதனால் அது சூரியன் என்பதை அவனது மனம் உடனடியாக அறிந்து கொண்டது. இவன் ஏன் சுவாமியாரோடு இருக்கிறான்...?'' என்று நினைத்தவாறு அந்தணரின் வீட்டுக்கு வந்தான் "குருவே எனக்குச் சுவாமியாருடன் இருக்கும் சீடனின் மேல் சந்தேகம் ஏற்பட்டுள்ளது. அவன் முதலமைச்சர் வீட்டில் மைத்துனன் எனத்தங்கியிருக்கும் சூரியன்'' குமரன் வார்த்தைகளை முடிக்குமுன் அந்தணர் சொன்னார்.

"சுவாமியார், முதலமைச்சருடன் கதைக்கும் போது எந்தச் சீடனும் இருப்பதில்லை. இன்று ஒருவன் இருந்தது எனக்குச் சந்தேகத்தைகக் கொடுத்தது. அவன் சூரியன் என்றால் சுவாமியாரிலும் எனக்குச் சந்தேகம் வருகிறது'' என்றார்.

"மறைந்த செய்திகளை எந்தவகையிலும் கேட்டறிந்து கண்டுபிடித்து விடுபவனாகவும், அறிந்த செய்திகளை ஐயம் கொள்ளாமல் உறுதிப்படுத்தக் கூடியவ னாகவும் இருப்பவன் தான் ஒற்றன்'' என்று ஏமநாதன் கூறிய வார்த்தைகள் குமரனின் காதில் ஒலித்தன.

"நிட்சயமாக ஏதோ ஒரு சதி நடைபெறுகிறது. சூரியன் முன்பும் வந்து நின்றவன். வெங்கடேசர் சூரியனுடன் கொண்டுள்ள தொடர்பை வைத்து ஆராய்ந்து பார்த்தால், நந்திதேவனது கையாட்கள் தொடர்ந்து சூழ்ச்சி செய்கிறார்கள்.'' என்று முடிவெடுத்தான் குமரன்.

**587. மறைந்தவை கேட்கவற்று ஆகி அறிந்தவை
ஐயப்பாடு இல்லதே ஒற்று.**

மறைக்கப்பட்ட செய்திகளைக் கேட்டறிய வல்லவனாகவும், அறிந்த செய்திகளால் ஐயப்படாமல் உறுதிப்படுத்திக் கொள்ளக் கூடியவனாகவும் உள்ளவனே ஒற்றன் ஆவான்.

## இருவரின் செய்திகள்

அன்றிரவு குமரன் ஏமநாதனைச் சந்தித்துச் சொன்னான் "அரசே, வெங்கடேசர் மீது எனக்குச் சந்தேகமாக உள்ளது. அவர் நந்திதேவன் மீது விசுவாசமுள்ளவர். அதனால் தான் முன்பு நீங்கள் அவரை முதலமைச்சராகத் தெரிவுசெய்த போது மறுத்தார். பின்பு கால அவகாசங் கேட்டார். அது சிந்திப்பதற்கல்ல. மகத நாட்டரசனுடன் கலந்துரையாடி அவனிடம் ஆலோசனைகளைப் பெறவே. அதன்படி சூரியன் என்பவன் வெங்கடேசரின் மனைவியின் உறவினன் என்று கூறிக்கொண்டு அவரது வீட்டில் வந்து தங்கியுள்ளான். அவனது போக்கில் எனக்குச் சந்தேகமிருந்தது. பின் அவன் சென்று விட்டான். இன்று மாலை நான் சிவன் கோயிலுக்குப் பிராமண வடிவம் பூண்டு சென்றேன். முன்பே அந்தணருக்கு எனது திட்டம் தெரியுமாதலால் என்னை அவர் தனது உறவினன் என எல்லோருக்கும் அறிமுகஞ் செய்து வைத்தார்.

வழமையாகச் சுவாமியார் முதலமைச்சருக்கு ஆசிகூறும் போது தனிமையிலேயே ஆசிகூறுவார். ஆனால் இன்று அவரின் பக்கத்தில் ஒரு சீடன் அமர்ந்திருந்தான். அவன் புதியவன் என்று அந்தணர் சொன்னார். புதியவனான சீடனை வைத்துக்கொண்டு சுவாமியார் முதலமைச்சருக்கு ஆசி வழங்கியது எனக்குச் சந்தேகத்தைக் கொடுத்தது. அதனால் மூவரையும் ஒன்றாகக் காணவேண்டும் என விரும்பி, எனது விருப்பத்தை அந்தணருக்குத் தெரியப்படுத்தினேன். அவர் சுவாமியார் ஆசி கூறிமுடிந்ததும் என்னை அழைத்துக்கொண்டு அவ்விடத்திற்குச் சென்றார். நான் புதிய சீடனை உற்றுப் பார்த்தேன். அவனது இடது கண்புருவத்திலே ஒரு காயம் இருந்தது. அக்காயமுள்ள மனிதனை நான் இதற்கு முன்பு கண்டுள்ளேன். என்று நினைத்துப் பார்த்தேன். அவனது கண்களின் ஓரங்கள் சிவந்திருந்தன. இடது கண்ணில் சிறியவாக்கு இருந்தது. அதனால் அவன் சூரியன் என்பதை இலகுவாக தெரிந்து கொண்டேன். வெங்கடேசருக்கும் மகத நாட்டரசனுக்கும் தொடர்புள்ளது. அது தீமையை விளைவிக்கக்கூடியளவு பலம் பொருந்தாவிட்டாலும் அசட்டை செய்ய முடியாதது'' என்று கூறிவிட்டுச் சென்றான் குமரன்.

ஏமநாதன் சிரித்தான். ''நான் எதை நினைத்து வெங்கடேசரை முதலமைச்சராக்கினேனோ. அது நிறைவேறப்போகிறது'' என்று நினைத்துத் தனது இரகசியப் படைவீரனேருவனை அழைத்து நக்கீரனைத் தன்னை வந்து சந்திக்கும்படி தகவல் அனுப்பினான்.

அதிகாலைவேளையில் நக்கீரன் ஏமநாதனைச் சந்தித்தான் 'நக்கீரா! எனக்கு வெங்கடேசரின் மீது சந்தேகமிருப்பது உனக்குத் தெரியும். இப்பொழுது கோயிலில் இருக்கும் சுவாமியாரின் மீதும் சீடர்கள் மீதும் சந்தேக மேற்பட்டுள்ளது. இன்னும் இரண்டு தினங்களில் பூரணமான தகவல்களுடன் வந்து சந்தி' என்றான் ஏமநாதன்.

நக்கீரன் சென்றுவிட்டான். அன்று வெள்ளிக்கிழமை. சிவன் கோயிலில் மக்கள் வெள்ளம்போலக் கூடிநின்றனர். பூசை முடிவடைந்ததும் முதலமைச்சர் சுவாமியாரிடஞ் சென்று ஆசிபெற்றார். அப்பொழுது நக்கீரன் வந்து அவருக்கு முன்னால் நின்று பரிதாபமாகச் சிரித்தான். ''என்னடா வேண்டும்?'' அதட்டினார் முதலமைச்சர்

நக்கீரன் அசட்டுச்சிரிப்புச் சிரித்தான். அவனது வாயிலிருந்து வீணீர் ஒழுகியது. பற்கள் காவி படிந்து கிடந்தன. இடது கையின் மீது வலதுகையின் மூன்று விரல்களைத் தேய்த்துவிட்டு அதை நெற்றியில் பூசிக் காட்டினான். முதலமைச்சர் சிரித்தார். பின் ''சுவாமியாரிடம் விபூதி பெற்றுப் பூசப்போகிறாயா...?'' என்று கேட்டார். நக்கீரன் வெருளியாகச் சிரித்தபடி பலமாகத் தலையாட்டினான்.

''இந்தக் கிறுக்கனை எப்படி வீட்டில்வைத்துச் சமாளிக்கறீர்கள்''. என்று கேட்டவாறு சுவாமியார் விபூதியை எடுத்து நீட்டினார் ''என்னுடைய கிறுக்குக்குணம் மாற சிவன் அருள்புரிவார்'' என்றவாறு விபூதியைச் சுவாமியாரிடம் பெற்ற நக்கீரன் தனது நெற்றியில் பூசிவிட்டு மிகுதியை முதலமைச்சரின் கால்களில் பூசினான் ''சரியான கிறுக்கன்'' என்று சுவாமியார் நினைத்தார். ஆனால் நக்கீரன் முதலமைச்சரின் அருகே இருந்த புதிய சீடனைப் பார்த்தான். ''அது சூரியன் தான்.''

மறுநாள் இரவு நக்கீரன் ஏமநாதனைச் சந்திக்கச்சொன்னான் ''அரசே புதிய சீடன் வெங்கடேசரின் வீட்டுக்கு வரும் சூரியன்தான். முன்பு வெள்ளிக்கிழமைகளில் மட்டும் சுவாமி தரிசனஞ்செய்யச் சிவன் கோவிலுக்குச் செல்லும் முதலமைச்சர் இப்பொழுது தினமுஞ் செல்கிறார். அதனால் நீங்கள் அவர் மீது கொண்ட சந்தேகம் உண்மையானது''.

''ஓர் ஒற்றன் அறிந்து வந்து சொன்ன செய்தியை, அது சரியானது தானா என்று இன்னொரு ஒற்றனை அனுப்பி அறிந்துவரச் செய்து இருவரது செய்திகளையும் ஒப்பிட்டுப் பார்த்து உண்மையை அறிந்து கொள்வது அரசனது திறமை'' என்று புலவர் கூறியது அவனுக்கு நினைவில் வந்தது.

**588. ஒற்றுஒற்றித் தந்த பொருளையும் மற்றுமோர்**
**ஒற்றினால் ஒற்றிக் கொளல்.**

ஓர் ஒற்றன் மறைந்திருந்து சேகரித்து வந்து தெரிவித்த செய்தியையும் மற்றோர் ஒற்றனை அனுப்பி அது சரிதானா எனக்கேட்டு வரச் செய்து இருவரது செய்தியையும் ஒப்பு நோக்கி அரசன் உண்மையை அறிதல் வேண்டும்.

## மூவரின் செய்திகள்

நகரில் பெரும் வணிகனான மணிமாறன் சிவன் கோயிலுக்கு வந்தான். அவனை வரவேற்கச் சற்றுத் தயங்கினார் அந்தணர். மணிமாறன் ஏமநாதனின் நண்பன். இருவரும் பங்காகப் பலகாலம் வியாபாரஞ்செய்து வந்தனர். ஏமநாதன் பருத்திமலை அரசனோடு சேர்ந்து நாட்டு விஷயங்களில் அக்கறை செலுத்தி வந்தமையால் அவனால் வியாபாரத்தைக் கவனிக்க முடியவில்லை. அதனால் வாணிபத்தின் முழுப்பொறுப்பையும் மணிமாறனிடம் ஒப்படைத்திருந்தான். அதனால் ஏமநாதன் வாணிப நடவடிக்கைகளைக் கவனியாது மணிமாறன் சொல்வதை நம்பி வந்தான். இந்த நிலையில் நந்திதேவன் தனக்கெதிராக ஏமநாதன் சதி செய்கிறான் என்று கூறி அவனைக் கைதுசெய்யுமாறு கட்டளையிட ஏமநாதன் மறைந்து வாழ்ந்தான். இக்காலப் பகுதியில் ஏமநாதனது கப்பலொன்று காணாமற் போய்விட்டதாக மணிமாறன் சொன்னான். முதலில் அதை நம்பிய ஏமநாதன் நாளடைவில் சந்தேகப்பட்டான். அதனால் அரசனானதும் மணிமாறனைக் கைது செய்து சிறையிலடைத்து விசாரணை செய்தான். அன்று மணிமாறனை விசாரித்த அரச சபையினர் மணிமாறன் மீது சுமத்தப்பட்ட குற்றங்களுக்குப் ''போதியளவு சாட்சிகளில்லை'' என்றுகூறி அவனை எச்சரித்து விடுதலை செய்தனர். இருந்தபோதும் அவன் அரசனால் கண்காணிக்கப்பட்டு வந்தான். அவனோடு உறவாடுவோரும் அடிக்கடி விசாரணை செய்யப்பட்டு வந்தனர். அதனால் அந்தணர் அவனைக் கண்டதும் விலகிச்செல்லப் பார்த்தார்.

“குருக்களே, கோயிலிலுமா நான் குற்றவாளி. நான் எக்குற்றமுஞ் செய்யவில்லை. ஏமநாதன் தலைமறைவாகியிருந்த வேளையில் நான் தான் அவனை மறைத்து வைத்திருக்கிறேன் என்ற நினைத்து நந்திதேவன் எனக்கு எவ்வளவு துன்பங்களைச் செய்தான். உயிர் நண்பன் என்பதற்காகப் பொறுத்துக்கொண்டேன். நான் நினைத்திருந்தால் அன்றே ஏமநாதனைக் காட்டிக் கொடுத்திருக்க முடியும். அவனைக் கைது செய்திருந்தால் கொன்றிருப்பார்கள். நான் கொடுத்த பிச்சை தான் இந் நாட்டு அரசபதவி. அதை உணராது தலைகால் தெரியாது ஆடும் ஏமநாதன் விரைவில் அழிந்து விடுவான். எனது உயிரைத்துச்சமாக மதித்து உதவி செய்த என்னைத் தினமும் வந்து அரண்மனையில் கையொப்பமிடட்டாம். இல்லாவிட்டால் நான் நாட்டை விட்டு தலை மறைவாகி விடுவேனாம். அதனால் இந்த நாட்டில் உள்ள எவரும் எனக்குப் பிணையாகக் கையொப்பமிட மறுக்கிறார்கள். என்னிடம் உதவி பெற்றவர்கள் எல்லோரும் துரோகிகள். தமது காரியங்கள் முடிவடைந்ததும் என்னைக் கைகழுவி விட்டார்கள். நான் யாரிடமும் உதவிகோருவதில்லை. நான்தான் மற்றவர்களுக்கு உதவி செய்வது வழக்கம். அரசனல்ல அவனுக்கு மேற்பட்டவனுக்கும் நான்தான் உதவி செய்ய வேண்டும்” என்று திமிருடன் பேசினான் மணிமாறன். அந்தணரது உடல் முழுவதும் வியர்வையால் நனைந்து விட்டது. “சிவசிவ” என்றார். மக்கள் மெல்ல விலகி நின்றனர். சுவாமியாரும் சூரியனும் அவனின் அருகே வந்தனர்.

மணிமாறனைப்பற்றி ஏற்கனவே சுவாமியார் கேள்விப்பட்டிருக்கிறார். ஆனால் கண்டதில்லை. அவனைச் சந்திக எவ்வளவோ முயன்றும் முடியவில்லை. கடவுள் ஏற்ற சமயத்தில் அவனை தன்னிடம் அனுப்பியிருக்கிறார் என்று நினைத்தார். அவனைக் கண்டதும் மக்களும்,குருக்களும் அகன்றுவிட்டதைச் சுவாமியார் தனக்கு ஏற்பட்ட சந்தர்ப்பமாக எண்ணிக் கதையைத் தொடங்கினார்.

“மகனே! உலகம் பொல்லாதது. மக்கள் தீய குணமுள்ளவர்களாக இருப்பதால்தான் பூமியும் துயரமுள்ளதாக இருக்கிறது. நன்மை செய்தவன் நன்மையடைவான். நீவா உள்ளே இருந்து பேசுவோம். இப்போது உனக்கு நல்ல காலம் பிறந்துள்ளது. ஒளிமயமான எதிர்காலம் உன்னை நாடிவர உள்ளது. நான் மதகநாட்டரசரின் தூதுவன். இவனது பெயர் சூரியன். ஒற்றனாக இருக்கிறான். முதலமைச்சர் வெங்கடேசர் எமது ஆள். எனவே நீ பயபடத்தேவையில்லை” என்று கூறித் தமது வரலாறு முழுவதையும் சொன்னார். எதிர்கால நடவடிக்கைகள் பற்றியும் கூறினார். சுமார் மூன்று மணித்தியாலங்கள் உரையாடிய பின் மணிமாறன் அவரிடமிருந்து விடைபெற்றுக் கொண்டு கையொப்பமிடஅரண்மனைக்குச் சென்றான்.

“ஏமநாதா! நட்பின் புனிதத்தைப் புரியாது, நாம் நாடகமாடுவதை உண்மையென நம்பிக் குருக்கள் நடுங்குகிறார். சுவாமியார் வரலாறு முழுவதையும் கூறிவிட்டார்” என்று சிரித்தான் மணிமாறன்.

“ஒருவர் செய்வது மற்றவருக்குத் தெரியாதவாறு மூன்றாவது ஒற்றனை அனுப்பிச் செய்திகளைச் சேகரித்து வரச்செய்து அவர்கள் மூவரும் கூறும் செய்திகளும் ஒன்றாக இருந்தால்தான் அதை உண்மையென அரசன் ஏற்கவேண்டும்.”

என்பாய் அதை ஏற்றுத்தான் நான் உன்னை மூன்றாவது ஒற்றனாக நியமித்துள்ளேன். அதற்காகத்தான் நாமிருவரும் சேர்ந்து நாடகமாடி வருகிறோம். இது யாருக்கும் தெரியக்கூடாது'' என்றான் ஏமநாதன்.

**589. ஒற்றுஒற்று உணராமை ஆள்க; உடன்மூவர்**
**சொல்தொக்க தேறப்படும்.**

ஓர் ஒற்றனை இன்னோர் ஒற்றன் அறியாதவாறு கண்காணிக்க வேண்டும். அவ்வாறு கண்காணிக்கப்பட்ட மூன்று ஒற்றர்களின் செய்திகள் ஒத்திருந்தால் அவை உண்மையெனக் கொள்ளல் வேண்டும்.

## வெளிபடும் இரகசியம்

''நக்கீரனும் குமரனும் மணிமாறனும் செய்த ஒற்றாடல் காரணமாக எவ்வளவோ விடயங்களை என்னால் அறிந்து கொள்ள முடிந்தது. அவர்களுக்குப் பொன்னையும், பொருளையும், இரத்தினக் கற்களையும் அள்ளிக்கொடுத்தாலும் அதற்கு ஈடாகாது'' என்று நினைத்தான் ஏமநாதன்.

''ஏமநாதா, நான் வணிகன் பெரும் பணக்காரன். அத்துடன் உனது நண்பன். கோடி கோடியாய்ச் சொத்திருக்கு. அதையே அனுபவிக்க முடியவில்லை. அதனால் எனக்குப் பொருளில் ஆசை இல்லை. ஆனால் நீ பல ஒற்றர்களை நியமித்திருப்பாய். அவர்கள் அறிந்து வந்து அறிவித்த செய்தி உண்மையான செய்தியாக இருந்தால் பாராட்டும் வெகுமதியும் கொடுத்தல் வேண்டும். ஆனால் அரசர்கள் ஒற்றர்களுக்குச் செய்யும் சிறப்புக்களை மற்றவர்கள் அறியக்கூடாது. அவ்வாறு அறிந்தால் வெளிப்படுத்தக்கூடாத இரகசியம் ஒன்று வெளிப்பட்டதற்குச் சமமாகும். அதுவும் அரசனே வெளிப்படுத்தியவனாவான் என்பதை எந்தச் சந்தர்ப்பத்திலும் மறந்துவிடாதே. ஒரு நாட்டில் ஒற்றர்கள் எத்தனை பேர் இருக்கிறார்கள் என்ற விபரமும் யாருக்கும் தெரியக்கூடாது. ஏனெனில் மனித மனம் பலவீனமானது. கிடைப்பதைவிட வேறு இடத்தில் அதிகமாகக் கிடைத்தால் அந்தப் பக்கம் தாவி விடும். அதைவிட ஒற்றர்களை நோட்டமிட வழியும் உண்டாகும்'' என்றான். மணிமாறன்.

ஏமநாதன் மனதுக்குள் சிரித்துக் கொண்டான். இது நாள்வரை அவனுடன் உயிருக்குக்குயிராகப் பழகியும் அவன் இரகசியமான செய்திகள் எவற்றையுஞ் சொல்லவில்லை.

''மணி, வணிகனாக இருந்த போது நான் நிம்மதியாகவும் மகிழ்ச்சியாகவும் இருந்தேன். அரசனானதும் எனது மகிழ்ச்சியும் நிம்மதியும் என்னை விட்டுச்சென்றுவிட்டன. இந்த அரச பதவியில் எத்தனை சூழ்ச்சிகள். எந்த மனிதனையும் நம்பமுடியாத ஒரு நிலை. நம்பாமலும் இருக்க முடியாத நிலை.

வணிகனான எனக்கு இவை யாவும் புதுமையானவைகளாக இருக்கின்றன.'' அலுத்துக் கொண்டான் ஏமநாதன்.

''நண்பா இந்த உலகம் வலிமையானவர்களுக்குரியது. சகலவலிமைகளும் படைத்த நீ ஏன்தப்பியோட முயற்சிக்கிறாய். உன்னிடம் கோடிக்கணக்கில் சொத்திருக்கு. அப்படியிருக்க இனி ஏன் வாணிபத்தைப் பற்றிச் சிந்திக்கிறாய்....? நீதியை நிலை நாட்டவெனத்திட சங்கர்ப்பம் பூண்ட நீ கோழைகளைப் போலப் பயந்து தப்பிக்க நினைப்பது வெக்கக்கேடானது. வலிமையுடன் வஞ்சனையை எதிர்த்துப் போராடு. ஆரம்பத்தில் களைகளைப் போலச் சிறிய சிறிய எதிர்ப்புக்கள் வரும். அவற்றை எண்ணிக் கலங்காதே. வலிமையுடன் எதிர்த்து நில். கடும் முயற்சி செய்து வெற்றி பெற்ற நீ தொடர்ந்தும் முயற்சி செய்தால் எதிர்ப்புகள் யாவும் அடங்கிவிடும். பலவீனமானவற்றை எண்ணாதே. என்னால் தீமைகளை அழிக்க முடியுமென்று உறுதியெடுத்து விட்டுப் பின்வாங்குவது கூடாது. நான் வருகிறேன்'' என்று கூறிவிட்டுப் புறப்பட்டான் மணிமாறன்.

அன்று சபைகூடிய போது நக்கீரன் தனது தந்தையுடன் சபைக்கு வந்திருந்தான். அவனது தந்தை எழுந்து சொன்னான் ''அரசே , எனது மகன் மூளை வளர்ச்சி குறைந்தவன். அவனால் பெரும் வேலைகளைச் செய்ய முடியாது. அதனால் அவனுக்கு நூறு பசுக்கள் கொடுங்கள்'' என்று கேட்டான்.

''ஆலோசித்து முடிவெடுக்கிறேன்'' என்றான் ஏமநாதன். இரண்டுவாரங்களின் பின் நக்கீரனது குடும்பத்தினருக்கு நூறு நல்ல இனப் பசுக்கள் வழங்கப்பட்டன. நகீரனைத் தனிமையில் சந்தித்த ஏமநாதன் அவனைக் கட்டித் தழுவிப் பாராட்டினான். பின் ஏராளமான பொருட்களைக் கொடுத்தான்.

குமரன் முப்படைகளுக்கும் ஆலோசகனாக நியமிக்கப்பட்டான். அதனால் முப்படைகளிலுமுள்ள பிரச்சினைகளை உடனுக்குடன் அறிந்து கொள்ளலாமென நினைத்தான் எமநாதன். ஏராளமான பொருட்களைப் பெற்ற குமரன் சொன்னான் ''அரசே நாட்டுப் பற்றைத் தவிர வேறு எதுவும் எனக்கு முக்கியமானதல்ல. நான் தங்களுக்கும் நாட்டிற்கும் பகைவர்களால் ஆபத்து வராமல் காத்துக்கொள்வேன். அதற்காக எனது உயிரையும் தியாகஞ் செய்வேன்'' என்றான். அவனது கண்கள் கலங்கின உணர்ச்சி மிகுதியால் வார்த்தைகள் சிக்குண்டன.

''உன்னைப்போன்ற நாட்டுப்பற்றுள்ள வீரர்கள் இருப்பதால்தான் இந்த நாடு தீமையில் இருந்து விடுபட்டது. உனது சேவையை இப்பொழுது மக்கள் அறியமாட்டார்கள். பிற்காலத்தில் அறிந்து போற்றுவார்கள்'' என்றான் ஏமநாதன்.

**590. சிறப்புஅறிய ஒற்றின்கண் செய்யற்க; செய்யின்**
**புறப்படுத்தான் ஆகும் மறை.**

அரசன் ஒற்றர்களுக்குச் செய்யும் சிறப்பைப் பிறர் அறியுமாறு செய்யக் கூடாது; அப்படிச் செய்தால் வெளியிடக் கூடாத இரகசியத்தைத் தானே வெளிப்படுத்தியவனாவான்.

## ஊக்கம் உடைமை

### உடையவர்

கஜேந்திரன் எழுதிய அரச கதைகளை வாசித்த வித்தியா பிரமித்துப் போனாள். இப்படி ஒரு காதலன் தனக்கு வாய்த்திருப்பதை எண்ணி நாவலர் ஸ்ரீவித்தியா மகா கணபதிக்குத் தினமும் நூறு முறை தனது நன்றியைத் தெரிவித்துக் கொண்டாள். அன்று மாலை அவள் கஜேந்தினைக்கண்டதும் சொக்கிப் போனாள். சிறு வயதிலேயே தந்தையை இழந்த தன்னை அளவில்லாத பாசத்துடன் வளர்த்துத்தனது சிறுசிறு குறைகளையெல்லாம் உடனுக்குடன் சிரமப்பட்டு நிறைவேற்றித் தன்னை ஒரு மகாராணி மாதிரி வைத்துப் பலவிதமான கனவுகளுடன் வாழும் தனது அன்புத்தாயாருக்கு, தான் கஜேந்திரனை விரும்புவதன் மூலம் துரோகஞ்செய்து விட்டேனோ என்று அடிக்கடி நினைத்துக் கலங்குவாள். அந்தவேளைகளில் துயரம் பெருகி அவளின் எண்ணங்களை மாற்றும் ''நான் அம்மாவுக்குச் செய்வது துரோகம். அதனால் கஜேந்திரனை மறந்துவிடல் வேண்டும். இனிமேல் எந்தக் காரணங்கொண்டும் அவனைக் காணவோ பேசவோ கூடாது'' என்று நினைப்பாள். ஆனால் ஊரவரும் நண்பர்களும் விரிவுரையாளர்களும் அவனைப்பற்றி உயர்வாகப் பேசும் போது அவளது மனம் கரைந்து மீண்டும் கஜேந்திரனை நாடிச்சென்று விடும். இது அடிக்கடி அவளது மனதில் நிகழும் நிகழ்வு.

கஜேந்திரன் எழுதிய கதைகளை வாசித்த பின்பு அவளால் அவனைத்தவிர வேறு எவரையும் நினைக்க முடியவில்லை. அவனுக்காக அவள் எதையும் இழக்கச் சித்தமாக இருந்தாள். தேவையேற்பட்டால் தாயைக்கூட வெறுப்பதற்குத் தயாராக இருந்தாள்.

''வித்தி'' மெல்ல அழைத்தான் கஜேந்திரன் கற்பனையில் மூழ்கியிருந்த வித்தியாவுக்கு அவன் அழைத்தது கேட்கவில்லை. அவன் எப்பொழுதும் மிகவும் மெதுவாகவே கதைப்பான். உரத்துக் கதைக்க மாட்டான். கேட்போர் அவனது பேச்சை உன்னிப்பாகக் கேட்டால்தான் விளங்கும். அதற்கு எதிர்மாறானவள் வித்தியா. கலகலவெனச் சற்று உரத்துக் கதைப்பாள்.

''வித்தி .... வித்தி...'' சற்று பலத்து அழைத்தவாறு கடற்கரை மணலை அள்ளி விளையாடிய வித்தியாவின் கரத்தை மெல்லப் பிடித்தான் கஜேந்திரன்.

திடுக்கிட்டுத் திரும்பினாள் வித்தியா் ''என்ன வித்தி நான் அருகில் இருப்பதையும் மறந்து ஏதோ ஆழ்ந்த சிந்தனையில் இருக்கிறீா''.

‘‘வித்தியா திரும்பி அவனது முகத்தைப் பார்த்தாள். குறுந்தாடியுடன் அவனது முகத்தில் என்றுமில்லாத ஓர் அழகு பொலிந்து பிரகாசிப்பதைப் போல இருந்தது.

‘‘என்ன அதிசயமாகப் பார்க்கிறீர். மனிசியின் இன்றைய மனநிலை நன்றாக இருக்கிறது’’ என்றவாறு சற்று நெருங்கியமர்ந்தான் கஜேந்திரன். மற்றயவேளைகளில் கோபித்துப் பிணங்கச் சற்றுத் தள்ளி அமா்பவாள், அன்று பேசாமலிருந்தாள். அதன் அர்த்தம் ‘இன்னும் கொஞ்சம் நெருக்கம் தேவை’ என்று சொல்வது போலக் கஜேந்திரனுக்கு இருந்தது. மேலும் சிறிது அரக்கினான். எனினும் வித்தியா எதுவும் பேசவில்லை.

‘‘இன்று கொண்டாட்டம்தான்’’ அவனது வலதுகரம் வித்தியாவின் கையை இறுக்கமாகப் பிடித்து உரிமை கொண்டாடியது ‘‘நீங்கள் பெரும் நிபுணன்’’ வித்தியா வார்த்தைகளை முடிக்குமுன் கஜேந்திரன் குறுக்கிட்டான் ‘‘இது உமக்கு இப்போது தானா தெரிந்தது? அதனால் தான் இன்று தாராள மனப்பான்மையுடன் நடந்து கொள்கிறீா’’

வித்தியா அழகாகச் சிரித்தாள். சிவந்து கொண்டிருந்த கன்னங்கள் குழி விழுந்திருந்தன் ‘‘இப்படிச் சிறப்பாகக் கதை எழுதிவீா்களென நான் நினைக்கவில்லை. ஏமநாதன் பாத்திரம் எனக்கு நன்றாகப் பிடித்துவிட்டது. அவன் மக்கள் மீது கொண்ட இரக்கம் காரணமாக ஊக்கத்துடன் செயற்பட்டு அந்த நாட்டைக் கைப்பற்றி மக்களின் குறைகளைத் தீா்த்ததை என்னால் மறக்க முடியவில்லை. பத்து முறை அக்கதைகளை வாசித்து விட்டேன். இன்னும் வாசிக்க வேண்டும்’’

‘‘ஒருவன் எதையும் செய்யலாம். அதற்கு எதுவும் தேவையில்லை. ஊக்கம் மட்டும் இருந்தால் போதும். ஒருவன் உடையவன் என்று சொன்னால் பணம், பொருள், காணி, பூமி, படை பட்டாளங்களை உடையவனாகக் கொள்ள முடியாது. இவற்றையெல்லாம் அவன் தனது ஊக்கத்தினாலேயே பெற்றான். ஊக்கத்தை உடையவனையே உடையவன் என்று சொல்லுவார்கள். ஊக்கமில்லாதவன் வேறு எதைப்பெற்றிருந்தாலும் அவன் உடையவனாகமாட்டான். ஒருவன் எதைச்செய்ய நினைத்தாலும், ஊக்கத்துடன் தன்னை அச்செயலில் பூரணமாக அா்ப்பணித்துச் செயலாற்ற வேண்டும். அப்படிச் செய்தால் அவன் உலகில் உள்ள எல்லாவற்றையும் பெற்றுவிடுவான்’’ என்று கூறிச் சிரித்தான் கஜேந்திரன்’’

‘‘ஏன் சிரிக்கிறியள்’’ சிணுங்கினாள் வித்தியா.

மீண்டும் சிரித்தான் கஜேந்திரன் வித்தியாவுக்கு எரிச்சலாக இருந்தது.

**591. உடையர் எனப்படுவது ஊக்கம் அ.்.து இல்லார்**
**உடையது உடையரோ மற்று?**

ஒருவர் உடையவர் என்று சிறப்பாகச் சொன்னால் ஊக்கத்தை உடையவரே. ஊக்கமில்லாதவர் வேறு எதைப் பெற்றிருந்தாலும் அவர் உடையவர் ஆகமாட்டார்.

## நிலையில்லாததது

"ஏன் சிரிக்கிறியள்.? நீங்கள் சிரிப்பதைப் பார்த்தால் என்னைக் கேலி செய்வதைப் போலுள்ளது" சினத்தாள் வித்தியா.

"நான் ஏன் உம்மைக்கேலி செய்கிறேன். எத்தனை வரிசமாய் உம்மை அடையவேண்டுமென்ற ஊக்கத்துடன் உம் பின்னால் பேயாய் அலைந்தேன். எத்தனை முறை நீா் செருப்பைக் கழற்றிக் காட்டியிருப்பீா். அப்பொழுது நான் ஊக்கத்தைக் கைவிட்டிருந்தால் உம்மை அடைய முடியுமா.....? அதைத்தான் நினைத்துப் பார்த்தேன் கற்பனை பெருகியது. அதற்காகத்தான் சிரித்தேன்" என்றான் கஜேந்திரன்

"கதைகளை வாசித்த பின் உங்களைக் கோபிக்கமுடியவில்லை." என்று குழைந்தாள் வித்தியா. கஜேந்திரன் தற்செயலாகத் திரும்பிப் பார்த்தான் சிறிது தூரத்தில் பரமேஸ்வரன் இருந்தார் "வித்தி ஒரு பெரும் பிரமுகா் எமக்குச் சிறிது தூரத்தில் இருக்கிறார். எம்மைக் கண்டால் ஏதாவது நினைப்பார். என்ன செய்வது?" பதறினான் கஜேந்திரன்.

"மற்றக்கரை திரும்பியிருங்கோ" என்றாள் வித்தியா.

கஜேந்திரன் அவளை விசித்திரமாகப் பார்த்தான் ˙ "ம்' .. வித்தியாவா இப்படிச் சொல்வது ....?"

வித்தியா அச்சமின்றிச் சிரித்தாள் "தடுமாறிய மனது உறுதிகொண்டு விட்டது. இனி நான் யாருக்கும் பயப்படமாட்டேன். பிரச்சினை வந்தால் கூட்டிச்செல்வீா்கள் தானே.."

"கட்டாயம் கூட்டிச் செல்வேன். அதற்காக நாம் பெரியவா்கள் முன் இப்படி நடக்கக் கூடாது" என்று எழுந்தான் கஜேந்திரன். வித்தியாவும் எழுந்தாள். சூரியன் மெல்ல மேற்கே புதைந்து கொண்டிருந்தான்.

கஜேந்திரன் பரமேஸ்வரனின் அருகே வந்தான். அவனைக் கண்டதும் பரமேஸ்வரன் சொன்னார் "உனக்குக் கடற்கரைக்கு வந்து பொழுதுபோக்க நேரமிருக்கா...?"

கஜேந்திரன் சிரித்தான் " மனதைச் சமநிலைப்படுத்த அடிக்கடி இங்கு வருவேன். இங்கு வந்தால் தான் மனம் பொங்கும். கற்பனைகள் உருவாகும்"

"கடற்கரையில் உருவான காவியமோ.. அது...? மனம் விட்டுச் சொல்லுறன். நீ ஊக்கம் மிக்கவன். தற்போதைய இளைஞா்கள் ஒரு வேலையையே ஊக்கத்துடன் செய்வதில்லை. நீ ஆயிரம் வேலைகளை மிகுந்த ஊக்கத்துடன் செய்கிறாய் அத்தனையிலும் வெற்றி கொள்கிறாய். இப்பொழுது நீ கஷ்டப்பட்டாலும் எதிா்காலத்தில் நீ உருவாக்கிய ஏமநாதன் போல் இருப்பாய். நான் நினைக்கிறேன்

நீதான் ஏமநாதன் என்று. நான் நினைத்தது சரியா...?'' என்று கேட்டுவிட்டுக் கஜேந்திரனது முகத்தைப் பார்த்தார் பரமேஸ்வரன்.

கஜேந்திரன் சிரித்தான். ''கலைஞர்கள், கவிஞர்கள், எழுத்தளர்கள் தமது எண்ணங்களைத்தான் கதைகளாக உருவாக்குவார்கள். நான் பழந்தமிழ் நூல்களை விரும்பிக் கற்பதால் அப்படியானதொரு கதையை எழுத விரும்பினேன். அரசகதையூடாக நீதியைச் சொல்லியிருக்கிறேன்'' என்றான்.

''ஊக்கமுடைமை தான் நிலையான செல்வம் மற்றய எல்லாம் அழியக்கூடியன. அழிந்தவற்றையும் ஊக்கத்தினால் பெற்றுவிடலாம். இதற்கு என்னுடைய வாழ்க்கையே உதாரணம். சாதாரண ஒரு மனிதனாகப் பிறந்து பெருங் கோடிஸ்வரனாக வாழ்வதற்கு எனது தளராத ஊக்கம்தான் காரணமாகும். நான் சில காலம் நந்திதேனைப் போல ஊக்கமின்றி வாழ்ந்ததால் மானம், மரியாதை, சொத்து, நிம்மதி என்பவற்றையெல்லாம் இழந்தேன். தவறை உணர்ந்து ஊக்கத்துடன் செயற்பட்டதால் இன்று இழந்தவற்றையெல்லாம் பெற்றுவிட்டேன். நந்திதேவன் தன்முன்னோர் ஊக்கத்துடன் தேடிய அனைத்தையும் இழந்ததிற்கு காரணம் அவன் ஊக்கமில்லாது இருந்தது தான். மிகவும் அருமையான கதைகள். கஜன் உன்னை நினைத்தால் எனக்குப் பொறாமையாகவும் இருக்கும் பெருமையாகவும் இருக்கும். உன்னால் எப்படி இவ்வளவு கருமங்களையெல்லாம் மிகச் சிறப்பாகச் செய்யமுடிகிறது?'' என்று கேட்டார் பரமேஸ்வரன்.

''மனிதனின் மனதுக்குள் சகல சக்திகளையும் இறைவன் புதைத்து வைத்தள்ளார். இதைப் பெரும்பாலானவர்கள் புரிந்துகொள்வதில்லை. மனதுள் புதைந்து கிடக்கும் மாபெரும் சக்தியை ஊக்கமென்ற கருவியால்தான் வெளிக்கொண்டுவர முடியும். உலகில் தோன்றிப் பல சாதனைகளைப் புரிந்தவர்களையெல்லாம் ஒவ்வொருவராக எடுத்துப் பார்த்தால் அவர்கள் அனைவரிடமும் ஒரே ஒரு ஒற்றுமையைக் காணலாம். அதுதான் ஊக்கம் அளவுக்கதிகமான ஊக்கம். அந்த ஊக்கத்தால்தான் மனித குலம் இன்று பயன்பெறுகிறது. மனதில் ஊக்கத்தை வளர்த்துக் கொள்பவன் தனக்காக மட்டுமல்லாது உலகிற்காகவும் வாழ்கிறான் என்பதை முன்பு வாழ்ந்த மேதைகளைக் கொண்டு அறியலாம்'' என்றான் கஜேந்திரன்.

**1. 592. உள்ளம் உடைமை உடைமை; பொருள் உடைமை**
**ய. நில்லாது நீங்கி விடும்.**

ஒருவனுக்கு ஊக்கம் உடைமையே நிலையான உடைமையாகும். மற்றய பொருள் உடைமை யெல்லாம் நிலையாது அவரை விட்டு நீங்கி விடும்.

## கலங்காதவர்

தணிகாசலமும் கணநாதனும் பரமேஸ்வரனைத் தேடிக்கடற்கரைக்கு வந்தனர் கடற்கரையில் சனக்கூட்டம் மிகுந்திருந்தமையால் பரமேஸ்வரனைக் கண்டுபிடிக்க முடியவில்லை.

“இ.ருட்டாகி விட்டது. ஒரு வேளை புறப்பட்டுவிட்டாரோ? என்று கேட்டார் கணநாதன்.

“புறப்பட்டும் இருப்பார் . அவருக்கு இப்பொழுது இங்கே நண்பர்கள் அதிகம் காலையில் வீட்டிலிருந்து புறப்பட்டால் இரண்டு மூன்று மணிக்குப் பின்புதான் சாப்பாட்டிற்கென வீட்டிற்கு வருகிறார். காமாட்சி என்னைத்தான் குறை சொல்வாள் “கொழும்பில் அவருக்குப் பெரிதாக யாரையும் தெரியாது. இரண்டொருவர் தான் நண்பர்கள். அதுவும் அவர்களாகத்தேடி வந்தால் சரி. இவர் போகமாட்டார். ஐம்பது அறுபது வருடங்கள் வாழ்ந்த கொழும்பைவிட ஆறேழு வாரங்கள் வாழ்ந்த இக்கிராமத்தவர்கள் பெரியவர்களாகி விட்டார்கள். அவர் எங்கென்றாலும் செல்லட்டும் நேரத்திற்கு நேரம் வந்து சாப்பிட்டுவிட்டுச் செல்லச் சொல்லுங்கோ அண்ணா. இரத்த அழுக்கமிருக்கு, குருதியில் கொழுப்பிருக்கு, சலரோகமும் இருக்கு. வத்சல்யன் எந்த நாளும் என்னைப் பேசியபடி “நான் கொப்பரோடை கதையென்று சொன்னால் அவரை நானெங்கே சந்திப்பது. கொழும்பிலென்றால் இரவு ஆறுமணிக்குப் பிறகு வெளிக்கிட மாட்டார். இஞ்சை இரவு பத்து மணிவரை ஊர் சுற்றுகிறார்”. என்று பேசுகிறான். என்று தினமுஞ் சொன்னபடி கடற்கரையில் இல்லாவிட்டால் வாசிகசாலையிலை பார்ப்பம்” என்றார் தணிகாசலம்.

அவர் கொடுத்து வைத்தவர்” பெருமூச்சு விட்டார் கணநாதன்.

“ஏன் அப்படிச்சொல்லுறியள்? உங்களுக்கென்ன குறை” என்று கேட்டார் தணிகாசலம்.

வாய்விட்டுப் பலமாகச் சிரித்தர் கணநாதன் “பற்றுக்களையெல்லாம் உதறித்தள்ளிவிட்டு சிவனே என்று அரச மரநிழலில் அமர்ந்திருக்கும் சுவாமியாரா நான்.? நாட்டை ஆளுற மகாராஜாவுக்கும் ஆயிரம் பிரச்சினைகள் இருக்கும். கடற்கரையில் காணவில்லை கோவிலுக்குப் போவோம்” என்று புறப்பட்டார் கணநாதன்.

“அவர்கள் கோயிலுக்கு வந்த போது கஜேந்திரனும், பரமேஸ்வரனும் அரசமரத்தடியில் பரவப்பட்டிருந்த மணலின் மீது இருந்தனர். சுவாமியாரைக் காணவில்லை. கணநாதனைக் கண்டதும் பரமேஸ்வரன் எழுந்து அவரை நோக்கி வந்தார்.

“உன்னை எங்கெல்லாம் தேடுவது. பாடசாலைக்குச் சென்று அதிபரைச் சந்திக்கப் புறப்பட்டதாகக் காமாட்சி சொன்னாள். அங்கை போக அதிபர், நீ கடற்கரைக்குப் போய்விட்டதாகச் சொன்னார். அங்கை போய்ப் பார்த்துவிட்டுத்தான் இங்கு வருகிறோம்”. அலுத்துக்கொண்டார் கணநாதன்.

பரமேஸ்வரன் சிரித்தார்.. அந்தச்சிரிப்பை கணநாதன் இதுவரை காணவில்லை. அப்படியான முழுமையான மகிழ்ச்சியடங்கிய சிரிப்பு அது.

“ சாப்பாட்டுக்கு நேரத்திற்கு வருவதில்லையென்று தாயும் மகனும் குறை சொல்லீனை. நீ சாப்பிடாமலே வாட்டசாட்டமாக இருக்கிறாய்’’ என்றார் கணநாதன். அதற்கும் பரமேஸ்வரன் சிரித்தார் “உனக்கு இந்த மாதம் தரவேண்டிய பணத்தைத் தரமுடியவில்லை. ஆறேழு மாதத்திற்குத்தர மாட்டன்.’’ என்றார் கணநாதன்.

பரமேஸ்வரன் கணநாதனின் முகத்தைப் பார்த்தார். அது பொங்கிப் பூரித்திருந்தது “கொடுக்கல் வாங்கலில் நறுக்காக இருக்கும் கணநாதன் ஏன் பணம்தர முடியாதென்று சொல்கிறார்? குறித்த தவணைக்கு முன்பே கொடுக்கும் வழக்கமுடைய அவருக்கு ஏதாவது தொழிற்பிரச்சினையா...? நட்டமடைந்து விட்டாரா..? அப்படி முகத்தில் தெரியவில்லையே..? புதுத் தொழில் ஆரம்பிக்கப் போகிறார் போல் தெரிகிறது’’ என்று நினைத்தார் பரமேஸ்ரன்.

“ஒரு சிக்கல்ல பரமேஸ், தொழிலில் எதிர்பாராதவிதமாகப் பெரும் கஷ்டமேற்பட்டு விட்டது. அதைச் சீர்செய்ய ஒரு வருடமாவது தேவை. உன்னிடம் பணமிருந்தால் ஒரு கோடி ரூபா தருவாயா....? என்ன பிரச்சினையென்று பின்பு நான் சொல்லுகிறேன்.’’ கணநாதன் உற்சாகமாகக் கதைத்துக் கொண்டிருந்தார். தணிகாசலம் அவரது முகத்தை அதிர்ச்சியுடன் பார்த்துக் கொண்டிருந்தார்.

“தணியண்ணை என்ன யோசிக்கிறியள். நான் ஊக்கத்துடன் உழைத்துச் சம்பாதித்தனான். தற்செயலாக நட்டமேற்பட்டு விட்டது. அதற்காகக் கவலைப்பட முடியுமே..? உழைக்கலாமண்ணை. ஊக்கத்தை விடக்கூடாது.’’ கணநாதன் சொல்லிக் கொண்டிருந்தார். முன்பொருநாள் சுவாமியார் அருளுரையில் கூறியவார்த்தைகள் தணிகாசலத்தின் நினைவுத்திரைக்கு வந்தன் “ஊக்கத்தை உறுதிப்பொருளாகக் கொண்டோர் செல்வத்தை இழந்தாலும், இழந்துவிட்டோமெனக் கவலை கொள்ளாது மகிழ்வுடன் இருப்பர்.’’

**593. ஆக்கம் இழந்தேம்என்று அல்லாவார் ஊக்கம்**
**ஒருவந்தம் கைத்துஉடையார்.**

ஊக்கத்தை உறுதிப் பொருளாகக் கொண்டவர்கள், தாம்தேடிய செல்வம் முழுவதையும் இழந்த போதும் கலங்க மாட்டார்கள்.

## வழிகேட்டுச் செல்லும்

“ஊக்கத்துடன் இருப்பவன் தான் மற்றவர்களுக்கு உதவி செய்வான். ஏழைகளுக்கும் நோயாளிகளுக்கும் தன்னாலான உதவிகளைச் செய்வான். ஏனென்றால் எல்லாம் உடையவன் அவன்தான். ஊக்கமுடையவன் ஏழைகளை நேசிப்பான். ஏழைகளை நேசிப்பவனே கடவுளைக் காண்பவனாவான். ஏழைகளை நேசிக்காதவர்கள் வெறும் விக்கிரகங்களைத்தான் காண்கிறார்கள். ஊக்கமுடையவர்களாக இருப்பதும்.

மற்றவர்களுக்கு நன்மை செய்வதும் கடவுளை வழிபடுவதைவிட பல நன்மைகளைத் தரும். இது தான் எல்லாச் சமயங்களும் ஒருமித்துக் கூறும் கருத்து'' சுவாமியாரின் அறிவுரை தணிகாசலத்திற்குக் கேட்டுக் கொண்டிருந்தது.

''எனக்கு ஒருபோதும் நட்டமேற்பட்டதில்லை ..?'' கணநாதன் சொல்லும் போது பரமேஸ்வரன் குறுக்கிட்டார்.

''என்ன நட்டமேற்படவில்லையா...'' தணி, இவனுக்குப் பலமுறை நட்டமேற்பட்டு நானுதவியிருக்கிறேன்.'' என்றவாறு தணிகாசலத்தின் தோளைப் பிடித்தார் பரமேஸ்வரன். தணிகாசலம் திடுக்கிட்டு நினைவுகளில் இருந்து விடுபட்டார்.

கணநாதன் பலமாகச் சிரித்தார் பின்பு சொன்னார் ''பெற்றோர் தேடித்தந்த சொத்து, முதிசம், கடன்வாங்கிய பணம் போன்றவற்றிலிருந்து தொழிற்சாலையை ஆரம்பித்து நட்டமடைந்ததால் தான் அது நட்டமாகும். உடுக்கத்துணியில்லாமல் இருந்த நான் ஊக்கத்தை உறுதிப்பொருளாகக் கொண்டு கடுமையாக உழைத்து முன்னேறினேன். இடையில் சிறுசிறு தடங்கல்கள் வந்தன. அதில் நான் தேடிய சொத்துச் சிறிது இழக்கப்பட்டதே தவிரப்பாதிப்பு எவையும் எனக்கு ஏற்படவில்லை. அதன்பின் இழந்தவற்றைப் பெறவேண்டுமென்று கடுமையான ஊக்கம் கொண்டேன். இழந்ததைவிடப் பலமடங்கு சேர்ந்தது. ஊக்கமுடையவன் பொருளைப் பிறருக்கக் கொடுக்க வேண்டும். பொருளை இழந்தால் ஊக்கம் மேலிடும். அதனால் முன்பை விட அதிக பொருள் சேரும். அத்துடன் எம்மிடமுள்ள ஊக்கத்தை வெளிப்படுத்துவதற்கான ஒரே வழி மற்றவர்கள் தங்கள் ஊக்கத்தை வெளிப்படுத்தும் வகையில் அவர்களுக்கு உதவி செய்தல் ஆகும். வாய்ப்புக்கள் வசதிகள் உள்ளவர்களுக்குத்தான் பெரும்பான்மையானோர் ஊக்கமளிக்கின்றனர். அதைவிடப் பலவீனமானவர்களுக்கும், ஏழைகளுக்கும் அவர்கள் தம்வாழ்வில் முன்னேற ஊக்கமளித்தல் வேண்டும்.''
கணநாதன் சொல்லிக் கொண்டிருந்தார். தணிகாசலம் வியப்புடன் அவரைப் பார்த்தார். அவரின் பேச்சு தணிகாசலத்திற்கு மிகவும் பிடித்தது. தான் தனது குடும்பம் தனது சுற்றம் என்று கருதி வாழும் இவ்வுலகில் பலவீனர்களைப்பற்றியும் ஏழைகளைப்பற்றியும் கவனத்திலெடுத்து அக்கறைப்படும் கணநாதனை மகிழ்வுடன் பார்த்தார்.

''சோர்வில்லாத ஊக்கமுடையவனைத்தேடிச் செல்வம் அவன் இருக்கும் இடம் கேட்டுத் தேடிவந்து சேரும்'' என்று பெரியவர்கள் சொல்வார்கள். அது எவ்வளவு உண்மையென்பதை நான் எனது வாழ்வில் உணர்ந்து கொண்டேன். என்னுடைய வாழ்க்கையின் ஒவ்வொரு கட்டத்திலும் அது நிகழ்ந்துள்ளது. நான் இங்கு ஒரு தொழிற்சாலையை ஆரம்பிக்கவென வந்தேன். ஆனால் எனது நண்பர் பரமேஸ்வரன் தனது பலகோடி ரூபா பெறுமதியான தொழிற்சாலையை எனக்குத் தந்தார். அதை நான் எதிர்பார்க்கவில்லை. அப்படியான ஒரு தொழிற்சாலையைப் பெற நான் அதிஷ்டம் செய்திருத்தல் வேண்டும். அதைக் குத்தகைக்குக் கொடுப்பதாக விளம்பரப் படுத்தியிருந்தால் பலபேர் போட்டியிட்டிருப்பார்கள். எனது ஊக்கத்தை நன்கு புரிந்த பரமேஸ்வரன் தானாகவே முன்வந்து அத்தொழிற்சாலையைத் தந்தார். அது மட்டுமல்ல

பின்பு என்னைத்தேடி வந்து இங்கே ஒரு தொழிற்சாலையை ஆரம்பிக்கச் சொன்னார். அதனாலும் நல்லவருமானம் கிடைக்கிறது. இப்போது சொல்லுங்கள் ஊக்கமுள்ளவனைத் தேடிச்செல்வம் வழி கேட்டு வரவில்லையா..? அத்துடன் எனக்கு கஷ்டமேற்படவில்லை என்று சொன்னபோது பரமேஸ்வரன் ஆச்சரியப்பட்டார். எல்லாம் என் ஊக்கந்தால் வந்த சொத்துக்கள். எனது சொத்துக்கள் முழுவதையும் நான் இழந்தாலும் என்னால் தேடிக்கொள்ள முடியும்'' என்றார் கணநாதன்.

''இப்பொழுது ஏன் பணம் தேவைப்படுகின்றது?'' என்று கேட்டார் கணநாதன்.

''ஒரு முகவர் காலமாகிவிட்டார். அதனால் பங்காளிகள் அந்த நிறுவனத்தை மூடிவிட்டனர். கணக்கு வழக்கெல்லாம் பார்க்க வேண்டும். அவர்கள் பிரச்சினைப் பட்டதால் நீதிமன்றம் நிறுவனத்தை மூடிவிட்டது. சில மாதங்களில் எல்லாம் சரிவரும். அதன் பின் பணம் வரும்''. என்று சாதாரணமாகச் சொன்னார் கணநாதன்.

**594. ஆக்கம் அதர்வினாய்ச் செல்லும் அசைவிலா**
**ஊக்கம் உடையா னுழை.**

சோர்வில்லாத ஊக்கமுடையவளிடத்தில் செல்வமானது தானே அவன் இருக்குமிடத்திற்கு வழிகேட்டுச் சென்றடையும்.

**தாளின் நீளம்.**

''கோயிலுக்குப் போகாதவன், சுற்றத்தவருடன் சேராதவன், இனசனத்தை மதியாதவன், சமயத்தில் நம்பிக்கையில்லாதவன் என்று ஒருவன் இருந்தால் கூட ஊக்கம் மிகுந்தவனாக அவன் இருந்தால், அவன் மிக உயர்ந்த நிலையை அடைய முடியும். அதன் பின் அவன் கோயிலுக்குச் செல்பவனாக மாறுவான், சுற்றத்தவர்களுடனும், இனத்தவர்களுடனும் சேர்ந்து குதூகலிப்பவனாக மாறுவான். ஊக்கம் என்பது போதைவஸ்த்தைப் போன்றது. போதைவஸ்த்தைப் பயன்படுத்தப் பயன்படுத்த மயக்கம் அதிகரிப்பதைப் போல ஊக்கம் அதிகரிக்க அதிகரிக்க ஐஸ்வரியங்கள் வந்து சேரும். தண்ணீரிலே மலர்க்கின்ற பூவினது தாளின் நீளம் தண்ணீரின் மட்டத்திற்கு எற்றவாறே இருக்கும். அதுபோல ஒருவனது உள்ளத்தில் ஊக்கம் எந்தளவு இருக்கின்றதோ அந்தளவிற்கு உயர்வும் இருக்கும்'' என்றார் பரமேஸ்வரன்.

''உண்மைதான்'' என்றார் கணநாதன்.

''நான் தொழிற்சாலையை ஆரம்பிக்கும் போது எனது நண்பனான ஆறுமுகமும் எனக்கு அருகில் ஒரு தொழிற்சாலையை ஆரம்பித்தான். நான் ஒரு தையல் இயந்திரத்துடன் தொழிலைத் தொடங்கி இன்று ஆயிரக்கணக்கான தொழிலாளர்களுடன் பெரியதொரு ஆடைத் தொழிற்சாலை வைத்திருக்கிறேன். அதைவிடப் பல தொழிற்சாலைகள் உண்டு. ஆனால் ஆறுமுகம் இன்று அந்தத்தையல் இயந்திரத்துடன் தான் தொழில் செய்கிறான்'' என்றார் கணநாதன்.

‘‘நான் ஆறுமுகத்துடன் ஒன்றாகப் படித்தேன். பல வருடங்களாக நான் அவனைக் காணவில்லை. முன்பு ஒரு இயந்திரத்துடன் தொழிலை ஆரம்பித்த போது நான் அங்கு சென்று வாழ்த்தினேன். வாழ்த்தத்தான் என்னால் அந்த நேரம் முடிந்தது. தொழில் எதுவும் இல்லை. ஆறுமுகத்தின் தாயார் அப்போது தான் இறந்தார். அவர் இறக்கும் போது தனது தாலிக்கொடியை ஆறுமுகத்திற்குக் கொடுத்து ‘‘இது உனக்குரியது. உனது வருங்கால மனைவிக்குக் கட்டு’’ என்று சொல்லிவிட்டுச் செத்தவாவாம். அதனால் அந்தத் தாலிக்கொடியை அடைவு வைத்து ஆறுமுகம் ஒரு தையல் இயந்திரம் வாங்கினவன். அந்த முதல் கூட இல்லாமல் நான் கஷ்ரப்பட்டனான். அத்துடன் வேலையில்லாததால் அவனுடன் கூட இருந்து அவனுக்கு உதவி செய்தேன். அப்படியிருந்துதான் நான் இந்த நிலைக்கு வந்தனான். அவன் தையல் கடையை ஆரம்பிக்கும் போது சொன்ன வார்த்தைகள் இப்பொழுதும் எனது நெஞ்சில் கற்சித்திரமாக உள்ளது ‘‘பரமேஸ், அம்மாவின் தாலிக்டிகொடியை அடைவு வைத்து இந்தத் தையல் இயந்திரத்தை வாங்கியுள்ளேன். இன்னும் ஒரிரு வருடங்களுள் உழைத்து இன்னும் ஓர் இயந்திரம் வாங்கிவிடுவேன். என்னுடைய நோக்கம் பத்து இயந்திரமாவது வாங்கித் தொழில் செய்தல் வேண்டும் என்பதே’’ என்றான். ஆனால் அவனால் இன்னொரு இயந்திரத்தை வாங்க முடியவில்லை. காணும் வேளைகளில் சொல்வான் ‘‘பரமேஸ் நான் கூடாத பழக்கங்களைப் பழகிவிட்டேன். நண்பர்களுடன் சேர்ந்து மதுபானம் குடிப்பதால் உழைக்கும் பணம் முழுவதும் செலவாகிவிடுகின்றது. இனிமேல் நான் நண்பரோடு சேருவதில்லை என்றும், குடிப்பதில்லை என்றும் தீர்மானித்து விட்டேன். அடுத்த வருடம் இன்னொரு இயந்திரத்தை வாங்கிவிடுவேன்’’. என்பான். பத்து வருடங்களுக்கு முன்பு நாம் சந்தித்த போதும் அதையே சொன்னான். ‘‘பரமேஸ், நான் கல்யாணம் கட்டிவிட்டேன். மூன்று பிள்ளைகள் இருக்கிறார்கள். குடும்பம் கஷ்டம் தான். என்றாலும் நல்ல வருமானம் வருகிறது. தொழில் செய்ய முடியவில்லை. பக்கத்தில் இன்னும் இரண்டு தையல் கடைகள் வந்துவிட்டன. ஒருவன் இரண்டு தையல் இயந்திரங்களுடன் தான் தொழிலைத் தொடங்கினான். ஒரு வருடத்துள் மேலும் 10 இயந்திரங்களை வாங்கிவிட்டான். எப்படி வாங்கினான் என்று நினைக்க எனக்கு அதிசயமாக இருக்கிறது’’ என்றான். அவன் எனது நண்பன். முன்பு கடை திறந்த போதும் நான் எதுவும் கொடுக்கவில்லை. திருமணமானபோது அவன் எனக்கு அறிவிக்கவில்லை. அதனால் ஒரு தையல் இயந்திரத்தை வாங்கும்படி கொஞ்சப்பணம் கொடுத்தேன். அது தப்பென்று பின்புதான் புரிந்துகொண்டேன். அவன் நான் கொடுத்த பணத்தைச் செலவு செய்துவிட்டான். உள்ளத்தில் ஊக்கம் எந்தளவில் உள்ளதோ அந்தளவிற்குத் தான் அவனின் உயர்வும் இருக்கும்’’ என்றார் பரமேஸ்வரன்.

‘‘ஒருவனது வாழ்வின் ஏற்றத் தாழ்வுகளுக்கு ஊக்கம் தான் காரணமே தவிர வேறெதுவும் இல்லை. விதிதான் காரணமென்றாலும் மெய் வருந்தக் கூலி கிடைக்குமென்று பெரியவர்கள் தெரியாமலா சொல்லியிருக்கிறார்கள்’’ என்று சொன்னார் கணநாதன். தணிகாசலத்திற்குப் புதியதோர் அனுபவம் ஏற்பட்டது.

**595. வெள்ளத்து அனைய மலர்நீட்டம்; மாந்தர்தம்**
**உள்ளத்து அனையது உயர்வு.**

நீர்ப்பூக்களின் தண்டின் நீளம் அவை நிற்கும் நீரின் அளவினவாகும்; அது போல உள்ளத்தில் ஊக்கம் எந்த அளவு இருக்கிறதோ அந்த அளவிற்கு உயர்வு இருக்கும்.

**உயர்வான உள்ளல்**

சுவாமியர் வந்து அரசமர நிழலில் அமர்ந்தார். தணிகாசலம் அவர் அமர்ந்ததும் அவரது பாதங்களைத் தொட்டு கண்களில் ஒற்றினார். பரமேஸ்வரனும் கணநாதனும் அவரை வணங்கினார்கள்.

“என்ன எல்லோரும் ஆறுதலாக இருக்கின்றீர்கள்? நீங்கள் இருக்கும் நிலையைப் பார்த்தால் பெரியதொரு காரியம் நடக்கப்போகின்றது போலத் தெரிகின்றது. பரமேஸ்வரனும் தணிகாசலமும் சுதந்திரப் பறவைகள் அவர்களுக்கென்ன..?” என்று சிரித்தார் சுவாமியார்.

“ நான் சுதந்திரப் பறவையா..? பரமேஸ்வரனைச் சொன்னாலும் பொருந்தும். ஒரே ஒரு மகன். அவனையும் கரைசேர்த்து விட்டார். நான் அப்படியா? இன்னும் ஒரு மகனும் இரண்டு மகளும் இருக்கிறார்கள். அப்படியிருக்க இப்படிச் சொல்லுறீர்கள்” என்றார் தணிகாசலம்.

“இருக்கின்றார்கள் தான். அவர்களைப்பற்றி நீ இப்பொழுதுதான் நினைக்கிறாய். முன்னெப்போதாவது நினைத்தாயா..? அவர்களைப்பற்றி நினைக்க உனக்கு எங்கே நேரம் இருக்கிறது. எந்த நாளும் உறவினரைப்பற்றியும் பாடசாலையைப் பற்றியும் கோயிலைப்பற்றியும் தானே நினைப்பாய்” என்றார் சுவாமியார்.

தணிகாசலம் சிரித்தார். அப்பொழுது அங்கே வந்த விக்னேஸ்வரமூர்த்தி சொன்னார் “தணிகாசலம் கொடுத்து வைத்தவர். என்னால் இவ்வளவு மகிழ்ச்சியாகச் சிரிக்க முடிவதில்லை. இரண்டாயிரம் மாணவர்களுடனும், நூற்றுக்கு மேற்பட்ட ஆசிரியர்களுடனும் ஆயிரக்கணக்கான பெற்றோர்களுடனும் போராடிப் போராடி மனம் சோர்ந்து விட்டது. விடுமுறையில் எங்காவது செல்ல வேண்டும் போலுள்ளது” என்றார். தணிகாசலம் பதறிப்போனார். “ஏன் என்ன நடந்தது?” என்று கேட்டார்.

“ஏன் நீங்கள் பதறுகிறியள் ஒரே வேலைஇ மனச்சுமை, களைப்பு இவை -யெல்லாம் ஓய்வின்மையால் வந்தனவே தவிர நானாகத் தேடிக்கொள்ளவில்லை” என்றார் விக்னேஸ்வரமூர்த்தி.

“ வயது போனால் அப்படித்தான்” என்று பரமேஸ்வரர் கூறிக்கொண்டிருக்கையில் தணிகாசலம் குறுக்கிட்டார் “உங்களுக்கு இப்ப எத்தனை வயது. ஐம்பத்தேழு பெரிய வயதோ?” என்றார்.

“கணநாதன் சிரித்தார். பின் சொன்னார் “ வயதிற்கும் அதிபர் சொன்னவைக்கும் தொடர்பில்லை. மனம் களைப்படைந்தால் உடலும் களைப்படையும்.” என்றார்.

“மனதை இளமையாக வைத்திருக்க வேண்டுமானால் ஆசைகளைக் குறைத்தல் வேண்டும். ஆசை, அவா, பற்று, பொறாமை, வஞ்சகம், சூது போன்றன மனதில் குடிபுகுந்தால் உடலில் நோய் தோன்றும். மனதை அடக்க வேண்டும். அத்துடன் எண்ணுபவற்றையெல்லாம் உயர்வாக எண்ணுதல் வேண்டும். நினைக்கும் அளவு உயர்வடையா விட்டாலும் உயர்வாக எண்ணுவதை கைவிட்டுவிடக்கூடாது. வருட ஆரம்பமாகையால் அதிபர் களைத்துப் போனார். சற்று ஓய்வெடுங்கள் அளவுக்கதிமாக உண்பதும், அளவுக்கதிகமாக வேலை செய்வதும் உடலை வருத்தும். எனவே அதிபர் ஓய்வெடுக்க வேண்டும். தணிகாசலத்தைப் பொறுத்தவரை அவன்தான் மேன்மையடையாவிட்டாலும் மற்றவர்கள் நன்மையடைய வேண்டுமென்று விரும்புவான். உயர்ந்த எண்ணங்களை எப்போதும் எண்ணுபவனே வாழ்க்கையில் வெற்றி பெறுவான். தேவையில்லாத விடயங்களைப் பற்றி எண்ணுவதால் எமது சக்தி வீணாகிப் போகிறது. எண்ணுவதுதான் கிடைக்கும். அதனால் நாம் கடவுளை வணங்கும் போது உயர்ந்த எண்ணங்களை உடையவர்களாக எப்போதும் இருத்தல் வேண்டும்” என்றார் சுவாமியார்.

“ நான் பொதுவாக எண்ணுபவை எல்லாம் நடைபெற்று விடும். சென்ற முறை
க.பொ.த. உயர்தரப் பரீட்சையில் அதிகமான மாணவர்கள் சித்தியடைய வேண்டுமெ ன்றும், பாடசாலைக்குப் புதிய கட்டடம் கட்ட வேண்டும் என்றும் எண்ணினேன். அது கைகூடிவிட்டது. அதே போலக் கோயிலைப்பற்றியும், பொதுவிடயங்களைப் பற்றியும் எண்ணினால் அதுவும் நடைபெற்று விடுகிறது.” என்றார் தணிகாசலம்.

“இருண்டுவிட்டது போவோம்” என்றார் கணநாதன். அவர்கள் வழியில் வரும்போது கணநாதர் கேட்டார் “பரமேஸ் நான் கேட்டது என்னமாதிரி..?”

“பிரச்சினையில்லை ஆறுதலாகத் தா. உனக்குத் தேவையான பணத்தை நான் தருகிறேன்” என்றார் பரமேஸ்வரன்.

**596. உள்ளுவது எல்லாம் உயர்வுஉள்ளல்; மற்றஅது**
**தள்ளினும் தள்ளாமை நீர்த்து.**

எண்ணுவதை உயர்வாக எண்ணுதல் வேண்டும். எண்ணியளவு உயர்வு கை கூடா விட்டாலும் உயர்வாக எண்ணுவதை விட்டு விடக் கூடாது.

## தளரமாட்டார்

வீட்டுக்கு வந்த பரமேஸ்வரனும் கணநாதனும் வெளியே வேப்பமரத்திற்குக் கீழ் இருந்த நாற்காலிகளில் அமர்ந்தனர் “ பரமேஸ், நான் மிகவும் நெருக்கடியானதொரு நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளேன். முன்னெப்போதையும் விடத் தொழிலில் நெருக்கடி மிகுந்துள்ளது. இந்த நிலை நீடித்தால் தொழிலாளர்களுக்கு வேதனம் வழங்குவது கூடச் சிரமமாக இருக்கும். அத்துடன் உற்பத்திப் பொருட்கள் யாவும். தேங்கும் நிலை வந்துவிடும். கெங்காதரனுக்கு உலக நாடு முழுவதும் கிளைகள் உள்ளன. எமது தொழிற்சாலையில் உற்பத்தியாகும் முக்கால்வாசிப் பொருட்களை அவன் தான் கொள்வனவு செய்பவன். அவர்களது நிறுவனங்களை நீதிமன்றம் மூடச்சொன்னதால் எமது நிறுவனப் பொருட்கள் மட்டுமல்லாது எமது நிறுவனம் உற்பத்தி செய்யும் பொருட்களை உற்பத்தி செய்யும் சகோதர நிறுவனங்களினதும் நிலை பரிதாபகரமாகி விட்டது. பங்காளர் ஒருவருக்கொருவர் விட்டுக்கொடுக்காது தாம் தாம் உரிமையாளர்கள் என்று நினைத்துத் தீர்மானங்கள் எடுக்கிறார்கள். எவரும் ஒற்றுமைப்படுகிறார்கள் இல்லை. எமது சங்கத்தைச் சேர்ந்த பிரமுகர்கள் ஒவ்வொருவரையும் சென்று சந்தித்தோம். ஒவ்வொருவரும் தாம் நினைப்பது தான் சரியென்று பிடிவாதம் பிடிக்கின்றனர். எதுவும் செய்ய முடியவில்லை. தினமும் உற்பத்தியாகும் பொருட்கள் களஞ்சிய அறைகளில் சேமிக்கப்படாது.விற்பனைக்குச் சென்று விடும். அதனால் நாம் களஞ்சியப்படுத்த பெரிதாக நடவடிக்கை எடுக்கவில்லை. பதினைந்து தினங்களாக உற்பத்தி செய்யப்பட்ட பொருட்களைக் களஞ்சியப்படுத்தி வைத்துவிட்டோம். இன்னும் சில தினங்களுக்கு மட்டும் தான் உற்பத்தியை மேற்கொள்ளலாம். அதற்குப் பின் உற்பத்தியை நிறுத்த வேண்டும். உற்பத்தியை நிறுத்தினாலும் தொழிலாளர்களுக்குச் சம்பளம் கொடுக்க வேண்டும். அத்துடன் மூடப்பட்ட நிறுவனம் எமக்குத்தர வேண்டிய பணம் கோடிக் கணக்கில் நிலுவையில் உள்ளது”. கலங்கினார் கணநாதன்.

“தொழிலென்றால் இப்படி ஆயிரம் பிரச்சினைகள் வரத்தான் செய்யும். இதற்காகக் கலங்க முடியாது. முன்பு எனக்கும் இப்படி ஒரு நிலை வந்தது. அப்பொழுது தொழிற்சாலையை மூடிவிட்டேன். தொழிலாளர்களுக்கு அரைவாசிச் சம்பளம் கொடுத்தேன். பின் அதையும் நிறுத்தி விட்டேன். பிரச்சினைகள் பல வரும் ஆனால் நீண்ட நாளைக்கு நீடிக்காது. அத்துடன் பொருட்களுக்குத் தட்டுப்பாடேற்பட்டால் உங்களிடம் குறைவாகக் கொள்வனவு செய்யும் நிறுவனங்கள் கூடுதலாகக் கொள்வனவு செய்யும். ஏனென்றால் தேவையேற்படும் தானே. அப்பொழுது கூடுதலான கையிருப்பைக் கடனில்தான் கொடுக்க வேண்டிய நிலை ஏற்படும். என்னிடம் பொருட்களைக் கொள்வனவு செய்த ஒருவன் ஏதோ காரணத்திற்காக கொள்வனவைச் சில காலம் நிறுத்தினான். மற்றவன் கூடுதலாகக் கொள்வனவு செய்து அதிக இலாபம் இல்லாமல் விநியோகஞ்செய்தான். அதனால் அதன் பின் எல்லோரும் அவனிடமே கொள்வனவு செய்யத் தொடங்கினர். அதன் பின் முன்னைய கொள்வனவாளனால் தொழில் செய்ய முடியவில்லை. அதைப் போல உங்களது சிறிய கொள்வனவாளனுக்குக் கடன் கொடுத்து வியாபாரத்தை அதிகரிக்கச் செய்வதுதான் நல்ல வழி. அதை விட்டு விட்டு கலங்கிக் கொண்டிருப்பதில் அர்த்தமில்லை. உடம்பு

முழுவதும் அம்புகளால் புண்பட்ட போதும் யானை தன் பெருமையை நிலை நிறுத்தும். அதே போலத் தளராத ஊக்கமுடையவர்கள் அழிவு வந்த போதும் மனம் தளர மாட்டார்கள். அதனால் தையரிமாக இருந்து பிரச்சினைகளை எதிர்நோக்கு'' என்றார் பரமேஸ்வரன்.

''துன்பங்கள் வரும் நேரங்களில் உயர்ந்த எண்ணங்களை எண்ணமுடியவில்லை கடவுளைத் தொழ முடியவில்லை, உறங்க முடியவில்லை நடந்தவற்றை எண்ண எண்ண மனம் பரிதவித்து போகிறது. நாம் பிரச்சினைகள் இன்றியிருந்தால்தான் தொழிலைச் சிறப்பாகச் செய்ய முடியும்''. என்று கணநாதன் கதைத்துக் கொண்டிருக்கும் போது பரமேஸ்வரன் குறுக்கிட்டுச் சொன்னார் ''எண்ணங்கள் பலவீனம் அடைந்தால் மனதில் ஊக்கம் குறைந்து விடும். பின் உன்னால் நிம்மதியாக வாழ முடியாது. அதனால் போர்க்களத்தில் காயப்பட்ட யானை அஞ்சாது எதிரிகளை விரட்டிக் கொல்வது போல உனது மனத்தில் இருக்கும் துன்பங்களை விரட்டு. எல்லாம் நல்லதாக முடியும். ஊக்கம் உள்ளவன் தனது முதல் முழுமையாக அழிந்தாலும் கவலைப்பட மாட்டான். அதைவிடப் பலமடங்கு தேடிக் கொள்வான்''. என்றார் பரமேஸ்வரன்.

**597. சிதைவுஇடத்து ஒல்கார் உரவோர் புதையம்பின்**
**பட்டுப்பாடு ஊன்றும் களிறு.**

உடம்பை மறைக்கு மளவிற்கு அம்புகளால் புண்பட்ட போதும், யானை தனது பெருமையை நிலைநிறுத்தும். அதே போல ஊக்கமுடையவர்கள் தமக்கு அழிவு வந்த காலத்திலும் தளரமாட்டார்.

## மதிக்கும் பெருமை

அன்று வெள்ளிக்கிழமை. நாவலர் ஸ்ரீவித்தியா மகாகணபதி ஆலய இரவுப் பூசை முடிவடைந்ததும். குருக்கள் கோயிற்கதவைப் பூட்டினார். மக்கள் சென்று அரசமரத்தின் கீழ் இருந்த சுவாமியாரைச் சுற்றியிருந்தனர். அன்று குருக்கள். அரசமரத்தடிக்கு வந்தார். அவர் அங்கு வந்தால் கோயிலுக்கு ஏதோ தேவை இருக்கிறது என்று அர்த்தம். விக்னேஸ்வர மூர்த்தியும், குருக்களும், மணிவண்ணனும், தணிகாசலமும் கதைத்துக்கொண்டு வந்தனர். அங்கு கணநாதனும் பரமேஸ்வரனும் இருந்தனர். சுவாமியார் தேவையைப் பொறுத்துத்தான் அருளுரை வழங்குவார். அன்று குருக்கள் வந்தமையால் அதைப்பற்றிய தனது அருளுரையை ஆரம்பித்தார்.

''அன்பானார்களே!'' என்று சுவாமியார் மிகவும் நெகிழ்வுடன் மக்களை அழைத்தார் ''குருக்கள் வந்ததால் கோயிருக்கு ஏதாவது தேவையிருக்கும் என்று நினைத்திருப்பீர்கள்'' என்று கூறிவிட்டுச் சிரித்தார் சுவாமியார் ''மக்களுக்கு யாவும் தெரியும். தெரிந்தவற்றை நான் அடிக்கடி நினைவுபடுத்துவேன். அவ்வளவுதான்.

கல்வியோ பணமோ மனச்சாந்தியை அளிப்பதில்லை. மற்றவர்களாலும் உங்களுக்கு மனச்சாந்தியை அளிக்க முடியாது. மனச்சாந்தி மனதோடு தொடர்படையதோ அல்லது வெளித் தோற்றங்களோடு தொடர்புடையதோ அல்ல. அது செயல்களோடு தொடர்புடையது. ஆசைகளால் அவதிப்பட்டு அல்லற்படுவோருக்கு வாழ்நாளில் ஒருபோதும் மனச்சாந்தி கிடைக்கமாட்டாது. இந்த உடலை இறைவன் உங்களுக்களித்தது பிறருக்குத் தொண்டு செய்வதற்காக. தொண்டு ஒன்று தான் மனிதர்களுக்கும் பிராணிகளுக்கும் உள்ள வித்தியாசம். நாம் மற்றவர்களுக்கு உதவிகள் செய்யாவிட்டாலும் பரவாயில்லை, உபத்திரவம் செய்யாமலாவது இருக்கப் பழகிக் கொள்ள வேண்டும். செயல்களால் துன்பப்படுத்துவதும் சொற்களால் துன்பபப்படுத:துவதும் ஒன்றுதான். உதவி செய்பவன் கடவுளுக்கு மிக அருகில் இருக்கினறான். நல்ல எண்ணம், நல்ல செயல்கள், நல்ல குணம், என்பவை எம்மை நோக்கி இறைவனை வரச் செய்யும். ஒரு மனிதனை உயர்த்துவதும் தாழ்த்துவதும் அவனது மனதில் உள்ள ஊக்கத்தின் அளவே ஆகும். மக்கள் மூடக்கொள்ளைகளுக்காட்பட்டுச் சோர்ந்திருக்கின்றார்கள். இதனால்தான் அவர்களால் மகிழ்ச்சியாக இருக்க முடிவதில்லை, நிம்மதியாக இருக்க முடிவதில்லை. அடுத்தவர்களுக்கு உதவி செய்ய முடிவதில்லை. ஒரு மரத்தைக் குறுக்கே வெட்டிவிடுங்கள். அது பட்டுவிடுகிறதா? இல்லையே பல கிளைகளுடன் தளைக்கிறது. முன்பைவிடச் செழிப்பாகக் கிளைகள் அதிலிருந்து வெளிப்படுகின்றன. அதனால் பயன்களும் அதிகரிக்கின்றன. கிணற்றை இறையுங்கள், மறுபடியும் நீர் வந்து நிரம்பிவிடுகின்றது. இதைச் சமதர்மவிதி என்று சொல்வார்கள். ஒரு போதும் எதுவும் அழிவதில்லை அற்றுப்போவதுமில்லை. விவசாய உற்பத்திப் பொருட்கள் குறைவடைந்தால் விலை அதிகரிக்கும். அதனால் விவசாயிகள் ஊக்கத்துடன் அவற்றை உற்பத்தி செய்வார்கள். அதனால் காலப்போக்கில் அப்பொருட்கள் முன்னைய விலையிலும் பார்க்கக் குறைந்தும் விடும். இது உலகிலுள்ள அனைத்துக்கும் பொருந்தும். ஒருவன் ஏழை எளியவர்களுக்குக் கொடுப்பதால் ஒரு பொழுதும் அவனது செல்லம் குறைவடைய மாட்டாது. ஊக்கம் உள்ளவன் கேட்டதையெல்லம் கொடுக்கக் கூடிய வலிமையுள்ளவனாக இருப்பான். அவனால் எதையும் சம்பாதித்துக் கொள்ள முடியும். ஊக்கமில்லாதவர்கள் இந்த உலகத்தில் தலைநிமிர்ந்து வாழவே முடியாது. சாதனைகள் புரிய முடியாது. உலகில் பலர் சாதனைகள் புரிவதற்கு அவர்களிடமுள்ள ஊக்கம் தான் காரணமாக அமைகிறதே தவிர மற்றொன்றும் அவர்களுக்கு உதவுவதில்லை. ஊக்கம் இல்லாதவர்கள் இந்த உலகில் எதையும் சொந்தம் கொண்டாட முடியாது. இவர்களால் இந்த உலகத்தில் உயர்ந்த கொடையாளி நானென்று தன்னை மதித்துக் கொள்ளும் பெருமையினை அடைய முடியாது'' என்ற சுவாமியார் சிறிது நேரம் மௌனமாக இருந்தார். பின் ''அண்மையில் சூறாவளியால் பாதிக்கப்பட்டவர்களுக்கு உதவி செய்யுங்கள்'' என்றார்.

மக்கள் மத்தியில் சலசலப்பு ஏற்பட்டது. பிரமுகர்கள் முதலில் எழுந்து சென்று கஜேந்திரனிடம் தமது பெயர்களைப் பதிந்தனர். பின் பொதுமக்கள் ஒவ்வொருவருவராகப் பதிந்தனர்.

எல்லோரும் பதிந்து முடிந்த பின்பு சுவாமியார் சொன்னார் ''பதிந்த தொகையைத் தாமதியாது கொடுத்து உதவுங்கள்''.

மக்கள் கூட்டம் கூட்டமாகக் கூடி நின்று கதைத்தனர். பரமேஸ்வரனும் கணநாதனும் வீட்டுக்குப் புறப்பட்டனர். தணிகாசலம் மக்களோடு கதைத்துக் கொண்டிருந்தமையால் அவர்கள் அவரை விட்டு விட்டுச் சென்றனர்.

**598. உள்ளம் இலதவர் எய்தார் உலகத்து**
**வள்ளியம் என்னும் செருக்கு.**

ஊக்கம் இல்லாதவர்கள் இவ்வுலகில் ''தாம் பெரும் வள்ளல்கள் என்று'' தம்மைத் தாம் எண்ணி மகிழும் மகிழ்ச்சியை அடைய மாட்டார்கள்.

## ஊக்கத்திற்கஞ்சும்

''உண்மையில் இங்குள்ளவர்கள் அதிஷ்டசாலிகள். மிகவும் அருமையான பாடசாலை. அர்ப்பணிப்புடனும், ஊக்கத்துடனும் செயலாற்றும் அதிபர். அவருக்கு இணையான ஆசிரியர்கள், அவரோடு தோழோடு தோள் நின்று பணிபுரியும் மக்கள். இவற்றை நான் இங்கு தான் காண்கிறேன். இன்று கல்வி விற்பனைப் பொருளாகிவிட்டது. ஒரு பாடசாலையில் அனுமதி பெறுவதானால் பிரமுகர்களைச் சந்தித்தல் வேண்டும். இல்லாவிட்டால் தரகர்களைச் சந்திக்க வேண்டும். பின் ஏராளமாகப் பணம் செலவு செய்தல் வேண்டும். இங்கு எதுவும் செய்யாது நல்ல கல்வியைப் பெறமுடிகின்றது. அதை நினைக்க எனக்கு ஆச்சரியமாக இருக்கின்றது. அத்துடன் மனச்சாந்தியை தரவல்ல கோயில், நல்ல அறிவுரைகளைக் கூறும் சுவாமியார். இவற்றை நினைக்க ஆச்சரியாமாக இருக்கு. நாம் இயந்திரங்களாக இயங்கிக் கொண்டிருந்தும் பயனில்லை''. வெறுப்புடன் சொன்னார் கணநாதன்.

''கணநாதா, ஏன் வெறுப்படைகிறாய்..? நீ ஊக்கம் மிக்கவன். தொல்லைகள், தடைகள் யாவும் வாழ்க்கையில் வரத்தான் செய்யும். அதற்காகத் தொழிலைக் கைவிடவோ சோம்பியிருக்கவோ முடியாது. உனக்கு ஏற்பட்ட பிரச்சினைகளுக்குப் பரிகாரத்தை நான் கூறியுள்ளேன். போர்க்களத்தில் வீரர்களின் வேல்களை உடல் முழுவதும் தாங்கிக் கொள்ளும் பலம் மிக்க யானை, தனது ஊக்கமிகுதியால் எதிரிகளை அழித்தொழிக்கும். ஆனால் அதனிலும் ஊக்கம் மிகுந்த புலியின் உறுமற் சத்தம் கேட்டால் பயந்து நடுங்கும். அதைப்போலத்தான் வாழ்க்கை. நீ ஊக்கம் மிகுந்த புலி. மற்றவர்கள் பலம் மிகுந்த யானைகள். அவர்களால் உன்னை எதுவும் செய்ய முடியாது. பயத்தை விட்டுவிட்டு பலத்துடன் களத்தில் இறங்கு. ஊக்கம் மிகுந்த நீ புலிபோல வெல்வாய்'' என்றார் என்றார் பரமேஸ்வரன்.

அப்பொழுது தொலைபேசி மணியடித்தது. கணநாதன் தொலை பேசியின் பேசும் பகுதியைத் தூக்கிக் காதில் வைத்தார் “ஐயா நான் சிவசுந்தரராஜன் பேசுகிறேன்” என்றதும் கணநாதனின் மனம் பயத்தால் ‘திக்திக்’ என்று அடித்தது. அவன் அவரிடம் பொருட்களைக் கொள்வனவு செய்யும் சிறிய கொள்வனவாளன். அவர் அவனைப் பற்றி எப்பொழுதாவது கணக்கிலெடுத்ததில்லை. அப்படியிருக்கும் போது பரமேஸ்வரன் அவருக்கு உற்பத்தியின் பெரும்பங்கைக் கடனாகக் கொடுக்குமாறு சொன்னதற்கிணங்கக் கொடுத்தார். இரண்டு தினங்களுக்கு முன்பு தான் கொடுத்தார். அதுவும் முன்பை விடக் குறைந்த விலையில் .

“ஐயா, மகிழ்ச்சியான செய்தி. உங்களிடம் கொள்வனவு செய்த பொருட்களெல்லாம் முடிவடைந்து விட்டன. பணத்தைக் கணக்காளரிடம் கொடுத்து விட்டுத் தொழிற்சாலையில் உள்ள பொருட்கள் யாவற்றையும் நான் கொள்வனவு செய்கிறேன். தயவு செய்து இனிமேல் கெங்காதரனுக்குக் கொடுக்காதீர்கள்.” கெஞ்சினான் சிவசுந்தரராஜன்.

கணநாதன் திகைத்துப் போனார். மிகவும் நொந்த நிலையில் இருந்த அவரின் மகிழ்ச்சிக்கு அளவேயில்லை. அதனால் அவரால் பேச முடியவில்லை “ஐயா, கெங்காதரன் தனது பங்காளரோடு ஒற்றுமையாகி விட்டான். அதனால் உங்களுடன் தொடர்பு கொள்வான். அதற்கு முன்பு தொழிற்சாலைப் பொறுப்பாளருக்கு முழுப் பொருட்களையும் எனக்குக் கொடுக்கச் சொல்லிச் சொல்லுங்கள்”

“சரி” என்றார் கணநாதன்.

“மிகவும் மகிழ்ச்சி ஐயா” என்றான் சிவசுந்தரராஜன்.

“பரமேஸ், உண்மையில் நீதான் புலி. நான் என்னைப் பற்றி உயர்வாக நினைத்திருந்தேன். உனது திட்டப்படி சிவசுந்தர ராஜனுக்குக் கொடுத்த பொருட்கள் முழுவதையும் விற்றுவிட்டானாம். இப்பொழுது பொருட்கள் முழுவதையும் கேட்கிறான். பெருஞ்சுமை குறைந்து விட்டது. அத்துடன் கெங்காதரன் தனது பங்காளருடன் ஒற்றுமையாகி விட்டானாம். அதனால் அவனது நிறுவனம் தரவேண்டிய பணமும் வந்து சேர்ந்து விடும். சுவாமியாரின் சூறாவளி நிதிக்கு நான்தான் அதிக நிதி கொடுக்கப்போகிறேன். நான் யானைதான். நீதான் ஊக்கம் மிகுந்த புலி...” மகிழ்ந்தார் கணநாதன்.

“எப்பொழுதும் துன்பங்கள், துயரங்கள், வேதனைகள், சோதனைகளைக் கண்டு சோரக்கூடாது. ஊக்கத்துடன் அவற்றை எதிர்த்துப் போராடுதல் வேண்டும். தளர்ச்சிக்கு இடங்கொடுத்தால் வேதனை, இயலாமை, பலவீனம் போன்றன மனதில் வந்து குடியேறி ஊக்கத்தைக் கலைத்து விடும்” என்றார் பரமேஸ்வரன்.

“உண்மைதான். பெரியதொரு பிரச்சினை தீர்ந்துவிட்டது. இனி எனக்குப் பணம் தேவையில்லை. பணம் கொடுப்பதற்கு மட்டுமல்ல பயனுள்ள உபதேசங்கள் செய்யவும் நீ இருக்கிறாய்.” என்றார் பரமேஸ்வரன்.

**599. பரியது கூர்ங்கோட்டது ஆயினும் யானை**
**வெரூஉம் புலிதாக் குறின்**

யானை பருத்த தேகத்தையும் கூரிய கொம்புகளையும் உடையது. ஆனால் ஊக்கம் மிகுந்த புலி தாக்கினால் அது அஞ்சும்.

## வேறுபாடு

கெங்காதரன் பரமேஸ்வரனைத் தேடிப் பரமேஸ்வரனது வீட்டுக்கு வந்தான். தாங்கிக் கொள்ள முடியாத தனது பிரச்சினைகள் பற்றிப் பரமேஸ்வரனுடன் கலந்துரையாடி அவற்றிற்குத் தீர்வுகாணலாமெனவும், அவரிடம் தனக்குத் தேவையானளவு பணத்தைப் பெறலாமெனவும் வந்த கணநாதன், பிரச்சினைகள் யாவும் தீர்க்கப்பட்டதால் சில தினங்கள் அமைதியாக இருக்க விரும்பி பரமேஸ்வரனுடன் தங்கிவிட்டார். கெங்காதரன் தனது பங்காளருடன் இருந்த பிரச்சினைகள் தீர்ந்ததும் பல முறை கணநாதனைத் தேடி அவரது தொழிற்சாலைக்கும் வீட்டிற்கும் சென்றான். அவர் பரமேஸ்வரனது வீட்டில் இருப்பதாகச் சொன்னார்கள். பல முறை அவன் தொலைபேசி மூலம் தொடர்பு கொள்ள முயற்சித்தும் முடியவில்லை. பிரச்சினைகள் தீர்ந்ததால் கணநாதன் பரமேஸ்வரனுடன் நாவலர் ஸ்ரீவித்தியா மகா கணபதி ஆலயத்திலும் சுவாமியாருடனும் தனது பொழுதைக் கழித்துக் கொண்டிருந்தார். கஜேந்திரனையும் தணிகாசலத்தையும் அவருக்கு நன்றாகப் பிடித்து விட்டது.

பரமேஸ்வரன், கெங்காதரனை மகிழ்வுடன் வரவேற்றார் ''கணா, பலமுறை உங்களைத் தேடி த் தொழிற்சாலைக்கும் வீட்டிற்கும் சென்றேன். ஒருவார காலமாக நீங்கள் இங்கிருப்பதாகச் சொன்னார்கள். அப்படி என்ன இங்கு இருக்கு..?'' என்று கேட்டான் கெங்காதரன்.

''எல்லாம் இங்கிருக்கு'' என்று சிரித்த கணநாதன் ''உங்களுக்கு நான் பழைய படி உற்பத்திப் பொருட்களைத் தருகிறேன். ஆனால் பெருந்தொகையான பணத்தை நீங்கள் தரவேண்டியிருப்பதால் தொழிற்சாலையை மூட வேண்டியதொரு நிலை வந்து விட்டது. அதனால் பரமேஸ்வரனிடம் பணம் கேட்கவே வந்தேன்''. என்றார் கணநாதன்.

''பணம் முழுவதையும் நான் தருகிறேன். பல மாதங்களாக இயங்காதிருந்த எனது நிறுவனத்தை இனித்தான் இயங்கச் செய்தல் வேண்டும். நிறுவனம் இயங்கினால்தான் பணம் புரளும். இந்த முறை கடனாகத் தாருங்கள். விரைவில் முழுப்பணத்தையும் தந்து விடுகிறேன்''. என்றார் கெங்காதரன்.

“ஐயையோ தொழிலாளர்களுக்குச் சம்பளம் கொடுக்க முடியாமையால்தான் இங்கு வந்துள்ளேன். பணம் தராமல் தொழில்சாலையில் இருந்து பொருட்களை ஏற்றினால் தொழிலாளர்கள் தமக்குச் சம்பளம் வழங்கப்படுமென எதிர்பார்ப்பார்கள். பின் நான் அவர்களுக்குத் தவணை சொல்லமுடியாது. அரைவாசிப் பணத்தையாவது தந்துவிட்டு கடன் கேளுங்கள்”. என்றார் கணநாதன்.

கெங்காரன் சிறிது நேரம் பேசாமலிருந்தான். பின்பு சொன்னான் “நான் தொழிலில் ஊக்கமில்லாது இருந்ததால்தான் எனக்கு இந்த நிலை ஏற்பட்டது. பங்காளர்கள் என்னை ஏமாற்றி விட்டனர். நீங்கள் சொல்வதிலும் நியாயம் இருக்கிறது. ஒருவனுக்கு வலிமை என்பது ஊக்கமிகுதியே ஆகும். ஊக்கமில்லாதவர்கள் மரங்கள். அதுவும் இல்லைப் பட்டமரங்கள். அவர்கள் மனித உருவில் இருந்தாலும் செயலற்றவர்கள் என்பதைப் புரிந்துகொண்டேன். இந்த ஒரு முறை கொஞ்சப் பொருளாவது தாருங்கள். கொள்வனவு செய்யும் பொருட்களுக்குப் பணம் தருகிறேன். கடனைப் பின்பு தருகிறேன்”. என்றான் கெங்காதரன்.

“எமது தொழிற்சாலையில் உற்பத்தியாகும் பொருட்களின் பெரும் பகுதியை நீங்கள் வாங்குவதால் எம்மால் இயங்க முடியவில்லை. கூடியவிரைவில் பணாத்தைத் தந்துதவுங்கள்”. என்றார் கணநாதன்.

கெங்காதரன் இருவரிடமும் விடை பெற்றான். அவன் சென்றதும் கணநாதன் சொன்னார் ‘ “கடன் கொடுப்பதில்லை என்றுதான் தீர்மானித்து இருந்தேன். ஆனால் கடன் கொடுக்காவிட்டால் கடனாகப் பெற்ற தொகை வராது. அவன் இன்னொரு தொழிற்சாலையில் பணத்தைக் கொடுத்துப் பொருட்களைக் கொள்வனவு செய்வான். அதனால் எனக்கு இரட்டை மடங்கு நட்டம் ஏற்படும்.” என்றார் கணநாதன்.

“என்னைப் போலத் தொழிலில் ஊக்கமில்லாது இருந்தமையால்தான் கெங்காதரன் நட்டமடைந்தான். ஊக்கமில்லாதவர்கள் மனிதனைப் போலத் தோற்றம் கொண்டிருந்தாலும் அவர்கள் மரம்தான்”. என்றார் பரமேஸ்வரன்.

“பெரும் பிரச்சினை தீர்ந்து விட்டது.” என்று பெரு மூச்சு விட்டார் கணநாதன்.

பிரச்சினைகள் எங்கே தீரப்போகின்றன. நாம் உறுதியுடன் நின்று தீர்க்கத் தீர்க்க புதிது புதிதாகப் பிரச்சினைகள் முளைத்துக்கொண்டே இருக்கும். தொடர்ந்து புனிதமான எண்ணங்களைச் சிந்தித்தபடி ஊக்கத்துடன் செயலாற்றிக் கொண்டிருந்தால், தீய விளைவுகள் எதுவும் எம்மை வந்தடையாது. இதை எனது வாழ்வில் நான் கண்டுகொண்டேன்” என்றார் பரமேஸ்வரன்.

**600. உரம்ஒருவற்கு உள்ள வெறுக்கை; அ∴து இல்லார்**
**மரம் மக்கள் ஆதலே வேறு.**

ஒருவனுக்கு வலிமையாவது ஊக்க மிகுதியே; ஊக்கமில்லாதவர்கள் மரங்களே. அவர்கள் தோற்றத்தில் மக்களைப் போல இருத்தலே வேறுபாடு.

## தூசு

தணிகாசலத்தின் தாயின் சகோதரியின் மகள் வள்ளியம்மை க.பொ.த உயர்தர வகுப்பில் படிக்கும் போது இராசகோபாலுடன் காதல் கொண்டு வீட்டுக்குத் தெரியாமல் அவனுடன் சென்றவள். இராசகோபால் நல்ல அழகன். கட்டான உடல் உள்ளவன். படிக்கும் காலத்தில் விதம் விதமான உடைகளை அணிந்து தன்னைக் கவர்ச்சிகரமாக அழகுபடுத்திப் பாடசாலைக்கு வெளியே வந்து நிற்பான். அவனது சோடனையில் பல பெண்கள் மோகமுற்றனர். அவர்களில் ஒருத்தி வள்ளியம்மை. அவள் ஏழை.

அன்றன்று உணவுக்கே வழியில்லாதவள். படிப்பில் கெட்டிக்காரியான அவளுக்குத் தணிகாசலம் தான் உதவி செய்வார். க.பொ.த உயர்தர வகுப்பில் முதல் மாணவியாகத் திகழ்ந்த அவள் பல்கலைக்கழகத்திற்குச் சென்றால், தமது குடும்பம் முன்னேறி விடும் என்று அவளது தாயார் சிவகாமி நினைத்திருந்தாள். வள்ளியம்மையின் காதல் விடயம் அவளுக்குத் தெரிய வந்தபோது அவள் ஆரம்பத்தில் கொதித்தெழுந்தாள். பின் புத்திமதி சொன்னாள். அதற்கும் அவள் மசியாததால் ஊரில் உள்ள பெரியமனிதர்களிடம் கூறி அவளுக்குப் புத்திமதிகள் கூறும்படி கேட்டுக்கொண்டாள். அவர்கள் வள்ளியம்மையக்குப் புத்திமதிகள் பலவும் கூறினர்.

அன்று பாடசாலைக்குச் சென்று வருகிறேன் என்று கூறிவிட்டுச்சென்ற வள்ளியம்மை வீட்டிற்குத் திரும்பவில்லை. அவள் இராகோபாலின் துவிச்சக்கரவண்டியில் ஏறிச்சென்று விட்டாள். இராசகோபாலின் பெற்றோர் மிகவும் வதியானவர்கள். இருவரையும் பிரிக்க முயன்றனர். முடியவில்லை. அதனால் இராசகோபாலைக் கைகழுவி விட்டனர்.

காலமோடியது. இராசகோபாலுக்கு ஐந்து பிள்ளைகள் பிறந்தனர். இராசகோபால் சரியான சோம்பேறி. வேலைகளுக்குச் செல்ல மாட்டான். அதனால் குடும்பத்திற்கு என்நாளும் கஷ்டம் தான். அவனது நிலையை அறிந்த அவனது பெற்றோர் மனம் வருந்தினர். ஏதோ தம்மால் இயன்ற உதவிகளைச் செய்துவந்தனர். தணிகாசலம் அவளின் நிலையை எண்ணி வருந்தினார். அவள் கேட்காவிட்டாலும் இடைக்கிடை அவளுக்கு தன்னால் இயன்ற உதவிகளைச் செய்வார்.

அன்று அவளது மூத்த மகளுக்குப் பரீட்சைக் காசு கட்டவேண்டும். அவளிடம் பணம் இருக்கவில்லை. மூத்த மகள் ரோகிணி "இன்றுதான் பரீட்சைக் காசு கட்டும் கடைசித்தினம்". என்று காலையில் எழுந்து நின்று அழுதாள்.

முதல் நாள் பாடசாலைக்குச் சென்ற தணிகாசலம் ரோகிணியின் பரீட்சைக்கான பணத்தை வகுப்பாசிரியரிடம் கொடுத்து விட்டார். இது ரோகிணிக்குத் தெரியாது. அதனால் ரோகிணி அன்று பாடசாலைக்குச் செல்லமாட்டேன் என அடம்பிடித்து நின்றுவிட்டாள். பாடசாலைக்குத் தற்செயலாகச் சென்ற தணிகாசலத்தைக் கண்ட

வகுப்பாசிரியர் “ரோகிணி பாடசாலைக்கு வரவில்லை” என்று கூறினார். அதனால் தணிகாசலம் வள்ளியம்மையின் வீட்டுக்கு வந்தார்.

அவரைக் கண்டதும் வள்ளியம்மைக்குத் துக்கம் பொங்கியது “ வள்ளியம்மை இந்த வயதில் உனக்குக் காதல் தேவையில்லை. பாடங்களை அவதானமாகப் படித்துப் பரீட்சையில் சித்தியடை பின்பு பல்கலைக்கழகம் சென்று படி. உனது படிப்பு முடிந்த பின்பு திருமணத்தைப்பற்றி யோசிக்கலாம். நீ அறிவுடையவள். உலகத்தைப் பற்றித் தெரியாதவள். நான் சொல்பவற்றைக் கேள். மனிதருக்கு ஒவ்வொன்றுக்கும் ஒவ்வொரு பருவம் இருக்கு. அந்தந்தப் பருவத்தில் செய்யவேண்டியவற்றைச் செய்யாது விட்டால் பிற்காலத்தில் நீயும் கஷ்டப்படுவாய், உனது குடும்பமும் கஷ்டப்படும்’’ என்று தணிகாசலம் சொன்னவை அவளது காதில் ஒலித்தது ‘‘உண்மைதான் நான் அப்பொழுது கேட்டிருந்தால் இவ்வளவு பிரச்சினைகளும் வந்திராது.’’ என்று நினைத்தாள்.

‘‘வள்ளி, ரோகிணியின் பரீட்சைக் காசை நேற்றே கட்டிவிட்டேன். அவளைப் பாடசாலைக்க அனுப்பு. ‘‘வகுப்பாசிரியர் ரோகிணி வகுப்பிற்கு வரவில்லை என்று சொன்னார்’’ என்று கூறிவிட்டு நடந்தார்.

‘‘சித்தப்பா’’மெல்ல அழைத்தாள் வள்ளியம்மை. அவளது குரல் தழுதழுத்தது.

‘‘சொல்லம்மா... ஏதாவது உதவி தேவையா..?’’

விம்மினாள் கண்களால் கண்ணீர் பெருகி ஓடியது.

‘‘சொல்லு எனக்கு அவசியமான ஒரு வேலை இருக்கு’’

‘‘உங்களின் நண்பரின் தொழிற்சாலையில் இவருக்க ஒரு வேலை பெற்றுக் கொடுங்கோ’’

தணிகாசலம் சிரித்தார். பலமாகச் சிரித்தார் ‘‘இப்ப என்னுடன் வரச்சொல்லு. வேலைபெற்றுக் கொடுக்கிறேன். முதலில் இவன் வேலை செய்வானா.....? நாள்முழுவதும் சோம்பியிருக்கிறான். நாலு ஆடு மாடுகளை வளர்த்தாலே குடும்பக் கஷ்டம் தீரும். சோம்பேறி தோலுடன்தான் பழத்தைச் சாப்பிடுவான் என்று முதியவர்கள் சொல்வார்கள். ஒருவனுடைய குடும்பம் என்னும் மங்காத விளக்கு சோம்பலாகிய தூசு படியப்படிய ஒளிகுறைத்து அழித்து விடும். இவனைத்திருத்த முடியாது.’’ என்று கூறிவிட்டு அவளது பதிலை எதிர்பாராது நடந்தார் தணிகாசலம்.

**601. குடிஎன்னும் குன்றா விளக்கம் மடி என்னும்**
**மாசுஊர மாய்ந்து கெடும்.**

ஒருவனுடைய குடும்பமாகிய மங்காத ஒளி விளக்கு, அவனுடைய சோம்பலாகிய தூசி படியப் படிய ஒளி மங்கிக் கெட்டு விடும்.

**சோம்பலை ஒழி**

காலை பத்துமணியாகியும் இராசகோபால் நித்திரையால் எழும்பவில்லை. முதல்நாள் இரவு எட்டு மணிக்குப்படுத்த அவன் இன்னும் எழும்பவில்லை. காதலிக்கும் போது ஓரிரு நிமிடங்கள் கூடவள்ளியம்மையைக் காணாமலிருந்தால் துடித்துப்போவான். அவள் அவனுடன் புறப்படுவதற்கு முதல் நாள் அவளது தாயார் அவளைக் கடுமையாகத் தண்டித்து விட்டாள். மிகவும் கெட்டிக்காரியான அவள் காதலித்த பின்பு படிப்பதில்லை. நம்பிக்கையுடனிருந்த அவளுக்கு அது பேரிடியாக இருந்தது. அன்று அவள் பாடப்புத்தகத்தை விரித்து வைத்து விட்டு அதை உற்றுப் பார்த்துக் கொண்டிருந்தாள். இடையிடையே சிரித்தாள். புத்தகத்தைத்தூக்கி முத்தமிட்டாள். அதைத் தற்செயலாகக் கண்ட அவளது தாயார் மெதுவாகச் சென்று பின்னால் நின்று பார்த்தாள். புத்தகத்துள் இராசகோபாலுவின் நிழற்படம் இருந்தது. அதைக்கண்டவுடன் அவளுக்குத் தலை கால் புரியாத கோபம் வந்தது. உடனே அவளது புத்தகத்தைப் பறித்து அதற்குள்ளிருந்த இராசகோபாலின் நிழற்படத்தை எடுத்து அருகில் எரிந்து கொண்டிருந்த கைவிளக்குில் கொழுத்தினாள். அதைக்கண்ட வள்ளியம்மை துடிதுடித்துப் போனாள். அவளால் அதைத் தாங்கிக் கொள்ள முடியவில்லை. அது ஒரு கொடிய நிகழ்வென நினைத்து தாயுடன் சண்டைக்குச் சென்றாள்.

தாய் அளவுக்கதிகமான கோபத்தில் இருந்ததால் வள்ளியம்மை இரவு சாப்பிடாமல்படுத்து விட்டாள். அவள் இரவு முழுவதும் திட்டமிட்டுக் காலையில் புறப்பட்ட போது அவளது தாயார் சொன்னார் ‘‘வள்ளி, காதலிப்பதை நான் தவறென்று சொல்லமாட்டன். ஏனென்றால் எனது பெற்றோர் காதலித்துத்தான் திருமணம் செய்தவை. அதை நான் ஏன் ஆதரிக்கிறன் என்றால் அப்போது அப்பா பெரியதொரு விவசாயியாக இருந்தார். ஆனால் உன்னைக் காதலிப்பவனுக்கு எந்தத் தொழிலுமில்லை. அத்துடன் அவனது போக்கைப் பார்த்தால் அவன் எதிர் காலத்தில் தொழில் செய்வான் என்றும் நம்பமுடியாது. நீ நன்றாகப் படிக்கக்கூடியவள். நன்றாகப் படித்து ஒரு நிலைக்கு வந்த பின்பு நீ காதலிப்பதை நான் எதிர்க்கமாட்டன். நான் அவனை மறக்கச் சொல்லிச் சொல்லவில்லை. தற்காலிகமாக அவனோடு கதைப்பதை விட்டு விட்டுப் படி, நீ படித்து முடித்தவுடன் நானே அவனது வீட்டுக்குச் சென்று அவனது பெற்றோருடன் கதைத்து உனக்கு அவனைத் திருமணஞ்செய்து வைக்கிறேன். இப்ப படி பிள்ளை’’ தாயின் கண்ணீர் வடியும் முகம் அவளது கண்களிற்குள்த் தோன்றியது.

‘‘அம்மா சொன்னதைக் கேட்டிருந்தால் இன்று இந்த நிலை எனக்கு வந்திருக்காது’’ விம்மினாள் வள்ளியம்மை. இராசகோபால் முகங்குப்புறப்படுத்திருந்தான். அவனை இலேசில் எழுப்ப முடியாது.

ஒரு முறை அவள் தனது தந்தையின் தம்பியாரின் வீட்டுக்குக் கடன் கேட்பதற்காகச் சென்றாள். அவர் கொடியவர். எதையும் நேரே கதைத்துவிடுவார். அவரது மனைவி இரக்கம் மிக்கவள். வள்ளியம்மைக்கு இடைக்கிடை ஏதாவது உதவிகள் செய்வாள். அன்று சித்தப்பா நிற்கமாட்டாரென நினைத்துச் சென்றாள்.

எதிர்பாராதவாறு அவர் அங்கு நின்று விட்டார். அவளைக் கண்டதும் சொன்னார் "உன்னை அவனைக்கட்ட வேண்டாமென்று எப்படியெல்லாம் சொன்னனான். அந்த நேர வாலிபமிடுக்கிலை அவனோடை ஓடினனீ. இப்பேன் திரியுறாய் அவனால் உன்னை வைத்துக் காப்பாற்ற முடியாதென்று எனக்குத் தெரியும். அவன் தகப்பனோடு கூடத் தோட்டத்திற்குச் சென்று வேலை செய்தால் குடும்பத்தை நல்ல முறையில் காப்பாற்றலாம். அவன் படுசோம்பேறி. அவனைப் பழுதாக்கிறது நீதான். அவன் வேலைக்குப்போகாமல் சோம்பியிருந்தால் ஏன் அவனுக்குச் சோறு குடுக்கிறாய். நாலு நாட்களுக்கு பட்டினி போடு திருந்திவிடுவான். நாங்கள் இரவு பகலாய் உடலை வருத்தி உழைக்கிறத்தாலதான் உன்னைப் போன்ற சோம்பேறிகள் உருப்படாமல் இருக்கிறார்கள். உன்னுடைய சின்னம்மாவுக்கு என்ன தெரியும்? ஒரு பத்து ரூபா உழைக்கத் தெரியுமே..? நான் மாடாய் உழைக்கிறத்தைத் தானும் அனுபவித்து அடுத்தவர்களுக்கும் தானம் கொடுக்கிறா. உவாக்கு இரண்டு போட்டால் நீ திருந்துவாய். எதைச் சொன்னாலும் உனக்கு மானம் ரோசம் வெட்கம் வராதா...? தன்னுடைய குடும்பம் இன்பமாக வாழ வேண்டுமென்று நினைப்பவன் சோம்பலில்லாமல் முயற்சிகளில் ஈடுபடல் வேண்டும். அவனுக்கு அந்த நினைப்பிருக்கே. அந்த நேரம் எனக்கு என்ன சொன்னனீ "அவர் உழைத்து என்னை மகாராணி மாதிரி வைத்திருப்பார் என்றனீ. இப்ப மகாராணி கடன்பெற ஊரிலுள்ள படலைகள் எல்லாம் திறக்கிறா…." இடியோசையைப் போலக் கேட்ட வார்த்தைகளைப் பொறுக்க முடியாது காதுகளைப் பொத்தினாள் வள்ளியம்மை. அவளது கண்களால் பொல பொலவெனக் கண்ணீர் ஒழுகியது. விம்மி விம்மி அழுதாள்.

**602. மடியை மடியா ஒழுகல் குடியைக்**
**குடியாக வேண்டு பவர்.**

தனது குடும்பத்தை உயர்ந்த குடும்பமாக்க வேண்டும் என்று விரும்புகின்றவன் சோம்பலை ஒழித்து முயற்சியுடையனாதல் வேண்டும்.

**அவன் முன் அழியும்.**

எவ்வளவு கனவுகளோடும் கற்பனைகளோடும் கல்விப் பொதுத் தராதரப்பத்திர சாதாரண தரப்பரீட்சைப் பெறுபேறுகள் வந்தபோது மகிழ்ந்தாள். எட்டுப் பாடங்களிலும் சித்தியடைந்த அவள் ஏழு பாடங்களில் விசேட சித்தியடைந்திருந்தாள். ஆங்கிலப் பாடத்தில் மட்டும். திறமைச்சித்தியடைந்திருந்தாள். ஆங்கில பாடம் அவளுக்குச் சிரமமானதல்ல. அதிலும் அதிவிசேட சித்தியடைந்திருப்பாள். ஆனால் கட்டுரையில் ஒரு சிறிய தவறு விட்டுவிட்டதால் திறமைச்சித்தியடைந்திருந்தாள்.

பெரும் பெரும் பிரமுகர்களின் பிள்ளைகளெல்லாம் சித்தியடையாத போது அவள் மிகவும் உன்னதமான நிலையில் சித்தியடைந்தது பலரை வியக்க வைத்தது. அப்பொழுது கணபதி மத்திய மகாவித்தியாலயம் ஒரு பிரபலமில்லாத பாடசாலை. அப்பாடசாலையில் அதிபராகக் கடமை புரிந்த அருணாசலம் சோம்பல் மிக்கவர். பாடசாலை எட்டு முப்பதிற்குத் தொடங்கினால் அவர் ஒன்பது மணிக்குப் பின்புதான்

வருவார். பன்னிரண்டு மணிக்கு ஏதாவதொரு காரணம் சொல்லிவிட்டுப் பாடசாலையிலிருந்து புறப்பட்டுவிடுவார். அவரைப் போலத்தான் ஆசிரியர்களும். அப்பாடசாலையில் அதிபரினதும், ஆசிரியர்களினதும், பிரமுகர்களினதும், பணக்காரர்களினதும் பிள்ளைகள் கற்பதில்லை. அவர்கள் பிரபல நகர்ப்புறப் பாடசாலைக்குச் சென்றுவிடுவார்கள். அந்த முறை நகரில் உள்ள பிரபல பாடசாலைகளில் கற்றுப் பரீட்சை எழுதிய அதிபரினதும், உப அதிபர்களினதும் பிள்ளைகள் சித்தியடையவில்லை.

கல்விப் பொதுத்தராதர சாதாரணதரப் பரீட்சையில் மிகச் சிறப்பாகச் சித்தியடைந்த அவளைச் சேர்த்துக் கொள்ளப் பில பிரபல பாடசாலைகள் விரும்பின. ஆனால் அருணாசலம் விடுதலைப் பத்திரத்தைக் கொடுக்க மறுத்தார். அதனால் அவளையும் அழைத்துக் கொண்டு தணிகாசலம் பாடசாலைக்குச் சென்றார். அருணாசலத்திற்கு அவர்கள் வந்த காரணம் விளங்கிவிட்டது. அதனால் “தணிகாசலம், அவளை இங்கே படிக்கவிடு. கிராமத்தில் உள்ளவர் எல்லாம் பட்டணப் பாடசாலைகளுக்குச் சென்றால் கிராமப் பாடசாலைகளை மூடவேண்டிய நிலையேற்படும்” அருணாசலம் கதைத்துக் கொண்டிருக்கும் போது சற்றுக் கோபத்துடன் தணிகாசலம் குறுக்கிட்டார் “ஐயா, இந்தப் பாடசாலையை எண்ணற்ற கற்பனைகளுடன் வைத்திலிங்கம் ஐயா ஆரம்பித்தார். நீங்கள் அதைக் கெடுத்து விட்டீர்கள். உங்களது பிள்ளையையும் உங்களது ஆசிரியர்களது பிள்ளைகளையும் இப் பாடசாலையில் சேருங்கள். நீங்கள் அவர்களைப் பிரபல பாடசாலைகளில் சேர்த்துவிட்டு இங்கு வந்து கற்பிக்காமல் சோம்பியிருக்கின்றீர்கள். உங்கள் பிள்ளைகள் இங்கு படித்தால் அக்கறை வரும் கற்பிக்க வேண்டுமென்ற எண்ணம் வரும் சோம்பல் வராது. கடவுள் செயல்களுக்கு ஏற்றபடிதான் நன்மை தீமைகளைத் தருவார் என்று நன்கு கற்ற உங்களுக்குத் தெரியாதா...? இப்போது அதற்கான தண்டனை உங்களுக்குக் கிடைத்துள்ளது. பெருந்தொகையான பணத்தைக் கட்டித் தனியார் பாடசாலையில் சேர்த்த உங்களது மூத்த மகன் க.பொ.த சாதாரண பரீட்சையில் சித்தியடையவவில்லை. இளைய மகன் தரம் ஐந்து புலமைப்பரிசில்பரீட்சையில் சித்தியடையவில்லை. இதெல்லாம் ஏன்..? உங்களது அக்கறையின்மை உங்களது சுறுசுறுப்பின்மை. அவள் ஏழை தான், எனினும் கெட்டிக்காரி. அதனால் பிரபல நகர்ப்புறப் பாடசாலையொன்று அவளின் குடும்பநிலை கருதி சன்மானம் இன்றிச் சேர்க்க விரும்புகின்றது. படிப்புச் செலவை நான் கொடுப்பேன். எதிர்காலத்தில் அவள் ஒரு வைத்தியராக வருவாள். அதற்கான திறமை அவளிடம் நிறைய இருக்கின்றது. எங்கடை கிராமத்திலை எங்கடை சாதியிலை யாரும் இதுவரை வைத்தியரானதில்லை. அவள் கட்டாயம் வைத்தியராக வருவாள். அதற்குப் பின் அக்குடும்பம் தழைத்துவிடும். ஐயா ஒவ்வொருவரும் சுறுசுறுப்புடன் கடமையைச் செய்ய வேண்டும். சோம்பியிருந்து சம்பளமெடுத்தால் ஒரு காலத்தில் அதற்கான தண்டனையைப் பெற்றேயாகவேண்டும்’’.

“சரி சரி.. நான் விடுதலைப் பத்திரத்தைத் தருகிறேன். ஒராளுக்குக் கொடுத்தால் மற்றவர்களும் கேட்பார்கள் பிறகு பாடசாலையை மூடவேண்டியது தான்’’ என்றார் அருணாசலம்.

“இதனை நிறுவியவரின் கனவுகளைப் பூர்த்தி செய்யாத இந்தப் பாடசாலை திறந்திருந்தாலென்ன? மூடப்பட்டால் என்ன? இரண்டும் ஒன்றுதான். ஆனால் அழிக்கும் தன்மையைக் கொண்ட சோம்பலை உடைய தலைவனைக் கொண்ட குடும்பமோ அல்லது நிறுவனமோ அவனுக்குமுன் அழிந்துவிடும் என்பார்கள். அதுசரி!” என்று கூறி விட்டு விடுகைப்பத்திரத்தை வாங்கிக் கொண்டு சென்றார் தணிகாசலம்.

‘‘அழிக்கும் தன்மையைக் கொண்ட சோம்பலை உடைய தலைவனின் குடும்பம் அவனுக்குமுன் அழிந்துவிடும்’’ தணிகாசலத்தின் வார்த்தைகள் இடியாக ஒலித்தன. விம்மி விம்மி அழுதாள் வள்ளியம்மை ‘‘இப்பொழுது பிள்ளைகளும் அவளும் படும் துன்பத்தை நேரில் கண்டும் செயலற்றிருக்கும் அவனைப் பார்க்க அவளுக்கு ஆத்திரமாத்திரமாக வந்தது. வயோதிபராகிவிட்ட அவனது பெற்றோரைப் பராமரிப்பதால் அவனது பெற்றோர் அவளுக்கு உதவுகிறார்கள். அது போதாமையால் கஷ்டப்படுகிறதை நினைக்க அவளுக்குத் துக்கமாக இருந்தது.

**603. மடிமடிக் கொண்டு ஒழுகும் பேதை பிறந்த**
**குடிமடியும் தன்னிலும் முந்து.**

அழிக்கும் இயல்புடைய சோம்பலையுடைய அறிவில்லாதவன் பிறந்த குடும்பம், அவனுக்கு முன்பே அழிந்து விடும்.

## குற்றம் பெருகும்

பாயில் சுருண்டு படுத்திருந்த இராசகோபாலைத் தட்டியெழுப்பினாள் வள்ளியம்மை. பலமுறை தட்டிய பின்பு மெல்ல எழுந்த இராசகோபால் ‘‘இன்னும் நீ அப்பா வீட்டை போகவில்லையா....?’’ என்று கேட்டான்.

முன்பு அவன் ஏதாவத கேட்டால் அழுவாள். அழுது அழுது அவளது மனம் மரத்துவிட்டதால் அவளுக்கு ஆத்திரம் வந்தது ‘‘பத்துமணிவரை உங்களுக்கு எங்கிருந்துதான் நித்திரை வருகிறதோ தெரியவில்லை. மற்றைய ஆம்பிளைகள் இவ்வளவு நேரத்துள் இருநூறு ரூபாவாவது உழைத்துவிடுவார்கள். இடைப்பழம் பழுத்த வாழைக்குலை ஒன்றை வெளவால் திண்டுட்டுது. அதை வெட்டி வித்திருக்கலாம். அதையும் நானெல்லோ சந்தைக்குக் கொண்டு போக வேண்டும். வெளவால் அரைவாசியைத் திண்டுட்டுது மிகுதியை அறுபது ரூபாவுக்கு பூபாலசிங்கத்தின் கடைக்கு கொடுத்தனான். அதைச் சந்தையில் கொண்டு போய் விற்றுருந்தால் கடைசி நூற்றைம்பது ரூபாவிற்காவது விற்றிருக்கலாம். இதை ஏன் நீங்கள் உணருகிறீர்கள் இல்லை...?’’ அவள் ஆத்திரத்துடன் கத்திக்கொண்டிருக்கும் போது இராசகோபால் கேட்டான் ‘‘தேனீர் தா’’

‘‘சீனி இல்லை வெறுந்தண்ணீர் தரட்டே’’

“ மருதமலை மாமணியே முருகையா....’’ என்று பாடியபடி வந்த இராசகோபால் அவளது தோளைத் தட்டினான்.

அவளுக்கு என்றுமில்லாதவாறு கோபம் வந்தது. “ இதுக்கு மட்டும்தான் சோம்பலில்லை. போ அங்காலை’’ என்று சினந்தபடி வெளியே வந்தாள். அவள் வெளியே வந்தபோது அவளது இரண்டாவது மகன் மயூரன் முற்றத்தில் நின்றான். “ஏனடா பள்ளிக்கூடம் போகவில்லையா...?’’

அழுதான், விக்கி விக்கி அழுதான்.

‘‘சொல்லடா என்ன நடந்தது என்று’’ என்று ஆத்திரத்தால் கத்தியபடி அவனது முதுகில் ஓங்கிக் குத்தினாள் வள்ளியம்மை. அவன் வீரிட்டு அழுதான். அவனை விசாரியாது, அவனது கையைப்பிடித்து இழுத்துக் கொண்டு பாடசாலைக்குச் சென்றாள் வள்ளியம்மை.

‘‘பிள்ளைகளை ஒழுங்காக வளர்க்க வேண்டும். உங்களது மகனால் பாடசாலையில் பெரும் பிரச்சினை. பிள்ளைகளின் காசுகளையும், அப்பியாசப் புத்தகங்கள், மற்றும் பொருட்களையெல்லாம் உங்களது மகன் களவெடுக்கிறான். நாம் புத்திமதிகள் பலவும் சொல்லிப் பார்த்தோம். திருந்துவதாக இல்லை. இன்று ஆசிரியை ஒருவரின் பணத்தைத் திருடி விட்டான். எமது பாடசாலையில் தங்கத்தினாலான நகைகள் விழுந்தாலும் அதை எடுத்து வந்து மாணவர்கள் தருவார்கள். பொருட்கள் வைத்த வைத்த இடங்களிலேயே இருக்கும். உனது பிள்ளைகள் தான் இப்பாடசாலையில் திருடுவது. நான் எவ்வளவோ புத்திமதிகள் கூறிவிட்டேன். திருந்துவதாகத் தெரியவில்லை. நீ தணிகாசலத்தின் பெறாமகள். அந்த மனிதன் உங்களுக்கு எவ்வளவு உதவிகள் செய்கிறார். பாடசாலையும் பலவிதமான உதவிகளைச் செய்கிறது. ஊர் பிரமுகர்களும் செய்கின்றனர். அப்படியிருந்தும் உனது பிள்ளைகள் திருந்தாதிருப்பது எனக்கு மிகவும் கவலையை அளிக்கிறது. இப்பாடசாலையைப் பற்றி உனக்கு நன்கு தெரியும். நகரிலேயே மிகவும் சிறந்த பாடசாலை. ஊரவர்கள் என்பதால் சேர்த்தோம் அத்துடன். தணிகாசலம் எனக்கு மிகவும் வேண்டியவர். அவருக்கு எந்தக் கவலைகளும் இல்லை. ஆனால் உங்களைப் பற்றித்தான் கவலைப்படுவார். பிள்ளைகளைத் திருத்துவதற்கு முன்பு பெற்றோரைத் திருத்துதல் வேண்டும். இராசாகோபாலை வரச்சொல்லு. அவனை அழைத்துவரச் சொல்லித்தான் மயூரனை வீட்டுக்கு அனுப்பினேன். சோம்பலுக்கு அடிமைப்பட்டு முயற்சியில்லாமல் வாழ்பவனின் குடும்பம் உருப்படமாட்டாது. அக் குடும்பத்தின் பெருமை, பாரம்பரியம் யாவும் அழிந்துவிடும். குற்றங்கள் பெருகிவிடும். இராசகோபாலின் தந்தை மானம், மரியரிதையோடு வாழ்ந்து வருகிறார். ஊரவா் மதிக்கும் கண்ணியமான பெரிய மனிதா் அவா். அவரது பிள்ளையும், பேரப்பிள்ளைகளும் அவரது ஒப்புயா்வில்லாக் குடும்ப மானத்தைக் கெடுக்கலாமா.....? இவற்றையெல்லாம் நான் தணிகாசலத்திற்குச் சொல்லவில்லை. சொன்னால் அந்தக் கவலை அவரை அரித்துத் தின்றுவிடும். நீ நல்லவள் ˙ சகலவற்றையும் புரிந்து

கொள்பவள்.உனக்குச் சொல்வதால் எந்தவிதமான பிரயோசனமும் இல்லை. அதனால் அவனை வரச்சொல்''. என்றார் அதிபர்.

வள்ளியம்மை விக்கி விக்கி அழுதாள். அவளால் பேசமுடியவில்லை. உடல் கூசியது ''ஐயா, எனக்கு நேரும் துன்பங்கள் இன்னொருவருக்குச் நேரக்கூடாது. எனது கணவர் காலையில் எழும்புவது பத்து மணிக்குப் பிறகுதான். ஒரு வேலையும் செய்வதில்லை. வாழைத் தோட்டத்திற்கு நான்கு தினங்களுக்கொரு முறை நீர்பாய்ச்சி அதை நல்ல முறையில் கவனித்தாலே எமது குடும்பம் சிறப்பாக வாழும். ஆனால் அவர் அதைக்கூடச் செய்கிறார் இல்லை. எனக்கு நேர்ந்த துன்பங்களைத் தாங்குகிறேன். அவமானங்களைத் தாங்கமுடியவில்லை. ஏழு பிள்ளை நல்ல தங்காள் போலப் பிள்ளைகளைத் தூக்கிக் கிணற்றில் போட்டு விட்டு'' அழுதாள். அதிபர் திகைத்துத் திகிலடைந்து போனார்.

**604. குடிமடிந்து குற்றம் பெருகும் மடிமடிந்து**
**மாண்ட உஞற்றி லவர்க்கு.**

சோம்பலுக்கு அடிமையாகி முயற்ச்சியில்லாமல் வாழுபவனின் குடும்பத்தின் பெருமை அழிவதோடு குற்றங்களும் பெருகும்.

## கெட்டோர் செயல்

''ஐயையோ அப்படிச் செய்துபோடாதே வள்ளி.'' என்ற அதிபர் தனது ஆசனத்தால் எழுந்து அவளின் அருகே வந்தார் ''வள்ளியம்மை, மனிதன் வாழப் பிறந்தவனே தவிரச் சாகப் பிறந்தவன் அல்ல. தற்கொலை செய்து கொள்வது கோழைத் தனம் மட்டுமல்லஇ பாவமும் கூட. இறைவன் தந்த உயிரை இறைவன் மட்டும் தான் எடுக்க வேண்டும். இறைவனின் ஒவ்வொரு படைப்புகளும் முக்கியத்துவம் வாய்ந்தவை. ஆண்டவனது படைப்பில் உயர்ந்தது மனிதப் படைப்புத்தான். துரதிஷ்டவசமாக உனது கணவன் மனிதத் தன்மையை மறந்து சோம்பலுற்று வாழ்க்கையை வீணாக்கிக் கொண்டிருக்கிறான். இதன் காரணமாகத்தான் உனது பிள்ளைகள் இப்படியான குற்றச் செயல்களைச் செய்கின்றனர். மனிதர்கள் வாழ்கின்ற காலத்தில் நற்குணங்களு டையவர்களாகவும் சுறுசுறுப்புள்ளவர்களாகவும் வாழ்ந்து தனக்கும் பயன்பட்டு வாழ்க்கையைப் பயனுள்ளதாக்கி மற்றவர்களுடைய நன்மைகளையும் பேண வேண்டும். ஒரு குடும்பத் தலைவன் சோம்பலுக்குட்பட்டிருந்தால் அவனது வாழ்க்கையில் பல துரதிஷ்ட சம்பவங்கள் நடைபெறத்தான் செய்யும். அவனுக்கு எல்லோரும் புத்திமதிகள் கூறிவிட்டனர். நான் சுவாமியாரிடஞ் சொல்லிப் பலமுறை புத்திமதிகள் கூறச்சொன்னேன். அவர் புத்திமதிகள் கூறிக் கேட்காதவன் இவன் ஒருவன் மட்டும்தான். நானும் பலமுறை புத்திமதிகள் கூறிவிட்டேன். எதையும் கேட்காதவன் மரத்திற்குச் சமனானவன். அவன் மனிதனைப் போலத் தோற்றத்தையுடையவனாக இருந்தாலும் மரம் தான். அவனுக்கு உணர்ச்சியே வராது.

ஒரு செயலைச் செய்யப்பல சாட்டுக்கள் சொல்லிக் காலம் தாழ்த்துவதும், மறந்து விடுவதும், அளவுக்கதியமாக நித்திரை செய்வதும், சோம்பற்படுவதும் குடும்பத்தின் வளர்ச்சியைக் கெடுத்துவிடும் என்பார்கள். இந்த நான்கு குணங்களும் உனது கணவனான இராசகோபாலிடம் உண்டு. ஒரு மாதத்திற்கு முன்னர் பாடசாலைக்கு வந்த உனது கணவனிடம், தணிகாசலத்திடம் கொடுக்கும்படி ஒரு கடிதத்தைக் கொடுத்துவிட்டேன். இன்று வரை அக்கடிதத்தை அவன் கொடுக்கவில்லை. வழியில் சந்திக்கும்போதெல்லாம் ‘‘தணிகாசலம் மாமா அதிபர் ஒரு கடிதம் தந்தவர். வீட்டில் மறந்துபோய் வைத்துவிட்டேன். எடுத்துவந்து தருகிறேன்’’ என்று சொல்வானாம். ஆனால் இதுவரை கொடுக்கவில்லை. அப்படியான மறதிக்காரனுக்கு எப்படி நல்வாழ்வு வரும். எனவே அவனைக் குற்றம் சொல்லாது நீ நல்ல முறையில் வாழ்வதுதான் சிறந்தது. நான் உனது மாமனாரிடமும் தணிகாசலத்திடமும் கூறுகிறேன்.’’ என்றார்.

அவள் வீட்டிற்குச் சென்ற சில நிமிடங்களில் தணிகாசலம் வந்தார் ‘‘ எல்லாம் எனக்கு அதிபர் சொன்னவர். இது நீ தேடிக்கொண்டது. அந்த நேரம் கொம்மா எவ்வளவு கவலைப்பட்டவா உனக்குச் சொல்லச் சொல்ல ஏறவில்லை. பெற்றோர், பிள்ளைகள் நன்றாக வாழவேண்டும் என்பதற்காகத்தான் சில துன்பமான கொடிய முடிவுகளை எடுப்பது. உனது தாயார் காதலிக்க வேண்டாமென்று சொல்லவில்லையே. ‘நீ படி,படித்து முடிந்த பின் நானே அவர்களின் வீட்டிற்குச் சென்று மாப்பிள்ளை கேட்கிறேன்’ என்றுதானே சொன்னவா. அவா இறக்கும் போதுகூட உனது நினைவுகளுடன் தான் இறந்தவர் ‘‘அவள் என்னுடைய சொல்லைக் கேட்காததால் துன்பப்படுகிறாள். நானில்லாத காலத்தில பெரும்பாடு படப்போகிறாள். அவளைக் கவனித்து கொள்ளடாப்பா’’ என்று அழுதவா. கடவுள் எல்லாவற்றையும் மனிதனுக்காகப் படைத்திருக்கிறார். முக்கியமாக அறிவைப் படைத்துள்ளார். அறிவின்படி ஆராயாமல் நடந்தால் தீய பயன்களைத்தான் அடையவேண்டி வரும். நீ செய்த தவறிற்கான தண்டனையை நீயே அனுபவிக்க வேண்டும். அதன் பயனை உனது பிள்ளைள் ஏன் அனுபவித்தல் வேண்டும்?. நீ அன்று படித்து முடித்துவிட்டு இராசகோபாலைத் திருமணம் செய்திருந்தால் இன்று பிள்ளைகள் கஷ்டப்பட வேண்டிய நிலையேற்பட்டிராது. நீயும் கஷ்டப்பட்டிருக்கத் தேவையில்லை. எனவே உன்மீது குற்றத்தை வைத்துக் கொண்டு பிள்ளைகளைத் தண்டிக்காதே’’ என்று கூறிவிட்டுச் சென்றார்.

வள்ளியம்மை யோசித்துப் பார்த்தாள் ‘‘அதிபரும் தணிகாசலுமும் சொன்னவை அத்தனையும் உண்மையானவை. நான்தான் என்னில் குற்றமிருக்க மற்றவர்களை நோகிறேன்’’ என்று நினைத்தாள். அவள் இராசகோபாலுடன் வந்த பின் அவளைத்தேடி வந்த அவளது தாயார் சொன்னார் ‘‘ பிள்ளை அவசரப்பட்டு வந்துவிட்டாய். இனி எதுவும் செய்ய முடியாது. உயர்தரப் பரீட்சைக்கு விண்ணப்பித்த நீ, அதைப் படித்தெடு. அது பிற்காலத்தில் உதவியாக இருக்கும். சோம்பல்படாதே் மறந்துவிடாமல் படித்துப் பரீட்சையை எடு’’ என்று கூறியவார்த்தைகள் அவளது காதில் ஒலித்தன.

“அந்த நேரம் அம்மா சொன்னபடி படித்து உயர்தரப் பரிட்சையை எழுதியிருந்தால் இன்று வேலையாகி இருக்கலாம். என்னுடன் படித்த பலர் உயர்தரப் பரீட்சையில் சித்தியடைந்தமையால் உத்தியோகம் பார்க்கின்றார்கள். அந்த நேரம் படிக்காவிட்டாலும் உள்ள அறிவுடன் பரீட்சை எழுதியிருக்கலாம்” என்று நினைத்தக் கவலைப்பட்டாள் வள்ள்ளியம்மை.

**605. நெடுநீர் மறவி மடிதுயில் நான்கும்**
**கெடுநீரார் காமக் கலன்.**

கால தாமதம் செய்தல், மறதி, சோம்பல், அளவுக்கதிகமான நித்திரை ஆகிய இந் நான்கும் கெடுகின்ற இயல்புடையோர் விரும்பி ஏறும் மரக்கலன்கள் ஆகும்.

## பயனடையமாட்டார்

இராசகோபாலின் தந்தை தர்மலிங்கம் பொல்லூன்றியபடி மெல்ல மெல்ல நடந்து வந்து வள்ளியம்மையின் வீட்டுப் படலையடியில் நின்றார். அவருக்கு மூச்சு இரைத்தது. அதிபர் வள்ளியம்மை பாடசாலைக்கு வந்து சொன்ன சொல்லைத் தணிகாசலத்திற்குக் கூறி அவளுக்குப் புத்திமதிகள் கூறும்படி சொன்னார். தணிகாசலம் வள்ளியம்மையுடன் கதைத்துவிட்டுத் தர்மலிங்கத்தின் வீட்டுக்குச் சென்று விஷயத்தை மெல்ல எடுத்துக்கூறிப் பண உதவி செய்யுமாறு கூறிவிட்டுச் சென்றார்.

இராசகோபால் வள்ளியம்மையை வீட்டுக்குக் கூட்டிவந்த போது அவர் எரிமலையாகக் குமுறினார். அவரது மனைவிதான் அவரை சமாதானப்படுத்தினாள்.

“எனக்கு அவன் பெண்பிளையைக் கூட்டிவந்தது பிடிக்கவில்லை. ஏனென்றால் இவனுக்கு ஒரு தொழிலும் இல்லை. இருபத்தைந்து வயதைக் கடந்தும் தொழில் செய்ய வேண்டும் என்ற எண்ணம் இல்லாமல் வீதி வீதியாகத் திரிகிறான். ஒருவன் காதலிக்கத் தொடங்கும் போதே பொறுப்புள்ளவனாக இருத்தல் வேண்டும். இவன் கலியாணம் செய்துவிட்டான் இன்றிலிருந்தாவது தொழில் செய்யலாம் தானே? விவசாயம் செய்யச் சோம்பல் என்றால் கடைஒன்று வைத்துக் கொடுக்கிறேன் நடத்து என்றால் அதற்கும் பஞ்சிப்படுகிறான். இவன் என்ன செய்யப்போகிறான். பறவைக் குஞ்சுகள் பறக்கத் தொடங்கியதும் இரைதேடி உண்ணச் சொல்லித் தாய்ப் பறவைகள்அவற்றைக் கொத்திக் கலைத்துவிடும் மிருகங்களும் ஒரு பருவம் வரைதான் தன் குட்டிகளுக்குப் பாலூட்டும் பிறகு இடித்துக் கலைத்துவிடும். ஆறறிவுள்ள மனிதன் மட்டும் தான் பூட்டப்பிள்ளைகளுக்கும் பணம்தேடப் பல்வேறு விதமான தீமைகளைச் செய்கிறான். முறைப்படி இவன் தான் எமக்கு உழைத்துத் தரவேண்டும். இவ்வளவு காலமும் நான் உழைத்தனான். இனியும் உழைப்பன். பெம்பிளை கொண்டுவந்த இவன் உழைத்து தனது குடும்பத்தைக் காப்பாற்றட்டும். அதனால் இவனை வீட்டைவிட்டுப்

போகச் சொல்லு. நானில்லாத காலத்தில மிஞ்சுகிறதை எடுக்கட்டும்''. என்று அவா் பிடிவாதமாக இருந்ததால் இராசகோபால், வீட்டுக்குச் சற்றுத் தூரத்திலிருந்த உறவினா் ஒருவரின் வீட்டில் குடியேறினான். அவா்கள் காலப்போக்கில் வெளிநாட்டுக்குச் சென்றதால் அவன் நிரந்தரமாக அங்கு தங்கிவிட்டான்.

படலையடிக்கு வந்த தர்மலிங்கம் வேலிக்கதிகால் ஒன்றைப் பிடித்தபடி மெல்ல் ''வள்ளியம்மை'' என்று அழைத்தார். குரலைக்கேட்டு அடையாளம் புரிந்து கொண்ட நாய் மகிழ்வுடன் சத்தமிட்டு வரவேற்றது. வாசலுக்கு வந்த வள்ளியம்மை களைத்துப்போய் மேல் மூச்சு கீழ்மூச்சு வாங்க நின்ற மாமனாரைக் கண்டு துடித்துப் போனாள்.

''ஏன் மாமா இங்கு வந்தனீங்கள். நான் பள்ளிக்கூடத்திற்குப் போனதாலை பிந்திப் போனன். வாங்கோ உள்ளுக்கு'' என்று கூறியபடி அவரது கையைப் பிடித்தாள். தர்மலிங்கம் உருகிப்போனாா். மகள்கூட இப்படிக் கவனிப்பதில்லை.

''இவன் பிறந்ததன்றிலிருந்து நான் நிம்மதியாக இருக்கவில்லையம்மா. சிறுவயதில் சரியான குழப்படி. பாடசாலையிலும், அயலிலும் பிரச்சினைகளை உருவாக்குவான். கலியாணம் கட்டிய பின் எல்லாம் உனக்குத் தெரியும் தானே இவனைப்போல ஒரு சோம்போறியை நான் உலகத்திலை காணவில்லை. பிச்சை எடுத்த குடும்பங்களிலை பிறந்ததுகள் எல்லாம் உழைத்து முன்னேறிக் குபோ்களாக வாழுதுகள். இவன் குபேரனின் வீட்டில் பிறந்து பிச்சைக்காரனாக வாழ்கிறான். இவனை நம்பி வந்த நீ, இன்று நடுத்தெருவில நிக்கிறாயம்மா் ''நாட்டை ஆளுகின்ற அரசனுடைய நட்பு தானே வந்து சோ்ந்தாலும் கூட சோம்பலுடையவன் ஒரு போதும் முன்னேறமாட்டான்'' என்று அப்பு அடிக்கடி சொல்லுறவா். இவன் அப்படியானவன் தான். இருக்கிற தோட்டத்தைக் கவனித்தால் எப்படி வாழலாம். அதைத்தான் விடு. ஒரு கடையைப் போட்டால் பேசாமல் இருந்து சாப்பிடலாம். பத்துப் பதினைந்து தென்னை மரங்கள் நிக்கு அவற்றைப் பராமரித்தால் குறைவின்றி வாழலாம். இவன் சோம்பியிருக்கிறான். நீயாய் தேடிக்கொண்டது அனுபவிக்கத்தானே வேண்டும். அந்த நேரம் உயா்தரப் பரீட்சை எழுதும்படி நான் உனக்கு எத்தனை தடவை சொன்னனான் நீ கேட்கவில்லை. பரீட்சை எழுதியிருந்தால் கடைசியில் ஒரு ஆசிரியையாக வந்திருப்பாய். அப்ப நான் சொல்ல கேட்கவில்லை இனியாவது கேள். எத்தனை துன்பம் வந்தாலும் சாகிறதை நினைக்காதையம்மா'' அழுதாா். குழி விழுந்த கண்களில் தேங்கி நின்ற நீா் சவரம் செய்யப்படாத முகத்தூடாக விழுந்தது ஒடுவது அவளுக்குத் தெரியவில்லை.

**606. படியுடையாா் பற்றுஅமைந்தக் கண்ணும் மடியுடையாா்**
**மாண்பயன் எய்தல் அரிது.**

நாட்டைஆளும் அரசனின் உறவு தானே வந்து சோ்ந்தாலும் கூடச் சோம்பலுடையவா் ஒரு போதும் உயா்வு அடைய மாட்டாா்.

## வசையுடையோர்.

“மாமா தெரியாத் தனமாக அந்த நேரச் சூழ்நிலையில் அப்படிச் சொல்லிப்போட்டன். நான் அப்படி நடக்க மாட்டேன். ஏற்கனவே மனதில் நிரம்பியிருந்த துயரத்துடன் எனது மகன் பாடசாலையில் களவுகள் எடுப்பதாக அறிந்ததும் எனக்கு வாழ்வே வெறுத்துவிட்டது. அதனால் ஆராயாது அப்படிச் சொல்லிவிட்டேன். அதிபரும் தணிகாசலச் சித்தப்பாவும் புத்திமதிகள் கூறியபின்பு நான் சொன்னதை நினைக்க வேதனையாக உள்ளது. அளவுக்கதிகமான துன்பம் வந்ததால் என்னால் சிந்திக்க முடியவில்லை’’ விம்மினாள் வள்ளியம்மை.

‘‘எனக்கெல்லாம் தெரியும். நீ இவனைக் கட்டிய பின்பு அனுபவிக்கும் துன்பங்கள் கொஞ்சநெஞ்சமல்ல. துன்பத்தின் உச்சக் கட்டம் விரக்தி. விரக்தி வந்துவிட்டால் செய்யக் கூடாதனவற்றையெல்லாம் மனம் செய்யச் சொல்லும். அந்த நேரம் அறிவு செயற்படாது. ஆத்திரத்தால் செய்வது எதுவெனத் தெரியாது செய்யக் கூடாதனவற்றையெல்லாம் சிலர் செய்து விடுவார்கள். ஓரிரு நிமிடங்கள் நான் பரிதவித்துப் போனேன்’’ விம்மினார் தர்மலிங்கம்

அவரைப் பார்க்க வள்ளியம்மைக்குப் பரிதாபமாக இருந்தது ‘‘இவனைத் தவமிருந்து பெற்றனான் பிள்ளை. நான் திருமணமாகி ஐந்து வருடங்கள் பிள்ளைகளில்லை. அதனால் வேண்டாத தெய்வங்களையெல்லாம் வேண்டி விரதமிருந்து பெற்றனான். இவன் பிறக்காமல் விட்டிருக்கலாம், இல்லாவிட்டால் இடையில் செத்திருக்கலாம். பிள்ளைகளில்லாவிட்டால் இடைக்கிடை தான் கவலை வரும். இது தீராத கவலை. நான் இறந்த பிறகும் நிம்மதியில்லாமல் தான் உலாவுவேன். அந்தளவு தீமைகளை இவன் தினமும் செய்கிறான். இவனை நான் எவ்வளவு அன்புடன் செல்லமாக வளர்த்தேன். இதில் ஆயிரத்தில் ஒரு பங்கு கூட இவன் தனது பிள்ளைகளிடம் காட்டுவதில்லை. அன்பாக வளர்த்த என்னையே இவன் பராமரிப்பதில்லை அன்பு செலுத்துவதில்லை. அப்படியிருக்க இவனது பிள்ளைகள் எப்படி இவன் மீது அன்பு செலுத்தும்.’’ முன்பு ஒரு முறை தர்மலிங்கம் கூறியது அவளுக்கு நினைவில் வந்தது.

‘‘பிள்ளை, ஒரு முறை சொன்னால் கேட்கக்கூடியவனுக்குத் தான் புத்திமதிகள் கூறலாம். இவனுக்கு எப்படித்தான் புத்திமதிகள் கூறினாலும் இவன் கேட்க மாட்டான். இவனைப் பற்றி ஊரிலுள்ள சின்னஞ்சிறுசுகளே கேவலமாய்த் தானே கதைக்குதுகள். கண்டித்தாலென்ன? தண்டித்தாலென்ன? இவன் திருந்த மாட்டான். மனிதனுக்கு வெட்கம், ரோசம் மானம் மரியாதை இருக்க வேண்டும். தன்னைப் பற்றி பிறர் குறைவாகச் சொன்னால் கோபம் வரவேண்டும். இவனுக்கு யார் எதைச் சொன்னாலும் கோபம் வராது. கோபம் வராதவன் மரம். தன்னைச் சீண்டினால் மிருகங்களுக்குக்கூட கோபம் வரும். இவனுக்குக் கோபமே வருவதில்லை. இவன் மனிசன் இல்லை’’ அழுதார் தர்மலிங்கம்.

“சுறுசுறுப்பாக இருப்பதன் மூலம் தான் வாழ்க்கையில் சகல இன்பங்களையும் அடையமுடியும். சுறுசுறுப்பானவன்தான் வாழ்க்கையில் வெற்றியடைவான். சோம்பியிருப்பவன் பூமிக்குப் பாரமாக இருப்பான். கழிந்த இளமையும் வழிந்த நீரும் திரும்பி வரமாட்டாது. காலத்தை நல்ல முறையில் பயன்படுத்தக் கற்றுக் கொள்ள வேண்டும். காலந்தான் தெய்வம் . காலத்தை வீணாக்காது பணத்தைத் தேடிக் கொள்ளல் வேண்டும். சக்தியை வீணாக்கக் கூடாது. சுறுசுறுப்பிருந்தால் மற்றைய எல்லாச் செல்வங்களும் தானே வந்தடையும். சுறுசுறுப்பில்லா விட்டால் எதுவும் நிலைக்காது. எல்லாம் தேடி வரும். சுறுசுறுபபில்லாவிட்டால் எதுவுமேநிலைக்காது. எல்லாம் பயனற்றதாகிவிடும். மனிதத் தன்மையை விரட்டித் தெய்வீகத்தன்மையை இழக்கப்பண்ணுவது சோம்பல். சோம்பலுக்காட்பட்டவன் விலங்குகளைவிடக் கேவலமானவன். சோம்பலுடன் முயற்சிசெய்யாமல் வாழ்கின்றவர்கள் பிறர் இடித்துக்கூறும் சொற்களுக்கும் இகழ்ந்து பேசும் சொற்ளுக்கும் ஆளாவா’’. என்று ஒரு முறை சுவாமியார் கூறியது வள்ளியம்மையின் நினைவுக்கு வந்தது.

‘‘டேய், நீ மனிசனா? உன்னுடைய வாழ்நாளில் நீ எதையாவது செய்திருக்கிறாயா? நீ ஏன் மனிதனாகப் பிறந்தாய்? நீ செத்திருந்தால்கூட நான் கவலைப்பட மாட்டன். உயிரோடிருந்து எங்களையெல்லாம் சாகடிக்கிறாய்’’ என்று அவனது சகோதரி ஒரு முறை பேசியது அவளுக்கு நினைவில் வந்தது.

‘‘அவனது மகன் முன்பொருமுறை கடையில் தீன்பண்டமொன்றைத் திருடியதற்காக அவனது சகோதரி இராசகோபாலைப் பேசியபோது அவன் பேசாமல் இருந்தான். ஒருவார்ததைகூடப் பேசவில்லை. அப்படியானவர்களுக்காக அழுது கவலைப்படுவதால் எந்தப் பிரயோசனமும் இல்லையென்பதை வள்ளியம்மை தெரிந்து கொண்டாள். இருப்பினும் சிலவேளைகளில் அவனது நடத்தையால் அளவுக்கதிகமான ஆத்திரம் வந்து உலகை வெறுக்கப்பண்ணிவிடுகிறது.

‘‘அவனைத் திருத்தமுடியாது. இவ்வளவு காலமும் சமாளித்தது போல இன்னும் கொஞ்ச நாட்களுக்கு சமாளித்தால், பிள்ளைகள் வளர்ந்துவிடும். பிறகு கரைச்சல் இல்லை’’. என்று கூறிக்கொண்டிருந்தார் தர்மலிங்கம்.

**607. இடிபுரிந்து எள்ளும்சொல் கேட்பர் மடிபுரிந்து**
**மாண்ட உஞற்றி லவர்.**

சோம்பலை விரும்பி மேற்கொண்டு முயற்சி இல்லாதவராக வாழ்கின்றவர்கள் பிறர் இடித்துக் கூறும் இழி சொற்களுக்கு ஆளாவர்.

## பகைவரின் அடிமை

“சோம்பலுடையவனுக்கு வெட்கம், ரோசம், மானம், மரியாதை, எதுவும் இல்லாததால் அவன் கீழான மக்களுடனும் நண்பனாக இருப்பான். பகைவரிடமும் நெருங்கிப்பழகி அடிமையாகிவிடுவான”. என்றார் தர்மலிங்கம்.

அவரின் மனதில் பழைய சம்பவமொன்று நிழலாடியது. மணியம் அவ்வூரில் பெருங்குடிகாரன் சண்டியன் கள்வன். ஒரு நாள் இரவு அவன் அவரது வீட்டை உடைத்துக் களவெடுத்து விட்டான். அப்பொருட்களை அவன் விற்றபோது அதைக்கண்ட ஒருவர் வந்து தர்மலிங்கத்திற்குச் சொன்னார்.

தர்மலிங்கம், மணியம். தனது பொருட்களை விற்ற சின்னத்தம்பியிடம் சென்று விசாரித்தார் ‘‘சின்னத்தம்பி எனது வீட்டில்திருடப்பட்ட நீர் இறைக்கும் இயந்திரம் ஒன்றை நீ வாங்கிதாகக் கேள்விப்பட்டனான். அந்த இயந்திரத்தை ஒரு முறை நான் பார்க்க வேண்டும். நீ மணியத்தின் பொருள் என்று நினைத்து வாங்கியிருப்பாய். அது திருடப்பட்ட பொருள். திருடுவதைவிட திருடிய பொருளை வாங்குவதுதான் குற்றம்’’ என்றார்.

‘‘அப்ப என்னைக் கள்ளன் என்று சொல்லுறியோ…? மணியம் நீர் இறைக்கும் இயந்திரம் ஒன்றை விற்கப்போவதாகச் சொன்னான். அது அவனுடைய இயந்திரம் என்று எனக்குத்தெரியும். அதனால்தான் வாங்கினனான். திருட்டுப்பொருளை மலிவான விலைக்கு வாங்கிவிட்டேன் என்று நீ நினைக்கிறாய். பங்கை பார். அதுதுான் இயந்திரம்”

தர்மலிங்கம் இயந்திரத்தின் அருகே சென்றுபார்த்தார். அது அவருடைய இயந்திரம் அல்ல.

‘‘வடிவாய்ப்பார். எதையும் ஆராயாமல் கதைக்கக்கூடாது உனது இயந்திரம் என்றால் எடுத்துக் கொண்டு போ. நான் மணியத்தோடு கதைக்கிறேன்’’ என்றான் சின்னத்தம்பி.

சின்னத்தம்பி பணக்காரன். எனினும் கள்வர்கள் களவெடுக்கும் பொருட்களை அவனுக்கு அரைவிலை கால்விலைக்குக் கொடுப்பார்கள். அது தர்மலிங்கத்திற்குத் தெரியும்.

‘‘இது என்னுடைய இயந்திரமில்லை’’ என்றவாறு தயங்கினார் தர்மலிங்கம். கள்ளப்பொருட்களை வாங்கும் சின்னத்தம்பிக்குப் பலர் உதவிக்கு இருக்கிறார்கள். அவன் பொருட்களை வாங்கியதும் அவற்றை இன்னொருவரின் வீட்டில் வைத்து விடுவான்.

‘‘தர்மலிங்கம், யாராவது சொன்னவுடனே நம்பக்கூடாது. ஆராய்ந்து பார்க்க வேண்டும். நான் பணக்காரன் உனது இயந்திரத்தை ஏன் வாங்க வேண்டும்? புதிதாக ஒன்று வாங்கலாம்தானே’’

‘‘தர்மலிங்கம் எதுவும் பேசாமல் சென்று காவற்துறையில் புகாரிட்டார். ஒரு மாதத்தின் பின் களவுப் பொருட்களைப் பிடித்த காவல்துறையினர் அப்பொருட்களை

வந்து பார்வையிடும்படி மக்களுக்குக் கூறினர். தர்மலிங்கம் சென்றுபார்த்தார். அவரது இயந்திரம் இருந்தது. அவர் அதை அடையாளம் காட்டினார். காவல் துறையினர் நீதிமன்றில் வழக்குத்தொடர்ந்தனர். மக்கள் பலர் மணியத்திற்குப் பலர் பயந்து நீதி மன்றத்திற்குச் செல்லவில்லை. தர்மலிங்கம் சென்று வழக்காடினார்.

சின்னத்தம்பி பலமுறை வந்து, "நீதிமன்றத்துக்குச் செல்லவேண்டாமென்றும் இயந்திரத்தின் பெறுமதியைவிடக் கூடுதலான பணம் மணியம் தருவன்" என்றும் சொன்னார். ஆனால் விடாப்பிடியாகச் சென்ற தர்மலிங்கம் சட்டத்தரணியை வைத்து வழக்காடினார். அதனால் மணியத்திற்கும் சின்னத்தம்பிக்கும் இரண்டுவருடச் சிறைத்தண்டனை கிடைத்தது. அதனால் கோபம் கொண்ட மணியமும் சின்னத்தம்பியும் சிறையால் வந்த நாள்முதல் தர்மலிங்கத்திற்குக் கரைச்சல் கொடுத்துக் கொண்டிருந்தனர்.

''இராசகோபால் சோம்பேறி. அதனால் உழைப்பதில்லை. அதனைப்ப யன்படுத்தி மணியம் இராசகோபாலைக் கைக்குள் போட்டுக்கொண்டான். அவனது உதவியுடன்தான் இராசகோபால் வள்ளியம்மையைக் கூட்டிவந்தான். மணியம் விடாப்பிடியாக வள்ளியம்மையை கூட்டிச்செல்லுமாறு கூறியதால்தான் அவன் கூட்டிவந்தவன். அதன்பின் வள்ளியம்மையும் அவனது வீட்டிற்குச் சென்று வந்தாள். பிள்ளைகளும் சென்றனர்.

அதைப்பொறுக்கமுடியாத தர்மலிங்கம் ஒரு நாள் வீட்டிற்கு வந்து சொன்னார் ''கோபாலு, மணியம் எனது எதிரி. எமது குடும்பத்தை அழிக்க நினைக்கிறான். நீ அங்கை போகாதை''

''இராசகோபால் அதைக் கேட்கவில்லை. தொடர்ந்து அவனது வீட்டிற்குச் சென்று வந்தான். அதன்பின் வள்ளியம்மை அங்கு செல்வதில்லை. மணியத்துடனும் சின்னம்பியுடனும் அவன் நட்பாக இருந்ததால் ஊரவர்கள் அவனையும் திருடன் என்று கூறிவந்தனர்.

''இவன் திருந்தமாட்டான். நல்ல குடியில் பிறந்தாலும் சோம்பலுடையவர்கள் பகைவர்களுடனும் நட்பாக இருப்பார்கள். இவனைப்பற்றி எனக்கு கவலை இல்லை. நீ கவனமாக இரம்மா. பிள்ளைகளும் கவனம்" அழுதார் தர்மலிங்கம்.

**608. மடிமை குடிமைக்கண் தங்கின்தன் ஒன்னார்க்கு
அடிமை புகுத்தி விடும்.**

நல்ல குடியில்பிறந்தவ னென்றாலும் சோம்பலுக்கு ஆளானால் அஃது அவனை அவனுடைய பகைவர்களுக்கு அடிமையாகுமாறு செய்து விடும்.

# குற்றம் நீங்கும்

“பலவீனத்தை உண்டுபண்ணும் சோம்பலை நீ மனதால் கூடத் தீண்டக் கூடாது. மனிதனில் இயற்கையாகப் புதைந்திருக்கும் சோம்பலைத் தூக்கியெறிந்து அளவற்ற சுறுசுறுப்பை உண்டாக்கிக் கொண்டால் தான் உன்னால் உலக வாழ்க்கையில் வெற்றியடைய முடியும். மனதுள்ப் புதைக்கப்பட்டிருக்கும் சோம்பலை அகற்றியவர்களால் தான் உலகிற் பல சாதனைகளை நிகழ்த்த முடிந்தது. சோம்பலை அகற்றியவர்கள் தான் வரலாறு படைத்தனர். சமயத்திலும்சரி, மொழியிலும் சரி, விஞ்ஞானத்திலும் சரி, சோம்பலில்லாதாவர்களால் தான் சாதனைகள் பல புரிய முடிந்தது. சாதனை புரிய நினைப்பவன்தான் எண்ணிய செயலை வெற்றிகரமாக முடிக்கும் வரை ஓயமாட்டான். ஓய்ந்தால் சாதனை புரிய யாராலும் முடியாது” தணிகாசலம் இராசகோபாலுக்குச் சொல்லிக் கொண்டிருந்தார். தர்மலிங்கத்திற்கு அதைப்பார்க்கத் துக்கமாக இருந்தது. வள்ளியம்மை வேதனைப்பட்டாள். “இவருக்குப் புத்திமதிகள் கூறுவதைவிட வேறு ஏதாவது வேலை செய்தால் பிரயோசனமாக இருக்கும் என்று நினைத்தாள்.

இராசகோபால் திண்ணையில் குந்தியிருந்தான் ‘‘நீ அவளை விரும்பினனீ.

காதலித்துத் திருமணஞ்செய்பவன் தனது மனைவியை மகாராணி மாதிரி வைத்துக் காப்பாற்ற வேண்டும். அவளுக்கு எந்தக்குறைகளும் ஏற்படவிடக்கூடாது. அவள் படித்திருந்தால் இன்று நல்ல நிலையில் வாழச் சந்தர்ப்பம் ஏற்பட்டிருக்கும். நீ படிக்கவில்லை. படிக்காவிட்டாலும் உள்ள தோட்டம் துரவுகளைக் கூலியாட்களை வைத்துப் பராமரித்தாலும் ஆயிரக்கணக்கில் வருமானம் வரும். பாவம் வள்ளியம்மை வீட்டு வேலைகளையும் பார்த்துத் தோட்ட வேலைகளையும் பார்த்து உனது பெற்றாரையும் கவனிக்கிறாள். அவள் செய்யும் வேலையில் சிறிதளவை நீ செய்தாலும் உனது குடும்பம் ஓகோ என்று வாழும். ஊரில் உள்ள கஜேந்திரன் மணிவண்ணன், வேலாயுதபிள்ளை இப்படி முயற்சியே கண்ணாக உடைய மக்களைப் பார். எந்த நேரமும் முயற்சியுடன் இருப்பதால் அவர்கள் சிறப்புடன் வாழ்கிறார்கள். மணிவண்ணன் அன்றன்று சாப்பாட்டுக்கு வழியில்லாத குடும்பத்திற் பிறந்தவன். இன்று கோடீஸ்வரனாக வாழ்கிறான். அவன் படிக்கவில்லை. அவனது குடும்பம் ஏழ்மையில் வாடியதால் அவர்களை ஊரவர்கள் மதிக்கவில்லை, ஆனால் அவன் தனது முயற்சியால் முன்னேறிய பின் அவனையும் அவனது குடும்பத்தையும் ஊரவர்கள் போற்றிப் புகழ்கின்றனர். எந்தப் பொது விடயமானாலும் அவனின்றி அவ்விடயம் நடைபெறமாட்டாது. ஊரில் நடைபெறும் வைபவங்களுக்கெல்லாம் அவன்தான் பிரதம விருந்தினராகக் கலந்துகொள்ளான். நாவலர் ஸ்ரீவித்தியா மகாகணபதி ஆலயப்பூசைகூட அவன்வந்த பின்புதான் ஆரம்பமாகிறது. அப்படியிருக்க நீ சோம்பியிருப்பது நியாயமா? உனது குடும்பம் சொத்திருந்தும் வறுமையால் துன்பப்படுகிறது.’’ என்றார் தணிகாசலம்

“தம்பி ஒருவன் சோம்பலில்லாமல் முயற்சியுடையவனாக வாழ்நதால் அவனது குடும்பத்திற்கும் அவனது ஆண்மைக்கும் வந்த குற்றங்கள் யாவும் நீங்கிவிடும் என்பதற்கு மணிவண்ணனே தகுந் சாட்சியாவான். இதையெல்லாம் தேவையில்லாமல் உனக்குச் சொல்வதால் எந்தப்பயனும் வராது. சொல்வதைக் கேட்பவனுக்குத்தானே சொல்லலாம். அவள் கஷ்டப்பட்டு வாழைத்தோட்டத்திற்கு நீர் பாய்ச்ச, இவன் வாழைக்குலையை வெட்டிச் சென்று விற்றுவிட்டுத் தனது செலவைக் கனிக்கின்றான். வேலைசெய்யாமல் தான் இருக்கின்றாய் பரவாயில்லை. அவளின்ரை முயற்சியால் வருவதையுமெல்லே வீணாக்குகிறாய். இது உனக்கு நியாயமாகப்படுகிறதா......? சீச்சீச் சீ... வெட்கம், ரோசம், மானம் இல்லாவனுடன் கதைப்பதில் அர்த்தமில்லை. நான் இவனைத்தவிர மற்றெல்லோரையும் எனது வீட்டிற்கு அழைத்துச் சென்றுவிடலாம். ஆனால் இவனும் வந்துவிடுவான். இவனைப் பெற்றதே பெரும்பழி... பாவம் அப்படியிருக்க நான் தேடிய பணத்தில் இவனுக்குச் சாப்பாடு கொடுக்க நான் விரும்பவில்லை” ஆத்திரத்தால் பேசமுடியாது. அவதிப்பட்டார் தர்மலிங்கம்.

“நீங்கள் கதைக்காதையுங்கோ மாமா. இவருக்கு யார் எதைச்சொன்னாலும் விளங்கமாட்டாது. ஏற்கனவே உங்களுக்கு இரத்த அழுத்தமிருக்கு. உங்களுக்கேதாவது நடந்துவிட்டால் எம்மைப் பராமரிக்க யாருமில்லை” அழுதாள் வள்ளியம்மை.

“நீ பிடிவாதக்காரி. தற்செயலாய்ச் சொன்னபடி செய்தாலும் செய்துவிடுவாய் அதுதான் எனக்குப் பயமாக உள்ளது பிள்ளை...?” அழுதார் தர்மலிங்கம்.

அவரைப்பார்க்க வள்ளியமைக்குத் துக்கமாக இருந்தது “மாமா நான் ஆத்திரத்தால் அறிவிழந்து அப்படிச்சொல்லி விட்டேன். கடைசிவரையும் அப்படி நடக்க மாட்டன். என்னை நம்புங்கோ” அழுதாள் வள்ளியம்மை.

நிம்மதியுடன் அவளை நிமிர்ந்து பார்த்தார் தர்மலிங்கம்.

**609. குடிஆண்மை யுள்வந்த குற்றம் ஒருவன்**
**மடி ஆண்மை மாற்றக் கெடும்.**

ஒருவன் தனது சோம்பலைத் தான் ஆளும் தன்மைக்கு மாற்றிக் கொள்வானானால் அவனது குடிக்கும் ஆண்மைக்கும் வந்த குற்றங்கள் நீங்கி விடும்.

## அளந்த நிலம் முழுதும்

“நான் வாறன் வள்ளியம்மை. நீ எதுவேணுமென்றாலும் என்னிடம் கேள். நான் உதவிசெய்யாவிட்டால், இவன் ரோசம் வந்து உழைப்பன் என்று

எதிர்பார்த்தன். அவன் எல்லோரும் அழிந்தாலும் பரவாயில்லையென்று நினைக்கிறான். நீ சொன்னதைக் கேட்டு அதிபர் துடிதுடித்துப்போனார். தணிகாசலமும் நானும் கலங்கிப் போனம். ஆனால் இவன் கல்லுளி மங்கன் மாதிரிச் சலனமின்றியிருக்கிறான். இனியும் இவனை நம்பிப் பிரயோசனம் இல்லை நான் உதவுறன்'' என்று கூறிவிட்டுப் புறப்பட்டார் தர்மலிங்கம்.

'' நான் வாறன்'' என்று சொல்லிவிட்டுப் புறப்பட்டார் தணிகாசலம்

'' இவன் வேலை செய்யத்தேவையில்லை. எனது நிலபுலன்களை நல்லபடி கவனித்து வந்தாலே போதும். இப்படி ஒருத்தனைப்பெற நான் என்ன பாவம் செய்தேனோ தெரியவில்லை. ஓர் ஆண்பிள்ளையென்று செல்லம் கொடுத்ததால்தான் இவ்வளவும் நடந்தது. வள்ளியம்மை இரவில் தற்செயலாகப் பிந்திவந்தால் இவன் விளக்குக்கூடக் கொழுத்தமாட்டான். என்னபிறப்போ தெரியவில்லை. சாப்பாடும் போட்டுக்கொடுக்க வேண்டும்'' பெருமூச்சு விட்டார் தர்மலிங்கம்.

''எழும்பிப் போய் பல்துலக்கி,முகத்தைக் கழுவிவிட்டு வந்து சாப்பிடுங்கோ பல்துலக்கவும் சோம்பலாயிருந்தால் பல்துலக்காமல் சாப்பிடுங்கோ'' என்றாள் வள்ளியமம்மை.

இலேசான சிரிப்புடன் வள்ளியம்மையை ஏறிட்டுப் பார்த்தான் இராசகோபால் ''காலமை ஒரு கலக்குக் கலக்கிப் போட்டீர்'' என்றவாறு எழுந்தான்.

''கட்டின பழிக்கு இதெல்லாவற்றையும் கேட்கவேண்டியிருக்கு் மூன்று நேரமும் சாப்பாடு போடவேண்டியிருக்கு் உனக்குத்தாற சாப்பாட்டை அந்த நாய்க்குப் போடலாம்'' வள்ளியம்மை.கோபத்துடன் கூறிக்கொண்டிருக்கையில் இராசகோபால் கேளாவதவனைப் போல நடந்துகொண்டிருந்தான்.

''ஆளுகின்ற அரசனுக்குச் சோம்பலில்லையென்றால், திருமாலில் திருவடிகளால் அளக்கப்பெற்ற இந்த உலகம் முழுவதையும் அவன் அடைவான் என்பார்கள். சோழ மன்னன் அப்படி உலகத்திலுள்ள பெரும்பான்மையான நாடுகளைக் கைப்பற்றி ஆண்டதாகப் பாடப்புத்தகத்தில் படித்துள்ளேன். 'சோம்பலில்லாதவன் உலகத்தையே வெல்வான். என்று அடிக்கடி தணிகாசலம் சித்தப்பா சொல்வார். ஆனால் இவர் ஏன் இப்படி நடந்து கொள்கிறார்? நானும் பிள்ளைகளும் உணவின்றி வாடுவது இவருக்குத் தெரியவில்லையா..? அடுத்தடுத்த வரிசம் மூத்தவள் வயதிற்கு வந்துவிடுவாள். அடுத்து மற்றவள் அப்படியிருக்க எதையும் எண்ணாது கருங்கல்லைப்போல இவர் இருக்கிறாரே. நான் என்ன செய்வது?'' என்று யோசித்தாள் வள்ளியம்மை அதை நினைக்க அவளுக்குத் தலை சுற்றியது.

''முகம்கழுவிவிட்டு இராசகோபால் முகத்தைத்துடைத்தபடி வந்து ''காலை உணவென்ன?'' என்று கேட்டான்.

''ஒன்றும் செய்யவில்லை. மாமாவீட்டை இரவு அவித்த பிட்டைக் கொண்டு வந்தனான். பிள்ளைகள் சாப்பிட்டுவிட்டுப் பாடசாலைக்குச் சென்றுவிட்டனர். நானும் சாப்பிடவில்லை. இபப என்ன வேலை செய்து உங்களுக்குப் பசி''

“ இராத்திரியும் பிட்டுக் காணாதது...”

“ இராசகோபால் சொல்லிக் கொண்டிருக்கும் போது வள்ளியம்மை குறுக்கிட்டாள் “சாப்பிடுவதில் உள்ள சுறுசுறுப்பு வேலை செய்வதிலில்லை. மூன்று பேரின் உணவை உண்கின்றீர்கள் அதுக்கு மட்டும் தான் உங்களுக்குச் சோம்பல் இல்லை”

“வள்ளி .... வள்ளி.. பசிக்குது ஏதாவது செய்துதா” இராசகோபால் கெஞ்சினான்.

வள்ளியம்மைக்கு இரக்கம் பிறந்தது எனினும் வைராக்கியத்துடன் சொன்னாள் ”நேற்று வாழைத் தோட்டத்திற்கு நீர்ப்பாய்ச்சினேன். உடம்பெல்லாம் வலிக்கிறது. என்னால் சமைக்க முடியவில்லை. உங்களால் எதையும் செய்ய முடியாது. என்னால் தோட்ட வேலைகளையும் செய்து வீட்டு வேலைகளையும் செய்ய முடியுமா?”

“அப்பசரி, மணியத்திடம் போனால் கடையில் ஏதாவது வாங்கித்தருவான்” என்று கூறிவிட்டுப் புறப்பட்டான் இராசகோபால்.

அதைக் கேட்ட வள்ளியம்மைக்கு ஆத்திரம் வந்தது. “சமைத்துச் சாப்பிடுவன் என்று சொல்லியிருக்கலாம். இல்லா விட்டால் வேறு எதையாவது சொல்லியிருக்கலாம். அதைவிட்டு விட்டு வெட்கம் ரோசம் இல்லாது மாமாவின் எதிரியிடம் பிச்சை வாங்கிச் சாப்பிடப்போறன் என்று சொல்லுகிறீர்களே...” அவள் பேசிக் கொண்டிக்கும் போது இராசகோபால் சொன்னான் “எப்பவோ நடந்ததை நீயும் அப்பாவும் அடிக்கடி சொல்லுறியள். உங்கள் இருவருக்கும் வேறு வேலை எதுவும் இல்லையா..?” என்று கேட்டபடி புறப்பட்டான் இராசகோபால்

வள்ளியம்மையால் எதையும் நினைக்க முடியவில்லை. பேசாமல் முற்றத்தில் அமர்ந்தாள்.

**610. மடிஇலா மன்னவன் எய்தும் அடிஅளந்தான்**
**தாஅயது எல்லாம் ஒருங்கு.**

திருமாலின் திருவடிகளால் அளக்கப் பெற்ற நிலம் முழுவதையும் சோம்பல் இல்லாத அரசன் அடைவான்.

## பெருமைதரும் முயற்சி

“இராசகோபால் ஒரு மனிதனே இல்லை. நானும் இந்த வயதிற்குள் ஆயிரக்கணக்கான மனிதர்களைக் கண்டுவிட்டேன். ஆனால் இப்படியொருவனைக் காணவேயில்லை. அவள் பிள்ளைகளைத் தூக்கிக் கிணற்றுக்குள் போட்டுவிட்டுத் தானும் குதிக்கப்போறன் என்று சொன்ன பிறகும் கல்லுமாதிரி மனமிளகாமல்

படுத்திருக்கிறான். பிறகு சாப்பாடு கேட்டிருக்கிறான். அங்கை சாப்பாடு இருந்திருக்கு இருந்தும் அவள் இவனுக்கு ரோசம் வரட்டுமென்பதற்காகச் சமைக்கவில்லை என்று சொல்லியிருக்கிறாள். உடனை அவன் மணியம் வீட்டை போய் சாப்பாடு வாங்கிச் சாப்பிட்டிருக்கிறான். மணியம் குடுத்திட்டு உங்கை எல்லாருக்குஞ் சொல்லிக் கொண்டு திரியுது. மானம் போட்டுது தம்பி. அவனை அடிச்சுக் கொலை செய்ய வேண்டும்போலை இருக்கு'' ஆத்திரப்பட்டார் தணிகாசலம். அவர் அப்படிக் கோபப்பட்டதைக் கஜேந்திரன் ஒருபோதும் கண்டதில்லை.

''எல்லாவிதமான ஆலோசனைகளும் வழங்கியாயிற்றுது. மணியத்தின்ரை வீட்டைபோய் வாங்கிச் சாப்பிட்டதற்காக ஒருவேலை செய்வம். நீங்கள்தான் செய்ய வேண்டும். செய்வியளே?'' என்று கேட்டான் கஜேந்திரன்.

''சொல்லுதம்பி சொல்லு. அவனை அடிச்சு முறிக்கட்டே...'' ஆவேசப்பட்டார் தணிகாசலம்.

''அதுதான் செய்ய வேண்டும். கீழான செயல்களைத் தொடர்ந்து செய்பவனுக்குத் தண்டனை சிலநேரம் திருத்தலாம். மனதைக் கல்லாக்கிக் கொண்டு வாங்கோ. இரண்டில் ஒன்று நடக்கட்டும். திருந்தினால் திருந்துறான் இல்லாவிட்டால் போகட்டும்'' என்றான் கஜேந்திரன்.

தணிகாசலம் வீட்டுக்கு வந்து, மாட்டுக்கு அடிக்கும் துவரந்தடியை எடுத்துக் கொண்டு கஜேந்திரனுடன் புறப்பட்டார்.

வள்ளியம்மை வீட்டில் இருக்கவில்லை. இராசகோபால் திண்ணையில் படுத்திருந்தான். அப்பொழுது பகல் பதினொரு மணி. அவனைப் பார்க்க தணிகாசலத்திற்கு என்றுமில்லாதவாறு ஆத்திரம் பீறிட்டது. உள்ளே சென்று துவரம் தடியால் பலமுறை அடித்தார்.

திடுக்கிட்டு இராசகோபால் எழு முன் பத்து பதினைந்து அடிகள் விழுந்துவிட்டன. திடீரென்று நடந்த தாக்குதலால் நிலைகுலைந்து போன இராசகோபால் எழுந்து அதிர்ச்சியுடன் தணிகாசலத்தைப் பார்த்தான்.

''எங்கடை குலமானத்தைக் கெடுக்கிறாய். உழைக்கக் கூடியவன் பிச்சையெடுத்துத்தின்பது மானக்கேடு மட்டுமில்லை, பாவமும் கூட. கட்டுமட்டான உடம்பை வைத்துக்கொண்டு உழைக்காமல் அவளுக்கு எவ்வளவு துன்பத்தைக் கொடுக்கிறாய். வீட்டைவிட்டுப் போடா. போய் வீடுவீடாய்ப் பிச்சையெடு. வீட்டிலிருந்து கொண்டு பிச்சை எடாதை'' மீண்டும் பலமுறை அடித்தார்.

அயலவர்கள் பலர் கூடிவிட்டனர். தணிகாசலம் ருத்திர மூர்த்தியாக நின்றதை அவர்கள் அன்றுதான் கண்டனர். வேலாயுதபிள்ளை. ஏதோசொல்ல வாய் உன்னினார்

''வேலாயுதம், எனக்கொன்றும் சொல்ல வேண்டாம். நீ அவனுக்காகப் பரிந்து பேசினால் உனக்கும் அடிப்பன்''

வேலாயுதபிள்ளை திகைத்துப் போனார் ''தணிகாசலத்திற்கு இப்படியொரு கோபமா...?'' என்று நினைத்தார்.

வள்ளியம்மை ஓடோடி வந்தாள் ‘‘சித்தப்பா வீணாக அவருக்கு அடித்து உங்களின் உடல் நிலையைக் கெடுத்துக் கொள்ளாதையுங்கோ. நீங்கள் இல்லாவிட்டால் நான் என்றோ செத்திருப்பன். உங்களது பண உதவியும் அன்பான வார்த்தைகளும் தான் என்னை வாழ வைக்குது. இவன் மரம்தான். இவனுக்கு உணர்ச்சியே இல்லை. இவனை அடித்து நீங்கள் துன்பப்படாதையுங்கோ’’ என்றவாறு தணிகாசலத்தின் கையிலிருந்த துவரந்தடியைப் பறித்துத் தூரவீசிவிட்டு சொன்னாள் ‘‘இனியென்றாலும் உனக்கு ரோசம் வரவேண்டும். உடலெங்கும் இரத்தத்தழும்பாக இருக்கு.உன்னால் நாம் பட்ட துன்பங்கள் போதும். வெளியே போ. இஞ்சைவராதை. எங்காவது குளங்குட்டையில் விழுந்து சா’’

நூற்றுக்கு மேற்பட்ட மக்கள் கூடிநின்று வேடிக்கை பார்த்தனர். வாழ்க்கயைில் முதல் தடவையாக இராசகோபாலின்மனம் விழித்தது. விம்மி விம்மிச் சில கணங்கள் அழுதான். ‘‘மாமா இன்றிலிருந்து நான் தொழில் செய்யப்போகிறேன்’’ என்று கத்தியையும் மண்வெட்டியையும் எடுத்துக்கொண்டு வெளியேறினான்.

அன்று மாலை அவர்களது வாழைத் தோட்டம். துப்பரவு செய்யப்பட்டு நீர்பாய்ச்சப்
பட்டிருந்தது. அதைக்கண்ட தணிகாசலமும் கஜேந்திரனும் திகைத்துவிட்டனர். கஜேந்திரன் சொன்னான்˙ ‘‘கணநாதன் ஐயாவிடம் சொல்லி ஏதாவது ஒரு தொழில் வாங்கிக் கொடுங்கோ’’

‘‘ எந்தச்செயலையும் செய்யலாமென எண்ணிய இராசகோபாலை நான் மதிக்கிறன்’’ கண்கலங்கினார் தணிகாசலம்.

‘‘இச்செயல் செய்வதற்கு அரியது என்று மனம் சோராது , அதனைச் செய்யத்தொடங்கல் வேண்டும். முயற்சி வெற்றியைத் தரும் என்று எண்ணினேன். சரி வந்துவிட்டது’’ என்றான் கஜேந்திரன்.

**611. அருமை உடைத்துஎன்று அசாவாமை வேண்டும்**
**பெருமை முயற்சி தரும்.**

இது செய்ய முடியாத செயல் என்று சோர்வு அடையக் கூடாது. அதைச் செய்வதற்குரிய பெருமையை முயற்ச்சி உண்டாக்கும்.

## கைவிடும்

தணிகாசலம் வேலை செய்து கொண்டிருக்கும் இராசகோபாலின் அருகிற்சென்று’’ மத்தியானம் சாப்பிட்டாயா..?’’ என்று கேட்டார்.

‘‘இல்லை’’ என்று தலையசைத்தான் இராசகோபால்.

‘‘ஏன் வீட்டுக்குச் சென்று சாப்பிட்டுவிட்டு வந்து வேலை செய்திருக்கலாம் தானே’’

“என்னுடைய மன வைராக்கியம் விடவில்லை. இவ்வளவு காலமும் சோம்பியிருந்ததால் எனக்கு மனச்சாட்சி வேலை செய்யவில்லை. சுவாமியார், அதிபர் நீங்கள் எல்லோரும் புத்திமதிகள் கூறியபோதும் கூட எனது மனச்சாட்சி விழிக்கவில்லை. ஆனால் இன்று நீங்கள், பலரும் பார்த்துக் கொண்டிருக்க என்னைத் தண்டித்ததால் எனது மனச்சாட்சி விழித்து விட்டது. வள்ளியம்மை சொன்னதைப் போலக் குளம் குட்டையில் விழுந்து சாகவேண்டும் என்று நினைத்தேன். அப்பொழுது சுவாமியாரின் நினைவு வந்தது. அவரிடம் சென்றேன். எனது உடலில் உள்ள காயங்களைக் கண்டு அதிர்ந்து போனார் அவர். அதைவிட நீங்கள் தான் அப்படி அடித்தது என்பதை அறிந்தும் அவர் திகைத்தவிட்டார். பல நிடங்கள் அவரால் பேச முடியவில்லை”.

“மகனே ஒரு சாதுவுக்கு வந்த கோபத்தைக் காண எனக்கு அச்சமாக இருக்கிறது. வீணாக ஒரு நல்லவனைப் பாவஞ்செய்ய வைத்து விட்டாய். மனிதன் எப்பொழுதும் தன் குடும்பத்தவர்களுக்கும் மற்றவர்களுக்கும் உதவி செய்பவனாக வாழவேண்டும். வேலை செய்யாது பிறரின் உழைப்பில் வாழ்பவன் தினமும் பாவஞ்செய்கிறான். இந்த உலகம் முயற்சியுடையவர்களுக்கே சொந்தமானது. முயற்சி செய்வதன் மூலம் சொர்க்கத்தை நாம் பூமியிற் பெறலாம். உனக்கு ஐந்து பிள்ளைகள் இருக்கிறார்கள். உனது பெற்றோர் வயது சென்ற காலத்திலும் தனது பிள்ளையின் பிள்ளைகள் கூடக்கஷ்டப்படக்கூடாது என்று கலங்குகிறார்கள் அப்படியான பெற்றோருக்குப் பிறந்த நீ, உனது பிள்ளைகள் துன்பத்தால் கலங்குவதைக் கண்டும் வாழாதிருக்கிறாய். இது விலங்குகளைவிடக் கேவலமானது. விலங்குகள் தமது குட்டிகள் இரைதேடும் காலம் வரும் வரை அவற்றிற்கான தேவைகளைச் செய்கின்றன. அதை ஏன் உன்னாற் செய்ய முடியவில்லை? சோம்பலுள்ளவன் மரணமடைந்தவனாகவே கருதப்படுவான். அவனால் யாருக்கும் எந்த இலாபமும் கிடையாது. அதனால் தான் உன்னைக் காதலித்துக் கனவுகளுடன் உன்னுடன் வந்த உனது மனைவி உன்னை வெறுக்கிறாள். உழைத்துக் கொடு, உன்னை அவள் கடவுளாக மதிப்பாள்” என்றார். அதனால் எனக்குத் தைரியம் பிறந்துவிட்டது. அதனால் தான் வேலை செய்யும் போது எனக்குப் பசிக்கவில்லை.” என்றான் இராசகோபால்.

“அப்பொழுது வள்ளியம்மை உணவுடன் வந்தாள். என்றுமில்லாதவாறு வாழைத்தோட்டம் மிகவும் அழகாக இருந்தது. மூன்று கூலியாட்கள் செய்யும் வேலையை இராசகோபால் தனித்துச் செய்திருந்தான்.

“முழுவதும் செய்யாமல் அரைகுறையாகத் தொழிலை விட்டவரை உலகம் கைவிட்டுவிடும். அதனால்தான் முயற்சியில் தளர்ச்சியில்லாமற் செயற்பட்டேன்” என்றான் இராசகோபால்.

“ உனக்கு எப்படி அம்மா தெரியும்” என்று கேட்டார் தணிகாசலம்”

‘‘வேலாயுதண்ணனை வந்து சொன்னார். அதனால் சோறும் நான்கு கறிகளும் சமைத்து வந்துள்ளேன்’’ என்ற வள்ளியம்மை. தான் கொண்டு வந்த சோற்றுக்குள் கறிகளைக் கொட்டிக் குழைத்தாள்.

இராசகோபால் அவளைப் பார்த்தான். காதலித்து அவள் வந்த காலத்தில் சோற்றைக் குழைத்துக் கொடுப்பாள். அத்துடன் அவனுடன் சேர்ந்தும் சாப்பிடுவாள். அப்படிச் சாப்பிட்டுப் பலவருடங்களாகிவிட்டன. அப்படிச் சாப்பிட அவனுக்கு ஆசை. கேட்டால் புலியைப் போல பாய்வாள். ஆனால் இன்று அவன் கேளாமலே சோற்றைக் குழைத்தது அவனுக்கு ஆச்சரியமாக இருந்தது.

‘‘வா, கஜன் நாங்கள் போவோம். எமது வேலை முடிந்துவிட்டது’’ என்ற தணிகாசலம் ‘‘இராசகோபால், பிறகு குளிச்சிட்டு வீட்டை வா’’ என்று கூறிவிட்டுச் சென்றார்.

வள்ளியம்மை இராசகோபாலை அன்பு தழும்பப் பார்த்தாள். அவளது கண்கள் கலங்கியிருந்தன. படிக்கும் காலத்தில் அவள் ஓர் அபூர்வமான அழகி. பல ஆடவர்கள் அவளின் அன்பை அடைய நாயாய் அலைந்த போது அவன் தன்னை விரும்பியவதை நினைத்துப் பார்த்தான் அழகாய் இருந்த அவள் உருக்குலைந்து இருப்பதைப் பார்க்க அவனுக்குக் கவலையாக இருந்தது.

‘‘என்ன யோசிக்கிறியள்?. சோற்றைப்பிடியுங்கோ...’’ வள்ளியம்மையின் குரல்கேட்டுத் திடுக்கிட்ட இராசகோபால் சோற்றை வாங்கி உண்டான். அது அமிர்தம் போல இருந்தது. ‘‘நீரும் சாப்பிடும்’’ என்றான்.

‘‘நான் வீட்டை போய்ச் சாப்பிர்றன்’’

‘‘இல்லை’’ என்றவாறு கையில் இருந்த சோற்றுக் கவளத்தை அவளது வாயருகே கொண்டு சென்றான். பத்துப் பதினைந்து வருடங்களுக்கு முன் அவள் அவனுடன் கூட வந்ததன்று செய்தது அவளுக்கு நினைவில் வந்தது.

**612. வினைக்கண் வினைகெடல் ஓம்பல் வினைக்குறை**
**தீர்ந்தாரின் தீர்ந்தன்று உலகு.**

தொழிலை முடிக்காது இடையில் கைவிட்டவரை உலகம் கைவிட்டு விடும், ஆகையால் முயற்சி இல்லாதிருந்தலை ஒழித்தல் வேண்டும்.

## மேலான எண்ணம்.

‘‘இன்றைக்குத்தான் நான் மிகவும் சந்தோஷமாக இருக்கிறேன். முன்பே இப்படியிருந்திருந்தால் நான் இப்ப பெரிய இலச்சபாதிபதியாகியிருப்பேன். மற்றவர்களெல்லாம் உழைத்துத் தமது குடும்பத்தை மேலான குடும்பமாக்க, நான் மட்டும் சோம்பியிருந்து எமது குடும்பமானத்தைக் கெடுத்துவிட்டேன் . வயது சென்ற தணிகாசலம் மாமா கூடச் சோம்பியிராமல் இப்பொழுதும் வேலை செய்கிறார். அவர் இன்றிருக்கும் நிலையில் வேலை செய்யத் தேவையில்லை. அப்படித்தான் அப்பாவும் எழுபது வயதைக் கடந்தும் வீட்டு வேலைகள் யாவற்றையும் சுறுசுறுப்புடன் செய்கிறார்.

‘‘விடாமுயற்சியுடன் செயற்பட்டு வெற்றியடைபவன் தான் தனது குடும்பத்தவர்களுக்கும் உதவி, பிறருக்கும் உதவி செய்ய வேண்டுமென்று நினைப்பான். தணியாசலததைப் பார் உன்னிலும் பார்க்க நாற்பது வயது கூடியவன் . கஷ்டப்பட்டுச் சம்பாதிக்கிறான். தான் சம்பாதிப்பதை ஊர் முழுவதற்கும் கொடுக்கிறான். உன்னால் உனது பிள்ளைகளுக்கே கொடுக்க முடியவில்லை. வள்ளியம்மை தணிகாசலத்திடஞ் சென்று கையேந்துகிறாள். சோம்பியிருப்பவனின் உடல் நிலை கெட்டுக் காலப்போக்கில் தீராத நோயாளியாகி விடுவான்’’ என்று அப்பா அடிக்கடி சொல்வார். அப்பொழுது எனக்கு எதுவும் புரிவதில்லை. இப்பொழுது தான் புரிகிறது. பிறருக்கு உதவி செய்ய வேண்டுமென்ற மேலான எண்ணம், விடா முயற்சியுடன் செயற்பட்டு வெற்றி அடைபவர்களிடமே இருக்கும் என்பார்கள். தணிகாசலம் மாமா உதவி செய்யாவிட்டால் எனது குழந்தைகள் என்றோ இறந்திருக்கும்’’ என்றான் இராசகோபால் . அவனது குரல் தழுதழுத்தது.

‘‘கடந்து சென்ற காலத்தைப் பற்றிச் சிந்திப்பதை விட்டுவிட்டு இனி நடப்பதைப் பற்றிச் சிந்தியுங்கோ’’ என்றாள் வள்ளியம்மை.

‘‘நான் உழைத்து, உம்மை முன்பு நான் சொன்னது போல மகாராணி மாதிரி வைத்துக் காப்பாற்றுவன். தணிகாசலம் மாமா பிறகு வீட்டை வரச் சொன்னார். கணநாதனின் தொழிற்சாலையில் வேலை பெற்றுத்தந்தாரானால் நல்லது. தோட்டமும் செய்யலாம். இம்முறை தணிகாசலம் மாமாவிடம் வெண்காயம் வாங்கி நடப்போறன். வெண்காயம் விளைந்ததும் கிண்டி வித்துப் போட்டு உம்மை என்னுடைய உரிமையாக்கப்போறன்’’ சிரித்தான் இராசகோபால்.

வள்ளியம்மைக்கு எதுவும் விளங்கவில்லை. அதனால் மிரள மிரள விழித்தாள்.

‘‘இவ்வளவு காலமும் நாம் கணவன் மனைவியாக வாழ்ந்தாலும், நான் உமக்குத் தாலி கட்டவில்லை. சமய முறைப்படி தாலி கட்டித் தான் ஒரு பெண்ணை மனைவியாக்குதல் வேண்டும். உம்மைக் கூட்டி வந்த போது ‘‘உழைப்புப் பிழைப்பில்லாமல் கண்டவளொருத்தியைக் கூட்டியந்திட்டாய். கூட்டிவந்த மாதிரி அவளை வைத்துக் காப்பாற்று. தாலி கட்ட என்னிடம் எதையும் எதிர்பாராதை. உழைச்சுக்கட்டு. இல்லாவிட்டால், அப்படியே குடும்பம் நடத்து. உழைப்பில்லாத சோம்பேறிகளுக்கு ஏன் தாலி’’ என்று அப்பா கேட்டவர். அப்படியிருந்தும் எனக்கு இவ்வளவு காலமும் அந்த யோசனை வரவில்லை. இப்பத்தான் வந்திருக்கு ஆறுமாதங்கள் பொறுத்துக் கொள்ளும்’’ என்றான். இராசகோபால்.

‘‘வள்ளியம்மை பூரித்துப் போனாள். அவளால் தன்னை நம்பமுடியவில்லை. இப்படி அவன் பேசுவான் என்று அவள் கனவுகூடக் காணவில்லை..

‘‘சோம்பியிருப்பவனைப் பராமரிப்பது செத்த பிணத்தை வைத்துப் பராமரிப்பதைப் போன்றது. சோம்பல் தான் மரணம். துணிவுடன் நீசெயற்படு. சோம்பலற்றவனாக இரு. பிறரின் நலத்திற்காக உன்னை வருத்திச் செயற்படு. எலும்பும் சதையும் கொண்ட இந்த உடலைச் சுமப்பதால் யாருக்காவது நன்மை இருத்தல் வேண்டும். உனக்கும் உன் குடும்பத்திற்குமாக உழைப்பதில் அர்த்தமில்லை.

வறியவர்களுக்காகவும், பலவீனர்களுக்காகவும் உனது உழைப்பின் ஒரு பகுதியாவது செலவு செய்தால் நீ முத்தியடைந்தவனாவாய்'' என்று சுவாமியார் கூறிய அறிவுரை இப்பொழுதுதான் எனக்குப் புரிகிறது.'' என்றான் இராசகோபால்.

''அன்று இரவு இராசகோபாலைக் கணநாதனிடம் அழைத்துச் சென்றார் தணிகாசலம். கணநாதன் இராசகோபாலுக்கு வேலை கொடுத்தார். அன்றிரவு தூக்கம் வராமல் பாயிற்புரண்டுகொண்டிருந்தான் இராசகோபால். வள்ளியம்மை அவனின் அருகில் வந்தமர்ந்தாள். பல வருடகாலமாக இரவில் அவனுக்கருகில் வராதவள் அன்று வந்து அவனது உடலை வருடியது அவனுக்கு ஆச்சரியத்தைக் கொடுத்தது. ''வள்ளி'' என்றான். அவளது முகம் சிவந்து வருவது இருட்டிலும் அவனுக்குத் தெரிந்தது. மெல்ல அவனது நெஞ்சுள் தனது முகத்தைப் புதைத்தாள் வள்ளியம்மை. காதலிக்கும் போது முதல் முதலாக அணைத்த சுகம் அவனுக்கு அப்போது ஏற்பட்டது ''வள்ளி ... வள்ளி.'' என அவனது உதடுகள் அசைந்தன.

**613. தாளாண்மை என்னும் தகைமைக்கண் தங்கிற்றே**
**வேளாண்மை என்னும் செருக்கு.**

பிறருக்கு உதவி செய்யும் மேம்பட்ட பண்பு முயற்சி உடையவர்களிடமே நிலைத்திருக்கின்றது.

## பேடியின் ஆண்மை

வள்ளியம்மை அவனை நெருங்கியிருந்தாள். பல வருடங்களுக்குப் பின்பு அவனை அன்புடன் அணைக்க வேண்டுமென்ற ஆவல் அவளின் மனதில் மேலோங்கியது. அவனை மெல்லத் தனது இரு கைகளாலும் அணைத்தாள்.

''வள்ளி இந்தப் பேரின்பம் நான் திருமணமான காலங்களில் அனுபவித்தது. அன்று அனுபவித்த இன்பத்தை விட இன்று மிகவும் அதிகமாக உள்ளது''

''எனக்கும் தான். இவ்வளவு காலமும் நானும் பிள்ளைகளும் என்னசெய்யப் போகிறோம்?. உங்களுடன் கூடியிருந்ததால் இன்னும் சுமை அதிகரிக்குமென்ற எண்ணமே எனக்கு மேலோங்கும். துன்பங்களும், பசிக் கொடுமையும் என்னை உங்களை நெருங்கவிடாது தடுத்தன. எவ்வளவு தான் துன்பங்களிருந்தாலும் அன்பாகத் தம்பதிகள் அருகில் இருந்து கதைத்தால் துன்பங்கள்

யாவும் தூசாகப் பறந்துவிடுமென்பார்கள். நீங்கள் சோம்பியிருந்ததால் உங்களைப் பார்க்கவே எனக்கு வெறுப்பாக இருந்தது. இப்பொழுது மிகவும் சுறுசுறுப்புடன் நீங்கள் தொழிற் செய்கிறீர்கள். இன்று மூன்றுபேரின் வேலைகளைச் செய்தீர்கள். இப்படி நீங்கள் சுறுசுறுப்பாக இயங்கினால் எமக்குள்ள துன்பங்கள் யாவும் பறந்துவிடும்'' என்றாள் வள்ளியம்மை.

''நான் சோம்பியிருந்ததால் என்னை எல்லோரும் பரிகசித்தனர் கேவலப்படுத்தினர். சுனாமி அனர்தத்தின் போது ஒரு பெண் தனது கணவனையும் இரண்டு பிள்ளைகளையும் இழந்து நிர்க்கதியாகி நாவலர் ஸ்ரீவித்தியா மகா கணபதி ஆலய வாசலில் வந்திருந்து கதறிக்கொண்டிருந்தாள். கோயிலில் ஏராளமான பாதிப்படைந்த மக்கள் வந்திருந்தனர். கோயிலில் மக்கள் அதிகமாக இருந்ததால் தங்குமிட வசதிகள் செய்ய இரண்டொரு தினங்கள் எடுக்கும் என்பதால் அதிபர் சிலரை அழைத்து மக்களிற் சிலரை அவர்களது வீட்டுக்கு அழைத்துச் செல்லும்படி கூறினார். ஒவ்வொருவரும் நான்கைந்து பேரை அழைத்துச் சென்றனர். மனம் கேட்காமல் நான் கணவனை இழந்த அந்தப் பெண்ணை என்னுடைய வீட்டுக்கு வரும்படி கேட்டேன். அதை அறிந்த தணிகாசலம் மாமர் ''இராசகோபால், நீயே தண்டச்சோறு. உனக்குச் சோறு போடவே அவள் கஷ்டப்படுகிறாள். இந்த நிலைமையிலை நீ இந்தக் குடும்பத்தை அழைத்துப் போகிறாய், உன்னால் அவர்களுக்கு ஒரு நேரச்சோறு கொடுக்க முடியுமே..? முயற்சி இல்லாதவன் பிறருக்குதவி செய்ய நினைப்பது ஒரு பேடி தனது கையில் வாளை எடுத்து ஆண்மையைக் காட்டுவது போன்றதாகும். பேசாமல் போ. இல்லாவிட்டால் உதிலை இரு இடம் பெயர்ந்த மக்களுக்குச் சமைக்கக் கிடாரம் வைக்கிறார்கள். சமையல் முடிந்ததும் சாப்பிட்டு விட்டுப்போ...?'' என்றார் அது அந்த நேரம் எனக்குப் பெரிதாகத் தோன்றவில்லை. இப்ப நினைக்க ஆத்திரமாக இருக்கு'' என்றான் இராசகோபால்.

''அதற்குக் காரணம் அன்றைய உங்களது நிலையே ஆகும். அன்றிருந்த நிலையில் அவ்வார்த்தைகள் கொடுமையானவைகளாக உங்களுக்குத் தோன்றவில்லை. அதனால் அதை ஒரு பொருட்டாக நீங்கள் அன்று மதிக்கவில்லை. இப்பொழுது முயற்சியுடையவராக இருப்பதால் அவ்வார்த்தைகள் கொடியனவாக இருக்கின்றன. இங்கு வித்தியாசம் இருப்பதற்குக் காரணம் மனமாற்றந்தான். முன்பு உங்களிடம் உள்ள குறையைச் சுட்டிக் காடட்டியபோது கோபம் வரவில்லை. இப்பொழுது அக்குறை மறைந்ததனால் கோபம் வருகிறது. சோம்பல் மிகவும் பயங்கரமானதென்று இப்பொழுது உங்களுக்குப் புரிகிறதல்லவா..?'' என்றாள் வள்ளியம்மை.

''வாழ்வில் பெரும் பகுதியை நான் சோம்பற்பட்டு வீணாக்கி விட்டேன். இனிமேலென்றாலும் நான் வாழவேண்டும். என்னைப் பேடி என்றும் கைகாலாகாதவ என்றும் சொன்ன மக்கள் சுறுசுறுப்பானவனென்று கூறுதல் வேணடும்'' உற்சாகமாகக் கூறினான் இராசகோபால் .

“மக்களில் அனேகர் முன்பு நடந்தவற்றை மறந்து விடுவதுண்டு. கதிரேசு முன்பு சரியான ஏழை. அவனது சகோதரி தனது மகனுக்குக் கதிரேசுவின் மகளைச் செய்ய விரும்பவில்லை. கதிரேசுவின் மகன்மார் இருவர் வெளிநாட்டிற்குச் சென்ற பின்பு இப்பொழுது அவள் கதிரேசனைப் புகழ்ந்தபடி அவரது வீட்டில் இருக்கிறாள். தனது இளைய மகளுக்குக் கதிரேசுவின் மகனைத் திருமணம் பேசுகிறார். மணிவண்ணனின் குடும்பம் முன்பு கஷ்டப்பட்டது. ஊரில் யாரும் அவர்களை மதிப்பதில்லை. தகப்பன் குடிகாரன். குடித்து விட்டுச்சீலை துணியில்லாமல் வீதிகளில் விழுந்து கிடப்பார் இன்று அவற்றை மகன்தான் ஊரில் பெரிய மனிதன். முதல் மரியாதையை ஊரவர்கள் அந்தக் குடிகாரனுக்குக் கொடுக்கிறார்கள். அதனால் நீங்கள் உற்சாகமாகத் தொழிலைச் செய்தால் கேவலமாக் கதைத்தவர்கள் அதை மறந்து உங்களை மதிப்பார்கள்” என்றாள் வள்ளியம்மை. அது அவனுக்கு நியாயமாகப் பட்டது.

**614. தாளாண்மை இல்லாதான் வேளாண்மை பேடிகை**
**வாள் ஆண்மை போலக் கெடும்.**

முயற்சி இல்லாதவன் உதவி செய்ய நினைப்பது, பேடி தன் கையில் வாளை எடுத்துத் தனது ஆண்மைத் தன்மையைக் காட்டு வதைப் போன்றது.

## தூண்

மாலை ஐந்து மணியிருக்கும் இராசகோபால் தனது வாழைத் தோட்த்திற்கு நீர் பாய்ச்சிக் கொண்டிருந்தான். அப்போது கஜேந்திரன் அங்கு வந்தான். இராசகோபால் தற்பொழுது கணநாதனின் தொழிற்சாலையில் காலை எட்டு மணி தொடக்கம் மாலை நான்கு மணிவரை வேலை செய்கிறான். அதன்பின் தோட்ட வேலைகள் செய்வான். வீட்டு வேலைகள் செய்வான். வீட்டில் வளர்க்கும் ஆடு மாடுகளுக்குப் புல் சேகரிப்பான். முன்பு அவன் சோம்பலுற்றிருந்த காலப் பகுதியில் வள்ளியம்மையே எல்லாத் தொழில்களையுஞ் செய்து வந்தாள். அதைக் கண்டு பொறுக்க மாட்டாத கஜேந்திரன் அவனது வாழைத் தோட்டத்திற்கு நீர்பாய்ச்சிக் கொடுப்பான். பசளை தாட்டுக் கொடுப்பான். நேரமிருந்தால் ஆடு மாடுகளுக்குப் புல் செதுக்கிக் கொடுப்பான்.

“துவிச்சக்கர வண்டியால் இறங்கிய கஜேந்திரன் துவிச்சக்கர வண்டியை நிறுத்திவிட்டு வந்து சொன்னான் “கோபலண்ணை, நான் நீர் பாய்ச்சுறன். நீங்கள் ஆடு,மாடுகளுக்குப் புல் செதுக்குங்கோ” இராசகோபால் கஜேந்திரனை நிமிர்ந்து

பார்த்தான் ''எவ்வளவு காலமாக இவன் எமக்குதவி வருகிறான். இத்தனைக்கும் அவன் நெருங்கிய இனத்தவனும் அல்லன் அயலில் இருப்பவனும் அல்ல. அப்படியிருக்க வள்ளியம்மையும் பிள்ளைகளும் படும் துன்பத்தைப் போக்க தன்னாலான உதவிகளைச் செய்து வருகிறான். இவ்வளவு காலமும் நான் வளர்க்கும் கால்நடைகளிலோ அல்லது நான்பெற்ற பிள்ளைகளிலோ நான் காட்டாத அன்பையும் அக்கறையையும் அவன் காட்டுகிறான்'' என்பதை நினைக்த இராசகோபாலுவுக்குத் துக்கமாக இருந்தது ''வேண்டாம் கஜன் நான் இறைக்கிறேன். வள்ளியம்மை வந்துவிடுவாள். அவள் வந்து புல்லுச் செதுக்குவாள். நீ போய் உன்னுடைய வேலைகளைச் செய்'' என்றான் இராசகோபால்.

''பாவம் வள்ளியம்மையக்கா. எனக்கொரு பெண் சகோதரமிருந்தால் இப்படிக் கஷ்டப்பட விடமாட்டன். பெண்கள் மென்மையானவர்கள் போற்றப்படவேண்டியவர்கள். ஏனென்றால் தாய், தாரம், சகோதரி, என்று எம்மீது இரக்கப்படுபவர்களெல்லாம் பெண்கள் தான். அதனால் பெண்களின் மீது எனக்கு அக்கறையுண்டு . நீங்கள் சென்று புல்லைச் செதுக்குங்கள்'' என்றான் கஜேந்திரன்.

அப்போது வள்ளி அங்கே வந்தாள். அவளது கையில் சுடுநீர்ப் போத்தல் இருந்தது. இராசகோபாலுக்கு அருகில் வந்த வள்ளியம்மை சொன்னாள் ''இனி நீர் உதவி செய்யத் தேவையில்லை. இவர் திருந்திவிட்டார். மூன்று குடும்பங்களைப் பாரமரிக்க்கூடிய வலிமை இவரிடம் வந்து விட்டது. நீர் உம்முடைய வேலைகளைப் பாரும். உமக்கு எத்தனை வேலை, வீட்டுச் சமையலில் இருந்து ஊர்த்தொண்டு துரவு வரை இருக்கு. இவர் செய்வார்'' என்ற வள்ளியம்மை. சுடுநீர்ப் போத்தலில் கொண்டு வந்த தேனீரை இருவருக்கும் ஊற்றிக் கொடுத்தாள்.

''இரண்டு பேரும் சொல்லும் போது நான் ஏன் இங்கு நிற்பான்.'' என்று சொல்லிவிட்டுப் புறப்பட்டான் கஜேந்திரன்.

'' கஜன், ஒருபோதும் தனது இன்பத்தைப் பெரிதாக நினைப்பதில்லை. அத்துடன் தான் எடுத்துக்கொண்ட செயல்களை ஒழுங்காக முடித்துவிடுவான். அப்படியானவன் தான். சுற்றத்தாரின் துன்பங்களைப் போக்கி, அவர்களது துன்பங்களைத் தாங்குகின்ற தூண் போன்றவனாவான். ஊரவர் முழுப்பேரும் எந்தத் தேவைக்கும் கஜேந்திரனைத்தானே அணுகுவார்கள். அவன் ஒருபோதும் எதற்கும் மறுப்புச் சொன்னதில்லை. நல்ல பிள்ளை. இவனைக் கணவனாக அடைகின்ற பெண் பெரும் பாக்கியம் செய்தவளாகத்தான் இருப்பாள். சுனாமியால் பாதிக்கப்பட்ட எத்தனைபேருக்கு உதவி செய்தான். உண்மையில் அவன் ஏழைப் பங்காளன்'' என்றாள் வள்ளியம்மை.

''நான் உம்மீது மட்டும்தான் அன்பு செலுத்தினேன். அதுவும் காதலிக்கும் வரை தான் அன்பு செலுத்தினேன். ஆனால் அன்பு தான் எல்லோரையும் இணைக்கும் பாலம் என்பதை நான் உணரவில்லை. அன்பை உணர வைத்தவன் கஜேந்திரன். தணிகாசலம் மாமா பரோபகாரியென்றாலும் எமக்குப் பெரிதாக உதவவில்லை. கஜேந்திரன்தான் உதவினான். நான் சோம்பியிருந்த காலத்தில் எவ்வளவு உதவிகளைச் செய்திருப்பான்.

ஒருவழியில் தணிகாசலம் மாமா எனக்குக் கண்டபடி அடித்ததும் எமது குடும்பம் அடைந்துள்ள பெரும் துன்பத்தைப் போக்கத்தான் . அவர் அடித்தஅடி தான். என்னை எனது குடும்பத்தைத் தாங்கும். தூணாக்கியது. தனது இன்பத்தைப் பெரிதாக நினைக்காது ஊருக்கு உதவி செய்கின்ற தணிகாசலம் மாமா அன்று அடித்ததால் எமது குடும்பத்திற்கு நன்மைசெய்து எமது குடும்பத்தைத் தாங்கும் தூணாக மாறியிருக்கிறார்'' என்றான் இராசகோபால்

''இனி எமது குடும்பத்தை யாரும் அசைக்க முடியாது'' சிரித்தாள் வள்ளியம்மை. அவளது சிரிப்பில் மோகமுற்றுச் செயலிழந்து நின்றான் இராசகோபால்.

**615. இன்பம் விழையான் வினைவிழைவான் தன்கேளிர்**
**துன்பம் துடைத்துஊன்றும் தூண்.**

தனக்குவரும் இன்பத்தை விரும்பாமல், தான் மேற் கொண்ட செயலை செய்து முடிக்க விரும்புபவன், தனது சுற்றத்தவரின் துன்பத்தைப் போக்கி அவர்களைத் தாங்கும் தூணைப் போன்றவனாவான்

## முயற்சியின் பெருமை

அன்று இராசகோபால் நட்ட வெண்காயத்தைக் கிழப்பி தாளை அறுத்துச் சாக்குகளில் கட்டினான். அறுபது சாக்ககளில் வெண்காயம் நிரப்பப்பட்டிருந்தது. மணிவண்ணன் முழுவெண்காயத்தையும் கொள்வனவு செய்துவிட்டு ஒரு இலட்சத்து இருபதினாயிரம் ரூபா கொடுத்தான். இராசகோபால் மணிவண்ணனிடம் கிருமி நாசினியையும் உரத்தையும் கடனாகப் பெற்றிருந்தான். அதற்கான பணத்தைக் கழித்துக் கொண்டு தரும்படி இராசகோபால் சொன்னதற்கிணங்க அதைக் கழித்துக் கொண்டு மிகுதிப் பணத்தைக் கொடுத்தான் மணிவண்ணன்.

அப்பணத்தில் பத்துப் பவுண் பெறுமதியான தாலிக் கொடியொன்றை மணிவண்ணனிடம் வாங்கினான் இராசகோபால். அன்று புதன் கிழமைபன்னிரண்டு மணிக்கு இராசகோபால் நாவலர் ஸ்ரீவித்தியா மகா கணபதி ஆலயத்தில் வள்ளியம்மைக்குத் தாலி கட்டினான். அவனது ஐந்து பிள்ளைகளும் ஊரவர்களும் அதை வேடிக்கை பார்த்தனர். தாலி கடட்டியதும் ஊரவர்களுக்கும் இனத்தவர்களுக்கும் நண்பர்களுக்கும் கோயில் மடத்தில் மதிய உணவு பரிமாறப்பட்டது. தணிகாசலம் முன்நின்று பந்தியை நடத்தினார்.

''சுவாமியார் திருமணமண்டபத்தில் நடைபெறும் திருமண விழாக்களுக்கு வந்து மணமக்களை ஆசீர்வதிப்பது வழக்கம். அன்றும் வழக்கம் போலச் சுவாமியார் வந்து மணமக்களை ஆசீர்வதித்து நல்லுரை வழங்கினார் ''அன்பர்களே, இது ஒரு விசித்திர- மான திருமணம். தனது பிள்ளைகள் பார்த்துக்

குதூகலிக்கக் கூடியதாக ஒரு தம்பதியினர் மாலை மாற்றித் திருமணஞ்செய்து கொண்டனர். சமயத்தின் தார்ப்பரியம் கொள்கைகளில் இல்லை. அதைக் கடைப்பிடிப்பதில்தான் தங்கியுள்ளது. சமய விதிப்படி நடப்பதுதான் உண்மையான சமயத்தவரின் இயல்பாகும். தினமும் கோயிலுக்கு வந்து வணங்குகின்றவன் சமயத்தவன் ஆகமாட்டான். ஆனால் இறைவனின் விருப்பங்களை நிறைவேற்றுபவனே சமயச் சான்றோன் ஆவான். தனது இன்பத்தைப் பெரிதாக நினைத்தாலும், தன் சுற்றத்தாரின் இன்ப வாழ்விற்காக உழைப்பவனே உண்மையில் கடவுளின் தொண்டனாவான். மிகவும் பலவீனப்பட்டிருந்த இராசகோபாலை முயற்சியுடையவனாக்கி அவனிடம் செல்வத்தைப் பெருகச்செய்த தணிகாசலமும் கஜேந்திரனும் சமய ஞானிகளாவார்கள். முயற்சி ஒருவனுக்குச் செல்வத்தைப் பெருகச் செய்யும். முயற்சியில்லாமல், வறுமையில் வாடிய இராசகோபால் இன்று முயற்சியுடையவனாகிப் பெரும் செல்வந்த நிலையை நோக்கிச் செல்லத் தொடங்கியுள்ளான். இது வரவேற்கத்தக்கது. அவனும் அவனது குடும்பமும் பல்லாண்டு சீரும் சிறப்பும் பெற்று வாழ எல்லாம் வல்ல நாவலர் ஸ்ரீ வித்தியா மகா கணபதி உதவி செய்வார்'' என்றார்.

''வள்ளியம்மைக்கு மகிழ்ச்சியைத் தாங்கிக்கொள்ள முடியவில்லை. இப்படியானதொரு நல்வாழ்வு கிடைக்கும் என்ற கனவுகளுடன் தான் அவள் இராசகோபாலுடன் வந்தாள். அது பலவருடங்களுக்குப் பின்பு நிறைவேறியதை நினைக்க அவளுக்கு மகிழ்ச்சியாக இருந்தது.

**616. முயற்சி திருவினை ஆக்கும் முயற்றின்மை**
**இன்மை புகுத்தி விடும்.**

முயற்சி ஒருவனது செல்வத்தைப் பெருகச் செய்யும். முயற்சியின்மை அவனுக்கு வறுமையைச் சேர்த்து விடும்.

## முயற்சியில் வாழ்பவன்

வானத்தில் பூரண சந்திரன் உலாவிக்கொண்டிருந்தான். பங்குனிமாத வெப்பம் பகலைப் போல் இருந்ததால் முற்றத்தில் நின்ற வேப்பமர நிழலில் பாயைப் போட்டுப் படுத்திருந்தான் இராசகோபால். அவனுக்கருகில் வள்ளியம்மை இருந்தாள். மேகம் மெதுவாகக் கலைந்து கொண்டிருந்தது.

''இரவு எட்டுமணிவரையும் தோட்டத்தில் வேலை செய்த நீங்கள் காலையில் ஒன்பது மணிக்குத் தொழிற்சாலைக்குச் செல்ல வேண்டும். படுங்கோ''. என்று சொல்லிப் பனையோலையால் செய்த விசிறியால் விசிக்கிக்கொண்டிருந்தாள் வள்ளியம்மை ''இராசகோபால் சிரித்தான் ஏன் சிரிக்கின்றீர்கள்?'' மோகத்துடன் கேட்டாள் வள்ளியம்மை ''என்னை முன்பு எவ்வளவு தீவிரமாகக் காதலித்தனீர் என்னைக் காணாவிட்டால் துடித்துப்போவீர். காதலிக்கும் போது நீர் எழுதிய கடிதங்கள் சில

இப்போதும் என்வசம் உள்ளன. சிலவேளைகளில் அவற்றையெடுத்து வாசிப்பேன். “நீர் பிள்ளைகளைத் தூக்கிக் கிணற்றில் போட்டுவிட்டு நானும் குதிப்பேன்” என்று கூறிய அன்று தணிகாசலம் மாமா எனக்குக் கண்டபடி அடித்தார். அதனால் உண்டான துன்பத்தைக் கண்டும் நீர் மனம் கசியவில்லை. அதனால் எனக்குக வாழ்கையின் மீது வெறுப்பு வந்தது. அதனால் நான், தற்கொலை செய்ய முயற்சித்தேன். நான் சோம்பியிருந்த காலத்திலும் உம்மீது கொண்ட காதல் வற்றவில்லை. நினைத்தவுடன் ஊற்றுப்போலப் பெருகி உள்ளத்தை உவகைப்படுத்திக் கொண்டிருந்தது. அதனால் ஒரு கடிதத்தையெடுத்து வாசித்தேன் “அன்பானவரே, எனது பெற்றோர் செய்யும் துன்பங்களை என்னால் தாங்கிக் கொள்ள முடியவில்லை. எனது நினைவுகள் கனவுகள் யாவும் உங்களைப் பற்றியிருப்பதால் அவர்கள் செய்யும் துன்பங்கள் எல்லாம் என்னை வருத்தாது உங்களை வருத்துவதாகவே எண்ணுகிறேன். எனது இதயம் உங்களிடத்தில் உள்ளது. உங்களது இதயம் தான் என்னிடத்திலுள்ளது. அதனால் வேதனைப்படுவது உங்களின் இதயம் தான். அதனால் இரவு வேளை எனக்கு முடிவுகாலமாகவுள்ளது. இரவு வேளைகளில் பெற்றோர் செய்த துன்பங்கள் கொலைக்களத்தில் பகைவர்கள் வருவது போலல்லவா வந்து என்னைச் சித்திரவதை செய்கின்றன. நான் உங்களை விரும்புவதால் பெற்றோர் மட்டுமல்ல ஊரவர், அயலவர், இனத்தவர், நண்பர்கள் எல்லோரும் என்னை வெறுக்கிறார்கள். பாடசாலையில் அதிபரும் ஆசிரியர்களும் கூட என்னை அருவருப்புடன் பார்க்கின்றனர். உலகமே எதிர்க்கட்டும் எனக்குத் தேவை நீங்கள் தான். உங்களுக்கு வேலையில்லாவிட்டாலும் பரவாயில்லை உண்ணாமல் பசியோடு உங்கள் மடியில் படுத்திருந்தால் உலகமே என் கைக்குள் வந்துவிட்டதைப் போன்ற மகிழ்ச்சி எனக்கு ஏற்படும். படிக்கச் சொல்கிறார்கள். அவர்களுக்கு எனது நிலை எங்கே புரியப்போகிறது. அவர்கள் துன்பந்தராது உங்களை என்னருகில் இருக்க விட்டால் நான் படிக்காமலே பரீட்சை எழுதுவேன்....” இப்படி உமது கடித வாக்கியங்கள் இருந்தன. என்மீது அளவில்லாத அன்பு கொண்டு அனைத்தையும் துறந்து வந்த உம்மை நான் அளவுக்கதிகமாகக் கொடுமைப்படுத்தி விட்டதை நினைக்க எனக்கு ஆத்திரத்துக்குப் பதிலாக ஆவேசம் வந்தது “சோம்பல் உள்ளவனது வீட்டில் மூதேவி வாழ்கிறாள். சோம்பலில்லாதவனின் வீட்டில் திருமகள் வாழ்கிறாள்” என்று சுவாமியார் அடிக்கடி கோவிலில் அருளுரை வழங்குவது எனது ஞாபகத்திற்கு வந்தது. அதனால் எனது குடும்பத்தை எண்ணிப் பார்த்தேன். பூத்துப் பொலிந்திருந்த அழகெல்லாம் அற்று எழும்புக்கூடாக உலவும் உமது தோற்றம் எனது கண்களுக்குத் தெரிந்தது. உம்மைத் தீவிரமாக நேசித்தவன் பற்குணம். அவன் உமக்குப் பின்னால் பேயாய் அலைந்தவன். நான் உம்மை அழைத்து வந்த பின் சொன்னான் “கோபால், அடைய முடியாத பெரும் பேற்றை அடைந்துள்ளாய். காதலில் தோற்றவன் எதற்கும் லயக்கற்றவன். பேரதிஷ்டக் காரனான நீ வென்றுவிட்டாய். உலகமே உனது கையில் வந்து விட்டது. அவளைச் சாகும்வரை மகிழ்வுடன் வைத்துக் காப்பாற்று” என்றான். அவன் திருமணமாகாது காதலுக்காக வாழ்கிறான். அண்மையில் என்னைச் சந்தித்துச் சொன்னான் “கோபாலு, நீ காதலைக்

கொலை செய்துவிட்டாய். தேவதை பேயாக அலைகின்றது. திருமகள் மூதேவியாகிவிட்டாள். உன்னை நம்பிவந்த அவளை வருத்துகிறாயே உண்மையில் நீ ஆண் மகனா...?'' என்றான். உண்மை தான் நான் உம்மைக் கொன்றுவிட்டேன்''. கண்கலங்கினான் இராசகோபால்.

''எல்லாவற்றையும் மறந்து படுங்கோ'' என்றவாறு அவனது தலையைக் கோதிவிட்டாள் வள்ளியம்மை. அவள் மகிழ்வுடன் இருந்தால் அப்படிச் செய்வது வழக்கம். அவளை மெல்ல அணைத்தான். அவள் பூரிப்புடன் சிரித்தாள். சந்திரன் மெல்ல முகில்களுக்குள் மறைந்து நடப்பவற்றைப் பார்த்துச் சிரித்தான்.

**617. மடிஉளாள் மாமுகடி என்ப மடிஇலான்**
**தாள்உளாள் தாமரையினாள்**

ஒருவனுடைய சோம்பலில் கரிய மூதேவி வாழ்கிறாள். சோம்பலில்லா தவனின் முயற்சியில் திருமகள் வாழ்கிறாள்.

## பழி

இராசகோபாலுக்குத் தாங்க முடியாத சிரிப்பு வந்துது. அவன் அவளைக் காதலிக்கும் போது தினமும் கடிதம் எழுதிக் கொடுப்பான். அது அவளது உடையைப் பெரும்பாலும் வர்ணிக்கும் கவிதைகளாகவே இருக்கும்.

''பச்சைப் பூ சுற்றி
பல் நிறக்கோலமிட்டு
பவனிவரும் போது
பஞ்சாகிப் போவேன் நான்''

''சிவப்பினுள் வெள்ளைக் கோடு
சிரிப்பினில் மதுவின் வாடை – என்
சித்தத்தைக் கலக்கவென்று சிங்காரி
நடை பயில்வாள்''.

''பல்நிறம் கொண்ட பூக்கள்
மேனியில் பூத்துக் குலுங்க
என்முன்னே வந்த போது
ஏங்கிநான் செயலிழந்தேன்''

கவிதைகள் நினைவில் வந்து இனிக்கக் கனிவான அவளின் முகத்தைத் தனது கையில் ஏந்திப் பார்த்தான். முன்பு எழுதிய இன்னொரு கவிதை ஞாபகத்துக்கு வந்தது.

"கண்களோ கவிதைத் தோட்டம்
கன்னங்கள் மதுரசப் பேழை
இதழ்களோ தேனின் கூடு
எண்ணமோ காதல் பூந்தென்றல்
பூங்கனிச்சோலையாய் வந்தென்
சிந்தையை மயக்கி நாளும்
சித்திரக் கதைகள் பேசும்
பொற்சித்திரமன்றோ நீ"

காதலிக்கும் போது தினமும் அவன் எழுதிய கவிதைகள் இன்றும் அவனது மனத்திலும் எழுத்திலுமுண்டு. அதனால் காதலிக்கும் போது அவன் எழுதிய கவிதைகளைத் தொகுத்து ஒரு நூலாக வெளியிட்டாலமென்ற என்ற எண்ணம் அவனது மனதில் மெல்ல முளைத்தது. நூற்றுக் கணக்கான கவிதைகளுக்குரியவள் அவள். திருக்குறள் பாக்களில் இன்பத்துப் பாலையே அவன் விரும்பிப் படிப்பான். காதலா் படும் வேதனையை வள்ளுவா் மிகவும் அருமையாகச் சொல்லியிருக்கிறாா். வள்ளுவா் எழுதிய இன்பத்துப் பால் குறள்களை அவளுக்கேற்ற மாதிரி அவன் எழுதி அந்த நாட்களில் கொடுத்தான். அதையும் நூலாக வெளியிட வேண்டுமென்ற எண்ணம் அவளது மனதில் தோன்றியது. அவன் முன்பு எழுதிய திருக்குறள் கவிதைகள் ஞாபகத்திற்கு வந்தன.

"உண்டேன் மதுவைமயக்கமில்லை
கண்டேன் உன்னை மயக்கம் வந்தது"
"நோயைத் தந்து துன்பந்தருவாய்
மருந்தும் தந்து நோயைக் களைவாய்."

இப்படித் திருக்குறளையே அவளுருவாக்கிவிட்டு இவ்வளவு காலமும் சோம்பல் மேலீட்டால் அவளை வருத்தியதை நினைக்க அவனுக்குக் கண்கள் கலங்கின.

"இராசகோபால், பிறவியில் ஊழ்வினை காரணமாக செல்வமில்லாமல் வறியவனாக இருப்பது பழியல்ல. உனது தந்தையிடம் ஏராளமான நிலம் உண்டு. தோப்புக்களுண்டு. அவற்றை நல்ல முறையில் பராமரரித்தால் நீ குபேரனாக வாழலாம் அப்படிச் செய்யாவிட்டாலும் கூலியாட்களைக் கொண்டென்றாலும் நல்ல முறையில் பராமரி. காலையில் இருந்து இரவு வரை உன்னால் எப்படிச் சோம்பியிருக்க முடிகின்றது. அறியவேண்டியவற்றை நாம் உனக்கு அறிவிக்கிறோம். ஆனால் நீ தொழில் செய்து பணம் சம்பாதிக்காமல் இருப்பது தான் பழியாகும். உனது செயலால் ஆறு சீவன்கள் பல வழிகளாலும் துன்பப்படுகின்றன. வயோதிப வயதிலுள்ள பெற்றோா் யாவும் இருந்தும் நீ முயற்சியாமல் சோம்பியிருப்பதால் உனது குடும்பம் துன்பப்படுகிறது என்று நினைத்துக் கவலைப்படுகின்றனா். இந்தத் தள்ளாத வயதில் அவா்களைத் துன்பப்படுத்தும் உன்னைப் பழிவிடாது" என்று ஒரு நாள் தணிகாசலம் சொன்னது நினைவுக்கு வந்தது.

“உண்மை தான் பிறவியிலே உழ்வினை காரணமாக அங்கவீனனாகப் பிறந்து முயற்சியில்லாமல் சோம்பியிருந்தால் அது பழியாகாது முடமான சித்திராங்கனுக்கு ஊரவர்கள் வீடு தேடிச் சென்று உதவுகிறார்கள். அவன் பாவம் என்கிறார்கள். ஊர்ப்பிரமுகர்கள் அவனுக்கு வைத்தியம் செய்ய ஏற்பாடு செய்கிறார்கள். பொது நிறுவனங்கள் பல்வேறு விதமான உதவிகளை விரும்பிச் செய்கின்றன. அதை அவனுக்குச் செய்வதை புண்ணியமாகக் கருதுகின்றனர். ஆனால் எனது நிலை அப்படியானதல்ல. அறிய வேண்டியதை அறிந்த நான் எந்தத் தொழிலைச் செய்தால் செல்வம் தேடலாம் என்று அறிந்து முயற்சி செய்து பணம் தேடாமல் இருந்தது பழிப்புக்குரிய செயல்” என்று நினைத்தான். திடீரென்று அவனுக்குள் ஓர் அசுர சக்தி புகுந்துவிட்டதைப் போலிருந்தது. இனிமேல் பேருக்கத்துடன் உழைக்க வேண்டுமெனத் திடசங்கர்ப்பம் பூண்டான்.

**618. பொறிஇன்மை யார்க்கும் பழிஅன்று அறிவுஅறிந்து**
**ஆள்வினை இன்மை பழி.**

ஊழ்வினையால் செல்வம் இல்லாதிருப்பது பழியன்று; அறிய வேண்டியவற்றை அறிந்து முயற்சி செய்யாமல் சோம்பியிருப்பதே பழியாகும்.

## மெய்வருத்து

“தெய்வத்தால் எதுவும் ஆகாது. எல்லாவற்றையும் தெய்வம் தந்தால் மனிதன் முயற்சியில்லாமல் சோம்பியிருப்பான். தெய்வம் தான் தினமும் முயற்சி செய்து அவனைக் காப்பாற்ற வேண்டி வரும். உன்னையும் படைத்து உலகையும் படைத்து உலகிற்கு வேண்டிய அனைத்தையும் இறைவன் உனக்காகவே படைத்துள்ளான். முயற்சியுடையவன் உழைத்து மேன்மையடைவான். சோம்பல் பட்டவன் சோர்ந்து தினமும் பூமிக்குப் பாரமாக இருப்பான். இறைவன் போதிய நிலத்தைப் படைத்துள்ளான். விதைகளைப் படைத்துள்ளான். உதவிக்கு மிருகங்களையும், கருவிகளையும் படைத்துள்ளான். உன்னிடம் அவன் எதிர்பார்ப்பது முயற்சியையே அதில்லாமல் நீயிருந்தால் உன்னால் முன்னேற முடியாது. விதையையும், நிலத்தையும் அதற்கு வேண்டிய முழுவதையும் தந்த பின் முயன்று பயன் பெறுவது உனது கடமை. இறைவன் அரிசி தந்துள்ளான். அதைச் சுவையாகச் சமைத்துண்ண முடியாது மற்றவர்களை எதிர்பார்க்கின்றாயே உனக்கு வெட்கமாய் இல்லை. இறைவன் தொழிலை உனக்குத் தருகிறான். அதை நல்ல முறையில் செய்து முயற்சியால் முன்னேற வேண்டியது உனது கடமை. செருப்புத் தைக்கும் தொழிலாளியாகத் தனது தொழிலைத் தொடங்கியவன் செருப்புச் செய்யும் தொழிலதிபராக உயர்ந்து இருக்கிறான். செருப்புச் செய்து விற்றவன் செருப்புத் தைக்கும் தொழிலாளியாகவும்

மாறியுள்ளான். இது அவனவன் முயற்சியால் வந்த பெருமை'' சுவாமியார் ஒருநாள் அருளுரையில் கூறியது இராசகோபாலின் நினைவுக்கு வந்தது.

''நான் எவ்வளவு காலத்தை வீணாக்கிவிட்டேன் தெய்வம் நமக்கு ஊழ்வினை காரணமாக உதவாதுவிட்டாலும் ஒருவன் தனது உடலை வருத்தி மேற்கொண்ட உழைப்பின் அளவிற்குப் பயன்கிடைக்கும்'' என்று பெரியவர்கள் சொல்வார்கள். நான் முன்பே உழைத்திருந்தால் இன்று எமது குடும்பம் ஒப்புயர்வில்லாது முன்னேறி இருக்கும். எனது ஆறுமாத முயற்சியால் பத்துப் பவுனில் உமக்கு தாலி கட்டியுள்ளேனென்றால் உம்மைத் திருமணஞ் செய்த நாள் முதல் உழைத்திருந்தால் இன்று பெரும் பணக்காரனாகியிருப்பேன்'' கவலைப்பட்டான் இராசகோபால்.

''நடந்தவற்றை நினைத்துக் கவலைப்படுவதால் எதுவும் நடந்துவிடப் போவதில்லை. இப்பொழுதாவது நீங்கள் உணர்ந்து உழைப்பில் கடுமையாக ஈடுபட்டிருப்பதைக் காண எனக்கு மகிழ்ச்சியாக உள்ளது. முயற்சியுடையவனுக்கு உலகம் கைப்பிடிக்குள் இருக்குமென்பார்கள். இப்போ எனக்கு உங்கள் மீது அளவில்லாத நம்பிக்கை உண்டு. தணிகாசலம் சித்தப்பா தோட்டச் செய்கையை விடப்போவதாகச் சொன்னார். சின்னம்மாவும், நாமகள் அக்காவும் அவரைத் தோட்டச் செய்கையை விட்டு விட்டு ஓய்வாக இருக்கும்படி அடிக்கடி கூறுகின்றனராம். தன்னாலும் இயலாது இராசகோபால் செய்வதாக இருந்தால் செய்யச் சொல்லு'' என்று இன்று காலையில் சொன்னார். நான் மறந்துவிட்டேன். உங்களுக்கு விருப்பமே...?'' என்று கேட்டாள் வள்ளியம்மை.

''இப்படியான செய்திகளை உடனே சொல்ல வேண்டும். அவர் வேறுயாருக்காவது கொடுத்துவிடுவார். அவர் இளகிய மனம் படைத்தவர். தன்னையே தானமாகக் கொடுக்கக்கூடியவர். அவர் கேட்டதும் ஓமென்று சொல்லியிருக்கலாம்'' வருத்தப்பட்டான் இராசகோபால்.

''முன்பென்றால் தோட்டத்தில் கூலியாட்கள் வேலை செய்கின்றார்கள் சாப்பாடும் தேநீரும் கொண்டு போய்க் கொடுத்துவிட்டு வாருங்கள்'' என்று சொன்னால் கேளாதது போலச் சுருண்டு படுத்திருக்கும் தனது கணவனா இப்படிப் பேசுவது?'' என்று ஆச்சரியத்துடன் பார்த்தாள் வள்ளியம்மை.

'' அவர் கொடுக்க மாட்டார். எங்களுக்கு வேண்டுமென்று சொல்லிவிட்டேன்'' என்றாள் வள்ளியம்மை.

''விடிய வேலைக்குப் போகுமுன் தணிகாசலம் மாமாவைச் சந்தித்துக் கதைத்துவிட்டுக் காலையில் தோட்டத்திற்குச் சென்று ஆட்சிப்படுத்த வேண்டும். இல்லாவிட்டால் அவர் எமக்குத் தந்ததை மறந்து வேறுயாருக்காவது கொடுத்து விடுவார். இப்பொழுது நீர் அருகில் இருப்பதால் பழைய நினைவுகள் வந்து நித்திரை வரவில்லை. தணிகாசல மாமாவின் தோட்ட நினைவு எனக்கு இனி நித்திரையை வரவிடாது. கனகாலம் உம்மைப் பற்றிக் கவிதை எழுதவில்லை. இப்ப ஒரு கவிதை

சொல்லட்டா'' இராசகோபால் அவளை இழுத்து அணைத்தபடி காதுக்குள்ச் சொன்னான்.

''இப்ப நான் கிழவி'' நாணப்பட்டாள் வள்ளியம்மை.

''கிழவியோ....? இப்பவும் கட்டுக் குலையவில்லை. சிலகாலம் ஓய்வைடுத்தால் சரி. இனிமேல் நீர் வேலை செய்யக்கூடாது. கவிதை சொல்கிறேன் கேளும்''

''என் கண்ணுள் மணியாய் இருப்பவளே
என் கருத்துள் புயலாய் நிற்பவளே
என் உடலுள் உயிராய் மிளிர்பவளே
நீ என் மனதுள் சிலையாய் இருக்கின்றாய்''

சினுங்கியபடி அவனது வாயைத் தனது கையால் பொத்தினாள் வள்ளியம்மை. அவளின் விரல்களைக் கடித்தான் இராசகோபால்.

''இப்ப நீங்கள் பெரும் மோசம். எல்லாவிஷயத்திலும் உற்சாகம் பிறந்து விட்டது''

''இனி ஒவ்வொரு நாளும் கவிதை எழுதப்போகிறேன்'' என்றான் இராசகோபால்.

**619. தெய்வத்தான் ஆகாது எனினும் முயற்சிதன்
மெய்வருத்தக் கூலி தரும்.**

தெய்வத்தின் துணை மாழ்வினைக் கேற்றபடி இருப்பதால் தெய்வத்தின் துணை கிடைக்காது . எனினும் அவன் தனது உடம்மை வருத்திய வருத்தத்தின் கூலி கட்டாயம் கிடைக்கும்.

## விதியை வெல்வோர்

''படுத்து நித்திரை கொள்ளுங்கோ. பகல் முழுவதும் வேலை செய்துவிட்டு இரவு முழுவதும் விழித்திருந்தால் உடம்பு கெட்டுவிடும். முன்பென்றால் நாள் முழுவதும் நித்திரை கொள்வீர்கள். இப்போ இரவில் பத்துப் பதினொரு மணிக்கு நித்திரைக்குச் சென்று, அதிகாலை நான்கு மணிக்கு எழுந்துவிடுகிறீர்கள். பழைய நித்திரையெல்லாம் எங்கே போனது..?''

இராசகோபால் சிரித்தான். ''எல்லா நித்திரையும் நித்திரை செய்தே முடித்துவிட்டேன். இனி எனக்கு நித்திரை வராது. பகல் முழுவதும் வேலை. இரவு முழுவதும் உம்மைப் பார்த்து ரசித்துக் கதைப்பது. சோம்பியிருந்த காலத்தில் நீர் என்னுடன் அன்பாகக் கதைப்பதில்லை. நல்ல உணவு தருவதில்லை. ஆனால் இப்போ அன்பாகக் கதைக்கின்றீர், அக்கறையாகக் கவனிக்கின்றீர். நான் சாப்பிடாவிட்டால் துடித்துப் போகிறீர். நான் நித்திரை செய்யாவிட்டால் கவலைப்படுகிறீர். நல்ல விதம் விதமான சத்துள்ள உணவுகளைத் தினமும் சமைத்து வைத்து விட்டு

காத்திருக்கின்றீர். நான் சாப்பிடா விட்டால் ஊட்டி விடுகிறீர். இப்படி எல்லாம் நீர் செய்யும் போது நான் எப்படித் தூங்குவது.''

''முன்பு எனக்கு வீட்டுவேலைகளையும், பிள்ளைகளையும், தோட்ட வேலைகளையும் கவனிக்க நேரம் போதாது. வேலைப்பழுவாலும் வசதிக் குறைவுகளாலும் அல்லற் பட்டுக் கொண்டிருந்த எனக்கு உங்களைக் கவனிக்க எங்கே இருந்தது? இப்போ எல்லா வேலைகளையும் நீங்கள் செய்வதால் உங்களைக் கவனிக்கும் ஒரேயொரு வேலை தானே எனக்கிருக்கு. உண்மையாய்ச் சொல்கிறேன். நான் உங்களைக் காதலித்த காலத்தை விட இப்போது இன்பமாக இருக்கிறேன். உங்கள் பெற்றோரும் மிகவும் மகிழ்ச்சியாக இருக்கின்றார்கள். ''முயற்சியுடையவன் விதியையும் வென்றுவிடுவான்'' என்று உங்கள் தந்தையார் அடிக்கடி கூறுவார். இப்போ இராசகோபால் இருக்கும் நிலையில் நான் கடனுக்காக ஈடுவைத்த வீட்டை அவன் மீண்டுவிடுவான். அது என்னுடைய குடும்பச் சொத்து. ஒரு வழக்கிற்காக ஈடுவைத்தேன். மீள முடியவில்லை. அடுத்த மாதம் விற்கப் போகிறார்கள். அதை என்னால் வாங்கமுடியாதென நினைத்து எனது எதிரிகளான மணியமும் சின்னத்தம்பியும் வாங்க முயற்சிக்கின்றனர். எனது மகன் அதை வாங்கி எனது மானத்தைக் காப்பாற்றுவான்''. என்றவர். அவரது நம்பிக்கையை வீணாக்கிப் போடாதையுங்கோ. எமக்கும் இரண்டு பெம்பிளைப் பிள்ளைகள் இருக்கிறார்கள். இரண்டு வீடுகள் தேவை'' என்றாள் வள்ளியம்மை.

''என் காதல் இளவரசி கேட்டதெல்லாவற்றையும் நான் எனது உயிரைக் கொடுத்தாவது வாங்கிக் கொடுப்பேன்'' என்றவாறு அவளை அணைத்தான். இராசகோபால்

'' போய்ப்படுங்கோ'' திமிறினாள் வள்ளியம்மை.

''அலைபோல உணர்வு
ஆர்ப்பரிக்கும போது
அணைத்து மகிழாது
அடியேனை முறைத்தால்
அடங்குமா மனது''

கவிதை பாடினான் இராசகோபால். தண்ணீர் தெளிக்கப்பட்ட கொள்ளிக் கட்டையாக அடங்கினாள் வள்ளியம்மை.

''மறுநாள் அதிகாலை நான்கு மணிக்கு நித்திரை விட்டெழுந்தான் இராசகோபால். வள்ளியம்மை வேரறுந்த கொடியைப் போல சுருண்டு படுத்திருந்தாள்.

இராசகோபால் பல்துலக்கி முகங்கழுவிவிட்டு மகாகணபதி ஆலயத்திற்கு வந்தபோது தணிகாசலம் கோயிலின் முன் பக்கத்தைக் கூட்டிக் கொண்டிருந்தார்.

''மாமா''

''என்ன?''

“நேற்று வள்ளியம்மைக்கு உங்களது தோட்டத்தைத் தருவதாகச் சொன்னீர்களாம்”

“ஆம். அவன் குலசிங்கம் பாவம் உனக்கேன் கனக்கத்தோட்டம். வேலையையும் பார்த்து உள்ள தோட்டத்தையும் செய்”

“இல்லை மாமா அப்பா ஈடுவைத்த வீட்டை மீளவேணும். பிள்ளைகளுக்கு நகைகள் வாங்க வேண்டும். மூத்தவள் வயதிற்கு வந்துவிட்டாள். அவள் பல்கலைக்கழகம் சென்றால் படிப்புச் செலவு. பின் திருமணச் செலவு. இப்படிக்கன செலவுகள் வரும். முன்பு நான் சோம்பியிருந்துவிட்டேன். அக்காலத்துக்குமாகச் சேர்த்து உழைத்தல் வேண்டும். எனக்கு உங்களின் தோட்டம் முழுவதும் தேவை. அத்துடன் வீட்டை மீளுவதற்காகக் கொஞ்சப் பணமும் மாறித்தருதல் வேண்டும்”

தணிகாசலம் அவனை நிமிர்ந்து பார்த்தார் “சோர்வில்லாது முயற்சியை மேற்கொள்பவர்கள் தமது வெற்றிக்குத் தடையாக வரும் விதியையும் வென்றுவிடுவார்கள். நீ அத்தகையவன். அதனால் குலசிங்கத்திற்குக் கொடுக்கவிருந்த தோட்டத்தை உனக்குத் தருகிறேன்” என்றார்.

“இராசகோபால் காலை எட்டு மணிக்கு உற்சாகமாக விசிலடித்தபடி வந்தான்.

“எங்கை போனனீங்கள். காலையில் செல்லும் போது சொல்லிவிட்டுச் செல்லக்கூடாதா...?”

“இளவரசி சயனத்தில் இருக்கும் போது கலைக்கக்கூடாதென்பதற்காக சென்றேன். தணிகாசலம் மாமா தோட்டத்தைக் குலசிங்கத்திற்குக் கொடுக்கவே விரும்பினார். ஆனால் நான் போய்த் தோட்டத்தைக் கொத்திவிட்டு வந்துள்ளேன். அத்துடன் ஈடுவைத்த வீட்டையும் மீளப் பணத்திற்கு ஆயத்தம் செய்து விட்டேன்”

“கலக்கீட்டீங்க” என்றாள் வள்ளியம்மை.

“எத்தனை எத்தனை துன்பங்கள் பட்டாய்.
எத்தனை எத்தனை துயரங்களுற்றாய்.
அத்தனை துயரிலும் கலங்காதிருந்து
கருங்கல்லாகி மெழுகாய்க்கரைந்தாய்.
இத்துயர் இனியுனை நெருங்கவிடாது
காப்பது என்கடன் கலங்காதிருந்து
காதல் கனிரசம் பருகத்தாருவாய்
என்று நினைத்து எல்லாம் செய்தேன்.”

“இதில் பார்க்க முன்பு போலிருக்கலாம். தாங்கமுடியவில்லைத் தாயே.
சிரித்தாள் வள்ளியம்மை.

**620. ஊழையும் உப்பக்கம் காண்பர் உலைவுஇன்றித்**
**தாழாது உஞற்று பவர்.**

சோர்வு இல்லாமல் கடும் முயற்சி செய்கின்றவர் ஊழையும் தன் முயற்சியால் வென்று விடுவார்.

## சிறந்தவழி

தணிகாசலம் இராசகோபாலைத் தேடிக்கொண்டு இராசகோபாலின் வீட்டுக்கு வந்தார். அப்பொழுது தர்மலிங்கமும் அங்கிருந்தார். சோம்பேறியாக இராசகோபால் வாழ்ந்த காலத்தில் அவர் அங்கு வருவதில்லை. தற்பொழுது உழைத்துப் பணத்தைச் சேமித்து வள்ளியம்மைக்குத் தாலிக்கொடி கட்டிய பின் இராசகோபாலைத் தர்மலிங்கம் விரும்பினார். அதனால் தன்னிடமுள்ள காணி பூமி பொருட்களையெல்லாம் அவனுக்குக் கொடுக்கத் தீர்மானித்து விட்டார். அதன் பின் தர்மலிங்கம் அடிக்கடி வள்ளியம்மையை வந்து பார்த்துவிட்டுச் செல்வார். வள்ளியம்மை தனது வீட்டில் அவருக்கேற்றவாறு பத்தியமாகச் சமைத்துக் கொண்டு போய் அங்கே வைப்பாள். இப்பொழுது அவர் அங்கு வந்து சாப்பிட்டு விட்டு மனைவிக்குச் சாப்பாட்டைக் கொண்டு செல்வார்.

"நீங்கள் இங்கு நிற்பது நல்லதாய்ப் போச்சு. உவன் சண்முகம் காணியை மீளுற தவணை தப்பியதாலை இனி உங்களுக்குக் காணியைத் தரமாட்டனெண்டு கூறுகிறான். நீங்கள் வாங்கின காசும் வட்டியுமாகச் சேர்த்தால் காணியின் பெறுமதி காணாது. ஆனால் மணியம் அக்காணியை உங்களுக்குக் கொடுக்க வேண்டாமென்று வற்புறுத்திச் சொல்லியிருக்கிறானாம்...." என்றார் தணிகாசலம்.

தர்மலிங்கம் பதைபதைத்தார் "அது என்ரை முதுஷம். அப்பு அந்தக் காணியை எழுதித்தரும் போது "தம்பி எந்தச் சூழ்நிலை வந்தாலும் இந்தக் காணியை வித்துப்போடாதை. இது எங்கடை குடும்பச் சொத்து. பத்துத் தலைமுறையாக வந்தது. நீ வித்தால் என்ரை அத்மா சாந்தியடையாது என்றவர்" தழுதழுத்தார் தர்மலிங்கம்.

காணியின் பெறுமதி குறைவுதான். அதற்காக விடமுடியுமே....? நான் கதைக்கிறன்" என்று கூறுவிட்டுச் சென்றார் தணிகாசலம்.

"பிள்ளை வள்ளியம்மை, கோபாலு வந்தவுடனை தணிகாசலம் சொன்னதைச் சொல்லு, எப்படியெண்டாலும் அதை மீளவேண்டும். இல்லாவிட்டால் எனது உயிர்போயிடும்" என்றார் தர்மலிங்கம். அவரது குரல் தழும்பியது.

"நீங்கள் ஒன்றுக்கும் கவலைப்படாதைங்கோ மாமா. அவர் எப்பாடு பட்டாவது காணியை மீள்வார். நீங்கள் அழாதைங்கோ" என்றாள் வள்ளியம்மை.

"எப்படியம்மா நீ தைரியமாகச் சொல்கிறாய்?"

" அவர் செயல் வீரர். ஏதோ கஷ்ட காலம், அவர் சோம்பியிருந்தார். இப்ப அவர் நடந்து கொள்ளும் முறைகளைப் பார்த்தால் இதுமிகவும் இலகுவானது" என்றாள் வள்ளியம்மை.

அன்றிரவு உணவு உண்ட பின் தணிகாசலம் வந்து சொன்னவற்றைச் சொன்னாள் வள்ளியம்மை

“மாமா மிகவும் கவலைப்படுகிறார் அந்தக் காணிதானாம் தனது உயிர். அக்காணி கைமாறினால் தான் உயிர் விட்டுவிடுவாராம்…” ஏக்கத்துடன் சொல்லிக் கொண்டிருந்தால் வள்ளியம்மை.

“புத்தம் புதிய சுகம்
நித்தம் அள்ளித் தரும்
புத்தம் புது மலரே
நித்தம் உனை நினைத்து
சித்தம் கலங்குகிறேன்
முத்தம் ஒன்று கொடு மயிலே.....”

இராகம் பாடினான் இராசகோபால்.

“வள்ளியம்மைக்குக் கோபம் வந்தது “நான் பெரியதொரு விஷயத்தைப் பற்றிக் கூறுகிறேன். நீங்கள் பழைய கவிதையொன்று படிக்கிறீர்கள். உதைப்படித்துத்தானே என்னை மயக்கினீர்கள்… பெத்த தகப்பன் உயிரைவிடப்போவதாகச் சொல்கிறார் அதைக் கவனத்திலெடுக்காமல் பாட்டுப் பாடுகிறீர்கள். அதுவும் பாடுறபாட்டா.....?” சீறினாள் வள்ளியம்மை.

“தேனினை மிஞ்சும் தன்மை
உன் பார்வையில் கண்டு கொண்டேன்
தேய்பிறை தன்னில் காணும்
வடிவினை உதட்டில் கண்டேன்
பாலொடு தேன் கலந்த நீரை
வள்ளுவன் சொல்லக் கேட்டு
சுவைத்ததால் ஆசை கொண்டேன்
காலத்தைக் காத்துக்கொள்ளும்
பொறுமை தான் எனக்கில்லை” பாடினான் இராசகோபால்.

“வள்ளியம்மைக்குத் தாங்கமுடியாதளவு சினம் வந்தது “உங்களுக்குச் சொன்னால் புரியாது. செயலில் தான் காட்ட வேண்டும்” என்றபடி அவ்விடத்தை விட்டு அகல முயன்றாள்.

“வள்ளி........ வள்ளி ...... சரி சரி சொல்லும் நான் கேட்கிறேன்”

“இனிச் சொல்ல மாட்டேன்”

“நான் யாருடன் விளையாடுவது..... சொல்லம்மா” கெஞ்சினான் இராசகோபால். உருகிப்போனாள் வள்ளியம்மை. யாவற்றையும் விபரமாகச் சொன்னாள்.

இராசகோபால் சிரித்தான் பின் “துன்பம் வந்தால் அதைக் கண்டு கலங்காமல் சிரிக்க வேண்டும். அத்துன்பத்தை வெல்வதற்கு அதுதான் சிறந்த வழி. பயப்படாதையும். நான் திருடனுக்குத் திருடன் போக்கிலிக்குப் போக்கிலி உத்தமனுக்கு உத்தமன். அக்காணியை வாங்க இன்னொருவரை இரகசியமாக ஒழுங்கு செய்துள்ளேன். மணியத்திடம் பணம் இல்லை. மணியம் இவனுக்கு வாங்கிக்

கொடுப்பதாக ஒப்புக் கொண்டுள்ளான். பயப்படாதையும். அதுசரிவராவிட்டால் வேறு வழிபார்ப்போம். இப்பொழுது வாரும்'' என்று அணைத்தான் இராசகோபால்.

**621. இடுக்கண் வருங்கால் நகுக; அதனை**
**அடுத்துஊர்வது அஃ.துஒப்பது இல்.**

துன்பம் வரும் பொழுது அதைக் கண்டு கலங்காமல் சிரித்தல் வேண்டும். அத்துன்பத்தை வெல்வதற்கு அதைப் போன்ற வழிவேறு எதுவும் இல்லை.

## அறிவுடையோரின் செயல்

கணநாதன் பரமேஸ்வரனுடன் நாவலர் ஸ்ரீவித்தியாலய மகா கணபதி ஆலயத்திற்கு வந்தார். அவர் பரமேஸ்வரனுடன் சிரித்துக் கதைத்துக்கொண்டிருந்த போது இனம்புரியாத ஒரு துயரம் அவரது முகத்திலும் பேச்சிலும் தென்பட்டதைப் பரமேஸ்வரன் உணர்ந்து கொண்டார். இருப்பினும் அவர் அதைப் பற்றிக் கேட்கவில்லை. அவராகவே சொல்லட்டும் என்று எதிர்பார்த்தார். அவரின் குணத்தைப் பற்றிப் பரமேஸ்வரன் நன்கு அறிவார். அவராகவே சொன்னால் உண்மையான பிரச்சினையை மிகவும் உருக்காமாகச் சொல்வார். இல்லாவிட்டால் சிலவற்றை மறைக்க நினைப்பார். அதனால் பரமேஸ்வரன் வேறு விடயங்களைப் பற்றிக் கதைத்துக் கொண்டிருந்தார்.

கணநாதன் சிவசுந்தரராஜனுக்கு தனது தொழிற்சாலையில் உற்பத்தியாகும் பொருட்களைக் கொடுக்கத் தொடங்கிய பின்பு கெங்காதரன் பகையாளியாக மாறி அவருக்குப் பல தொல்லைகளைக் கொடுத்துக் கொண்டிருந்தான். கெங்காதரனின் நண்பன் சண்முகநாதன் பெருங்கோடீஸ்வரன். அவனிடம் கணநாதன் தனக்குப் பணத்தட்டுப்பாடு வரும் போது கோடிக்கணக்கில் பணம் மாறுவார் பின் வட்டியுடன் திரும்பக் கொடுத்து விடுவார். தொழிலதிபர்கள் பலர் சண்முகநானிடம் தேவைப்படும் போது வட்டிக்குப் பணம் வாங்குங்கள். அவன் வேறு தொழில்கள் செய்வதில்லை. வட்டிக்குப் பணம் கொடுப்பதையே தொழிலாகக் கொண்டுள்ளான். பணம் கேட்பவர்களுக்கு அவசியமாகப் பணம் தேவையென்று அறிந்தால் முதலில் இல்லையென்பான். அவர்கள் கரைச்சல் கொடுத்தால் என்னிடம் தற்பொழுது அவ்வளவு பணம் இல்லை. இன்னொருவரிடம் தான் கடனாகப் பெற்றுத்தர வேண்டும். அவர் கூடுதலான வட்டி பெறுபவர். அத்துடன் நான் பொறுப்பு நிற்பதால் எனக்கும் பணம் தரவேண்டும்'' என்பான். தன்னிடம் பணம் வாங்குவோரை நியாயமில்லாது வருத்துவது சண்முகநாதனின் இயற்கையான குணம்.

மகாகணபதிக்கு இரவு பூசை முடிந்ததும் கணநாதன் சொன்னார் ''சண்முகநாதனிடம் மூன்று மாதத் தவணையில் ஒரு கோடி ரூபா வாங்கினேன். புதிய இயந்திரம் ஒன்று வாங்கித் தொழிற்சாலையைப் புணரமைக்க இரண்டு கோடி ரூபா முடிந்து விட்டது. இரண்டு வாரங்கூடக் கழியவில்லை. உடனடியாகப் பணத்தைத் திருப்பித் தரச் சொல்லிக் கேட்கிறான். அவனாகக் கேட்கவில்லை. ஏனென்றால் வட்டிப் பணம் அவனுக்குக் கொடுப்பதுதானே அவனது தொழில் கெங்காதரன் தான்

தூண்டிவிடுகின்றான் போலத் தெரிகிறது. வங்கியிலும் வாடிக்கையாளரின் நம்பிக்கையைப் பொறுத்து முகாமையாளர் மேலதிகமாகத் தரும் பணத்தையும் அளவுக்கதிகமாகப் பெற்றுவிட்டேன். ஒருவாரத்துக்குள் கொடுக்க வேண்டும். மகா கணபதியை வந்து வணங்கினால் எல்லாம் தருவார். அதனால் தான் வந்தேன். உனக்கும் நான் பணம் தரவேண்டும். மேலதிகமாக உன்னிடம் பணமேதாவது இருக்கா.....?'' என்று கேட்டார் கணநாதன்.

பரமேஸ்வரன் சிரித்தார் ‘‘என்னிடமுள்ள பணம் முழுவதையும் உன்னிடம் தந்துவிட்டேன். அத்துடன் இப்பொழுது நான் தொழில் செய்வதில்லை. அப்படியிருக்க என்னிடம் நீ கேட்குமளவு பணம் எப்படி வரும்? நான் பற்றுக்களின்றி வாழ்வதற்காக தான் இங்கு வந்தேன்..'' என்றார் பரமேஸ்வரன்.

‘‘ஆசைதான் எல்லாவற்றிற்கும் காரணம். தொழிற்சாலையில் புதிய பிரிவொன்றை ஆரம்பித்தேன். உள்ளதே போதும் என்றிருந்தால் துன்பங்கள் வந்திராது''.

‘‘கட்டாற்று வெள்ளம் போலத் துன்பங்கள் பெருகிவரும் போது அறிவுடையவன் கலங்கமாட்டான். அதைப்போக்குவதற்காக உறுதியோடு நினைக்கும் போதே வந்த துன்பங்கள் யாவும் இல்லாமற் போய்விடும் என்பார்கள். நீ ஏன் கவலைப்படுகிறாய்....'' என்று பரமேஸ்வரன் கூறும்போது கணநாதன் குறுக்கிட்டுச் சொன்னார் ‘‘எனக்கென்ன கவலை. நீ தந்த தொழிற்சாலையை விட இன்னும் இரண்டு தொழிற்சாலைகள் இருக்கின்றன. ஒன்றை விற்றால், அல்லது குத்தகைக்குக் கொடுத்தால் கடனைவிடப் பத்து மடங்கு பணம் வரும். இல்லாவிட்டால் சிவராமனைக் கேட்டால் தருவான். நான் சண்முகநாதனிடம் வழமையாகப் பணம் கேட்பதால் சிவராமனுக்குச் சற்று மனவருத்தம். இப்போதும் தொலைபேசியில் தொடர்பு கொண்டால் சிவராமன் பணம் கொண்டு வருவான். நான் கவலைப்படவில்லை. மனிதர்களின் குணத்தைப் பற்றி யோசிக்கிறேன்.'' என்றார்.

‘‘சிவராமனிடம் தான் நான் முன்பு பணத்தட்டுப்பாடு வரும் போது பணம் பெறுவேன். நான் அவனிடஞ் சொல்கிறேன். அவன் கொண்டு வந்து தருவான்'' என்றார் பரமேஸ்வரன்.

கணநாதன் சிரித்தார் உண்மையில் மகா கணபதி சக்தி வாய்ந்தவர் தான். நான் எதை நினைத்தாலும் உடனே நிறைவேற்றிவிடுகிறார். அதனால் தான் இங்கு வந்தேன்'' என்றார் கணநாதன்.

‘‘ நல்ல அறிவுள்ளவன் மற்றவர்களை ஏமாற்ற மாட்டான் உதவிகளைச் செய்வான். சண்முகநாதன் தான் தந்த பணத்தைக் கூடுதலாகச் சொல்வான். நாம் கொடுத்ததை இல்லையென்பான். ஆனால் சிவராமன் அப்படியல்ல. நீ அவனுடன் தொடர்பு வை'' என்றார் பரமேஸ்வரன்.

**622. வெள்ளத்து அனைய இடும்பை அறிவுஉடையான்**
**உள்ளத்தின் உள்ளக் கெடும்.**

வெள்ளம் போலத் துன்பம் பெருகி வரும் போது, அறிவுடையவன் அத் துன்பத்தின் இயல்பை உள்ளத்திலே உறுதியோடு நினைக்கும் பொழுது அத் துன்பம் இல்லாமல் போகும்.

## துன்பத்திற்குத் துன்பம்

சண்முகநாதனின் வீட்டிற்குச் சிவராமன் சென்றான். முன்னெப்பொழுதும் சிவராமன் தனது வீட்டுக்கு வராமையால் சண்முகநாதன் சற்றுத் திகைப்புடன் அவனை வரவேற்று ஆசனத்தில் அமர்த்திவிட்டு அவன் வந்த விடயத்தை அவனாகவே சொல்லட்டுமென்று எதிர்பார்த்துக் காத்திருந்தான்.

''நீங்கள் கணநாதனுக்கு மூன்று மாதத் தவணையில் ஒரு கோடி ரூபா பணத்தைக் கொடுத்துவிட்டு, இரண்டு வாரங்களில் திருப்பித் தருமாறு கரைச்சல் கொடுப்பதாகப் பரமேஸ்வரன் ஐயா தொலைபேசி மூலம் எனக்குச் சொன்னார். அதனால் நான் பணத்துடன் வந்திருக்கிறேன். பத்திரங்களைத் தந்தால் நான் முழுப் பணத்தையும் தருகிறேன். இந்தாருங்கள், நான் பணம் தந்ததும் பத்திரங்களைக் கையளிக்கும்படி எழுதப்பட்ட சட்டத்தரணியுடைய கடிதம்'' என்றவாறு சிவராமன் ஒரு கடிதத்தை நீட்டினான்.

சண்முகநாதன் அதிர்ந்து போனான். கெங்காதரன் அன்று வந்து சண்முகநாதனிடஞ் சொன்னான் ''சண், நான் சில காலம் பிரச்சினை காரணமாகக் கணநாதனிடம் பொருட்களைக் கொள்வனவு செய்யவில்லை. அந்த நேரம் சிவசுந்தராஜன் பொருட்களைக் கொள்வனவு செய்தமையால், அவர் தொடர்ந்து அவனுக்கே பொருட்களைக் கொடுத்து வருகிறார். அதனால் அவருக்குக் கரைச்சல் கொடுத்தல் வேண்டும். அவர் தொழிற்சாலையை நவீனமயப்படுத்தியமையால் பல கோடி ரூபா கடன் பட்டுள்ளார். வங்கிகள் யாவற்றிலும் கடனாகவும், முற்பணமாகவும் பெற்றுள்ளார். நீ உன்னிடம் வாங்கிய பணத்தை அவசியம் திருப்பித் தரவேண்டுமென்று கரைச்சல் கொடுத்தால், அவர் திண்டாடுவார். இப்போதுள்ள நிலையில் அவரால் இரண்டு மூன்று இலட்சம் ரூபாவே மாறமுடியாது. மூன்று மாதத்தவணையில் உன்னிடம் பணம் கேட்டுள்ளார். மூன்று மாத காலத்துள் தரமாட்டார். அதனால் நீ வற்புறுத்தினால் தொழிற்சாலையை நீ வாங்கலாம். இல்லாவிட்டால் குத்தகைக்கு எடுக்கலாம். நீ தொழிற்சாலையைக் குத்தகைக்கு எடு. பொருட்களை நான் விற்றுத் தருகிறேன்'' என்றான்.

சண்முகநாதனுக்கு ஒரு தொழிற்சாலையை ஆரம்பிக்க் வேண்டுமென்ற நினைவு பலகாலமாக இருந்த போதும், அதை ஆரம்பிக்கின்ற துணிவு அவனது மனதில் எழவில்லை ''தற்செயலாக நட்டமேற்படும் தொழிலாளர்கள் பிரச்சினை தருவார்கள் என்று நினைத்தான். அவ்வேளையில் கெங்காதரன் உற்சாகமூட்டியதால்கணநாதருக்கு கரைச்சல் கொடுத்தான்.

''பணத்தை எண்ணிப்பாருங்கோ'' என்றான் சிவராமன்.

சண்முகநாதனுக்கு ஒரு மாதிரி ஆகிவிட்டது. கணநாதன் மிகவும் ஒழுங்கானவர். பணவிஷயத்தில் மிகமிக ஒழுங்கானவர். சொன்ன தொகையை அப்படியே கொடுத்து விடுவார். சிலர் பணத்தை வாங்கினால் மொத்தமாகக் கொடுக்க மாட்டார்கள். முதலைக் கொடுத்து விட்டு வட்டியைப் பின்பு கொடுப்பார்கள். சிலரிடம் பணத்தை வாங்கி முடிக்கவே முடியாது. அப்படியிருக்க ஒரு ஒழுங்கான வாடிக்கையாளரை இழக்கச் சண்முகநாதன் விரும்பவில்லை.

''நான் அவசரப்படுத்தவில்லை. நான் இன்னொருவரிடந்தான் பணத்தைப் பெற்றுக் கணநாதனுக்குக் கொடுத்தேன். அவர் தேவையென்றார். கணநாதன் பணங்கிடைத்தால் மூன்று நாட்களிலும் திருப்பித் தந்துவிடுவார். அதனால் தான் கேட்டேன். அதற்காக அவர் இன்னொருவரிடம் மாறத்தேவையில்லை. நான் சமாளிக்கிறேன். அவர் ஆறுதலாகத் தரட்டும். நீங்கள் பணத்தைக் கொண்டுபோங்கோ'' என்றான் சண்முகநாதன்.

'' நீங்கள் நெருங்கிறதாகக் கணநாதன் கவலைப்பட்டாரென்று பரமேஸ்வரன் சொன்னார். நான் அவருடன் கதைக்கிறேன்.'' என்று எழுந்தான் சிவராமன்.

''சரி...சரி.. நான் அவருடன் தொடர்பு கொள்கிறேன்'. என்ற சண்முகநாதன், கணநாதனுடன் தொலைபேசியில் தொடர்பு கொண்டான்'' ஐயா நான் அவசியமாகப் பணம் தேவைப்படுகிறது, முடியுமானால் தரமுடியுமா என்று விசாரித்தனானே தவிரத் தரச்சொல்லி வற்புறுத்தவில்லையே. நீங்கள் பணம் பெற்றால் உரிய தவணைக்கு முன்பு தந்துவிடுவீர்கள். இன்னொருவர் பணங்கேட்டார். உங்களிடமிருந்தால் வாங்கிக்கொடுக்கலாமென்று கேட்டேன் இல்லையென்று சொல்லியிருக்கலாம். ஏன் சிவராமனை எனது வீட்டிற்குப் பணத்துடன் அனுப்பினீர்கள் நீங்கள் ஆறுதலாகப் பணத்தைத் தாருங்கோ. இப்ப எனக்கு அவசியமில்லை. அதனால் நான் சிவராமனிடம் பணத்தை வாங்கவில்லை. நீங்கள் எந்தப்பெரிய மனிஷன். நேர்மையானவர் உங்களை நான் கைவிடமுடியுமே..? தொடர்ந்து கோவிக்காமல் பணத்தை வாங்குங்கோ'' என்றான் சண்முகநாதன்.

''துன்பம் வரும்போது கலங்காமல் இருப்பவர்கள் அத்துன்பத்திற்கே துன்பம் உண்டாக்கி விடுவார்கள். என்னிடமில்லாவிட்டால் கணநாதனுக்கு வீடுதேடிச் சென்று பணங்கொடுக்கப் பலர் காத்திருக்கிறார்கள். நான் ஆராயமால் செயற்பட்டுவிட்டேன்.'' என்று நினைத்தான் சண்முகநாதன்.

**623. இடும்பைக்கு இடும்பை படுப்பர் இடும்பைக்கு**
**இடும்பை படாஅ தவர்.**

துன்பம் வரும்போது அதற்காக வருந்திக் கலங்காதவர், அத்துன்பத்திற்கே துன்பம் உண்டாக்கி அத் துன்பத்தை வென்று விடுவர்.

**துன்புற்றுவிலகும்**

பகல் பத்து மணிக்கு வள்ளியம்மை இராசகோபால் வேலை செய்த தொழிற்சாலைக்கு வேர்த்து விறுவிறுக்கச் சென்றாள். அன்று அவன் விடுமுறையில் நிற்பதாகத் தொழிற்சாலை மேலாளர் சொன்னார். உடனே அவள் வீட்டுக்கு வந்தாள். அங்கும் இராசகோபால் இல்லை "தோட்டத்திற்குப் போயிருப்பாரோ...? வேலைக்குப் போகவில்லை என்று அவர் சொல்லவில்லையே எங்கே போயிருப்பார்? சின்னச்சின்ன விசயங்களைக்கூடப் பெரிது படுத்திச் சொல்லி மகிழும் அவர் இன்று சொல்லாமல் எங்'கே சென்றிருப்பார்? காதலித்த நாளிலிருந்து எங்கு சென்றாலும் சொல்லிவிட்டுச் செல்லும் அவர் இன்று எங்கு சென்றார்?" வள்ளியம்மையால் யோசித்து ஒரு முடிவுக்கு வரமுடியவில்லை.

காலையில் வீட்டுக்கு வந்த தர்மலிங்கம் கூறிவிட்டுச்சென்ற வார்த்தைகள் அவளது நினைவுக்கு வந்தன் "பிள்ளை, அவன் உன்னைக் கூட்டி வந்தபோது நான் அதை எதிர்த்தது உன்னில் விருப்பம் இல்லாதால் அல்ல. சோம்பேறியான அவன் உன்னை வைத்துக் காப்பாற்ற மாட்டான். ஒரு விசரனை நம்பி வந்திருக்கிறாய் என்பதற்காகவே நான் எதிர்த்தேன். தடைப்பட்ட இடங்களுக்கெல்லாம் தளராமல் வண்டியியை இழுத்துச் செல்லும் எருதைப்போல இந்தக் குடும்பத்தைப் பொறுமையுடன் நடத்திச் சென்றுவிட்டாய். உண்மையில் இந்தக்குடும்பத்திற்கு வந்த சோதனைகளுக்கு மற்றைய பெண்களால் தாக்குப்பிடிக்க முடியாது. ஒப்புயர்வில்லாத உத்தமி நீ. என்னை உன்னுடைய தகப்பனைப்போல பேணிக்காப்பாற்றுகிறாய். இதற்கெல்லாம் நான் என்ன கைமாறு செய்யப்போகிறேன்? எனது வீட்டை ஈடுவைத்துத்தான் தோட்ட நிலத்தை வாங்கினேன். அந்தத் தோட்டம்தான் எமது குடும்பத்தை வாழ வைத்தது. இப்பவும் அதனால்தான் நீ தாலி கட்டியிருக்கிறாய். கோபால் தாலிக்கொடியை வாங்கும் போது சொன்னேன் ˙ "தம்பி இவ்வளவு காலமும் தாலி கட்டாது வாழ்ந்து விட்டாய். இப்போ தோட்டத்தால் வந்த பணத்தைத் தாலி வாங்காது ஈட்டைமீள். பிறகு தாலி கட்டலாம்" என்றேன் அதற்குக் கோபால் மறுத்துவிட்டான் ˙ "எனது உயிர் அவள். என்னை நம்பி வந்து இவ்வளவு காலமும் கஷ்டப்பட்ட அவளை இனியும் கஷ்டப்படுத்த விரும்பவில்லை. இந்துமதப்படி தாலிகட்டினால்தான் ஒரு பெண் ஒரு ஆணுக்கு உரித்துடையவளாக முடியும். தாலிகட்டாது வாழ்வது விபச்சார வாழ்வு. நான் கட்டாயம் மீள்வன்" என்று சொன்னவன். காலையில் குடித்துவிட்டு நல்ல வெறியில் வந்த மணியம் சொன்னான் "தர்மலிங்கம் உன்ரை மூதாதையற்ரை சொத்தை இண்டைக்கு விற்கப்போறம். முடிந்தால் மறித்துப்பார். நீ மானமுள்ளனீ. கவரிமான் மாதிரி. கவரிமான் ஒரு மயிர் விழுந்தாலும் செத்துப்போமாம். அப்ப நாளைக்குச் செத்தவீடு நடக்கும்" என்று சொல்லிவிட்டுச் சென்றவன். அதனால் இவன் காணியை மீளாவிட்டால் எனக்குக் கொள்ளிவைக்கச் சொல்லு".

வள்ளியம்மைக்குத் தலைசுற்றியது. தேவையான நேரத்தில் கணவன் காணாமற் போனதை நினைக்க அவளுக்கு அந்தரமாக இருந்தது "தற்செயலாக இவர் ஒழுங்கு செய்த விடயம் மணியத்திற்குத் தெரிந்தால் கரைச்சல்" என்று நினைத்தாள்.

மாலை மயங்கிவிட்டது. தர்மலிங்கம் இராசகோபாலின் வரவை எதிர்பார்த்தவாறு இராசகோபாலின் வீட்டில் இருந்தார். அப்பொழுது அங்கே மணியம் நல்ல வெறியில் வந்து சொன்னான் ‘‘தர்மலிங்கம் உன்ரை வீட்டை சண்முகம் வாங்கிவிட்டான். போ போய் நஞ்சைக்குடி. இல்லாவிட்டால் கழுத்தில் கயிற்றைப் போடு’’

தர்மலிங்கத்திற்கு தலை சுற்றியது ‘‘நெஞ்சைப்பிடித்தபடி நிலத்தில் அமர்ந்தார். வள்ளியம்மை செய்வதறியாது திகைத்துப்போனாள். தர்மலிங்கத்தின் கை வேட்டி மடிப்பைைத்தடவியது. மடிப்புக்குள் ஒரு விஷமருந்துப் போத்தல் இருந்தது.

‘‘வள்ளியம்மை குடிக்கத்தண்ணீர் தாம்மா’’ என்றார்.

வள்ளியம்மை தண்ணீர் எடுக்க உள்ளே செல்லத் தர்மலிங்கம் விஷப்போத்தலை எடுத்து அதன் மூடியைத்திறந்து விட்டு வாய்க்குள் விட்டார். அந்த நேரம் அங்கு வந்த இராசகோபால் போத்தலைத் தட்டி விட்டான். எனினும் கொஞ் விஷம் அவரது வாய்க்குட் சென்றுவிட்டது.

‘‘உங்களுக்கென்னப்பா விசரோ. காணியை நான் எழுதிவிட்டன். மணியம் எனக்குத்தரான் என்பதற்காக நான் சண்முகத்தைக் கொண்டு காணியை வாங்கிவிட்டேன். அதற்காக அவனுக்கு ஐயாயிரம் ரூபா கொடுத்தேன்’’

தர்மலிங்கம் அலறினார் ‘‘கொஞ்ச நஞ்சை விழுங்கிவிட்டேன்’’ என்றார்

இராசகோபால் ஓடிச்சென்று மோட்டார் வண்டியொன்றை ஏற்பாடு செய்துகொண்டு வந்தான் ‘‘தடைப்பட்ட இடங்களுக்கெல்லாம் தளராது வண்டியை இழுத்துச் செல்லும் எருதைப்போல விடாமுயற்சி உடையவனுக்கு வரும் துன்பமே துன்பப்பட்டு விலகிப்போய்விடும். நீ ஏன் அவசரப்பட்டனீ’’ என்று பேசினான் இராசகோபால்.

**624. மடுத்தவாய் எல்லாம் பகடுஅன்னான் உற்ற**
**இடுக்கண் இடர்பாடு உடைத்து.**

மேடான இடங்களிலெல்லாம் வண்டியை இழுத்துச் செல்லும் எருது போல் விடா முயற்சி உடையவனுக்கு வரும் துன்பம் துன்பப்பட்டு விலகிப் போகும்.

## துன்பமே நோகும்.

வைத்தியசாலைக் கட்டிலில் வேரறுத்த கொடியைப்போல துவண்டுகிடந்தார் தர்மலிங்கம். அங்குசனும் வைத்தியசாலை ஊழியர்களும் மிகவும் பரப்பரப்பாக ஓடியாடி வேலைசெய்துகொண்டிருந்தனர்.

‘‘நான் கடைசிவரையும் இரகசியம் வெளிப்படக்கூடாதென்பதற்காக உங்களிடம் கூடச் சொல்லவில்லை. எல்லாவற்றையும் இரகசியமாக வைத்திருந்தேன். இப்படி

நடக்கும் என்று தெரிந்திருந்தால் நான் காணி வேண்டாவிட்டாலும் பரவாயில்லை. அப்பாவுக்கு உள்ளதைச் சொல்லியிருப்பன். சொன்னால் அவர் மகிழ்ச்சியில் தலைகால் புரியாது உளறிவிடுவார். அதனால் எல்லாம் கெட்டுவிடும் என்று நினைத்தேன். வள்ளியம்மைக்குத் தெரியும், அவளாவது சொல்லியிருக்கலாம்'' என்றான் இராசகோபால்.

‘‘உனக்குத்தெரியுமென்றால் காலையில் அவர் வந்து சொல்லும் போது சொல்லியிருக்கலாம்தானே.கற்ற உனக்குச் சமயோசிதமாக நடக்கத்தெரியவில்லையா?' என்று கேட்டார் தணிகாசலம்.

‘‘அவர் எனக்கு மட்டும்தான் சொல்வதாகச் சொன்னவர். எக்காரணம் கொண்டும் அப்பாவுக்குச் சொல்லிப்போடாதை என்றவர். அதனால்தான் மாமா வீட்டிற்கு வந்து சொன்ன போது நான். தொழிற்சாலைக்குச் சென்றேன். மற்றய நாட்களில் போகும் இடத்தைச் சொல்லிவிட்டுச் செல்பவர் அன்று சொல்லாமற் சென்றுவிட்டார். இப்படி ஒரு போதும் அவர் செய்வதில்லை.'' அழுதாள் வள்ளியம்மை.

‘‘ நீர் அழாதயும். நான் சொன்னபடி நடந்திருக்கிறேன். காலையில் ஆறுமுகம் வந்து சண்முகம் சாடையாய் சறுக்கிறதாய் சொன்னான். அதனால் மணியம் அவனைச்சந்திக்காதபடி அழைத்துச் சென்று அவனை மறைத்து வைத்திருந்தேன். அதனால்தான் வீட்டை மீளமுடிந்தது. இல்லாவிட்டால் சண்முகம் நான் கொடுத்த பணத்தில் குடித்து விட்டு உளறியிருப்பான். அதற்காகத்தான் அவனைக் கடத்திச் சென்றுபோய் மறைத்து வைத்திருந்தேன்'' என்று தழுதழுத்தான் இராசகோபால்.

‘‘ நீ எனக்குச் சொல்லியிருந்தால் நான் அந்தாளைக் கூட்டிக்கொண்டுபோய் நீ சண்முகத்தை வைத்திருந்த மாதிரி வைத்திருப்பன்.... சீ.. எல்லாம் போச்சு'' என்றார் தணிகாசலம்.

‘‘அப்போது ஒரு மோட்டார் வண்டி வந்து நின்றது. அதிலிருந்து இறங்கிய சண்முகத்தின் மனைவி யசோதை குழறிக்கொண்டு பரபரப்புடன் அங்கு ஓடிவந்தாள். சண்முகம் இரத்தக் காயங்களுடன் மோட்டார் வண்டியிலிருந்து இறங்கினான். அவனது தலையில் கட்டுப் போடப்பட்டிருந்தது. அதிலிருந்து இரத்தம் கசிந்துகொண்டிருந்தது.

‘‘உனக்குக் காணி வாங்கித் தந்ததை அறிந்த மணியனும் சின்னத்தம்பியும் அந்தாளை அடிச்சு முறிச்சுப்போட்டாங்கள். இனியார் எனது குடும்பத்தைக் காப்பது'' பெரும் குரலெடுத்து அழுதாள் யசோதை.

சண்முகம் ஆஸ்பத்திரிக்கு வந்ததும் மயங்கிப் போனான். அவனுக்கு உடனடியாக ஏற்ற இரத்தம் தேவைப்பட்டது. இராசகோபால் தனது இரத்தத்தைக் கொடுக்க முன்வந்தான். ஆனால் அவனது இரத்தம் சண்முகத்திற்குப் பொருந்தவில்லை. வைத்தியர் அங்குசன் ‘‘உடனடியாக இரத்தம் ஏற்ற வேண்டும் என்றார்.

இராசகோபால் ஆஸ்பத்திரியை விட்டு வெளியே வந்தான். தணிகாசலம் அவனின் அருகே வந்து சொன்னார். "தம்பி, கவனம் அவங்கள் கோவத்தில் இருக்கிறாங்கள். உனக்கும் அடித்துப் போடுவாங்கள். நான் போய்ட்டுவாறன்."

"நீங்கள் போகாதையுங்கோ சித்தப்பா போட்டு வரட்டும். நீங்கள் மாமாவைப் பராமரியுங்கோ" என்றாள் வள்ளியம்மை.

"ஒரு மணித்தியாலத்தின் பின் தணிகாசலம் இருவரை அழைத்து வந்தார். அவர்கள் இரத்தம் கொடுத்ததும் இராசகோபால் பத்தாயிரம் ரூபா கொடுத்தான்.

"காசு வைச்சிருக்கிறியா. ...? நீ உழைக்கத்தொடங்கிய பின் உனக்குப் பல துன்பங்கள் தொடர்ந்து வருகின்றன. தொடர்ந்து துன்பங்கள் வந்தாலும் அதைக் கண்டு கலங்காதே. கலங்காதவைனைக் கண்டு வந்த துன்பம் நொந்துபோய்விடும்". என்றார் தணிகாசலம்.

" காசில்லைத்தான். மாறுவம். சண்முகத்திற்கும் ஏதாவது கொடுக்க வேண்டும். அவன் அன்றன்று உழைத்துச் சீவிப்பவன். பாவம் என்னால்தான் அவனுக்கு இந்தத் துன்பம் நேர்ந்தது." என்றான் இராசகோபால்.

"உண்மைதான்.." என்றார் தணிகாசலம். அப்பொழுது அங்குசன் அங்கே வந்தார்.

"இப்பொழுது எப்படி?" என்று கேட்டார் தணிகாசலம்.

"இருவரும் ஆபத்தான நிலையைக் கடந்துவிட்டனர். சென்று பாருங்கள்" என்றார் அங்குசன்.

"தர்மலிங்கத்தை இராசகோபால் சென்று பார்த்தான். அவர் லேசாகக் கண்விழித்துப் பார்த்தார். அவரது கண்களால் கண்ணீர் வழிந்து கொண்டிருந்தது.

**625. அடுக்கி வரினும் அழிவுஇலான் உற்ற**
**இடுக்கண் இடுக்கண் படும்.**

அடுக்கடுக்காகத் துன்பம் வந்த போதிலும் கலங்காமல் இருக்கும் ஆற்றல் உடையவனை அடைந்த துன்பம் துன்பப்பட்டு விலகும்.

## வருந்திப்பயனில்லை.

சண்முகம் எழுந்து கட்டிலில் உட்கார்ந்தான். ஆஸ்பத்திரிக்கு வந்த காவல்துறை அதிகாரி சிவபாதசுந்தரம் சண்முகத்தை விசாரணை செய்து விட்டு மணியத்தையும் சின்னத்தம்பியையும் கைது செய்து சிறையில் அடைத்தார்.

"சண்முகண்ணை, நீங்கள் செய்த உதவியை நான் கடைசிவரையும் மறக்க மாட்டன். அப்பான்ரை முதுச வீடு அது. பத்துப் பரம்பரையாகத் தனக்கு அக்காணி தொடர்ந்து வருகிறது என்று அவர் சொன்னானரே தவிர உருப்படியாக எதுவும் செய்ததில்லை. அந்த வீட்டை ஈடு வைத்துத் தோட்டக் காணியை வாங்கியதாகச் சொல்லுகிறார். ஆனால் அப்பாவின் தகப்பன் தான் தான் அந்தத் தோட்டக் காணியை வாங்கி அப்பாவிற்கு கொடுத்ததாய்ச் சொல்லுறவர். இவர் உழைக்கிற காலத்தில

சூதாடுவதில் வல்லவர். சூதாடத்தான் காணியை ஈடுவைத்ததாக அம்மா சொல்லுகிறவ என்றாலும் அது எமது மூதாதையரின் வீடு. அதை நீ வாங்கித் தந்ததற்காகத்தான் மணியமும் சின்னதம்பியும் சேர்ந்து உனக்கு அடிச்சவங்கள். நீ சுகப்படும் வரை உன்ரை குடும்பச் செலவுக்கு நான் காசு தாரன்'' என்றான் இராசகோபால்.

அப்பொழுது சண்முகத்தைப் பார்ப்பதற்காக அங்கே வந்தார் தர்மலிங்கம்.

''நீ ஏனண்ணை விஷம் குடித்தனீ. பேய் வேலை பார்த்ததாலை இராசகோபாலுக்கு எவ்வளவு செலவு. கேட்கிறன் என்று குறை நினைக்காதை அந்தக் காணியை ஈடு வைத்து என்ன செய்தனீ '' சண்முகம் கேட்டான்.

தர்மலிங்கம் உடனடியாகப் பதில் சொல்லவில்லை அவர் எதிர்பாராத வேளையில் அவன் அக்கேள்வியைக் கேட்டதால் சற்றுத் தடுமாறினார் தர்மலிங்கம்.

''ஊர்ச்சனம் நீ சூதிலை மாண்டதாலைதான் அந்த வீடுவளவை ஈடுவைத்ததாகக் கதைக்குது. ஈடுவைச்சனி உழைத்து அதை மீண்டிருக்க வேண்டும் அதை விட்டு விட்டு நஞ்சு குடிச்சாப்போலை ஈடு மீளப்பட்டு விடுமே..?'' சண்முகம் கேட்டான்.

அப்போதும் தர்மலிங்கம் பேசவில்லை

''நீ கதைக்க மாட்டாய். பாவம் இராசகோபால். நீ சோக்குப்பண்ண ஈடு வைத்த காணியை உன்ரை வெருட்டை நம்பி அடுத்தவர்களுக்குத் தெரியாது மறைத்து திருகுதாளங்களைச் செய்து வாங்கினதாலை என்னை அடிச்சு முறிச்சுப் போட்டாங்கள். அதுக்குச் சரியான செலவு. நீ மருந்து குடித்ததாலை செலவு. இனி என்ரை குடும்பச் செலவு'' என்றான் சண்முகம்.

''உண்மைதான் அந்த நேரம் சூதாடுற கெட்ட பழக்கம் எனக்கிருந்தது. அதனால்தான் என்னுடைய மனைவியின் நகைநட்டெல்லாம் அழிந்தது. வீட்டையும் ஈடுவைத்துச் சூதாடினேன். தோட்டக்காணியை விற்க முயன்றபோது அப்பு அதை இராசகோபாலின் பெயரில் எழுதிவிட்டார். அதனால் அந்தக்காணி தப்பியது. இல்லாவிட்டால் அதுவும் மாண்டிருக்கும். செல்வம் வந்தபோது இதனைப் பெற்றோமே என்று பற்றுக் கொண்டு அதனைக் காத்துக்கொள்ளாதவர்கள் அந்தச் செல்வத்தை இழந்து விட்டோமே என்று வருந்துவதால் பயன் இல்லை என்று தெரிந்தும் நான் விஷத்தைக் குடித்து இராசகோபாலுக்குக் கஷ்டத்தைக் கொடுத்தது தான் மிச்சம்'' அழுதார் தர்மலிங்கம்.

''முடிந்ததை நினைத்து ஏன் அழுகிறீர்கள். எல்லாம் முடிந்து விட்டது. உங்கள் விருப்பப்படி வீடு மீளப்பட்டுவிட்டது'' என்றான் இராசகோபால்.

''தற்கொலை செய்பவர்கள் கோளைகள். வாழ்வதற்கு அஞ்சுபவர்கள் தான் உயிரை விட்டுவிட முயல்கின்றனர். வாழ்க்கை வாழ்வதற்குரியது. அந்த வீட்டை யாராவது ஒருவர் வாங்கியிருந்தால் கூட உங்கள் நிலையை அறிந்து தந்துவிடுவார். அதைவிட அந்த வீட்டுக்கு நீங்கள் வாங்கிய முதலும் வட்டியுமாகச் சேர்ந்த பணத்தின் தொகைக்கு அது பெறுமதியானதல்ல. அதை நீங்கள் மீளவேண்டும் என்பதற்காகவும்

சின்னத்தம்பி அப்படியொரு நாடகமாடியிருப்பான். அவன் அப்படியான ஆள். அதை உணராது எல்லோரையும் பயப்படுத்தி விட்டீர்கள்'' என்றார் தணிகாசலம்.

''உற்சாகமுள்ளவனை எதிர்ப்புக்கள் எதுவும் செய்வதில்லை. எதிர்ப்புக்கள் அவனை ஊக்குவிக்கும்'' என்று சுவாமியார் சொல்லக் கோட்டிருக்கிறேன். அது எவ்வளவு உண்மை என்பது இப்பொழுது தான் தெரிகிறது'' என்றான் இராசகோபால்.

அன்று சண்முகத்தைப் பார்த்துவிட்டு இராசகோபாலும் வள்ளியம்மையும் துவிச்சக்கரவண்டியில் வீட்டுக்குச் சென்றனர். காதலிக்கும் போது முன்பொரு முறை அவள் அவனது துவிச்சக்கர வண்டியில் சென்றிருக்கிறாள். திருமணமான பின்பும் சென்றிருக்கிறா. ஆனால் அன்று செல்வது அளுக்கு அளவில்லாத புதிய இன்பத்தைக் கொடுத்தது.

**626. அற்றேம்என்று அல்லல் படுபவோ பெற்றேம்என்று**
**ஓம்புதல் தேற்றா தவர்?**

செல்வம் வந்த போது செல்வத்தைப் பெற்று விட்டோம் என்று பற்றுக் கொண்டு அதைப் பாதுகாத்துக் கொள்ளாதவர், அச் செல்வத்தை இழந்து வறியவரான போது அதை இழந்து விட்டோம் என்று வருந்துவதால் பயன் இல்லை.

**துன்பங்கொள்ளாதோர்**

அதிபர் விக்னேஸ்வரமூர்த்திக்கு நெஞ்சுவலியேற்பட்டதால் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டார். அங்குசன் அவரை மிகவும் அவதானமாகப் பரிசோதனை செய்தார். வைத்தியசாலை வளவெங்கும் அவ்வூரவர்களும், அவ்வூர்ப்பிரமுகர்களும், மாணவர்களும் சூழ்ந்து நின்றனர்.

'' உங்களுக்கு ஓய்வு போதாது. சாப்பாட்டாலும் கவனமில்லை. அதனால் தான் உடம்பு களைத்து விட்டதே தவிர பெரிதாக நோய் எதுவுமில்லை'' என்றார் அங்குசன்.

''அப்போ நான் வீட்டிற்குச் செல்லலாமா....''? என்று கேட்டார் விக்னேஸ்வரமூர்த்தி.

''ஒரு வாரத்திற்கு வீட்டிற்குச் செல்ல அனுமதிக்க மாட்டோம். ஒரு நோயாளி வைத்தியசாலையில் தங்கிச் சிகிச்சை பெற்றால் தான் அவர் சுகம் பெறுவார். மருந்திலும் பார்க்க அவருக்கு ஓய்வுதான் முக்கியம். எனவே ஒரு வார காலத்திற்கு விடுமுறைக்கு விண்ணப்பியுங்கள்'' என்றார் அங்குசன்.

'' இவர் கடந்த ஏழு வருடங்களாக விடுப்பு எடுக்கவில்லை. ஒருவாரமல்ல ஒரு மாதம் வைத்தியசாலையில் தங்க வையுங்கள். இவரை வீட்டுக்கு அனுப்பினால் இவர் பாடசாலைக்கு வந்துவிடுவார்'' என்றார் உபஅதிபர் கனகலிங்கம்.

'' ஒரு வாரமா? எனக்கு எந்த வருத்தமுமில்லை என்று தானே சொன்னீர்கள். ஒரு வாரத்திற்கு நான் பாடசாலைக்குச் செல்லாவிட்டால் பாடசாலையில் பெரும் பிரச்சினை வரும்'' என்று விக்னேஸ்வரமூர்த்தி கூறிக்கொண்டிருக்கையில் அங்குசன்

சொன்னார் ''அங்கு ஒன்றும் நடக்காது. நீங்கள் இருந்து செயற்பட்ட இடம் அது. உங்களுக்குக் கீழ் அனுபவம் பெற்றவர்கள் உங்களைப் போலவே பாடசாலையை நடத்துவார்கள். நீங்கள் ஏன் அவர்கள் மீது சந்தேகப்படுகிறீர்கள். நீங்கள் இன்னும் மூன்று வருடங்களில் ஓய்வு பெறப்போகிறீர்கள். அதன் பின்பு அப்பாடசாலையை யாரோ ஒருவர் தானே நடத்தப்போகிறார். இன்று உங்களுக்குரிமை உள்ள பாடசாலை நாளைக்கு இன்னொருவருக்கு உரிமையாகும். அதன் பின் வேறொருவருக்கு. இப்படியே மாறிக்கொண்டே இருக்கும். அதனால் நீங்கள் சேவையில் இருக்கும் போதே இன்னொருவரிடம் கடமையைக் கையளித்து அவர்கள் நல்ல முறையில் செயலாற்ற அனுமதிக்க வேண்டும். அதற்காகத்தான் உங்களுக்கு இப்பொழுது நோயை இறைவன் தந்துள்ளார்'' என்றார் அங்குசன்.

அங்குசன் சொன்னது விக்னேஸ்வரமூர்த்திக்குச் சரியாகப் பட்டது. ''உண்மைதான். மூன்று வருடங்களின் பின் அப்பாடசாலை இன்னொருவரின் கைக்குச் சென்று விடும்'' என்பதை நினைக்க அவருக்குத் துக்கமாக இருந்தது.

'' நினைவுகள் தான் மனிதனை நோய்வாய்ப்படுத்துகின்றன. பற்றுக்கள் இல்லாவிட்டால் துன்பமில்லை''. என்று சுவாமியார் சொல்லக்கேட்டிருப்பீர்கள். அதனால் தான் சொல்லுகிறேன். பாடசாலை மீது அதிகம் பற்று வையாமல் அதை மறந்து சில நாட்களுக்கு ஓய்வெடுங்கள்'' என்றார் அங்குசன்.

'' மகனே உடம்பு எந்நாளும் துன்பத்திற்கு இலக்காகக் கூடியது என்பதை அறிந்த அறிவிற் சிறந்த மேலோர் தமது உடம்பிற்கேற்படும் துன்பத்தை ஒரு போதும் துன்பமாகக் கொள்ளமாட்டார். நீ, உனக்கு எந்த வருத்தமும் இல்லை என்று கூறி வீட்டுக்கு வரமுயற்சிக்கிறாய். உனக்கு வருத்தமில்லை என்று நீ எண்ணுவது சரி. ஆனால் ஓய்வெடு. ஞானிகள், முனிவர்கள் கூட ஓய்வெடுக்கிறார்கள். ஓய்வு மூளைக்கு ஆறுதலைக் கொடுக்கும். உடம்புக்குத் தென்பைக் கொடுக்கும். ஆகவே வைத்தியர் சொல்வதைக்கேள்'' என்றார் சுவாமியார்.

''எனக்கு எந்த நோயும் இல்லைச் சுவாமி. வேலை செய்யாது கட்டிலில் படுத்திடுப்பது தான் நோய்.'' என்று சிரித்தார் விக்னேஸ்வரமூர்த்தி.

அப்போது அங்கே தணிகாசலம் வந்தார் ''இவரும் அதிபரைப்போல ஓய்வாக இருப்பதே இல்லை. கேட்டால் இந்த உடம்பு எப்போது நோயில்லாமல் இருந்தது. ஆயிரக் கணக்கான நோய்கள் உண்டு. தினமும் ஏதோ ஒன்று உடலை வாட்டும். இதற்காக ஓய்வெடுக்க முடியுமா?'' என்பார். இவர்களெல்லாம் சொல்வழி கேட்கமாட்டார்கள். ஒரு நாளைக்கு நோய் முற்றி எழும்ப முடியாது பாயில் கிடந்தால் தான் அருமை தெரியும்'' என்றார் அங்குசன்.

''நோய் என்று படுத்தால் தினமும் படுக்கலாம். மரணம் நிட்சயமானது. அது எதிர்பாராமல் நடக்கும். அதற்காகக் கலங்கிக் கொண்டும், அவதானமாகவும் இருந்து வந்தால் மரணம் நெருங்காதென்று அர்த்தமா....? இயங்கும் வரை இந்த உடம்பு இயங்கட்டும்'' என்றார் தணிகாசலம்.

“அப்படிச் சொல்லக்கூடாது. மேலான அறிவுடையோர் உடம்பு துன்பத்துக்குள்ளானது என்று நினைத்துக் கவலை கொள்ளாதிருக்கலாம். ஆனால் உறுப்பிற்கு ஓய்வு தேவை” என்றார் சுவாமியார்.

**627. இலக்கம் உடம்புஇடும்பைக்கு என்று கலக்கத்தைக்**
**கையாறாக் கொள்ளாதாம் மேல்.**

உடம்பு துன்பத்திற்கு இலக்காகக் கூடியது என்பதை அறிந்து கொண்ட அறிவிற் சிறந்த மேலோர், தம் உடலுக்குத் துன்பம் வந்தால் அதைத் துன்பமாகக் கொள்ள மாட்டார்.

## கலங்காதவன்

“அதிபர் சேவையை விரும்புபவர். எந்த விதமான இன்பத்தையும் விரும்பமாட்டார். மனிதன் விருப்பு வெறுப்பில்லாமல் வாழவேண்டும். பற்றற்றவனாக இருத்தல் வேண்டும். அவன் எதைச் செய்தாலும் அதன் பொருட்டு மனம் இதயம் ஆன்மா மூன்றையும் சுத்தமாக வைத்திருத்தல் வேண்டும். மனம் எப்போதும் சுத்தமாகவே உள்ளது. அதை ஆசைகள் தான் அழுக்கடைய வைக்கின்றன. அதிபர் பதவியிலிருக்கும் போது ஆசைகளற்று, பாசங்களற்று ஒரு ஞானியைப் போல அக்கதிரையில் அமர்ந்திருந்து சேவையாற்றினார். கல்வியைக் கண்ணாகக் கருதினார். அதனால் சகல மாணவரையும் தனது பிள்ளைகளாக நேசித்தார். தனது பிள்ளைகளையோ அல்லது உறவினர்களது பிள்ளைகளையோ அவர் அக்கறையுடன் பார்க்கவில்லை. எல்லா மாணவர்களையும் ஒரு தன்மையாகவே பார்த்தார். இதற்கு ஏராளமான உதாரணங்களைக் கூறலாம். ஒருமுறை அவர் தனது சகோதரியின் மகனுக்கு வகுப்பில் நல்ல ஆசிரியர் உள்ள பிரிவு வழங்கப்படவில்லை என்று சகோதரி குற்றஞ்சாட்டினாள். வேறு வகுப்பு மாற்றித்தரும்படி கேட்டாள். பலரும் அதிபருக்கு ஆலோசனை கூறிப் பார்த்தனர். அதிபர் கேட்கவில்லை “எல்லா ஆசிரியர்களும் திறமையானவர்கள். நான் ஒரு பிள்ளையை வகுப்பை விட்டு மாற்றினால் அந்த ஆசிரியை, தான் தரமற்ற ஆசிரியை என்று நினைப்பாள். மற்ற ஆசிரியை, தான் தரமான ஆசிரியை என்று நினைப்பாள். என்னைப் பொறுத்தவரை ஆசிரியர்கள் கற்பதில்லை. பிள்ளைதான் கற்கிறது” என்றார். அதன் பின் கந்தசுவாமி கோயில் குருக்களின் மகனுக்கும் அதே கதி தான் நடந்தது. அப்படி இனத்தவர், மேலானவர் என்று கருதாது பணியாற்ற இங்கு எத்தனை பேரால் முடியும். அத்துடன் பணவிடயத்தில் அவர் எவ்வளவு நேர்மையானவர். பாடசாலை மதில் கட்டும்போது இருபதினாயிரம் ரூபா பொறுத்துவிட்டது. விஞ்ஞானகூடம் கட்டும் போது ஐயாயிரம்

ரூபாவும், நீர்த்தாங்கி கட்டும் போது பத்தாயிரம் ரூபாவும் விளையாட்டு மைதானம் வாங்கும் போது கனகன் விதானையாரின் மகனைக் காசு அனுப்ப விடாமற் தடுத்ததால் நீதிமன்றத்துக்குச் சென்று வட்டிக்காசும் கட்டினவர். மற்றவர்களென்றால் பாடசாலை வேலைகளில் கொஞ்சப் பணமாவது எடுத்துவிடுவார்கள். அத்துடன் அவருக்கெதிராகப் பெற்றோர்களின் கள்ளக்கையெழுத்தைப் போட்டுக் கல்விப்பணிப்பாளருக்கு முறைப்பாடு செய்த ஆசிரியரையும் மன்னித்து விட்டவர். இந்த எண்ணம் யாருக்கு வரும்.'' என்றார் தணிகாசலம்.

''இன்பத்தை விரும்பாதவன், துன்பம் இயற்கையானது என்று தெளிவாக உணர்ந்தவன் எந்தத்துன்பம் வந்தாலும் கலங்கமாட்டான். எத்தனை பேர் அவருக்கு முன்னால் நடித்தவர்கள். ஒவ்வொருவரையும் அவர் நன்றாக அறிந்து வைத்திருக்கிறார். அவர் அப்படித் தம்மை அறிந்து வைத்திருக்கிறார் என்று பலரும் அறிந்திருப்பதில்லை. அவரை ஏமாற்றிவிட்டோமென்றே கருதுவார்கள். ஆனால் ஏமாறுவது அவர்கள் தான். ஒருநாள் ஒரு ஆசிரியையைப் பாடசாலைக்கு வரும்படி கூறினார். அவ்வாசிரியை தொலைபேசியில் தொடர்பு கொண்டு தான் அவசியமாகப் பட்டணத்திற்குச் செல்ல வேண்டுமென்று கூறினார். அவர் என்னை அழைத்து விடயத்தைச் சொல்லி ''எனக்கு அவ்வாசிரியையின் பேச்சில் நம்பிக்கையில்லை. வேண்டுமானால் நீங்கள் அவதானித்துப் பாருங்கள்'' என்றார். அவர் சொன்னது உண்மை. அவர்கள் பொய் சொல்கிறார்கள் என்று தெரிந்தும் அவர் அதைக் காட்டிக் கொள்ளவில்லை.'' என்றார் வேலாயுதபிள்ளை.

''இவையெல்லாவற்றையும் ஏன் சொல்கிறீர்கள். இது இப்போதுதேவைதானா?'' என்று கேட்டார் விக்னேஸ்வரமூர்த்தி.

''பலர் சேவை செய்யாமற் பலனை அடைய முயல்கிறார்கள். சிலர் தமது திறமையால் தான் பாடசாலை நல்லமுறையில் நடைபெறுவதாக நினைக்கிறார்கள். இவர்களுக்கெல்லாம் அதிபர் ஓய்வெடுத்தால், இல்லாவிட்டால் பதவியுயர்வு பெற்றுச் சென்றால் தான் தெரியும'' என்றார் தணிகாசலம்.

சுவாமியார் சிரித்தார் ''இன்று நாவலர் ஸ்ரீவித்தியா மகா கணபதி ஆலயத்தில் அதிபரின் நலன்வேண்டிப் பூசை செய்யுங்கள். அதிபர் தனது இன்பத்தை விரும்பாது, தனது குடும்பத்தின் மேன்மையை விரும்பாது துன்பம் இயற்கையானது என்று தெளிவாய் உணர்ந்தமையால் தான் நோய் வந்த போதும் கலங்காமலிருக்கிறார். தனது நோயைப் பற்றிப் பெரிதாக அலட்டிக் கொள்ளாது தனக்கு நோயில்லை என்று கூறுகிறார். எனினும் அதிபரின் மேல் அதிக அக்கறை உள்ள வைத்தியர் அவரை வைத்தியசாலையில் தங்கியிருக்குமாறு கூறுகிறார். அவரின் விருப்பப்படி அதிபர் ஒரு வாரகாலத்திற்கு இங்கு தங்கியிருக்கட்டும்'' என்றார் சுவாமியார்.

இதை எதிர்பாராத விக்னேஸ்வரமூர்த்தி அதிர்ச்சியுடன் கட்டிலில் எழுந்து அமர்ந்தார்.

**628. இன்பம் விழையான் இடும்பை இயல்புஎன்பான்**

**துன்பம் உறுதல் இலன்.**

இன்பமானவற்றை விரும்பாதவனாகவும், துன்பம் இயல்பானது என்று தெளிவாக உணர்ந்தவனாகவும் இருப்பவன் துன்பம் வந்த போது துன்பப்பட மாட்டான்.

## வருந்தாதவன்

''அதிபரை இப்பாடசாலையில் பதினாறாண்டுகள் கடமை புரிய வைத்தவர் மாகாணசபையில் பெரிய அதிகாரியாகக் கடமைபுரிந்த சிவநாதன் அவர்கள். அவர் தனது தேவை கருதி அதிபரை வேறு பாடசாலைக்கு இடமாற்றம் கொடுக்கக்கூடாதெனக் கட்டளையிட்டிருந்தார். அதனால் தான் தேடுவாரற்றிருந்த எங்கள் பாடசாலை பெரு முன்னேற்றங்கண்டது. அவர் இங்கு வரும்போது வேலியில்லை. கட்டிடங்களில்லை. தளபாடங்களில்லை. கணணி இல்லை, நீர்வசதியில்லை, விஞ்ஞானகூடமில்லை, விளையாட்டு மைதானமில்லை ஒன்றுமே இல்லை. அவர் தண்டனைக்குரிய குற்றவாளியாக பதினாறு ஆண்டுகள் இங்கிருந்தமையால் தான் யாவுங் கிடைத்தன. அத்துடன் கல்வியும் மேலோங்கியது. அதனால் இவரை மாற்ற வேண்டாமென்ற அதிகாரியின் மனச்சாட்சி விழித்துக் கொண்டது. இப்பொழுது அவர் காண்பவர்கள் எல்லோரிடமும் தான் இப்பாடசாலை அதிபரை மாற்றாமையால் தான் இப்பாடசாலை பெரும் வளர்ச்சி பெற்று மாவட்டத்திலேயே சிறந்த பாடசாலையானது என்கிறார். ஆனால் அதிபர் ''இப்பாடசாலையில் கடமை செய்யக் கடவுள் கிருபையளித்துள்ளமையால் என்னாலியன்றளவு சேவை செய்கிறேன். இதனால் இதன் நிறுவுனர் மகிழ்வார். அவர் இப்பாடசாலையில் உயிருடன் உலாவுவதாகவே நான் நினைக்கிறேன். அதை உணராத அதிகாரிகள் என்னை எவ்வளவு துன்பப்படுத்தினார்கள். எத்தனை முறை விசாரணை செய்தனர். பொய்யான குற்றச்சாட்டுக்களை விஷமிகள் கூறியபோதெல்லாம் எனக்கு விரோதமானவர்களுடன் கூட்டுச்சேர்ந்து என்னை வாட்டி வதைத்தனர். ஆனால் நான் வருந்தவில்லை. என்னுடன் கூட இருந்து எனக்கு நன்மைகள் செய்வது போல நடித்தவர்களுக்குத் தான் துன்பங்கள் அடுக்கடுக்காக வந்தன. அவர்களுக்கெல்லாம் உதவிகள் செய்தது நான் தான் என்பார்'' என்றார் தணிகாசலம்.

'' தமது தேவை கருதுவோர், தமது காரியம் முடிந்ததும் சம்பந்தப்பட்டவர்களை விலக்கி விடுவார்கள். எமது அயற்பாடசாலை அதிபர் அப்படியானவர். அடிக்கடி அவர் அதிபருக்கும் பாடசாலைக்கும் தொல்லைகளைக் கொடுத்துக் கொண்டே இருந்தார். ஆனால் அதிபருடன் நல்லுறவை வைத்திருப்பது

போல நடிப்பார். அவருடன் சேர்ந்து எமது பாடசாலை ஆசிரியர்கள் சிலர் பாடசாலைக்கும் அதிபருக்கும் துரோகஞ் செய்தனர். அவற்றையெல்லாம் அவர் கணக்கிலெடுப்பதே இல்லை. கடைசியாக அவர் தன்னுடன் சேர்ந்தவர்களைத்தான் பழி வாங்கினார். அவருடன் சேர்ந்து அதிபருக்கெதிராக நடவடிக்கைகள் பல மேற்கொண்ட அவ் ஆசிரியரின் மனைவியைத் தூர இடத்திலுள்ள ஒரு பாடசாலைக்கு இடம் மாற்றிவிட்டார். அதையும் எமது அதிபர் தான் இரத்துச் செய்து கொடுத்தார். அப்படி அவர் தனக்கு வரும் துன்பத்தைக் கணக்கில் எடுப்பதே இல்லை. இவருக்குத் துன்பஞ் செய்பவர்கள் தான் பிற்காலத்தில் வருந்துவதுண்டு. இன்பங்கள் வந்த காலத்திலும் அதை அவர் போற்றி மகிழ்ந்ததில்லை. அதனால் தான் அவர் துன்பம் வந்த காலத்திலும் கலங்குவதில்லை'' என்றார் வேலாயுதபிள்ளை.

''முன்பு அதிபராக இருந்தவை பாடசாலையில் பிள்ளைகள் குறைந்ததால் அதை மூடிவிட்டு அக்காணியைத் தமது உடைமையாக்கிவிடலாமென நினைத்தனர். அத்துடன் அவர்களது காலத்தில் மாட்டுக் கொட்டிலாக இருந்த பாடசாலை இப்போ மாடிக் கட்டிடமாக மாறிவிட்டது. அதுவும் பெறாமை தான். அதனால் தான் முன்னைய அதிபர் பலமுறை சென்று கல்விப் பணிப்பாளரைச் சந்தித்து பலமுறைப்பாடுகளைச் செய்தார். ஆனால் திறமையும், நேர்மையுமுடைய நல்லதொரு கல்விப்பணிப்பாளர் இப்பொழுது பணிபுரிவதால் அவரது தில்லு முல்லுகள் தான் வெளிப்பட்டன. கடவுள் நேர்மையாக நடப்பவனை அடிக்கடி சோதனைக்குள்ளாக்குவாரே தவிர தண்டிக்கமாட்டார். அதிபர் ஒரு போதும் பொய் சொல்ல மாட்டார். உண்மையை உள்ளபடி சொல்வார். அதனால் பலர் அதிபர் மீது கோபப்படுவதுண்டு. அவர் வேண்டுமென்று திட்டமிட்டுத் தம்மைக் கெடுக்கக் கூறுகிறார் என்று கூறுவதுண்டு ஆனால் காலப்போக்கில் உண்மையை உணர்வார்கள். அவர் அடுத்தவர்கள் கூறும் ஒவ்வொரு வார்த்தைகளையும் அவதானிப்பார். முகத்திலிருந்தும் அவர்கள் கூறும் வார்த்தைகளிலிருந்தும் அவர் யாவற்றையும் கண்டு பிடித்துவிடுவார். அதனால் தான் அடுத்தவர்களுக்குப் பிரச்சினைகள் எற்படுகின்றன. அவர் எதையும் மதிப்பதில்லை. எந்தச் செல்வத்தையும் துறப்பதற்கு எந்நேரமும் தயாராக இருப்பார். இப்படி ஒரு மனிதனை நாம் காண முடியாது'' என்றார் தணிகாசலம். அவரது கண்கள் கலங்கின.

வேலாயுதபிள்ளை சிரித்தார் ''அதிபருக்குப் பொழுது போகாது இரவுக்கு நான் அதிபருடன் வைத்தியசாலையில் தங்குகிறேன்'' என்றார் வேலாயுதபிள்ளை ''நானும் தங்குகிறேன்'' என்றார் தணிகாசலம்.

**629. இன்பத்துள் இன்பம் விழையாதான் துன்பத்துள்**
**துன்பம் உறுதல் இலன்.**

இன்பம் வந்த காலத்தில் அந்த இன்பத்தை விரும்பிப் போற்றி மகிழாதவன், துன்பம் வந்த காலத்தில் அதற்காக வருந்தித் துன்பப்பட மாட்டான்.

## பகைவர் போற்றும் உறவு

விக்னேஸ்வரமூர்த்தி கல்விப்பணிப்பாளராகப் பதவி உயர்வு பெற்றுள்ளார் என்ற செய்தி காட்டுத் தீயைப் போல ஊரெங்கும் பரவி விட்டது. அவர் அலுவலகத்தில் இருந்த போது உபஅதிபர் கனகலிங்கம் அங்கே வந்தார் ‘‘உங்களுக்குக் கல்விப்பணிப்பாளராகப் பதவியுயர்வு கிடைத்திருப்பதாக ஊரில் பேசிக்கொள்கிறார்கள். எனது வாழ்த்துக்கள்’’ என்றார். .

‘‘உண்மைதான். உமது வாழ்த்துக்கு நன்றி. நான் உம்மைத்தான் இப்பாடசாலையின் அதிபர் பதவிக்குச் சிபார்சு செய்துள்ளேன். உமக்கு அதிபர் தரம் இல்லையென்று அதிகாரிகள் பலர் கூறினார்கள். எந்தப் பதவிக்கும் அப்பதவிக்குரிய தகுதியைச் சோதனை மூலம் பெறவேண்டுமென்கிறார்கள். ஆளுமை என்பது பிறப்போடு சேர்ந்தது. அதைக் கல்வியாற் பெறமுடியாது. சோதனைகள் தகுதியை நிர்ணயிப்பதற்காக வைக்கப்படுகின்றன. அதில் சித்தியடைபவர்கள் அறிவுள்ளவர்களாக இருக்கலாம். ஆனால் ஆளுமையுள்ளவர்களாக இருக்கமுடியாது. அறிவு வேறு, நிர்வாகம் வேறு. சகலதையும் நூல் மூலம் அறிந்து கொண்டவன், அதைத் திறமையுடன் நிர்வாகத்தில் செயற்படுத்தக் கூடியவனாக இருத்தல் வேண்டும். இப்படி எத்தனை பேர் இருக்கின்றார்கள? மாவட்டத்தில் அறுநூறு அதிபர்கள் இருக்கிறார்கள். இவர்களெல்லாம் பாடசாலையைச் சிறந்தபடி நிர்வகித்தால் எல்லாப் பாடசாலைகளும் தரத்தில் ஒரே தன்மையாக இருக்கும். பல பாடசாலைகள் ஊனமுற்றவர்களைப் போலவே இயங்குகின்றன. ஒரு சில பாடசாலைகள் தான் அதிபர்களின் திறமையால் முன்னணியில் இருக்கின்றன. இப்பாடசாலை மிகப்பெரிய வளர்ச்சியை கண்டுள்ளது. இதைப்போலப் பிரபல்யமான பாடசாலை நகரிலும் மிகக்குறைவாகவே உள்ளது. அதனால் இப்பாடசாலைக்கு அதிபர் நியமனத்தில் பெரும் போட்டியுள்ளது. ஆனால் நான் உமது திறமைகளை எடுத்துக்கூறியதால் கல்விப்பணிப்பாளர் உம்மை நியமனஞ் செய்வதாக முடிவெடுத்துள்ளார். நான் உமது சேவையைக் கருதி ஐந்து வருடங்களுக்கு முன்பு உபஅதிபர் பதவி தந்த போது பலர் நீர் பொருத்தமில்லாதவர், இளமையானவர் என்று கூறி உமக்கு இப்பதவியைக் கொடுக்கக்கூடாதென்று கல்விப் பணிப்பாளருக்கு முறையீடு செய்தனர். அன்றைய கல்விப் பணிப்பாளர் அதை ஏற்றுக் கொண்டார். ஆனால் அதை நான் ஏற்றுக் கொள்ளவில்லை. நீர் தான் உபஅதிபர் என நினைத்தேன். இப்பொழுது நீர் அதிபராகிறீர். எனது விருப்பம் அது தான். நான் நினைத்ததைச் செய்பவன் எந்தவிதமான அச்சுறுத்தல்களுக்கும் அஞ்சாதவன்.அதனால் தான் நினைத்ததையே செய்துள்ளேன். இது எனது பாடசாலை. எனது உறவுகள் தான் இங்கு கல்வி கற்கின்றார்கள். அவர்களால் பட்டணப் பாடசாலைகளுக்கு அன்பளிப்பாகப் பல ஆயிரம் ரூபாக்களைக் கொடுக்க முடியாது.’’

“நீங்கள் விளையாட்டாகப் பலமுறை இப்படிக் கூறியுள்ளீர்கள். என்னால் நம்பமுடியாதுள்ளது. இந்தப் பெரிய பாடசாலையை அதிபர் தரமில்லாத எனக்குத் தருவார்களா...? நான் நம்பமாட்டேன்” என்றார் கனகலிங்கம்.

“நீர் நம்பவேண்டாம். இந்தாரும் நியமனக் கடிதம். பயப்படாதையும். உமக்கு எந்தக் கஷ்டமும் வர நான் விடமாட்டேன். நான் ஓய்வு பெற்ற பின்பும் இப் பாடசாலைக்காக எல்லாம் செய்வேன்” என்றார் விக்னேஸ்வரமூர்த்தி.

“நன்றி ஐயா. நான் இதை எதிர்பார்க்கவில்லை...” கண்கலங்கினார் கனகலிங்கம்.

“நீர் கடமையுணர்வுள்ளவர். சேவை மனப்பாங்குடையவர். ஆனால் சில விடயங்களில் சுயநலம் பார்ப்பீர். “தனக்கு வரும் துன்பங்களை இன்பமெனக் கருதி ஏற்று மகிழ்பவனுக்குப் பகைவரும் போற்றும் உயர்வு கிடைக்கும்” என்பார்கள். நான் அப்படித்தான் வாழ்ந்தேன். எனது பாடசாலை வாழ்வில் எத்தனை துன்பங்கள் வந்தன. அதிகாரிகள் எல்லோரும், இப்பாடசாலை ஆசிரியர்கள் பலரும் சேர்ந்து எனக்குச் செய்த தீமைகள் எவ்வளவென்று உமக்குத் தெரியும். அந்த நேரத்தில் நீரும் இன்னும் பலரும் உங்கள் சுயநல நோக்கிற்காக என்னுடன் இருக்கும் போது எனது பக்கமும் அதிகாரிகளின் பக்கம் இருக்கும் போது அதிகாரிகளின் பக்கமும் இருந்தீர்கள். விளையாட்டு மைதானக் காணிக்காரன் உமது உறவினன். அதனால் அவர்களது உறவு பாதிக்கப்பட்டுவிடுமென்று பயந்து நாடகமாடினீர். கோட்டக்கல்விப் பணிப்பாளருடன் நல்லுறவை வைத்துக்கொண்டு என்முன்னால் நடித்தீர். இப்படிப்பல. ஆனால் எனக்கு இன்பமும் துன்பமும் ஒன்று. உயர்வும் தாழ்வும் ஒன்று. இன்னும் மூன்று வருடங்களில் நான் ஓய்வெடுத்து விடுவேன். அதற்குமுன் பெரியதொரு பதவியில் இருக்கவேண்டுமென்ற ஆசை. அத்துடன் எனது இடத்தை நீர்அலயங்கரிக்க வேண்டும். என்ன தான் இருந்தாலும் உம்மில் எனக்குத் தனியான ஓர் அன்பிருக்கு் பாசமிருக்கு என்னுடன் எல்லா விடயங்களிலும் ஒத்துழைத்ததை நான் மறக்கமாட்டேன். இடம் பெயர்ந்து வந்த பின்பு எனக்காக எல்லாவறற்றையும் செய்தீர். நான் அசிரியர் கூட்டத்தில் சொல்லவேண்டியதெல்லாம் சொல்கிறேன். நீர் பயப்படாமல் பாடசாலையை நடத்தும். யாராவது நீதிக்குப் பிறம்பான முறையில் பாடசாலையில் நடக்க முயன்றால், அவர்களைத் தண்டிக்க நான் தயங்கமாட்டேன். நீர் கடமையை ஏரும். ஆசிரியரும் மக்களும் நீர் தான் அதிபர் என்பதை முதலில் நம்ப மாட்டார்கள். காலப்போக்கில் நம்புவார்கள்” என்றார் விக்னேஸ்வரமூர்த்தி.

“நீங்கள் கடிதம் தந்த பின்பும் என்னால் நம்பமுடியவில்லை. உங்களது விருப்பத்தை பூர்த்தி செய்வேன்” என்றார் கனகலிங்கம்.

“சொல்வது மிகச் சுலபம். செய்வது தான் சிரமம். நான் விருப்பு வெறுப்பில்லாதவன். பிரச்சினைகள் வந்தால் எனக்கு எல்லோரும் சரி” என்றார் விக்னேஸ்வரமூர்த்தி.

“அது எனக்குத் தெரியும்” என்றார் கனகலிங்கம்.

“அத்துடன் நீர் முன்மாதிரியாகவும் நடந்து கொள்ளல் வேண்டும். உமது இனத்தவர்கள் பலர் உம்மீது வெறுப்படைந்துள்ளனர். நான் இடமாற்றம் பெற்றுச் சென்றால் உம்மிடம் பாடசாலைப் பொறுப்பை ஒப்படைக்க வேண்டாமென்று கூறியுள்ளனர். ஒரு செயலைச் செய்யாவிட்டாலும் அடுத்தவர்கள் அச்செயலை நீர் செய்ததாக நினைத்தால் அது உண்மையாகிவிடும். பின் அதை மாற்ற முடியாது. எப்படிச் சொன்னாலும் உமக்குச் சில விடயங்களைப் புரிய வைக்க முடியாதுள்ளது. இனிமேலாவது புரிந்து அவதானமடாக நடந்து கொள்ளும். இங்குள்ள ஆசிரியர்களுடன் சேர்ந்து தகப்பனும் மகளும் எனக்கெதிராகப் பல குற்றச்சாட்டுக்களைச் சொல்லி என்னை விசாரனைக்குட்படுத்தினர். அவர்களுடன் நீர் குடும்ப நட்பு வைத்திருக்கிறீர். அதுவும் உமது நடிப்புத்தான். பாம்புக்குப் பால் வார்த்தாலும் ஒரு நாள்க் கடிக்கும் என்பார்கள். நீர் இன்னொரு அதிபரைச் சந்திக்க அவருடன் சென்றதாக அறிந்தேன். இங்கு ஏராளமான ஆசிரியர்கள் இருக்கின்றார்கள். அவர்களில் ஒருவருடன் சென்றிருக்கலாம். எல்லோருக்கும் நல்லவராக வாழமுடியாது. அது ஆபத்துக் காலத்தில் உமக்குப் புரியும்” என்றார் விக்னேஸ்வரமூர்த்தி.

**630. இன்னாமை இன்பம் எனக்கொளின் ஆகும்தன்**
**ஒன்னார் விழையும் சிறப்பு.**

ஒருவன் தனக்கு வரும் துன்பத்தை இன்பமாகக் கருதி மகிழ்வானேயானால், அவனுடைய பகைவரும் போற்றும் சிறப்பு அவனுக்கு உண்டாகும்.

## மூன்றும் உள்ளவன்

மாலை நேரம் கஜேந்திரன் எழுதிய அரச கதைகளை வாசித்துக் கொண்டிருந்தார் பரமேஸ்வரன். கஜேந்திரன் கணிதப்பிரிவில் பல்கலைக்கழகத்தில் கற்றாலும் நல்ல தமிழ் மொழியாற்றல் உடையவன். மிகவும் நுட்பமாக அவன் அரச கதைகளை எழுதியுள்ளமை பரமேஸ்வரனுக்கு மிகவும் பிடித்திருந்தது.

பாதாளச் சிறையில் அடைக்கப்பட்டிருந்த நந்திதேவன் பழைய சம்பவங்களை நினைத்துப் பார் “முதலமைச்சர் வெங்கடேசர் மிகவும் கூர்மையான புத்தியுள்ளவர். எதையும் நன்கு ஆராய்ந்த பின்னே கதைப்பார். அவர் சொல்பவை யாவும் நடைபெறும். ஆனால் நான் தான் அவற்றைக் கேளாமல் நடந்துவிட்டேன்” என்று நினைத்தான். அவன் கைது செய்யப்படுவதற்கு மூன்று தினங்களுக்கு முன்பு அவர் சொன்னது நினைவுக்கு வந்தது “அரசே! நாட்டின் நிலைமை மிகவும் மோசமான கட்டத்தை அடைந்துள்ளது. அதை அறியாமல் நீங்கள் இளையராணியுடன் கூடிக்களிப்பதிலீடுபட்டுள்ளீர்கள். அத்துடன் உங்களுக்குத் தெரியாமல் பல சம்பவங்கள் நடைபெறுகின்றன. ஏமநாதன் இப்போது மங்களபுரியில் இல்லை. அவன் பருத்தி மலைக்குச் சென்ற பின்பு திரும்பவில்லை. பருத்திமலை அரசனும்

முதலமைச்சரும் காரியங்களைக் கச்சிதமாய் முடிப்பதில் வல்லவர்கள். அதிலும் முதலமைச்சர் சிவபூரணன் மிகுந்த அறிவாளி. செயலுக்குள்ள கருவி, காலம், செய்யும் முறை ஆகிய மூன்றையும் அறிந்த சிறந்த அமைச்சர். அதனால் தான் பருத்திமலை அரசன் தொடர்ந்து வெற்றிகளைக் குவித்துக் கொண்டிருக்கிறான். பருத்தி மலையில் தானியங்கள் அளவுக்கதிகமாக விளைந்த போது அரசனான சுந்தரசேனன் விவசாயிகள் செய்கை பண்ணும் நிலத்தின் அளவைக் குறைக்கச் சொன்னான். ஆனால் சிவபூரணன் நிலத்தின் அளவைக் குறைப்பதிலும் பார்க்க விளையும் தானியங்களை ஏற்றுமதி செய்யலாமெனக் கூறி, வணிகர்களுக்கு விலையைக் குறைத்துக் கொடுக்கும்படி கூறினார். அத்துடன் கோதுமைப் பயிர் பருத்திமலையில் விளையாதென்று அதைப் பயிரிடுவதில்லை. நெல்லையே பயிரிடுகின்றார்கள். பருத்தி மலையில் திடல் நிலங்களில் பயறு, உழுந்து, தினை, சாமி, குரக்கன் போன்ற தானியங்களுக்குப் பதிலாக கோதுமையை விளைவிக்கும்படி கூறினார். அதை அரசன் அரை மனதுடன் ஏற்றான். ஆனால் எதிர்பார்த்ததைவிடக் கூடுதலான விளைச்சல் கிடைத்தது. அதுபோல நாமும் கோதுமையைப் பயிரிடலாம். அதற்கு நீர் அதிகம் தேவைப்படாது. அரசன் நீதியாக நடந்து மகாகணபதிக்கு அபிஷேகம் செய்தால் மழை பொழியும். முன்பு மழை பெய்யாத காலங்களில் நாம் மகா கணபதி கோயிலில் விரதமிருந்து பொங்கிப் படைத்து தீ மிதித்ததால் மழை பெய்தது. அப்படி ஒரு நம்பிக்கை மக்களின் மனதில் இருக்கின்றது. எனவே தயவு செய்து அதற்கான நடவடிக்கைகளைத் தாமதியாது எடுங்கள்'' என்றார்.

''அதை நான் கேட்டு அதன்படி நடந்திருக்கலாம். நான் மக்களை அளவுக்கதிகமாகத் துன்புறுத்திவிட்டேன்'' என்று நினைத்தான் நந்திதேவன். அவனுக்குத் துக்கமாக இருந்தது ''வெங்கடேசர் செயலுக்கேற்ற கருவிகளை அறிந்தவர் காலத்தை அறிந்தவர் செய்யும் முறைகளை அறிந்தவர் ஒரு சிறந்த அமைச்சருக்குரிய அத்தனை பண்புகளும் உடையவர், நான் தான் அவரைத் தவறாக நினைத்துவிட்டேன்'' என்று நினைத்தான்.

''அரசே! ஏமநாதன் நல்லவன். அவன் வணிகன். நாட்டைப் பிடிக்க விரும்பமாட்டான். அவனுக்கு நாட்டில் மக்கள் துன்பப்படுவது தான் பிடிக்கவில்லை. பருத்திமலை அரசன் சுந்தரசேனன் அனுப்பிய தானியங்களை நீங்கள் ஏற்றிருக்கலாம். அவனது கப்பல்களை நீங்கள் துறைமுகத்தினுள் வரஅனுமதிக்கவில்லை. அதனால் தான் அவனுக்குக் கடுஞ்சினம் உண்டானது. இப்போதும் காலஞ்சென்று விடவில்லை. இப்பொழுதும் நீங்கள் ஏமநாதனை அழைத்துப் பேசினால் ஒரு முடிவிற்கு வரலாம். சுந்தசேனனை நீங்கள் மதிப்பதில்லை. பிறநாட்டரசர்களுடன் சேர்ந்து கொண்டு தனக்கெதிரான செயல்களில் ஈடுபடுகிறீர்களென்று சுந்தசேனன் நினைக்கிறான். அதனால்தான் சுந்தரேசன் உங்கள் மீது வெறுப்படைந்திருக்கிறான். எனவே நீங்கள் ஏமநாதனை அழைத்து, கப்பல்கள் மூலம் தானியங்களை எமது நாடட்டிற்குக் கொண்டுவரும்படி கூறுங்கள். அதனால் சுந்தசேனன் மகிழ்வான். தனது செயலை மதித்ததாக நினைப்பான். தற்பொழுது போரிடக்கூடிய காலமல்ல. போர் வீரர்களும்

சிறப்பாகப் போர் செய்ய மாட்டார்கள்'' வெங்கடேசன் கூறிய வார்த்தைகள் நந்திதேவனது காதுகளில் கேட்டன.

''நான் பெருந்தவறு செய்'துவிட்டேன். வெங்கடேசர் கூறியதைப் போல ஏமநாதனை அழைத்துப் பேசியிருக்கலாம். நட்புப்பூணுவது போலப் பூண்டு போருக்கான ஆயத்தங்களைச் செய்திருக்கலாம். அப்படிச் செய்திருந்தால் இந்த நிலை வந்திராது'' என்று நினைத்தான் நந்திதேவன்.

**631. கருவியும் காலமும் செய்கையும் செய்யும்
அருவினையும் மாண்டது அமைச்சு.**

செயலுக்கு உரிய கருவி, ஏற்ற காலம், செய்யும் முறை ஆகியவற்றை நன்கு அறிந்து அரிய செயல்களைச் சிறப்பாகச் செய்ய வல்லவனே சிறந்த அமைச்சன் ஆவான்.

## ஐந்து தன்மைகள்

''கொள்ளை நோய்கள் ஏற்படும் போதும், இயற்கை அனர்த்தங்கள் உண்டாகும் பொழுதும் அவ்விடங்களுக்கு அரசன் அடிக்கடி சென்று துன்பங்களால் வாடுகின்ற மக்களின் துயரங்களைக் கேட்டறிந்து, அவர்களுக்குத் தன்னாலான உதவிகளைச் செய்தல் வேண்டும். உறவுள்ள அயல் நாட்டரசர்களின் துணையை இதற்காக நாடுதல் வேண்டும்.துன்பத்தால் மக்கள் வெயிலில் விழுந்தபுழுக்களாகத் துடிதுடிக்கும் போது, நீங்கள் அவற்றைக் கவனிக்காது உங்கள் சுகபோகங்களைக் கவனிப்பது முறையாகாது. துன்பத்தில் வாடும் மக்களுக்கு உதவி செய்வேரை மக்கள் தெய்வமாக மதிப்பார்கள். பெரிதாக உதவிகள் செய்யாவிட்டாலும் அவர்களிடம் சென்று ஆறுதல் வார்த்தைகளாவது கூறுங்கள் வரிகளை அகற்றுங்கள். மழை பெய்து மக்கள் பொருளாதார வளம் பெற்ற பின்பு வரிகளை வசூலியுங்கள். மக்கள் வாழ வழிதெரியாது அல்லற்படும் போது வரி வசூலிப்பது நியாயமானதல்ல. நிவாரணம் வழங்கப் போதுமான தானியங்கள் களஞ்சியத்தில் உள்ளன. அதைவிட ஏமநாதனின் மூன்று கப்பல்கள் தானியங்களுடன் துறைமுகத்திற்கு அப்பால் வந்துநிற்கின்றன. ஏமநாதனுடன் உங்களுக்கு ஏதாவது பிரச்சினைகள் இருக்கலாம். அதற்காக நீங்கள் மக்களை வருத்தக்கூடாது''. என்று வெங்கடேசர் அஞ்சாது சொன்னது அவனது நினைவுக்கு வந்தது.

''அமைச்சே! நீர் எனக்குக் கட்டுப்பட்டவர். உமது கதை ஏமநாதனின் பக்கம் இருப்பதாகவே நான் நினைக்கிறேன்.'' என்று சொன்னபோது வெங்கடேசர் அச்சமின்றித் தலைநிமிர்ந்து சொன்னார் ''மன்னா! நான் சொன்னவற்றைத் தாங்கள் சற்றுச் சிந்தித்துப் பார்த்தல் வேண்டும். மிஞ்சி மிஞ்சிப் போனால் நான் அஞ்சாமல் உண்மையைச் சொல்வதால் தாங்கள் என்னைச் சிறையிலடைப்பீர்கள். இல்லாவிட்டால்

சிரச்சேதம் செய்வீர்கள். நாள்தோறும் மக்கள் பலர் விலங்குகளைப் போல வீதியோரங்களில் விழுந்து சாகிறார்கள். மரணம் வருவது உறுதி. அது மக்களின் நலத்திற்காக வரட்டும்''. வெங்கடேசர் உரத்துக் கூறியது அவனது காதுகளில் ஒலித்தது.

அந்த நேரம் அவர் நடந்துகொண்ட முறைகளைப் பற்றிச் சற்றுச் சிந்தித்துப் பார்த்தான் நந்திதேவன்.

''அரசே! வெங்கடேசர் ஏமநாதனுக்காகவே கதைக்கிறார். அவன்தான் இவரைத்தூண்டி விட்டுள்ளான். அதனால்தான் முன்னெப்பொழுதும் இல்லாதவாறு துணிவுடனும், ஆணவத்துடனும் வெங்கடேசர் கதைக்கிறார். அவரைச் சிறையில் அடையுங்கள்'' என்று கடம்பனார் கூறினார்.

''வெங்கடேசரே! வார்த்தைகளை அளந்து பேசும். அத்துடன் நீர் யாருடன் பேசுகிறீர் என்பதை நினைவில் வைத்துக் கொள்ளும்''. தான் ஆணவத்துடன் கூறியது அவனது நினைவுக்கு வந்தது.

''அரசே! சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி தமக்கு நன்மையைத் தேட முயலும் கபடதாரிகளை நம்பாதீர்கள். நான் தங்களது தந்தையாரின் காலத்தில் அமைச்சராக் கடமை புரிந்தவன். எமது பரம்பரையினர் உயர்குடியில் பிறந்தவர்கள். அதனால் அரசனுக்கு எப்பொழுதும் விசுவாசமாகவே இருந்து வந்தவர்கள். அதை வரலாறு சொல்லும். அத்துடன் நன்கு கற்றவர்கள். நல்ல பல அறிவுசார் நூல்களைக் கற்றமையால் முக்காலத்திலும் நடைபெறுவனவற்றை உணர்ந்தவர்கள். அதன்மூலம் அரசன் தவறிழைக்கும் போதெல்லாம் அவனுக்கு உண்மை நிலையை எடுத்துக்கூறி அவனைப் பாதுகாக்கும் தன்மை வாய்ந்தவர்கள். அத்துடன் நீங்கள் நான் உண்மையான நிலைபற்றிக் கூறும்போதெல்லாம் என்னை அலட்சியம் செய்தபோதும் சோர்வடையாது மீண்டும் மீண்டும் இடித்துக்கூறுகிறேன். இதனால் துக்கப்படப் போவது நீங்கள்தான்''. என்று வெங்கடேசர் கூறியது அவனது காதில் ஒலித்தது.

அவன் அரசானகப் பதவியேற்கும் போது அவனது தந்தை கூறினார் ''மகனே! வெங்கடேசர் எதற்கும் அஞ்சாதவர் யாருக்கும் பயப்படாதவர் உயர்ந்த குடியில் பிறந்தவர் அதனால் நல்லொழுக்கம் மிக்கவர். தனது உயிரைக்கொடுத்து அரசைப் பாதுகாக்ககக்கூடியவர் எந்தவேளையிலும் நாணயம் தவறாதவர் கற்றுணர்ந்த அறிவாளி முக்காலமும் உணர்ந்த ஞானி பேராசான் அத்துடன் தான் ஆராய்ந்து முடிவெடுத்தவற்றை செயற்படுத்துவதில் சோர்வற்ற முயற்சியுடையவர். எனவே எக்காரணம் கொண்டும் அவரது ஆலோசனைகளைப் புறக்கணிக்காதே. நன்கு ஆராயாமல் அவருடன் கதைத்து அவரின் மனதை நோகப்பண்ணாதே. அரசன் மேல் விசுவாசமான அமைச்சரைச் சந்தேகிப்பது தற்கொலை செய்து கொள்வதற்குச் சமனாகும்''. என்று அவனது தந்தையார் கூறியது. அவனது காதில் இடியோசை போல் ஒலித்தது.

பெருமூச்சு விட்டான் நந்திதேவன் ''அப்பா சொன்னதுபோல வெங்கடேசர் அமைச்சருக்குரிய ஐந்து தன்மைகளையும் பூரணமாகக் கொண்டவர். நான்தான்

அவரைப் புரிந்து கொள்ளாது அவமதித்து விட்டேன். அதனால்தான் அவர் எனக்குச் சொல்லாமல் மறைந்து விட்டார். நல்ல வேளை அவர் மறைந்தது. இல்லாவிட்டால் நான் அந்த நேரம் இருந்த நிலையில் அவரைக் கொன்றிருப்பேன்'' என்று நினைத்தான் நந்திதேவன்.

**632. வன்கண் குடிகாத்தல் கற்றறிதல் ஆள்வினையோடு**
**ஐந்துடன் மாண்டது அமைச்சு.**

அஞ்சாமை ,உயர்குடிப்பிறப்பு ,காக்கும் திறன் ,கற்றறிந்த அறிவு, முயற்சி ஆகிய ஐந்து தன்மைகளையும் முழுமையாகப் பெற்றவனே அமைச்சன்.

## வல்லவன்.

அன்று மிகவும் அவசரமாக நந்திதேவனைச் சந்திக்க வேண்டுமென்று அந்தப்புரத்திற்குப் பலமுறை வெங்கடேசர் வந்தபோதும், காவலர்கள் அவரை உள்ளே விடவில்லை. அதனால் வெங்கடேசர் அந்தப்புரத்தில் பிரமுகர்களை அவசரமாகச் சந்திக்கும் மண்டபத்துள் காலையிலிருந்து அரசரைச் சந்திப்பதற்காகக் காத்திருந்தார். அங்கு காவலில் இருந்த வீரர்கள் 'அரசனை இன்று சந்திக்க முடியாதென்று' பலமுறை கூறியும் அவர் கேட்கவில்லை. அதனால் வேறுவழியின்றி நந்திதேவன் வெங்கடேசரைச் சந்திக்க வந்தான். வெங்கடேசர் எழுந்து மரியாதையுடன் அவனை வரவேற்ற காட்சி நந்திதேவனது மனதில் வலம் வந்தது.

வெங்கடேசர் வெகுநேரமாக அரசனைப் பார்த்துக் கொண்டு இருந்தாரே தவிர எதுவும் பேசவில்லை. அதனால் நந்திதேவன் கேட்டான். ''அமைச்சரே! காலையில் பல முறை என்னைச் சந்திக்க முயன்றீர்கள். அதன்பின் என்னைச் சந்திக்காது செல்வதில்லை என்ற முடிவுடன் காலையில் இருந்து காத்துக் கொண்டிருக்கின்றீர்கள். ஆனால் இப்பொழுது பேசாமல் இருக்கின்றீர்கள்'' என்றான்.

வெங்கடேசர் சிரித்தார் ''மன்னா! எனது தொழில் என்ன...?'' என்று கேட்டுவிட்டு நிறுத்தினார். அவரது கேள்வியால் நந்திதேவன் சற்றுத்தடுமாறினான். அவனால் பதில் கூறமுடியவில்லை.

அதனால் சில நிமிடங்கள் பொறுத்துச் சொன்னார் ''சிறந்த ஓர் அமைச்சன் பகைவருக்குத் துணைபுரிவோரைப் பிரித்தல் வேண்டும். அதற்காகத்தான் ஏமநாதன் செய்யக்கூடாத தீமைகளைச் செய்திருந்தாலும், அவன் எமது பகையரசனுடன் சேர்ந்திருக்கிறான். அவனை அவனுடன் சேர்ந்திருக்கவிடக்கூடாது. அத்துடன் ஏமநாதன் நாட்டுக்கு விரோதமான செயல்கள் எதையும் செய்யவில்லையே. நீங்கள் பருத்திமலை அரசனைப் பகைவனாக நினைக்கின்றீர்கள். அவனும் எம்முடன் பகைமை காட்டவில்லை. ஆனால் இப்பொழுது உங்களைப் பகைவனாக நினைத்து ஏமநாதனுக்கு உதவிகள் பல செய்கிறான். எனவே ஏமநாதனுடன் நாம் நட்புக் கொள்வதன் மூலம் அவனைப் பருத்திமலை அரசனிடமிருந்து பிரித்துவிடலாம். அத்துடன் நட்புள்ளவர்களை நாம் பிரிய விடாது காத்துக்கொள்ளல் வேண்டும். சிவபுரி

அரசன் நேற்றுப் பருத்தி மலை அரசனைச் சென்று சந்தித்துக் கலந்துரையாடியுள்ளான். முன்பு இருவரும் பகைவர்கள் இல்லாவிட்டாலும் நண்பர்களல்லர். இருவரும் சந்தித்தது எனக்குக் கவலையை அளிக்கிறது. ஏதோ ஒரு விபரீதம் நடக்கப்போகிறது என்று எமது மனம் கூறுகிறது. எனவே சிவபுரிக்கு எமது தூதுவர்களை அனுப்பி உறவாடுவது போல உண்மை நிலையை அறிந்து அவது நட்பில் களங்கம் ஏற்பட்டிருந்தால் அதை நிவர்த்தி செய்தல் வேண்டும். நாடு அசாதாரணமான ஒரு நிலையில் இருக்கும் போது நாம் அவதானமாக இருப்பது நல்லது'' என்றார் வெங்கடேசர்.

''உமக்கு வயது சென்றுவிட்டது. அதனால்தான் காரணமின்றிக் கலங்குகின்றீர். தேவையில்லாமல் பயபப்டுகிறீர்கள். நீரும் குழம்பி, என்னையும் குழப்புகிறீர்கள். பேசாமல் சென்று நிம்மதியாய் தூங்குங்கள். நீங்கள் நினைப்பதைப் போல எதுவும் நடக்காது. ஒற்றர்கள் நான்கு திசைகளிலிருந்தும் கொண்டு வந்த செய்திகள் பயப்படுவதற்குக் காரணமில்லையென்று அறிவிக்கின்றன. சிவபுரியில் நோய்த்தாக்கத்தினால் பயிர்கள் போதிய விளைச்சலைக் கொடுக்கவில்லை. அதனால் சிவபுரிமன்னன் நட்புறவுடன் செல்வது போலச் சென்று இருக்கிறாரே தவிர வேறு எதுவுமில்லை. அப்படிச் செல்வது போலச் சென்று நிலைமையையும் ஆராயலாம் அல்லவா,''

வெங்கடேசர் எதுவும் பேசவில்லை ''அளவுக்கதிகமான கற்பனையில் நீர் ஈடுபடுகிறீர். கவலைப்படாமல் இரும். யாவும் நல்லபடியாக நடக்கும்.''

''சரிமன்னா! நான் சொல்லவேண்டியவற்றைச் சொல்லி விட்டேன். ஓர் அமைச்சருக்குரிய கடமைகளைத்தான் நான் செய்தேன். ஓர் சிறந்த அமைச்சன் பகைவர்களுக்குத் துணையாக இருப்பவர்களைப் பிரித்தலும், தம்முடன் நட்புறவுள்ளவர்களைக் காத்தலும், ஏதாவது சிறுசிறு பகைகளினால் பிரிந்தவரைச் சேர்த்துக் கொள்வதிலும் வல்லவனாக இருத்தல் வேண்டும். அதைத்தான் நான் செய்தேன். உங்களது ஒற்றர்கள் நீங்கள் சொல்வதைக் கேட்கமாட்டீர்கள் என்பதால் உங்களுக்கு ஏற்றபடி சொல்கிறார்கள். ஒற்றர்கள் எதைச் சொன்னாலும் பொறுமையுடன் கேட்டு அதை ஆராய்ந்து இன்னும் பல ஒற்றர்களை அனுப்பி அவர்களது செய்திகளையும் ஒப்பிட்டுக் கேட்டு முடிவெடுப்பதுதான் சிறந்த அரசனுக்கு அழகு. ஆனால் நீங்கள் செய்தி கொண்டு வரும் ஒற்றர்களுக்குச் செய்திகள் சொல்கிறீர்கள். இது விபரீதத்தில்தான் முடியும். அதனால் சற்றுச் சிந்தித்துப் பாருங்கள்'' என்று கூறிவிட்டுச் சென்றார் வெங்கடேசர்.

நந்திதேவன் பெருமூச்சுவிட்டான் ''வெங்கடேசர் உண்மையானவர் அவர் சொல்லுபவை யாவும் சரியானவை. நான் தான் நயவஞ்சகர்களை நம்பி ஏமாந்துவிட்டேன். இனிஎன்ன செய்ய முடியும்? இந்த இருட்டறையில் காலங்கழிக்க வேண்டியது தான்'' என்று கவலைப்பட்டான் நந்திதேவன்.

**633. பிரித்தலும் பேணிக் கொளலும் பிரிந்தார்ப்**
**பொருத்தலும் வல்லது அமைச்சு.**

பகைவனுக்கு உற்ற துணையாக இப்போரைப் பிரித்தலும், தனக்குத் துணையாக இருப்போரை காத்தலும், பிரிந்தவரை மீண்டும் சேர்த்துக் கொள்ளுதலிலும் வல்லமை மிக்கவனே அமைச்சன்.

## செயலில் வல்லவன்.

“கடம்பனாரையும் கதிர்வேலவனையும் நம்பியது எவ்வளவு தவறு. அவர்கள் இருவரும் தமது நன்மைக்காக வெங்கடேசரைப் பற்றித் தவறாகவே எப்பொழுதும் சொல்லிக்கொண்டிருந்தனர். அவர்கள் சொன்னதில் பிழையில்லை. நான் அவர்களை நம்பியதுதான் பிழை. எனது தந்தையார், எனக்கு முடிசூட்ட முன் எவ்வளவு புத்திமதிகள் கூறினார். அவற்றிலொன்றையாவது நான் கைக்கொண்டிருந்தால் இன்று இந்த நிலைக்கு ஆட்பட்டிருக்க மாட்டேன்'' என்று நினைத்து விம்மி விம்மி அழுதான் நந்திதேவன். அவனுக்குத் தந்தையார் கூறியது நினைவுக்கு வந்தது.

''மகனே! அரசனானவன் எவனையும் நம்பக்கூடாது. ஆனால் அவர்கள் நம்பிவிட்டதைப் போல நடித்தல் வேண்டும். வெங்கடேசர் எதையும் அடிக்கடி சொல்ல மாட்டார். அனாவசியமானவற்றையும் சொல்லமாட்டார். அவர் அடிக்கடி ஒன்றைப் பற்றித் திரும்பத்திரும்பச் சொல்வாரேயானால் அதில் ஆயிரம் அர்த்தங்கள் இருக்கும். அவர் நம்பிக்கை மிகுந்தவர். பரம்பரை பரம்பரையாக அவர்களது குடும்பம் அரசிற்கு விசுவாசமாக நடந்துவருகிறது. எனவே அவர்கூறுவதை எந்த வேளையிலும் அலட்சியம் செய்யாதே. அவர் நேர்மையானவர் உண்மையானவர் அதனால் நீ கேளாவிட்டால் அச்சமின்றி இடித்துரைப்பார். கோபம் கொள்வார். ஆனால் அதில் களங்கமிருக்காது. கெடுக்க வேண்டும் என்ற எண்ணம் இருக்காது. அரசன் ஆபத்துக்குள்ளாகப் போகிறானே என்ற துடிப்பிருக்கும் அக்கறையிருக்கும். எமது அவையில் ஒரு புலவர் இருந்தார். அவர் எனக்கு மிகவும் விசுவாவமுள்ளவரைப் போலக் காட்டிக்கொள்வார் என்னைப் புகழ்வார் மரியாதையுடன் பழகுவார். இதனால் அவருடன் நான் நட்புப்பூண்டேன். அந்த நட்பு நாளடைவில் நெருக்கமானது. ஆரம்பத்தில் அதைக் கவனித்த வெங்கடேசர் ''அரசே புலவருடன் அளவுக்கதிகமாகப் பழகுகிறீர்கள் அளவுக்கதிகமாகக் கதைத்து விடாதீர்கள்'' என்றார். பின்பு ஒரு நாள் ''அரசே! அரண்மனை விடயங்கள், அதுவும் தங்களைப் பற்றிய விடயங்கள் என்னைவிட மக்களுக்குத் தெரிந்துவிடுகின்றன. அவதானமாக இருங்கள்'' என்றார் மேலும் சில நாட்கள் சென்ற பின்னர் ''அரசசே! எனக்குப் புலவர் மீது பலகாலமாக சந்தேகமிருந்தது. அதை நான் உங்களுக்கு அடிக்கடி கூறிவந்தேன். நீங்கள் அசட்டையாக இருக்கின்றீர்கள். ஆனால் இன்று புலவர் காணாமற் போய்விட்டார். ஒரு வாரத்தின் பின் வருவார்'' என்று கூறிவிட்டுச் சென்றுவிட்டார். ஒருவார காலமாக புலவரை நான் சந்திக்கவில்லை. ஒருவாரம் சென்றபின் வெங்கடேசர் புலவருக்கு

விலங்கிட்டு அழைத்து வந்தார். நான் விசாரிக்குமுன் சொன்னார் ''மன்னா, புலவர் மகதநாட்டு ஒற்றன். அவர் அரண்மனையில் இருந்து கொண்டு இங்கு நடைபெறுவதை அவதானிக்கத் தொடங்கினார். அதனால் நான் அவருக்குத் தெரியாது ஒற்றர்களை நியமித்தேன். அவர்கள் கூறும் தகவல்களைத்தான் உங்களுக்கு நான் அடிக்கடி கூறினேன். எனக்குச் சந்தேகம் இருந்தாலும் நீங்கள் அன்பு செலுத்தும் ஒருவரை நான் சந்தேகிப்பதாகச் சொன்னால் நீங்கள் என்னைப் பற்றித் தவறாக நினைத்துச் சந்தேகப்படுவீர்கள். அத்துடன் அவர் கூறுவதை சரியென்றும் ஏற்பீர்கள். சில வேளைகளில் அவர் சொல்வதையும் நம்பிவிடுவீர்கள். ஏனெனில் புலவர் உங்களது தம்பியாருடைய மனைவியின் இரத்த உறவினன். ஆனால் அவர்களுக்குப் புலவர் மீது நம்பிக்கை உள்ளது. அப்படியிருக்கும் போது நான் இவற்றை எப்படிச் சொல்வது. மதிநுட்பம் படைத்த நீங்கள் எனது பேச்சின் அர்த்தத்தைப் புரிந்து கொள்வீர்கள் என்று நினைத்தேன். இரண்டும் நடைபெறவில்லை. அதனால் கவலைப்பட்டேன். தகுந்த நேரம் வரும்போது ஆதாரங்களுடன் சொல்லலாமெனக் காத்திருந்தேன். இன்று தான் சந்தர்ப்பம் வந்தது'' என்றார். ஆகையால் அரசனானவன் யாரையும் நம்பக்கூடாது. நன்கு ஆராய்ந்த பின்பே நம்புதல் வேண்டும். அவர் தனக்கேற்பட்ட சந்தேகத்தை ஆராய்ந்து அறிந்து தெளிந்த பின்பே செயற்பட்டார். அத்துடன் துணிவு மிகுந்தவர்''

''வெங்கடேசரைப் பற்றி எனது தந்தை கூறியது போல நான் கடம்பனாரையும் கதிர்வேலனையும் நம்பி ஏமாந்து விட்டேன். எவ்வளவு சாதூரியமாக அவர்கள் நடந்தார்கள்'' என்று எண்ணினான் நந்திதேவன். அப்பொழுது வீரனொருவன் நந்திதேவனுக்கு மதிய உணவு கொண்டு வந்து கொடுத்தான். ஏமநாதன் அவனைச் சிறையில் அடைத்த போதும், அவனது நலங்களை அக்கறையுடன் கவனித்து வந்தான். தினமும் அவனுக்குச் சுவையான உணவு வகைகள் அனுப்பப்பட்டன.

நந்திதேவன் தனக்கு அனுப்பப்பட்ட உணவைப் பார்த்தான். அரண்மனையில் உண்ட உணவு வகைகளை விட மிகவும் கீழ்த்தரமான உணவு அது. அதைப் பார்க்க அவனுக்கு அருவருப்பாக இருந்தது.

''வெங்கடேசனின் சொல்லைக் கேளாததால் வந்த வினை'' என்று நினைத்துக் கவலைப்பட்டான் நந்திதேவன்.

**634. தெரிதலும் தேர்ந்து செயலும் ஒருதலையாச்**
**சொல்லலும் வல்லது அமைச்சு.**

செய்யத் தக்க செயல்களை ஆராய்தலும், அதற்குரிய வழிவகைகளை ஆராய்ந்து செய்தலும், துணிவாகக் கருத்தை ஆராய்ந்து சொல்வதிலும் வல்லவனே அமைச்சன்.

## முதல்தரமான துணைவன்

“மகனே மக்களைப் போலவே மன்னவனும் இருத்தல் வேண்டும். எந்நாளும் அரசன் அறத்தைப் பேணவேண்டும். அறிவு நிறைந்தவனாக இருத்தல் வேண்டும். செயற்திறன் நிறைந்தவனாகவும் இருத்தல் வேண்டும். குடிமகன் ஒருவன் இல்வாழ்வுக்குரிய அறங்களை எப்படிப் பேணி வாழ்கின்றானோ, அதேபோல அரசனும் அறநெறிகளைப் பேணி வாழ்தல் வேண்டும். உனக்குக் கணேசபுர மன்னனின் மகளைத் திருமணஞ் செய்து வைக்கிறேன். நீ அவளைச் சிவசுந்தர முனிவரின் ஆச்சிரமத்தில் கண்டு மோகமுற்றாய். ஒருவன் விரும்பியதை அடைதல் தான் பேரின்பம். அதற்கமைய நான் நீ விரும்பியவளைத் திருமணஞ் செய்து வைக்கிறேன். ஒருவனுக்கு ஒருத்தி என்று வாழ்வது தான் அறம். இராமன் ஏகபத்தினி விரதனாக இருந்து நாட்டை ஆண்டான். அதே போல அரசர்கள் எல்லோரும் இருத்தல் வேண்டும் என்பதே எனது விருப்பம். பெண்களை ரசிப்பதும் ஒழுக்கக் கேடுதான். பதவி, அந்தஸ்து, பணம் என்பவற்றுக்குப் பெண்கள் ஆசைப்பட்டு ஒழுக்கம் தவறுவார்கள். ஒரு பெண் தனது வெட்கத்தை விட்டு ஆடவனொருவனோடு கலகலப்பாகப் பழகுகிறாள் என்றால் அவள் எதையோ நினைத்துத் தான் பழகுகிறாள் என்று கொள்ளல் வேண்டும். அவர்களை அன்புடன் அனுசரிக் கவேண்டுமே தவிர இச்சைப்படக்கூடாது. நீ மணமானவன் என்று தெரிந்தும் இச்சைப்படும் ஒருபெண் விபச்சாரியாகவே இருப்பாள். அவள் தனது நலனுக்காக எதையும் செய்யத் தயங்க மாட்டாள். அவளுக்கு வெட்கம், ரோசம், மானம், எதுவும் இராது. தனது காரியத்திலேயே கண்ணாக இருப்பாள். எனவே நீ பெண்களுடன் பழகும் போது அவதானமாக இரு” என்று நந்திதேவனது தந்தை கூறிய வார்த்தைகள் இடியாக அவனது காதுகளில் ஒலித்தன.

“அரசே ! பட்டத்தரசியை விட்டுவிட்டுத் தாங்கள் இளைய ராணி மீது மோககங் கொண்டு அவளே கதியென்று இருக்கிறீர்கள். இது ஆபத்தில் தான் முடியும். நான் அறத்தை நன்கு அறிந்தவன். அரசனானாலும் மனைவிக்குத் துரோகஞ்செய்பவர்களை என்னால் பொறுத்துக் கொள்ள முடியவில்லை. பட்டத்தரசியை நீங்கள் விரும்பித்தான் திருமணஞ்செய்தீர்கள். அப்படியிருக்க இன்னொருத்தியை ஏன் விரும்புகிறீர்கள்? அவளுடன் நீங்கள் எந்நேரமும் இருப்பதால் நாட்டைக் கவனிப்பதில்லை. பட்டத்தரசியானால் உங்களை நாட்டைக் கவனியாது தன்னுடன் இருக்கும்படி சொல்லமாட்டார் . ஏனென்றால் நாட்டு மக்கள் மகிழ்ச்சியுடன் இருந்தால் தான் மன்னன் மகிழ்வுடன் இருப்பான். அதனால் மன்னனை நாட்டின் மீது அக்கறை கொள்ளும்படி செய்வார்கள். எனவே இளையராணி மீது அளவுக்கதிகமான மோகங்கொள்ளாதீர்கள். பெண்களிற் சிலர் தமது காரியங்களைச் செய்வதற்காக எதையுஞ் செய்வார்கள். அப்படிச் செய்வதன் மூலம் தமது காரியங்களைச் சாதித்தும் விடுவார்கள். தாங்கள் இப்பொழுது இளையராணிக்கு அடிமையாகிவிட்டீர்கள். இது ஆபத்தில் தான் முடியும்” வெங்கடேசர் சொன்னது அவனது காதுகளில் ஒலித்தது.

“நான் வெங்கடேசரது சொற்களைக்கேட்டிருக்கலாம் இளையராணி மீது மோகங்கொண்டு அவளின் அடிமையாக செயற்பட்டமையால் தான் இன்று நாட்டை இழந்து நிர்க்கதிக்குள்ளாகியிருக்கிறேன்” என்று நினைத்தான் நந்திதேவன்.

ஒரு முறை ஆபரண வியாபாரிகள் அரண்மனைக்கு வந்தனா். நந்திதேவன் அவா்களை அந்தப் புரத்திற்கு அழைத்துச் சென்றான். இளையராணி அவா்கள் கொண்டு வந்த ஆபரணங்கள் முழுவதையும் வாங்கினாள். அதுவும் வணிகா்கள் சொன்ன விலைக்கே வாங்கினாள். அது வெங்கடேசருக்குப் பிடிக்கவில்லை. அதனால் அரசனை அவா் தனிமையில் சந்தித்த போது சொன்னாா் ‘‘அரசே, நான் சொல்ல வேண்டியதைச் சொல்லத்தான் வேண்டும். நாடு இப்பொழுதுள்ள நிலையில் தாங்கள் இளையராணிக்கு இவ்வளவு ஆபரணங்களை வேண்ட வேண்டுமா...? இதற்கான பணத்தில் மக்களுக்குத் தேவையான உணவுப் பொருட்களை இறக்குமதி செய்யலாம். நீங்கள் ஆபரணம் தேவையென்றால், நமது நாட்டிலுள்ள பொற்கொல்லா்களைக் கொண்டு செய்வித்திருகக்கலாம். அதனால் அவா்களுக்கு வருமானம் கிடைக்கும். நீங்கள் கொள்வனவு செய்த ஆபரணங்கள் சிறந்தவை என்று சொல்வதற்கில்லை. அவ்வாபரணங்களிலும் பாா்க்கச் சிறந்த ஆபரணங்களை எமது நாட்டுப் பொற்கொல்லா்கள் செய்வாா்கள்’

‘‘நான், அறத்தை நன்கறிந்தவராகவும், அறிவு நிறைந்த சொற்களைக் கூறுபவராகவும், எக்காலத்திலும் செயற்றிறன் நிறைந்தவராகவும் விளங்கிய வெங்கடேசரின் முதற் தரமான துணையை இழந்தது தான் எனது வீழ்ச்சிக்குக் காரணம். நான் இளையராணி மீது கொண்ட மோகத்தின் விளைவாக நாட்டு மக்களின் நலன்களைக் கவனிக்கத்தவறி விட்டேன்’’ என்று கவலைப்பட்டான் நந்திதேவன்.

**635. அறன் அறிந்து ஆன்று அமைந்த சொல்லான்எஞ் ஞான்றும்**
**திறன் அறிந்தான் தோ்சித் துணை.**

அறத்தை அறிந்தவனாகவும், அறிவு நிறைந்த சொற்களைக் கூறுபவனாகவும், எக் காலத்திலும் செயல் செய்யும் திறன் அறிந்தவனாகவும் விளங்குபவனே அரசனுக்குச் சிறந்த துணையாவான்.

## நுட்பமானவை இல்லை

‘‘அரசே! மதிநுட்பத்தினால் சாதிக்க முடியாத செயல் எதுவும் இல்லை. தலைவன் என்பவன் தனது தலையை முதலில் பலி கொடுக்கக்கூடியவனாக இருத்தல் வேண்டும். நாட்டின் நன்மைகக்காகத்தன் உயிரையும் அா்ப்பணிக்கக்கூடியவனாக இருத்தல் வேண்டும். அவன் தான் அரசன். மக்கள் துன்பப்படுகிறாா்கள் என்பதற்காக உன் முன்னோா்பட்ட கஷ்டங்களைச் சொல்லி முடிக்க முடியது. மக்கள் துன்பப்படும் வேளையில் அரசன் சமூகத்திலிருந்து விலகி நின்று வாழக்கூடாது. அவன் மக்களோடு மக்களாக நின்று அவா்கள்படும் துன்பத்தைத்தானும்பட வேண்டும். உணவுக் களஞ்சியங்களில் உள்ள தானியங்களை வெளியே கொண்டு வந்து மக்களுக்குப் பகிா்ந்து கொடுத்தல் வேண்டும். அத்துடன் மற்ற நாடுகள் கொடுப்பதையும் பெறத் தயாராக இருத்தல் வேண்டும். இது அரசனுக்குரிய கடமை. மக்களை அரவணைத்து

நடப்பது தான் அரச வாழ்வு. அவர்களை வெறுத்தொதுக்குவது மரணத்திற்கு ஒப்பானது. எப்பொழுது மக்களைக் கவனிக்காது அரசன் தனது சுக போகங்களைக் கருத்திற் கொண்டு வாழ ஆசைப்படுகிறானோ, அன்று முதல் அவன் மரணிக்கத் தொடங்குகிறான். மக்களின் நலனைக் கவனியுங்கள் மன்னா, இல்லாவிட்டால் உங்களது அழிவைத் தடுத்து நிறுத்த முடியாது. இயல்பாகவே நீ அறிவுள்ளவன். பல நூல்களைக் கற்றுத் தேர்ந்த உயர்வான அறிவும் உள்ளவன். அப்படியான உன்னால் தீர்க்க முடியாத சூட்சுமமான செயல்கள் எவையும் இல்லை. அலை பாயும் மனதை அடக்கி ஒரு கணம் சிந்தித்துப்பார். அரசன் என்பவன் தனக்காக வாழ்பவன் அல்லன். அவன் மக்களுக்காக வாழ்பவன். உனது தந்தையார் ஒருமுறை நாட்டில் பருவ மழை பெய்யாமையால் நாடு பஞ்சப்பட்டது. விளைநிலங்களெல்லாம் வெடித்துச் சிதறியிருந்தன. நீர் நிலைகள் யாவும் வற்றிவிட்டமையால் காட்டு மிருகங்களும் பாம்பு பூச்சிகளும் நாட்டுக்குள் படையெடுத்து வந்தன.. அதனால் பஞ்சத்தை விட அவற்றின் கொடுமையைத் தாங்க முடியாது மக்கள் அல்லற்பட்டனர். அதனால் மன்னர் நாவலர் ஸ்ரீவித்தியா மகா கணபதி ஆலயத்தில் முப்பத்தொரு நாட்கள் உபவாசமிருந்தார். அவர் உண்ணவில்லை உறங்கவில்லை யாருடனும் பேசவில்லை நீர் கூடப்பருக வில்லை. மக்களும் ஆயிரக்கணகக்கில் வந்து மன்னருடன் ஆலய வாசலில் அமர்ந்துவிட்டனர்.

‘‘மக்களைக் காப்பாற்ற முடியாத மன்னன் வாழ்வதில் அர்த்தமில்லை. அவர்கள்படும் துன்பத்தைக் காண என்னால் முடியவில்லை. நானும் மக்களோடு பட்டினி கிடந்து சாகப்போகிறேன். மகாகணபதி விரும்பினால் மழையைப் பொழிவிக்கட்டும். இல்லாவிட்டால் நான் இறக்கிறேன்.’’ என்று சபதமிட்டார். மக்கள் ‘‘அரோகரா’’ எனக் கோசமிட்டனர் தேவார திருவாசகங்களைப் பாடினர் தீ மிதித்தனர். முப்பத்தொராவது நாள் பெரு மழை பொழிந்தது. மன்னர் மழை நீரைக் கைகளில் ஏந்திப் பருகித் தனது சபதத்தை முடித்தார். அப்படியான இரக்க சிந்தையுள்ள மன்னவருக்கு மகனாக அவதரித்த உன்னிடம் ஏன் இந்தத்தாராள சிந்தை இல்லாமற்போனது. இயல்பான அறிவுக்கூர்மையுடன் பலநூல்களையும் கற்றுத் தேர்ந்த உன்னால் இலகுவாக எல்லாப்பிரச்சினைகளையும் தீர்க்க முடியும்’’ வெங்கடேசர் சொன்னது அவனது காதில் ஒலித்தது.

‘‘மக்களைப் புறக்கணித்து ஒதுக்கிவிட்டு இன்ப வாழ்வு வாழ்ந்ததுதான் நான் செய்த பெரும் பாவம். வெங்கடேசர் யாவற்றையும் கூறினார். அறத்தை எடுத்துரைத்தார். அறிவு நிறைந்த வார்த்தைகளைப் பல முறை கூறினார். செயற்திறன் மிக்வாரன அவர் என்னென்ன செய்ய வேண்டுமென்று கூறினார். ஆனால் நான் தான் கேட்கவில்லை’’

‘‘மன்னா, அரசன் சகல சுகபோகங்களையும் அனுபவிக்கலாம். அது தவறில்லை. ஆனால் அவன் அனுபவிக்கும் சுகபோகங்களைப் பற்றி வெளியே தெரியக்கூடாது. மக்கள் இன்பமாக இருந்து கோலாகலமாக வாழும் வேளையில் அரசனும் ஆடம்பரமாக வாழலாம். அதைப்பற்றி மக்கள் கவலைப்பட மாட்டார்கள். ஆனால் அவர்கள் பசியோடும் பட்டினியோடும் நோயோடும் துன்பப்படும் போது தம்மை

ஆள்பவன் ஆடம்பரமாக வாழ்வதை கண்டால் கொதித்தெழுவார்கள். மக்கள் வரிகளைச் செலுத்துவதால், அவர்களது நலன்களைக் கவனிக்க வேண்டிய பொறுப்பு மன்னனைச் சார்ந்தது. இன்று மக்களுக்குச் செய்ய வேண்டிய பணிகள் ஏராளமாக இருக்கின்றன. அவற்றில் ஒன்றைக்கூட உன்னால் செய்ய முடியவில்லையென்றால் நீ அரசனாக இருப்பதில் என்ன பலன் உள்ளது?'' வெங்கடேசரின் வார்த்தைகள் காதைச் செவிடுபடுத்தின.

''உண்மைதான். நான் கடமை தவறியதால் தான் எனக்குத் தண்டனை கிடைத்தது'' என்று வருந்தினான் நந்திதேவன். அவனது விழிக்குள் வெங்கடேசர் தோன்றினார். அவரது முகங்கவலையால் கறுத்திருந்தது. கண்கள் கலங்கியிருந்தன. நந்திதேவன் தனது கைகளால் முகத்தைப் பொத்தினான்.

**636. மதிநுட்பம் நூலோடு உடையார்க்கு அதிநுட்பம்**
**யாஉள முன்நிற் பவை.**

நுட்பமான அறிவோடு நூலறிவும் உடையவர்களுக்கு, மிக நுட்பமான சூழ்சிகள் என்று எவையும் இல்லை.

## இயற்கையை அறிந்து நட

மணிமாறன் முனிவனைப் போல மாறு வேடம் பூண்டு அரச சபைக்கு வந்தான். ஏமநாதன் அவனது பாதங்களில் வீழ்ந்து வணங்கினான்.

''அரசே! நீங்கள் வணிகர். அரசர்க்குரிய பல விடயங்களைக் கற்கவில்லை. அவற்றை நீங்கள் கற்றுணர வேண்டும். அதற்காகத்தான் நான் இங்கு வந்துள்ளேன். நான் உலகில் உள்ள அறிவு பயக்கும் நூல்கள் பலவற்றைக் கற்றுள்ளேன். நீ வணிகனாக இருந்தாலும் பல நூல்களைக் கற்றிருக்கிறாய். ஆனால் அரசர்க்கென்று சில தனியான முறைகள் உண்டு. அவற்றை நான் உனக்குக் கற்றுத்தர விரும்புகிறேன். நீ என்னைக் குருவாக ஏற்பாயா..?'' என்று கேட்டார்.

''ஆம் குருவே. நீங்கள் அரண்மனையில் தங்கலாம். நான் தினமும் உங்களின் இருப்பிடத்திற்கு வந்து கற்கத் தயாராக உள்ளேன்'' என்றான் ஏமநான்.

அப்பொழுது அவசரமாக எழுந்த முதலமைச்சர் வெங்கடேசர் சொன்னார் ''அரசே முன்பின் தெரியாத ஒருவரை அரண்மனையில் தங்கவைப்பது நல்லதல்ல. அத்துடன் எமது அரச சபைக்குக் குரு இருக்கிறார். அவர் உங்களுக்கு வேண்டிய எல்லாவற்றையும் கற்பிப்பார்''

''நாட்டில் நடைபெறும் அத்தனை விடயங்களும் எனக்குத் தெரியும். அத்துடன் நாட்டில் உலவும் சுவாமியார்களைப் பற்றியும் தெரியும். இவர் மிகவும் நல்லவர் வல்லவர் எனது நம்பிக்கைக்குரியவர். இவரை உங்களுக்குத் தெரியாமலிருக்கலாம். ஆனால் எனக்குத்தெரியும். நான் நந்திதேவனல்ல'' என்றான் ஏமநாதன்.

அரசகேசரிக்கு மன்னரின் பேச்சின் உள்ளே பெரியதொரு விஷயம் அடங்கியிருப்பதைப் போலிருந்தது. எனினும் அதை வெளிக்காட்டிக் கொள்ள முடியவில்லை.

"முனிவரே உமக்கு அரண்மனையில் தங்க ஏற்பாடு செய்துள்ளேன். உமக்குத் தேவயையான அத்தனை வசதிகளும் செய்து கொடுக்கும்படி உத்தரவிடுகிறேன். வசதிகள் போதாவிட்டால் எனக்குச் சொல்லலாம்" என்றான் ஏமநாதன்.

அரச சபை கலைந்ததும் வெங்கடேசரும் அசரகேசரியும் வெளியே வந்தனர். வெங்கடேசருக்கு அவைக்கு வந்த சுவாமியாரின்மேற் சந்தேகமிருந்தது. எனினும் வெளிக்காட்டிக் கொள்ளாது வந்தார்.

"சுவாமியாரை அரசருக்குத் தெரியுமாம். அத்துடன் அரசரது பேச்சில் பல அர்த்தங்கள் புதைந்துள்ளன போல இருக்கிறது. நம்பிக்கையில்லாதவர்களை அரசன் அரண்மனையில் தங்கவிடமாட்டான்" என்றார் அரசகேசரியார்.

"எனக்கென்றால் முனிவர்கள் அரண்மனைக்குள் தங்குவது பிடிப்பதில்லை. அரசனுக்கு நூல் அறிவு மிகக்குறைவு. அதற்காக அவன் கற்கத்தான் வேண்டும். அரண்மனையில் குரு இருக்கிறார். அதைவிடப் பாண்டித்தியம் பெற்றவர்கள் நாட்டிலிருக்கிறார்கள். அப்படியிருக்க ஊர்பேர் தெரியாத ஒருவனை நம்பி எப்படி மன்னர் செயற்படலாம்" என்று கேட்டார் வெங்கடேசர்.

" ஒருவன் நூல் அறிவால் செயல்களைச் செய்யும் முறைகளைகளை எவ்வளவு தான் அறிந்திருந்த போதிலும், உலக இயற்கையை அறிந்து அத்துடன் பொருந்தும்படி செயற்படல் வேண்டும் என்று உமக்குத் தெரியாதா? இது பெரிய விடயம் அல்ல. மன்னர் எம்முடன் கலந்தாலோசித்துத்தான் நாட்டினது அபிவிருத்தி வேலைகளைச் செய்கிறார் நீதியான முறையில் அரசாட்சி செய்கிறார். நாம் அவர் செய்யும் காரியங்களை அறிந்து கொள்கிறோம். அவற்றில் ஏதாவது தவறுகள் இருந்தால் சுட்டிக் காட்டுகிறோம். அதை மகிழ்வுடன் அரசர் ஏற்கிறார். அவை பொருத்தமானவை என்றால் ஏற்றுக் கொள்கிறார். இல்லாவிட்டால் விளக்கமளிக்கிறார். நாமும் அவருக்குச் சொல்ல வேண்டியவற்றை விளக்கமாகச் சொல்கிறோம். இதைவிட நமக்கு என்ன வேண்டும்?. முன்பு நந்திதேவன் நாம் சொல்வதைக் கேட்டானா...? இல்லைத் தான் சரியாகச் செய்தானா...? நாம் ஏதாவது சொல்லப் போனால் எம்மை அவமதிப்பான் வெளியே செல்லும்படி கட்டளையிடுவான், கேலி செய்வான். ஆனால் இப்பொழுது அவையொன்றுமில்லையே. நீர் வீணாக எவற்றையோ கற்பனை செய்து மனதைக் குழப்புகிறீர். அரசர் விரும்புபவற்றை நாம் விரும்பாவிட்டாலும் காட்டிக் கொள்ளக்கூடாது.அரசன் தமக்கு இளையவன் என்றோ, அல்லது கல்வியறிவு இல்லாதவனென்றோ நாம் எண்ணக்கூடாது. நீர் பல நூல்களைக் கற்றனீர். அதற்காக நினைத்தபடி செயலாற்ற முடியாது. கற்றறிந்தவனானாலும் சரி, செயல்வீரன் ஆனாலும்சரி உலகை இயற்கையை அறிந்து, அதனுடன் பொருந்தும்படி செயற்படுவதுதான் அறிவுடையவனின் செயலாகும். அரசனது பேச்சிலிருந்து முனிவர்

அரசனுக்கு மிகவும் வேண்டியவா் போலத் தெரிகிறது. அதனால் அரசா் பிழைவிட மாட்டாா்'' என்றாா் அரசகேசரி. வெங்கடேசா் எதுவும் பேசாது நடந்துகொண்டிருந்தாா்.

**637. செயற்கை அறிந்தக் கடைத்தும் உலகத்து**
**இயற்கை அறிந்து செயல்.**

ஒருவன் தான் கற்ற நூல்களின் அறிவால் செயலைச் செய்யும் வகைகளை அறிந்து கொண்டாலும், உலகத்தின் இயற்கையை அறிந்து அதனோடு பொருந்துமாறு செயற்பட வேண்டும்.

## அமைச்சரின் கடமை

''மூன்று வாரங்களுக்கு முன்பு அரச சபையில் நந்திதேவன் உம்மை அவமானப்படுத்தியதை நினைத்தப்பாரும். அப்படியானதொரு நிலை இப்பொழுது இல்லைத்தானே! அரசா் நாம் கூறுபவற்றைக் கவனமாகக் கேட்கிறாா். பின் தனது அபிப்பிராயத்தைக் கூறுகிறாா். நாம் ஏற்காவிட்டால் அதற்கு விளக்கமளிக்கிறாா். சில நேரம் அவை பிழையாக இருந்தாலும் அதனால் பெரும் தீமைகள் எவையும் வரவில்லையே. நகரில் உள்ள பெரும் புள்ளிகள் சிலா் நந்திதேவனின் ஆதரவாளா்களாக இருந்தனா். அவா்களை என்ன செய்யலாமென்று மன்னா் கேட்டாா். நான் அவா்களைச் சிறையிலடைக்குமாறு கூறினேன். நீங்கள் அதை ஆமோதித்தீா்கள். ஆனால் மன்னன் ''எதிரிகள் மீதும் அன்பு காட்டுதல் வேண்டும். மனிதரில் சிலா் தாம் செய்யும் செயல்கள் நல்லவை என்று நினைக்கிறாா்கள். அதனால்தான் அவற்றைச் செய்கிறாா்கள். ஆனால் அவை தீயவை என்பதை அவா்கள் முழுமையாக உணரும் வண்ணம் எடுத்துரைத்தால், அவா்கள் கட்டாயம் திருந்துவாா்கள். ஒரு மனிதன் தன் வாழ்நாள் முழுவதும் தவறுகள் செய்து கொண்டிருக்க மாட்டான். எனவே நமது நாட்டின் முன்யை அரசனான நந்திதேவனின் வழியில் செல்வோரை அவதானியுங்கள். அவா்களையும் மற்றவா்களைப் போல நடத்துங்கள். அவா்கள் திருந்துவாா்கள்''. என்றாா் நாம் அதை ஏற்றுக் கொள்ளவில்லை. ஆனால் அவா்கள் இப்பொழுது மன்னரின் விசுவாசிகளாகி விட்டனா்'' என்றாா் அரசகேசரி.

'' எதையும் நாம் நம்ப முடியாது. காலம்தான் பதில் சொல்ல வேண்டும்'' என்றாா் வெங்கடேசா்.

''நீா் ஏன் புதிய அரசரை ஏற்க மறுக்கிறீா்?. நந்திதேவனுக்கு உம்மால் எதையாவது கூறமுடியுமா..? மூன்று வாரங்களுக்கு முன்பு நந்திதேவன் பருத்தி மலையிலிருந்து வந்த தூதுவனை எப்படி அவமானப்படுத்தினான் நினைத்துப்பாரும்''

வெங்கடேசரின் மனதில் அக்காட்சி விரிந்தது. அன்று பருத்தி மலையில் இருந்து இரண்டு தூதுவர்கள் அரச சபைக்கு வந்திருந்தனர். பருத்தி மலையரசன் சுந்தரசேனன் கொடுத்த ஓலையை அவர்கள் நந்திதேவனிடம் கொடுத்தனர். நந்திதேவன் ஓலையை வாசித்துவிட்டுச் சொன்னான் “தூதுவர்களே, உங்களது மன்னர் எமது நாட்டைப் பிச்சைக்கார நாடென்று கருதுகிறாரா..? எந்தவொரு நாட்டிலும் வானம் பொய்த்தால் பஞ்சம் வரத்தான் செய்யும். அதற்காக உங்களிடம் பிச்சைபெற நாம் விரும்பவில்லை. உங்கள் அரசன் என்னைக் கேளாது எப்படி ஏமநாதனின் கப்பலில் தானியங்களை ஏற்றியனுப்பலாம். கப்பல்கள் துறைமுகத்திற்கு வந்த பின்பா அனுமதி கேட்பது. எமது கடல் எல்லைக்குள் நுழையுமுன் அனுமதி கேட்டிருத்தல் வேண்டும். அதுதான் முறை. எனவே நீங்கள் திரும்பிச் செல்லலாம்”. என்றான்.

“அரசே! தூதுவர்களின் முன்னால் அரசர்களை அவமதிப்பதோ, கேலி செய்வதோ கூடாது. அவர்களுடன் ஏன் உரையாடுகிறீர்கள். உங்கள் பதிலை எழுதிக் கொடுத்து விடுங்கள். தூதுவர்கள் ஆத்திர மிகுதியால் நீங்கள் சொல்லியவற்றையும் சொல்லிச் சொல்லாவற்றையும் சொல்லிப் பகையை உண்டாக்கி விடுவார்கள். நாம் பேசும் போது மிகமிக அவதானமாக இருத்தல் வேண்டும். சொற்கள் உயிர் உள்ளவை. அவை மாறுபாடடையுந் தன்மை வாய்ந்தவை” என்று கூறும் போது நந்திதேவன் குறுக்கிட்டுச் சொன்னான் “உமக்கு வயது சென்று விட்டது. அதனால் எதுவும் விளங்குவதில்லை. மாறாட்டமாகக் கதைக்கிறீர். இல்லாவிட்டால் ஏமநாதன் மீதுள்ள பாசத்தால் கதைக்கிறீர். எமது உப்பைத் தின்று கொண்டு எமக்கெதிராகக் கதைக்க எப்படி உமக்குத் துணிவு வந்தது?” கர்ச்சித்தான் நந்திதேவன்.

“மன்னா ! நான் எதிர்த்துப் பேசவில்லை. நீங்கள் என்னைப் பற்றி எதை நினைத்தாலும் பரவாயில்லை நான் உண்மையானவற்றைக் கூறவேண்டும். அது அமைச்சரின் கடமை” என்றார் வெங்கடேசர்.

“ நீர் கூறுவதையெல்லாம் நான் ஏற்கவேண்டுமென்ற சட்டம் கிடையாது. உடனே அவையை விட்டு வெளியே செல்லும்” மீண்டும் கர்ச்சித்தான் நந்திதேவன்.

“நந்தி தேவனிடம் பாடம் படித்ததை நீர் மறந்துவிட்டீர்.....” என்று அரசகேசரி கூறிக்கொண்டிருக்கையில் வெங்கடேசர் குறுக்கிட்டுச் சொன்னார் “சேனாதிபதியாரே ! உமக்கு அமைச்சரின் கடமை என்னவென்று தெரியாததால் இப்படிக்கூறுகிறீர். ஒரு மன்னன் அறிவுறுத்துபவரின் அறிவுரைகளையும் ஏற்காமல் தானும் அறியாமல் இருந்தாலும், அவனுக்கு உறுதியானவற்றைக் கூறி உணரும்படி செய்வது அமைச்சரின் கடமை.”

“உண்மைதான். ஆனால் ஏற்காதவனுக்குச் சொல்வதால் எதுவும் நடக்காதென்பது உமக்குத் தெரியாதா...? ஒருமுறையல்ல பலமுறை அவமானப்பட்டும் உமக்குப் புத்திவரவில்லை. நந்திதேவன் அறியாமை மிக்கவன். ஏமநாதன் அறிவு மிக்கவன். இதை நீர் புரிந்தால் சரி”

**638. அறிகொன்று அறியான் எனினும் உறுதி**

**உழை இருந்தான் கூறல் கடன்.**

அறிவுறுத்துபவர்களின் அறிவுரைகளைக் கேளாமலும், தானும் அறியாதவனாக அரசன் இருந்தாலும், அமைச்சன் அவனுக்கு உறுதியானவற்றை எடுத்துக் கூறுவது அமைச்சனது கடமையாகும்.

## பகைவரால் நன்மை.

அன்று அரச சபை கூடியபோது ஏமநாதன் உரையாற்றினான் “ எமது நாடு இப்பொழுது படிப்படியாகப் பழைய நிலைக்குத் திரும்பிக் கொண்டிருக்கின்றது. உழவர்கள் வயலை உழுது விதைக்கத் தொடங்கியுள்ளனர். கைத்தொழிலாளர்கள் தொழில்களை ஆரம்பித்துள்ளனர். கொஞ்ச நாட்களுக்கு அயல் நாடுகளிலிருந்து உணவுப் பொருட்களைக் கப்பல்கள் ஏற்றிவந்து மக்களுக்கு இலவசமாகக் கொடுப்போம். நாட்டு நிலைமைகள் சீரடைந்ததும் இலவச விநியோகம் நிறுத்தப்படும். நான் சகல மக்களது மனங்களையும் அறிந்துகொள்வதற்கு ஏற்பாடு செய்துள்ளேன். அணுகூட என்னை அறியாமல் அசையமாட்டாது. பாராட்டுக்களோ புகழோ எனக்குத் தேவையில்லை. இன்றைய நிலையில் மக்களை ஒன்று திரட்டி செயலில் ஈடுபடச் செய்தல் வேண்டும். மரணம் வரும் வரை ஒவ்வொரு மக்களும் துடிப்புடன் வேலை செய்தல் வேண்டும். வாழ்க்கையில் இன்பங்களும் துன்பங்களும் வந்து செல்லக் கூடாது. வந்த இன்பம் என்நாளும் மக்களுடன் சேர்ந்திருத்தல் வேண்டும். இன்பம் என்நாளும் மக்களுடன் சேர்ந்திருக்க வேண்டுமானால் நாம் செயற்றிறன் உடையவர்களாக இருத்தல் வேண்டும். தீவிர முயற்சியுடன் கூடிய சில நாள் உழைப்புப் பலகாலத்திற்கு எம்மை இன்பமாக வைத்திருக்கும்’’ என்றான்.

‘‘இப்பொழுது அரசர் கற்க வேண்டிய நூல்கள் பலவற்றைக் கற்று வருகிறார். தனது நுண்ணறிவினால் நாட்டு மக்களுக்குப் பல நன்மை தரும் செயல்களை அறிமுகப்படுத்தியுள்ளார். நாட்டில் நடைபெறுபவை அனைத்தும் அவருக்குத் தெரியும். மதிநுட்பமும் புத்திக்கூர்மையும் மிக்க இவ்வரசனின் காலத்தில் நாடு முன்னெப்பொழுதையும் விட முன்னேறும்’’ என்றார் முனிவர்.

‘‘எமது நாட்டிற்கும், அரசனுக்கும் விசுவாசமில்லாதவர்கள் நாட்டைவிட்டு மகிழ்வுடன் வெளியேறலாம். ஏனென்றால் இன்னும் பலர் நந்திதேவனின் விசுவாசிகளாகவே இருக்கின்றனர். எமது அமைச்சர் வெங்கடேசர் நந்திதேவரின் விசுவாசி. நான் பதவியேற்றதும் அவரை விலக்காது தொடர்ந்தும் அமைச்சராக இருக்கும்படி வற்புறுத்தியமைக்குக் காரணம்இ உடனடியாக மாற்றங்களைச் செய்தால் மக்கள் ஏற்றுக்கொள்ள மாட்டார்கள். அதைவிடத் தவறு செய்பவர்கள் தண்டிக்கப்படாது திருந்த வேண்டுமென்பதே எனது கொள்கையாகும். இப்படிப்பலர் திருந்தியுள்ளனர். நான் யாரையும் எளிதாக நம்புபவன் அல்லன். அதற்காக எல்லோரையும் சந்தேகிப்பவனும் அல்லன். ஒவ்வொருவரினதும் செயல்களை

அவர்களது அங்கங்கள் எடுத்துக்கூறும். சாமுத்திரிகா இலட்சணம் என்று சொல்லப்படுகின்ற சாஸ்திரத்தில் இவை கூறப்பட்டுள்ளன. தீயவற்றைக் கேட்கும் போதும், வேண்டாதவற்றைக் கேட்கும் போதும் ஒருவனின் முகமும் கண்களும் மாறுபாடடையும். அதனால் அவர்கள் கதைக்கும் போது கலவரப்படுவார்கள் தடுமாறுவார்கள். நான் வெங்கடேசரை முதலமைச்சராகப் பணியாற்றுமாறு கேட்ட போது அவரது மனம் விரும்பவில்லை. சாட்டுக்கள் பலவும் சொன்னார். நான் வற்புறுத்தியதன் பேரில் ஒப்புக்கொண்டார். அவர் நந்திதேவனிடம் பணியாற்றிய காலத்திலேயே மகத நாட்டுடன் தொடர்பு வைத்திருந்தார். மகத நாட்டு ஒற்றன் ஒருவன் அவரது உறவினனாக அவரது வீட்டிலேயே பல காலம் தங்கியிருந்தான். அத்துடன் சிவன் கோயிலில் தங்கியிருந்து மக்களின் மனதைக் கவர்ந்த சுவாமியாரும் மகத நாட்டு ஒற்றரே. அவர்களைப் பிடித்துச் சிறையிலடைத்துவிட்டேன். அரசனுக்குப் பக்கத்திலிருந்து கொண்டு ஆட்சிக்குத் தவறான வழிகளைக் காட்டும் ஒரு அமைச்சனைவிட, எழுபதுகோடி பகைவர்கள் இருந்தாலும் அவர்களால் தீமை உண்டாகாது. அதனால் வெங்கடேசரை முதலமைச்சர் பதவியிலிருந்து நீக்குகிறேன். அத்துடன் சிவன் கோயிலில் கைது செய்யப்பட்ட சுவாமியார் உருவில் இருந்தவனையும், அவனது தூதுவனையும் அடைத்த சிறையில் வெங்கடேசனையும் அடையுங்கள். பின்பு விசாரிக்கலாம்'' என்றான் ஏமநாதன்.

''அரசே ! நான் எந்தக் குற்றமும் செய்வில்லை. எனது வீட்டிலிருந்தவன் உண்மையில் எனது இனத்தவன்.....'' வெங்கடேசர் கூறிக்கொண்டிருக்கையில் வீரர்கள் அவரைக் கைது செய்து அழைத்துச் சென்றனர். அரசகேசரிக்குச் சற்றுப்பயமேற்பட்டது. அவரின் உடல் வியர்த்தது ''இது நடக்குமென்று எனக்குத் தெரியும். ஆனால் இவ்வளவு சீக்கிரம் நடக்குமென்று நான் நினைக்கவில்லை. வெங்கடேசர் ஏமநாதனை அரச அறிவு இல்லாதவன் என்று நினைத்துச் செயற்பட்டார். ஆனால் அவன் நிபுணன் என்பதை நான் பல சந்தர்ப்பங்களில் உணர்ந்துள்ளேன். எதைச் சொன்ன போதிலும் வெங்கடேசர் கேட்கவில்லை. பாவம் வெங்கடேசர்'' என்று நினைத்தார் அரசகேசரி. ''தான் அவருடன் நட்பாக இருந்தமையால் தன்னையும் ஏமநாதன் விசாரிப்பானோ?''1 எனப் பயந்தார்.

**639. பழுது எண்ணும் மந்திரியின் பக்கத்துள் தெவ்வோர்
எழுபது கோடி உறும்.**

தவறான வழிகளை எடுத்துக் கூறுகின்ற அமைச்சனை விட எழுபது கோடி பகைவர்கள் பக்கத்தில் இருந்தாலும், அது நன்மையே தரும்.

## திறமையில்லாதவன்

அரசகேசரி ஒரு முறை நந்திதேவனைச் சந்தித்தார் ‘‘அரசே! இப்பொழுது உங்களை முதலமைச்சரான வெங்கடேசரும் நானும் காண்பது அரிதாக உள்ளது. முதலமைச்சரும் சேனாதிபதியும் தினமும் மன்னரைச் சந்தித்தல் வேண்டும். நாட்டு நடப்புக்களை ஆராய்தல் வேண்டும். தளபதி வீரசிங்கனை நீங்கள் ஒற்றனாகக் கடம்பனாரின் சொல்லைக் கேட்டே அனுப்பினீர்கள். வெங்கடேசர் முதலமைச்சராக இருக்கும் போது அவரை மதியாது நீங்கள் கடம்பனாரை முதலமைச்சராக எண்ணி அவரிடம் ஆலோசனைகள் கேட்கிறீர்கள். அவரின் ஆலோசனைப்படி விஜயசிங்கன் ஒற்றனாகச் சென்றான். படைத்தளபதியான அவனைப் பலதினங்கள் காணாமையால் அவனைத் தேடும் முயற்சியில் நான் ஈடுபட்டிருந்த போதுதான் அவன் ஒற்றனாகப் பருத்தி மலைக்குச் சென்ற விடயம் எனக்குத் தெரிய வந்தது. அந்த விசயத்தை நான் உங்களோடு கதைக்க வந்த போது கடம்பனாரும் வெங்கடேசரும் சபையிலிருந்தனர். அங்கு வந்த பின்பு தான் கடம்பனாரின் ஆலோசனைப்படிதான் நீங்கள் விஜய சிங்கனை ஒற்றனாக அனுப்பியதாகச் சொன்னீர்கள். விஜயசிங்கன் ஏற்கனவே பல தடவைகள் பருத்திமலைக்குச் சென்று வந்துள்ளான் என்றும், பருத்திமலையில் உள்ள சில முக்கியமான அரசியல் தலைவர்களைச் சந்தித்துக் கதைத்துள்ளான் என்றும் சில விடயங்களைப் பகிரங்கமாகக் கூறமுடியாதென்றும் கூறினீர்கள். கடம்பனார் ‘‘தனது திட்டம் நிறைவேறுங் காலம் வந்துவிட்டதென்பதை விரைவில் நாடு உணர்ந்து கொள்ளும்’’ என்றார். அதற்கு வெங்கடேசர் சொன்னார் ‘‘அரசே! செயல்களைச் சிறப்பாகச் செய்து முடிக்கும் திறமையில்லாத அமைச்சன், முதலில் சரியாக எண்ணித்திட்டமிட்டிருந்தாலும். செய்யும் போது சரிவரச் செய்ய மாட்டான்’’ என்றார். அந்த நேரம் நீங்கள் அதைக் கேட்கவில்லை. ‘‘ ஓரிரு வாரங்கள் கழித்துவந்து சொல்லும். இப்போது எதையும் சொல்ல முடியாது.’’ என்று கூறினீர்கள். அப்பொழுதே எனக்குத் தெரியும் அழிவு காலம் வந்துவிட்டதென்று. நீங்கள் என்னையும் வெங்கடேசரையும் சந்தேகிக்கிறீர்கள். எம்மால் ரகசியம் எதிரிக்குத் தெரிந்துவிடுமென்று நினைக்கிறீர்கள். நான் இந்த நாட்டின் சேனாதிபதி என்பதால் கூறுகிறேன் தயவு செய்து சகலகலா வல்லவரான வெங்கடேசரைச் சந்தேகிக்காதீர்கள். நானறிந்த செய்தியின் படி விஜயசிங்கன் அங்கு இனங்காணப்பட்டுவிட்டான். விரைவில் துயரமான செய்தியொன்று வந்து சேரும்’’.

நந்திதேவன் பலமாகச் சிரித்தான் ‘‘சேனாதியாரே, வெங்கடேசரின் உயிர் நண்பரல்லவா நீங்கள். அதனால் நண்பருக்காகப் பரிந்து பேசுகிறீர்கள். நீங்கள் வல்லவர் போர்த்திறமை மிக்கவர் நாட்டுக்கு விசுவாசமானவர் என்பது எனக்குத் தெரியும். ஆனால் வெங்கடேசர் எமது நாட்டைக் காட்டிக்கொடுக்க நினைக்கிறார். அதனால் தான் அவரைச் நான் சந்தேகிக்கிறேன். அதை நீங்கள் சீக்கிரம் உணர்வீர்கள்’’ என்றான்.

‘‘அவர் அப்படியானவர் அல்ல’’. என்று அரசகேசரியார் கூறும்போது ‘‘போதும் நிறுத்து’’ என்று கட்டளையிட்டான் நந்திதேவன். அதன் பின் அரசகேசரி கதைக்கவில்லை. அது நடந்து மூன்று நாட்களின் பின் விஜயசிங்கனும் அவனுடன்

சென்ற இரு ஒற்றர்களும் மக்களால் கண்டுபிடித்துக் கொலை செய்யப்பட்டனர். அதன் பின்பு வெங்கடேசரும் அரசகேசரியும் நந்திதேவனைச் சந்தித்தனர் "அரசே நிலைமை மிகவும் மேசமடைந்துள்ளது. விஜயசிங்கனும் மற்றும் இரு ஒற்றர்களும் மக்களால் கொலை செய்யப்பட்டுவிட்டனர்.அரசன் அதற்கான நடவடிக்கை எதுவும் எடுக்காது கொலை செய்தவர்களை விடுதலை செய்ததோடு எமக்கும் அறிவிக்காது விட்டுவிட்டார். அதைக் கண்டித்திருந்தால் அல்லது கதைத்திருந்தால் நாம் ஏதாவது சொல்லாம். ஆனால் எதுவும் நடவாதது போலப் பருத்திமலை அரசன் இருப்பது அச்சத்தைக் கொடுக்கிறது. எரிமலை ஒன்று அமைதியாக இருப்பதைப்போல உள்ளது." என்றார் வெங்கடேசர்.

நந்திதேவன் சிரித்தான் "விசுவாசத்துடன் சொல்லுகிறீரா..? இல்லை மகிழ்வுடன் சொல்கிறீரா..?" என்று கேட்டான்.

"மன்னா! எனது குடும்பத்தினர் இந்த நாட்டிற்கு விசுவாசமானவர்கள். திறமை யில்லாதவர்களின் பேச்சை நம்பிச் செயலில் இறங்குகிறீர்கள். அவர்களின் அகங்கார வார்த்தை கேட்பதற்கு மகிழ்வினைக் கொடுத்தாலும் இறுதியில் ஆபத்தைத்தான் கொண்டுவரும்...".

"அரசகேசரியாரே, வெங்கடேசரைப் பற்றி என்ன நினைக்கிறீர்?" "ஏமநாதன் கேட்டான். சிந்தனையில் ஆழ்ந்திருந்த அரசகேசரி திடுக்கிட்டு சுயநினைவை அடைந்தார். அவரால் பேச முடியவில்லை. எதைப்பேசினாலும் அது ஆபத்தாக முடியுமென்று அவரது மனம் எச்சரிக்கை செய்தது. அதனால் பேசமுடியாது தடுமாறினார் "ஏமநாதனுக்கு யாவும் தெரியும். நான் ஏமாற்ற முடியாது." என்பதை நினைக்க அவருக்குக் கலக்கமாக இருந்தது.

**640. முறைப்படச் சூழ்ந்தும் முடிவுஇலவே செய்வர்**
**திறப்பாடு இலா அதவர்.**

செயல்களை சிறந்த முறையில் செய்து முடிக்கும் திறன் இல்லாதவன், முன்னே சரியாக எண்ணித் திட்டமிட்டிருந்தாலும் செய்யும் போது குறைபாடுகள் உள்ளதாகவே செய்வான்.

## மிக உயர்ந்த நலம்.

அன்று தைமாதம் முதலாம் திகதி. மக்கள் எல்லோரும் பொழுது புலருமுன் எழுந்து முற்றத்தினைச் சாணத்தினால் மெழுகி, கோலம் போட்டு, பொங்கிச் சூரியனை வரவேற்று வழிபட்டுவிட்டு, நாவலர் ஸ்ரீவித்தியா மகாகணபதி ஆலயத்திற்கு வந்தனர். அன்று கோயிலிலும் பலர் பொங்கினர். தணிகாசலம் பெரியதொரு மண்பானை வைத்துப் பொங்கினார். விக்னேஸ்வரமூர்த்தி, வேலாயுதபிள்ளை, தனபாலசிங்கம்,

கஜேந்திரன் போன்ற பலர் தணிகாசலம் பொங்கும் பொங்கற் பானையைச் சுற்றி நின்றனர். பொங்கி முடிந்ததும் தணிகாசலம் படைத்தார். பின் பொங்கலை எடுத்து முதலில் விக்னேஸ்வரமூர்த்திக்குக் கொடுத்து விட்டுச் சொன்னார் ‘‘இனி விக்னேஸ்வரமூர்த்தி ஐயா அதிபரல்ல. கல்விப்பணிப்பாளர். அதனால் அவருக்கு முதல் மரியாதை செய்கிறேன்’’ என்றார்.

பொங்கல் முடிந்ததும் பூசை ஆரம்பமானது. பூசை முடிவடைந்த பின்பு ஆரூரன் சொற்பொழிவாற்றினான் ‘‘அன்பான அடியார்களே! தமிழர்களின் திருநாளான இன்று உரையாற்றும்படி கோயில் நிர்வாகத்தினர் என்னைப் பணித்துள்ளனர். அதனால் நான் மிகவும் மகிழ்ச்சியடைகிறேன். இன்று தைப்பொங்கல். நாளை பட்டிப்பொங்கல். நம்மை வாழவைக்கும் உழவர்கள் தம்மை வாழவைக்கும் சூரியபகவானுக்கும், பசுக்களுக்கும் அவை தமக்குச் செய்த பேருதவிக்காக நன்றி செலுத்தும் நன்நாட்கள் அவை. நாளைய தினம் மிகவும் முக்கியமான நாள். வயலை உழும் காளைகளுக்கும், நமக்கெல்லாம் அரிய பல உணவுகளைத் தந்துதவும் கோமாதாவுக்கும் நன்றி செலுத்தும் நாள். பசுவின் உடலெங்கும் நாம் வழிபடும் தெய்வங்கள் குடியிருக்கின்றன. தெய்வம் குடியிருக்கும் இடம் கோயிலாகும். எனவே ஒவ்வொரு பசுவும் பல கோயில்களாகத் திகழ்கின்றன. கோயில்களில் இருக்கும் விக்கிரகங்களில் மூர்த்தியை ஆவாகனஞ் செய்து அதிலிருத்திப் பூசிப்பர். ஆனால் பசுவில் தெய்வங்கள் யாவும் தானாகவே வந்து குடியேறுவதாக எமது சமய சாஸ்த்திரங்கள் கூறுகின்றன. அத்துடன் இறைவனுக்கு அபிஷேகஞ் செய்யும் பஞ்சகௌவியம் பசுவிலிருந்தே பெறப்படுகிறது. பசுவின் சாணத்திலிருந்து பெறப்படும் திருநீற்றைப் பகுத்தறிவுள்ள உயிர்களிலிருந்து நாம் வணங்கும் தெய்வங்களும், தேவர்களும், கணங்களும் பூசி முத்திபெறுகின்றனர். இவ்வாறு மனித வாழ்வின் சகல செயற்பாடுகளிலும் உடனிருந்து எம் வாழ்வைச் சிறப்பிக்கின்ற பசுவை நினைத்து வாழ்த்தி நன்றி தெரிவிக்கும் நாள் நாளைய தினமாகும்.

பசுவைப்போற்றுவதன் மூலம் மக்கள் இம்மையிலும் மறுமையிலும் பேரின்ப வாழ்வு வாழலாம். திருமூலர், சண்டேசுரர், ஆநாயநாயனார், சுவாமி ஞானப்பிரகாசர் போன்றோர் பசுவை ஓம்புதல் மூலம் சிவகதி பெற்றனர். இமயமலையிலிருந்து தென்னாடு நோக்கி வந்த சுந்தரமுனிவர் பசுக்கள் தமது மேய்ப்பனான மூலன் இறந்தமையால் அவனைச் சூழ்ந்து நின்று கண்ணீர் சொரிய, அவற்றின் துயர் நீக்க மூலனின்உடலுள்ப் புகுந்து திருமூலராகிப் பசுக்களின் துயரைப் போக்கினார். பசுக்களை மேய்த்தவன் ஒரு கோலால் பசுவைத் தாக்கியதைக் கண்ட விசாரசருமர் என்பவன் பசுக்களை மேய்ப்பவனைத் துரத்திவிட்டுத் தான் பசுக்களை மேய்த்து வந்தான். அதன் பயனாக அவன் சண்டேசுரர் பதவியைப் பெற்றான். இத்தகைய பெருமைகள் வாய்ந்த பசுவின் குருதி ஒரு துளி நிலத்தில் வீழ்ந்தால் அதிலிருந்து பலகோடி அசுரர் தோன்றி உலகைக் கெடுப்பரென்று நீதி நூல்கள் கூறுகின்றன.

‘‘பசு இல்லாத வீட்டில் அழகு. செல்வம், மங்களம், சுபீட்சம், கீர்த்தி என்பன இல்லாமற் போய்விடும்.’’

“வாழ்க அந்தணர் வானவர் ஆனினம்” இப்படிச் தேவாரத்தில் திருஞானசம்பந்தர் கூறுகிறார்.

“ஆவினுக் கருங்கலம் அரனஞ்சாடுதல்” என்றார் அப்பர் சுவாமிகள்.

“யாவர்க்கும் ஆம் பசுவுக்கு ஒரு வாயுறை” என்கிறார் திருமூலர்.

“முதல் ஏழு திருமுறைகளிலும் பசுவைப் போற்றிப் பாடிய பதிகங்கள் கோதனத்திருமுறை என்று போற்றப்படுகின்றன”.

“பசுவிலிருந்து பெறப்படும் பொருட்கள் உணவாகவும், மருந்தாகவும் மனிதர்களுக்குப் பயன்படுகின்றன. அப்படியாயின் அந்தப் பசுவின் பெறுமதி என்ன...?” மகாபாரதத்திலே பசுவின் பெறுமதியைப் பற்றிக் கூறும் ஒரு கதையுண்டு.

சயவனர் என்ற மகரிஷி பன்னிரண்டு வருடங்கள் நீரினுள் தவஞ் செய்தார். அவரைச் சுற்றி மீன்கள் கூட்டம் கூட்டமாக வாழ்ந்தன. ஒரு நாள் மீன் பிடித்த செம்படவனின் வலையுள் முனிவருடன் மீன்களும் சிக்கின. முனிவரைக் கண்ட செம்படவன் பயந்து நடுங்கினான். அதைக் கண்ட முனிவர் “பயப்படாதே உனது வலையில் சிக்கியநான் உனது உடைமை. அதனால் மீனை விற்பது போல என்னையும் விற்றுவிடு” என்றார்.

“செம்படவனுக்குப் பயமாக இருந்தது. ஆனால் முனிவரது சொல்லைத் தட்ட முடியவில்லை. அதனால் செம்படவன் அவ்வூர் அரசனான நகுஷனிடம் சென்று சொன்னான்.

நகுஷன் முனிவரை ஆயிரம் பொன் கொடுத்து வாங்குவதாகக் கூறினான். அதற்கு முனிவர் “தனது பெறுமதி அதனிலும் அதிகம்” என்றார். அரசன் படிப்படியாகப் பெறுமதியை உயர்த்திய போதும் முனிவர் அந்த விலைக்குத் தன்னை விற்கச் சம்மதப்படவில்லை. அதனால் அரசன் அமைச்சர்களைக் கலந்தாலோசித்தான். அவர்கள் “கன்றுடன் கூடிய பசு ஒன்றைக் கொண்டுவந்து கொடுங்கள்” என்றனர். அதன்படி அரசன் கன்றுடன் கூடிய பசுவைக் கொண்டு வந்து முனிவருக்குக் கொடுத்தான். அதைக்கண்டு மகிழ்ந்த முனிவர் “எல்லையில்லாப் பெறுமதியுடைய பசுவையும் கன்றையும் எனக்கு ஈடாகத் தந்துள்ளாய். பசுவோடு கூடிய கன்றுக்கு ஒப்பான பொருட்கள் எவையும் இவ்வுலகில் இல்லை.” என்று அவனை வாழ்த்திவிட்டுச் சென்றார். எனவே அடியார்களே, பெறுமதி இவ்வளவு என்று தீர்மானிக்க முடியாத பசுவிற்குப் பொங்கிப் படைப்பதன் மூலம் நீங்கள் பெருமையடைவீர்கள்.” ஆரூரன் சொற்பொழிவாற்றிக் கொண்டிருந்தான். மக்கள் அமைதியாக இருந்து கேட்டுக்கொண்டிருந்தனர்.

“ஆரூரன் இப்பொழுது நன்றாகப் பேசுகிறான். நாவன்மை என்று கூறப்படும் பேச்சுத் திறமை என்ற பெருஞ் செல்வம் கற்றறிந்த அறிஞர்களால் சிறப்பித்துச் சொல்லப்படும் எல்லா நலங்களையும் விட மிக உயர்ந்ததாகும்” என்றார் சுவாமியார். அதைக்கேட்கப் பண்டிதருக்கு மகிழ்ச்சியாக இருந்தது.

**641. நாநலம் என்னும் நலன்உடைமை அந்நலம்**
**யாநலத்து உள்ளதூஉம் அன்று.**

நாநலம் என்று சொல்லப்படும் பேச்சுவன்மை ஒருவகைச் செல்வம் ஆகும். அந்த நா நலம் தனிச் சிறப்புடையது, அது மற்ற எந்த நலன்களிலும் அடங்காதது.

## காத்துக்கொள்

பேசி முடிந்து மேடையால் ஆரூரன் இறங்கிவந்து பண்டிதரின் கால்களில் விழுந்து வணங்கினான் ‘‘ஐயா, கல்வியிறிவில்லாத மூடனாக வாழ்ந்த என்னை கற்றவர்கள் புகழும் அளவிற்கு வளர்த்து விட்டீர்கள். கல்வியின்மையால் ஆணவமும், அகம்பாவமும் கொண்ட நான், சுவாமியாரைக்கூட மதிக்காமல் நடந்தேன். அப்படியிருந்த எனது அறியாமையை நீக்கி கற்றவர் சபையில் இருக்கக்கூடியவனாக என்னை மாற்றியது தாங்கள் தான். தாங்கள் எழுதித் தந்தவற்றை மனனம் செய்து மேடைகளில் ஒப்புவித்து வரும் வேளைகளில் கூட்டத்திலிருப்போர் கேட்கும் கேள்விகளுக்குச் சரியான பதில் கூறத்தெரியாமையால் அவர்கள் என்னைக் கேலி செய்தனர். அவ்வேளைகளில் எனது அறியாமையை நினைத்துக் கவலைப்படாது திமிருடன் சபையோரை ஏசினேன். அதனால் நன் பேசும் இடமெங்கும் கலவரம் ஏற்பட்டது. மக்கள் மேடையை நோக்கிச் செருப்புக்களையும் கற்களையும் வீசினர். நான் அவர்களுடன் சண்டைக்குச் சென்றேன். அதனால் கோயில் நிர்வாகத்தினர் என்னைக் கோயிலுக்கு அழைப்பதில்லை. அதன்பின் புத்திமதிகள் கூறி என்னைக் கற்பித்து அறிஞராக்கிய உங்களை நான் என் வாழ்நாளில் மறக்க மாட்டேன். நீங்கள் தான் எனது தெய்வம்’’ அழுதான் ஆரூரன்.

அப்பொழுது அவனது நண்பனான சிங்காரம் அங்கு வந்தான். முன்பு ஆரூரன் பல நண்பர்களுடன் சேர்ந்து குடித்துவிட்டுக் கோயில்களிலும் கிராமங்களிலும் சண்டை செய்வார்கள். ஆரூரன் பேசும் போது மேடைக்கு அருகே நின்று கைதட்டி ஆரவாரஞ் செய்வார்கள். ஆரூரன் பணக்காரன். அதனால் அவன் நண்பர்களுக்குக் குடிவகைகள் வாங்கிக் கொடுப்பான். இப்பொழுது ஆரூரன் திருந்தியமையால் அவர்களுடன் சேர்வதில்லை. அதனால் அவனது நண்பர்கள் இப்பொழுது அவன் மேடைகளில் பேசும்போது குழப்பிக்கொண்டிருந்தனர். அன்று நாவலர் ஸ்ரீவித்தியா மகா கணபதி ஆலயத்தில் ஆரூரன் உரையாற்றும் போது அவர்கள் குழப்பவில்லை. அதற்குக் காரணம் சுவாமியார். சுவாமியார் கோயிலில் குழப்பம் விளைவிப்பவர்களைத் தண்டித்து விடுவார் என்ற பயம் அவ்வூரில் வாழும் குழப்பஞ் செய்பவர்களுக்குண்டு.

‘‘நன்றாகப் பேசினாய். பண்டிதர் நன்றாகக் கற்பித்திருக்கிறார். மிகவும் நல்ல பேச்சு’’ என்று கூறிவிட்டுக் கைதட்டினான் சிங்காரம்.

சிங்காரம் தன்னைக் கேலி செய்கின்றான் என்று தெரிந்த போதும் ஆரூரனுக்குக் கோபம் வரவில்லை. அவன் கோளாதது போல நின்றான். மக்கள் வீடுகளுக்குச் சென்று கொண்டிருந்தனர்.

பண்டிதனும் ஆரூரனும் துவிச்சக்கரவண்டியில் வீட்டுக்குச் சென்றபோது சிங்காரமும் அவனது நண்பர்களும் வழியில் அவனை மறித்தனர்.

“சிங்காரம் எப்படி சுகமாக இருக்கின்றாயா...? இப்பொழுது நான் குடிப்பதில்லையென்று தானே நீங்கள் எனது வீட்டுக்கு வருவதில்லை” என்று கூறியபடி நூறு ரூபா நோட்டொன்றை எடுத்து நீட்டினான் அரூரன்.

“உந்தப் பிச்சைக்காசு யாருக்கு வேண்டும். நீர் இப்ப பெரிய பிரசங்கியாகிவிட்டீரோ...” என்றவாறு ஆரூரன் நீட்டிய பணத்தைப் பறித்துக் கிழித்தெறிந்தான் சிங்காரம்.

அதைக்கண்டு பதறிப்போனான் ஆரூரன் “சிங்காரம்! இப்படி ஏன் நடந்து கொள்கிறாய். பணம் இலட்சுமி என்பார்கள். அதைக் கடவுளைப்போல மதிக்க வேண்டும். இப்பொழுது நாம் திமிருடன் பணத்தை மதியாது நடந்தால், ஒரு நேரம் பணத்திற்குத் திண்டாடும் நிலை ஏற்படும்” என்றான் ஆரூரன்.

“பெரிய பிரசங்கி, எமக்குப் பிரசங்கஞ் செய்கிறார். அத்துடன் பெரும் அறிவாளி. முக்காலமும் உணர்ந்தவர்.” என்றான் சிங்காரம்.

ஆரூரனுக்குக் கோபம் வந்தது. அவனது உடல் நடுங்கக் கண்கள் சிவந்தன. பண்டிதர் அவனை ஏறிட்டுப் பார்த்தார். அந்தப் பார்வையில் அவர் ஏதோ கூறுவது போல இருந்தது “ ஆரூரா, நன்மையும், தீமையும் சொல்கின்ற சொல்லால் தான் வருகின்றன. எனவே அறிவுள்ளவன் தான் சொல்லுகின்ற சொற்களில் தவறு நேராமல் காத்துக் கொள்ளல் வேண்டும்” என்று கூறுவதைப் போல இருந்தது.

சிரமப்பட்டுக் கோபத்தை அடக்கினான் ஆரூரன். எனினும் அவனது உடல் நடுங்கியது. “போடா போ... பெரிய பேச்சாளர்” என்று கூறிவிட்டு நடந்தான் சிங்காரம். அவனுக்குப் பின்னால் அவனது தோழர்கள் சென்றனர்.

“நான் பயந்து விட்டேன். நீ கற்றபடி நடந்துவிட்டாய். ஒருவன் பேசும் வார்த்தைகளாலேயே மதிக்கப்படுவான். அவன் கூறும் வார்த்தைகளில் இருந்து தான் அவன் எப்படியானவன் என்று கண்டுபிடிக்கலாம். சிங்காரத்தை யாரும் மதிக்க மாட்டார்கள். நீ இன்று அவர்களுடன் சண்டைக்குச் சென்றிருந்தால் மானம் போயிருக்கும்” என்றார் பண்டிதர்.

**642. ஆக்கமும் கேடும் அதனால் வருதலான்**
**காத்து ஓம்பல் சொல்லின் கண் சோர்வு.**

நன்மையும் தீமையும் ஒருவன் சொல்கின்ற சொல்லாலே வருவதால் சொல்கின்றவன் சொல்லும் போது சொல்லில் தவறு நேராமல் காத்துக் கொள்ளல் வேண்டும்.

## சிறந்தவன்மை

அன்று மாலை ஐந்து மணிக்கு மகா கணபதி ஆலயத்தில் ஆரூரன் பேசவிருந்தான். நான்கு மணிக்கே மக்கள் கோயிலில் கூடி விட்டனர். இராச கோபால் அன்று வாழைக்கு நீர்பாய்ச்ச வேண்டிய நாள். அவன் அதைவிட்டு விட்டு பேச்சுக் கேட்பதற்காக வந்திருந்தான். அதே போலப் பிரமுகர்கள் பலரும் வந்திருந்தனர். நாலே முக்காலுக்கு விக்னேஸ்வர மூர்த்தி வந்தார். அவர் அதிபராக இருந்த காலத்தில் இராப்பூசை தொடங்கும் போது வருவார். சுவாமியாரைத் தரிசிப்பார் பின்பு சுவாமியார் பேசுமுன் சென்றுவிடுவார். இப்பொழுது கல்விப்பணிப்பாளரான பின்பு முன்பிலும் வேலைகள் கூடியிருந்தன. முன்பு ஒரு பாடசாலையை நிர்வகித்த அவர் தற்பொழுது நூற்றுக்கணக்கான பாடசாலைகளை நிர்வகிக்கிறார். அப்படியிருந்தும் அவர் ஆரூரனின் பேச்சைக் கேட்பதற்காக வந்திருந்தார்.

சரியாக ஐந்து மணிக்கு ஆரூரன் மேடையில் ஏறினான்

“வேதகாலம் முதல் இன்றுவரை கடவுள் வழிபாடு கோயில்களில் தான் நடைபெற்று வருகிறது. வேதகாலம் முதல் இன்று வரை மக்கள் தமது தேவைகளைக் கோரிக்கைகளாகக் கடவுளர்க்கு விடுத்துக் கொண்டே இருக்கின்றனர். வேத காலத்தில் மக்கள் இந்திரனை “ நோயில்லாமல் நாங்கள் நெடுங்காலம் வாழ வேண்டும் எல்லா நாட்களும் மகிழ்ச்சி நிறைந்ததாக இருத்தல் வேண்டும் மனத்திற்குச் சாந்தி கிடைத்தல் வேண்டும். நாட்டில் அமைதி நிலவ வேண்டும். உயிர்களைப் பசியும் துன்பமும் வருத்தக்கூடாது” என்று வணங்கினர். அவர்களைப் போலவே இன்றும் மக்கள் கடவுள்களிடம் கோரிக்கை விட்டவண்ணம் இருக்கின்றனர். பலவீனத்திலும் பயத்தினாலும் துன்பம் வந்த காலத்திலும் தான் மக்களுக்குக் கடவுளின் மீது நம்பிக்கை ஏற்படுகிறது. அப்படியான கடவுள் நம்பிக்கை நாம் நினைத்த பலனைத் தராது. கோரிக்கை இல்லாது வணங்குபவன் பெரும் பலனை அனுபவிப்பான். கோரிக்கையுடன் வணங்குபவன் தான் கேட்டதை மட்டுமே பெறுவான். உலகில் வாழும் உயிர்களுக்குத் தந்தையும் தாயுமாகச் சிவன் இருக்கின்றார். அதனால் தான் அவர் அர்த்த நாரீஸ்வரராக இருக்கின்றார். அப்படித் தாயும் தந்தையுமாக இருக்கும் கடவுள் குழந்தைகளுக்கு எப்பெப்போ என்னென்ன தேவையென அறிந்து அப்பப்போ அதையதைக் கொடுக்கிறார். பக்தர்களின் வேண்டுகோளுக்காக இயற்கையைக்கூட மாற்றும் இரக்கம் மிக்கவர் கடவுள், மார்க்கண்டேயருக்குப் பதினாறு வயதுவரை மட்டும் வாழ வரமருளிய கடவுள் பதினாறு வயது முடிந்தன்று மார்க்கண்டேயரது வேண்டுகோளையும் அவரின் கரம்பட்ட புனிதத்தன்மையையும் உணர்ந்து இயமனைக் காலால் உதைத்தார். இதிலிருந்து கடவுள் இரக்கமுள்ளவர் என்பதை நாம் புரிந்து கொள்ள முடியும்.

“தொடர்ந்து வெற்றியடையும் போது வெற்றியடைபவனுடன் சேர்ந்து சமூகத்தினரும் வெற்றியடைபவனின் வெற்றியை அவனது திறமையென்றும் அதிஷ்டம் என்றும் கூறுகின்றனர். ஆயிரத்தில் ஒருவன்தான் கடவுளின் செயல் என்கின்றான். அதனால் அவன் தொடர்ந்து வெற்றியடைந்து கொண்டிருக்கின்றான். தோல்வி அடைபவர்கள் தோல்வியின் பின்பு தான் கோயிலுக்குச் செல்கிறாகள். வெற்றியடைந்ததும் கோயிலுக்குச் செல்லாமைக்குக் காரணம், தன்னிலுள்ள

திறமைகள் மீதுள்ள நம்பிக்கைதான். கடவுள் எல்லாம் அறிந்தவர். எல்லாம் வல்லவர். அவரது சிருஷ்டியில் எவ்வளவு அற்புதங்கள் இருக்கின்றன தெரியுமா...? எத்தனை கோடி மனிதர்கள் உலகில் வாழ்கின்றார்கள். அப்படியிருந்தும் ஒருவனைப் போல இன்னொருவன் இல்லை, ஒருவனது குணத்தைப் போல இன்னொருவனது குணம் இல்லை. பறவைகளில் காகங்கள் யாவும் ஒரே நிறத்தையுடையன, ஆனால் அவை தமது உறவுகளை அடையாளங்கண்டு கொள்கின்றன. பிறந்த கன்று தாய்ப்பசுவை, பசுக்கூட்டத்தின் மத்தியில் இனங்கண்டு பால் குடிக்கும் வல்லமை உள்ளது. இதை எல்லாம் படைத்தவர் கடவுள் சமய தத்துவங்கள் யாவும் மனித வாழ்விற்கு உதவியளிக்கும் விஞ்ஞானக் கோட்பாடுகள். அதைப் புரியாதவர்கள் தான் அவற்றை மூடநம்பிக்கை என்கின்றனர்.... ''மிகவும் உற்சாகமாக அழகு தமிழில் ஏற்ற இறக்கங்களுடன் பேசிக்கொண்டிருந்தான் ஆரூரன் சபையோர் மெய்மறந்து கேட்டுக் கொண்டிருந்தனர். அப்பொழுது தணிகாசலம் அவசரஅவசரமாக வந்து அமர்ந்தார் கனகனுக்கு நெடுகக் காணிப்பிரச்சினை. அதனால் அருமையான பேச்சைக் கேட்க முடியவில்லை'' என்றார்.

“ பேசும் போது கேட்பவர்களைக் கவரக் கூடியதாகவும், கேட்காதவருக்கு கேட்கவேண்டும் என்ற ஆவலைத்தூண்டக்கூடிய தாகவும் அமைவது தான் சிறந்த பேச்சு வன்மை. என்பார்கள். ஆரூரன் சிறந்த பேச்சாளன் என்பதை நிருபித்து விட்டான்'' என்றார் விக்கினேஸ்வரமூர்த்தி.

**643. கேட்டார்ப் பிணிக்கும் தகைஅவாய்க் கேளாரும்**
**வேட்ப மொழிவதாம் சொல்.**

பேசும்போது கேட்பவர்களைக் கவரக் கூடியதாகவும், கேட்காதவர்களைக் கேட்க விரும்புமாறும் பேசப்படுவது பேச்சு வன்மையாகும்.

## சொல்வன்மையின் சிறப்பு

‘விஞ்ஞானக் கோட்பாடுகள் பலவற்றை இந்து மதம் தன்னகத்தே கொண்டது. புலால் உண்ணக்கூடாதென்று வலியுறுத்துவது இந்துமதம். அதை இன்று உலகம் கைக்கொள்கின்றது. புலாலால் தான் நோய்கள் பலவும் வருகின்றன. கற்பூரத்தை இரண்டாயிரம் ஆண்டுகளாக இந்துக்கள் கொழுத்துகின்றனர். கற்பூரப்புகை காற்றைச் சுத்தப்படுதிதுகின்றது. தீர்த்தம் மருத்துவக் கலவை. மேலைத்தேச மருந்துகளை நம்பிய பலர் இப்போது நாட்டு வைத்தியத்தை நாடியுள்ளனர். இப்படிப் பலவற்றைச் சொல்லிக்கொண்டே இருக்கலாம். முக்கியமாக இந்து மதம் பெண்ணைப் போற்றுகிறது. பெண் ஒழுக்கமாக இல்லாவிட்டால் குடும்பம் மட்டுமல்ல நாடும் நோயாளியாகி விடும். பூமி,ஆறு,கடல், ஆகாயம் இப்படியாக இறைவனின் கொடைகளையெல்லாம் இந்துக்கள் பெண்ணாக நினைத்து வணங்கினர். புராணங்களும், இதிகாசங்களும் உயர்ந்த நோக்கங்களையும் வாழ்க்கை நடைமுறைகளையும் இந்து கலாச்சாரத்தையும்

போதிக்கின்றன. இவற்றில் பெண்கள் போற்றப்படுகின்றனர். பெண்களுக்கென்று தனியான அறைகள் அமைத்துக் கொடுத்து நாகரிகத்தின் உச்சியில் வாழ்ந்தவர்கள் இந்துக்கள். பூமியில் பிறந்த பெண்கள் பலர் தெய்வங்களாகப் பூசிக்கப்படுகின்றனர். இந்தவகையில் இப்பொழுது நாகரிக மேம்பாடு என்று சொ்லலிக் கொண்டு பெண்கள் தமது வாழ்க்கையைச் சீரழித்துக் கொள்ளுகின்றனர். அரைகுறை ஆடைகள் அணிவதுதான் நாகரிகம் என்றால், ஆதிமனிதன் தான் மிகவும் நாகரீமானவன். ஏனெனில் ஆதி மனிதன் ஆடைகளை அணியவில்லை. பெண்கள் ஒவ்வோர் இடங்களுக்கும் எப்படியான உடைகள் அணிய வேண்டும் என்று இந்து மதம் விரிவாகக் கூறுகிறது. இந்துமதத்தின் கோட்பாடுகள் மனித மேம்பாட்டிற்கு வித்திடுகின்றன. வாழ்க்கை என்பது உண்டு மகிழ்வது அல்ல் உழைத்துச் சாப்பிடுவதல்ல. அப்படியானால் வாழ்க்கையென்பது என்ன என்று கேட்பீர்கள். புத்தகத்தைப் படிப்பதன் மூலம் வாழ்க்கையை அறிந்து கொள்ள முடியாது. கல்வி கற்பதன் மூலமும் வாழ்க்கையை அறிந்து கொள்ள முடியாது. வேறு யாரும் சொல்லித்தரவும் முடியாது. வாழ்க்கை என்பது இதயத்திலிருந்து உற்பத்தியாகுதல் வேண்டும். அப்படி உருவாகினால்தான் நல்லவற்றைச் சிந்திக்க முடியும். நல்லவற்றைச் செய்ய முடியும். யார் துன்பப்பட்டாலும் அவர்படும் துன்பத்தை நீக்க வேண்டும். யாரொருவன் கற்கவில்லையோ அவனைக் கற்பிக்க நடவடிக்கையெடுத்தல் வேண்டும். இதுதான் வாழ்க்கை. மரணம் வரும் வேளையில் கூடப் பிறரின் துன்பத்தைப் போக்குவதைப் பற்றிச் சிந்திப்பவனே உன்னதமான வாழ்க்கையை அனுபவித்தவனாகக் கொள்ளப்படுவான். எல்லாவற்றையும் விட்டுவிட்டுத்தான் உயிர் உடலைவிட்டுப் போகப் போகிறது. உயிரற்ற உடலுக்கு எதுவுமே சொந்தமாக இராது. இறந்ததும் கூடியழுவார்கள் துயரத்தால் மயங்குவார்கள் நான்கு நாட்களில் சற்றுக்குறைந்த துயரம் நான்குவருடங்களில் இல்லாமற் போய்விடும். அதன்பின் அப்படி ஒருவர் இருந்ததாகவே யாருக்கும் நினைவு இராது. இதுதான் வாழ்க்கை் இதுதான் இயற்கை. இதை உணர்ந்தவன் தனக்காக வாழ மாட்டான். இன்றைய மனிதன் அமைதியைத் தேடி எங்கும் அலைகிறான். “அமைதியான இடம் இல்லை. ஐந்து நிமிடம் நிம்மதியாக இருக்க” என்று புலம்புகிறான். சண்டைகளும் சச்சரவுகளும் அவனிதயத்தில் எரிமலையாகக் குமுறுகின்றன. இதிலிருந்து எப்படித் தப்புவது, அமைதியை எப்படி அடைவதென்று தவியாகத் தவிக்கிறான். அவனால் ஒருபோதும் நிம்மதியாக இருக்க முடிவதில்லை. மனம் அமைதி அடைய வேண்டுமானால், பொன்னையும் மண்ணையும் வேறாக நினைக்கக் கூடாது பற்றுக்களை அறுத்தால் நிம்மதி வரும் உள்ளதைப் போதுமென்று நினைத்தால் நிம்மதி வரும் அமைதியும், சாந்தமும், நிம்மதியும், அன்பும், பண்பும், பகையும், பொறாமையும், உனக்குள்ளேயே உள்ளன. பகையையும் பொறாமையையும் நீக்கி விட்டால் எல்லாம் உனக்குக் கிடைக்கும். அதுவும் நீ எங்கிருக்கிறாயோ அங்கேயே கிடைக்கும். அதைத்தேடி அலைய வேண்டியதில்லை. நாரதர் கொடுத்த மாங்கனிக்காக முருகன் உலகை வலம் வந்தான். விநாயகர் இருந்த இடத்தில் இருந்து கொண்டே உலகை வலம் வந்து மாங்கனியைப் பெற்றார். இதிலிருந்து விளங்குவது என்ன..?” ஆரூரன் உணர்ச்சிவசப்பட்டு பேசிக்கொண்டிருந்தான்

தணிகாசலம் மெய்மறந்து அவனது பேச்சைக் கேட்டுக்கொண்டிருந்தார். சுவாமியாரின் உதடுகளில் புன்னகை தவழ்ந்தது.

“சொற்களின் வலிமையை அறிந்து, கேட்பவர்களின் தகுதியையும் அறிந்து சொற்களைச் சொல்லுதல் வேண்டும். அந்தச் சொல் வன்மையைவிடச் சிறந்த அறமோ பொருளோ இல்லை. இப்போது ஆரூரன் தேர்ச்சியடைந்து விட்டான்”. என்றார் சுவாமியார். அதைக் கேட்டுப் பண்டிதர் மகிழ்ந்தார்.

**644. திறன் அறிந்து சொல்லுக சொல்லை அறனும்**
**பொருளும் அதனின்ஊஉங்கு இல்.**

சொற்களின் அர்த்தத்தை உணர்ந்து சொல்லைச் சொல்லுதல் வேண்டும். அதத்கைய சொல்வன்மையை விடச் சிறந்த அறமும் இல்லை; பொருளும் இல்லை.

## வெல்லும் சொல்

“விநாயகர்தான் இருந்த இடத்தை விட்டு மெல்ல எழுந்து தனது தாயையும் தந்தையையும் வணங்கியபடி சுற்றி வந்து விட்டு “பிள்ளைகளின் உலகம் பெற்றோர்களே. “அன்னையும் பிதாவும் முன்னறி தெய்வம்” என்றொரு சத்திய வாக்கும் உண்டு. அத்துடன் சகல அண்டங்களும் உங்களுக்குள்ளேயே அடங்கியுள்ளன. முழுமுதற் கடவுளாகிய உங்கள் இருவரையும் சுற்றி வந்தால் உலகத்தைச் சுற்றியதற்குச் சரியானது” என்றார் விநாயகர்

“தான் சொல்கின்ற சொல்லை வெல்லக்கூடிய சொல் வேறெதுவுமில்லை என்று அறிந்த பிறகு விநாயகர் சொன்னதால்தான் சிவபெருமான் அதையேற்று விநாயகருக்கு மாங்கனியைக் கொடுத்தார். இவ்வரலாற்றை உண்மையோ பொய்யோ என நாம் ஆராயத் தேவையில்லை. அவ்வார்த்தைகளில் பொதிந்துள்ள தத்துவத்தை ஆராய்தல் வேண்டும். நாம் பேசும் போது ஒவ்வொரு சொல்லையும் நன்கு ஆராய்ந்து அதன் அர்த்தத்தைப் புரிந்த பின்பு பேசினால், எந்தவிதமான தீய விளைவுகளும் ஏற்படமாட்டாது. எப்பொழுதும் உண்மையைப் பேசுதல் வேண்டும். உயிர்களிடத்தில் அன்புடன் இருத்தல் வேண்டும். நேர்மையுடன் வாழ வேண்டும். இந்த மூன்றையும் கடைப்பிடித்தால் உன்னை யாராலும் வெல்ல முடியாது. அப்படியானவர்கள் மரணத்திற்குக்கூட அஞ்சமாட்டார்கள். ஒருவன் கூறும் சொற்கள் செயல்களைவிட வலிமைபெற்றவை. அதனால் சொல்லும் சொற்களை ஆராய்ந்த பின்பே சொல்லப்பழகுதல் வேண்டும். இதைப் புரிந்து கொண்டால் வாழ்க்கை இன்பமாக இருக்கும். இறைவன் உலகைப் படைத்தான். மனிதன் உலகிற்குத் தேவையானவற்றை உருவாக்கிக் கொண்டிருக்கிறானே தவிர மனிதனை வேறு யாரும் உருவாக்குவதில்லை. மனிதன் மனிதனாக வாழப் பழகிக் கொள்ளுதல் வேண்டும். அப்படியவன் பழகிக் கொண்டால் எல்லாச் சௌபாக்கியங்களும் அவனைத் தாமாகவே வந்தடையும். அப்படி வந்தடைந்தால் மகத்தான செயல்களையெல்லாம் உங்களால்

செய்ய முடியும். நல்ல வார்த்தைகளால்தான் மனிதன் பலம் பெறுவான். தீய வார்த்தைகள் அவனைப் பலவீனனாக்கும். எனவே நல்ல வார்த்தைகளைத் தேர்ந்தெடுத்து பேசகற்றுக் கொள்ளுங்கள். அப்படிப்பேசக் கற்றுக் கொண்டீர்களானால் நீங்கள் புண்ணியவான்கள் ஆகிவிடுவீர்கள்'' என்று பேசிக்கொண்டிருந்தான் ஆரூரன். மக்கள் மெய்மறந்து கேட்டுக்கொண்டிருந்தனர்.

''ஆரூரன் நன்றாகக் கற்றுவிட்டான். அவன் பேசும் வார்த்தைகள் எவ்வளவு அர்த்முள்ளவைகளாக இருக்கின்றன. தான் சொல்கின்ற சொல்லை வெல்லக்கூடிய வேறு சொல் எதுவும் இல்லையென்பதை நன்கு ஆராய்ந்து அறிந்த பின்பே பேசுகிறான்'' என்றார் வேலாயுதபிள்ளை.

'' பிறகு கதைக்கலாம். இப்போ பேச்சைக் கேள். இன்று பல வேலைகள் இருந்தும் அவற்றையெல்லாம் ஒதுக்கி வைத்துவிட்டு ஆரூரனின் பேச்சைக் கேட்பதற்காக வந்திருக்கின்றேன். குழப்பாதே. அருகில் இருப்பவர்கள் முகம் சுளிப்பது உனக்குத் தெரியவில்லையா..?''. என்று கேட்டார் தணிகாசலம்.

''ஒருவன் நல்ல வார்த்தைகளைப் பேசினால் உலகம் அவனது சுற்றமாகிவிடும். ஒரு தனி மனிதனைச் சமூகத்தில் இறுகப் பிணைத்திருப்பது அவன் பேசும் வார்த்தைகளே ஆகும். பெரியவர்கள் ஒருவனை அவன் பேசும் வார்த்தைகளைக் கொண்டே மதிப்பிடுகின்றனர். ஒருவனை அவன் பேசும் வார்த்தைகள் தான் உயர்த்தி வைப்பதும் தாழ்த்தி வைப்பதும். எனவே அன்பானவர்களே! நீங்கள் மற்றவர்களுடன் பேசும் போது உங்கள் வார்த்தைகளை மிகவும் அவதானத்துடன் பேசுங்கள்''. என்று கூறித்தனது உரையை முடித்தான் ஆரூரன்.

மக்கள் கரகோசஞ் செய்தனர். தனபாலசிங்கம் ஒரு மாலையைக் கொண்டு சென்று ஆரூரனுக்குப் போட்டார். குருக்கள் காளாஞ்சி கொண்டு வந்து ஆரூரனுக்குக் கொடுத்தார்.

ஆரூரன் மாலையைக் கழற்றிக்கொண்டு வந்து சுவாமியாரின் அருகில் இருந்த பண்டிதரின் பாதங்களில் வைத்து வணங்கினான்.

''ஐயா, எனக்கு இவ்வளவு புகழ் வரக்காரணமானவர் நீங்கள்தான். நீங்கள் இல்லாவிட்டால் என்னைத் தூசாகக்கூட யாரும் மதிக்க மாட்டார்கள். நீங்கள் சொல்லின் தன்மையை அறிந்து கற்பித்தமையால் தான் நான் சொல்கின்ற சொல்லை வெல்லக்கூடிய வேறு சொல் எதுவும் இல்லாதிருக்கின்றது. இதற்கு நான் என்ன கைம்மாறு செய்யப் போகிறேன்?'' என்றான். அவனது கண்கள் கலங்கின.

''ஆரூரா, நான் கற்பித்ததை விட நீ கற்றதுதான் அதிகம். அத்துடன் சீடன் புகழ்பெற்றால் ஆசிரியர் மனம் மகிழ்வர் புகழ் பெறுவார். இதுதான் சீடன் குருவுக்குச் செய்யும் உபகாரம். உன்னைப் போல சிறந்த மாணவனைப் பெற்ற நான்தான் பாக்கியசாலி''. என்றார் பண்டிதர்.

**645. சொல்லுக சொல்லைப் பிறிது ஓர்சொல் அச்சொல்லை**
**வெல்லும் சொல் இன்மை அறிந்து.**

தான் சொல்கின்ற சொல்லை வெல்லக் கூடிய இன்னொரு சொல் இல்லாதிருப்பதை அறிந்த பிறகே தான் சொல்லக் கருதியதைச் சொல்ல வேண்டும்.

## குற்றமற்றவர்களின் சிறப்புக்கள்

தணிகாசலமும் கனகலிங்கமும் வேலாயுதபிள்ளையும் விக்னேஸ்வரமூர்த்தியின் வீட்டுக்கு மாலை ஐந்து மணிக்குச் சென்றனர். அப்பொழுது விக்னேஸ்வரமூர்த்தி கல்வித்திணைக்களத்தால் வரவில்லை. அதனால் அவர்கள் அவரது வீட்டிற்கு முன்பாக இருந்த நாவலர் ஸ்ரீவித்தியா மகாகணபதி சனசமூக நிலையத்திற்குச் சென்று பத்திரிகைகளை வாசித்தனர். சரியாக ஆறு முப்பதிற்கு விக்னேஸ்வரமூர்த்தி வீட்டிற்கு வந்தார். அவர் வந்ததும் மூவரும் விக்னேஸ்வர மூர்த்தியின் வீட்டுக்கு வந்தனர். விக்னேஸ்வரமூர்த்தி அவர்களை மகிழ்வுடன் வரவேற்றார் ‘‘ஐந்து மணிக்கு வந்ததாக மனைவி சொன்னா’’ என்றார் விக்னேஸ்வரமூர்த்தி.

‘‘எப்படிப் புதுவேலை’’ என்று கேட்டார் தணிகாசலம்.

விக்னேஸ்வர மூர்த்தி சிரித்தார் பின் சொன்னார் ‘‘கடமையுணர்வுடன் வேலை செய்பவன் எந்த வேலையையும் சிறப்பாகச் செய்வான்’’ என்றார்.

‘‘ஓ... நீங்கள் எதையும் சிறப்பாகச் செய்வீர்கள். உங்களால் செயல்கள் சிறப்படையுமே தவிர செயல்களால் நீங்கள் சிறப்படைவதில்லை’’ என்ற தணிகாசலம் சற்று நிறுத்திவிட்டுச் சொன்னார் ‘‘அபிவிருத்திச் சபையினர் நீங்கள் செய்த வேலைகளைப் பாராட்டி ஒரு விழா வைக்கத் தீர்மானித்துள்ளனர். உங்களுக்கு வசதியான ஒரு திகதியைச் சொன்னால் நாம் ஏற்பாடு செய்யலாம்’’

‘‘தணி, உங்கள் மூவரைப்பற்றியும் எனக்குத் தெரியும். உங்களுடன் நான் கொண்ட உறவு குலேசருடன் கண்ணபிரான் கொண்ட உறவுக்குச் சமனானது. குலேசர் புல்விதையில் அவல் செய்து கொண்டு சென்று கொடுத்ததைக் கண்ணபிரான் அகமகிழ்வுடன் ஏற்பதைப் போல உங்களது வார்த்தைகளே எனக்கு அமிழ்தாகச் சுவைக்கும். நாம் என்னதான் சேவை செய்தாலும் இவ்வூரில் உள்ள அநேகர் என்முன்னால் நடித்தமை உங்களுக்குத் தெரியும். ஆசிரியர்களும் சரி பெருந்தொகையான பெற்றோரும் சரி எனக்கு மேலிடத்திலிருந்த மதிப்புக் காரணமாகப் பயந்து நடந்தனரே தவிர விசுவாசமாக நடந்ததாக நான் ஏற்றுக்கொள்ள மாட்டேன். எனது கண்டிப்பும், நேர்மையான நடத்தையும், துணிவும்தான் பாடசாலையை இந்தளவிற்கு உயர்த்தியது. கல்வித் திணைக்களத்திற்கு இங்குள்ள பலர் பல பொய்யான குற்றங்களைக்கூறி முறையீடு செய்த போதும் அவர்களால் அவற்றை நிருபிக்க முடியவில்லை. வாழ்க்கையில் வெற்றி பெற்ற ஒவ்வொருவரினது

மனங்களிலும் மாறாத வடுக்கள் பல இருக்கும். அளவற்ற நேர்மையும் சிரத்தையும் கொண்டவனால்தான் செயற்கரிய செயல்களைச் செய்துமுடிக்க முடியும். நீங்கள் மூவரும் அர்ப்பணிப்புடன் உங்கள் வீட்டு வேலைகளை உதறித்தள்ளிவிட்டு என்னுடன் பூரணமாக ஒத்துழைத்தீர்கள். அதை என்னால் மறக்க முடியாது. உப அதிபர் பதவி கொடுத்த முழு விபரமும் உங்களுக்குத் தெரியும். உங்களிடம் வந்து குறைப்பட்டவர்கள் எத்தனைபேர். உப அதிபர் பல விடயங்களில் எனக்கு முரண்பாடாக நடந்தபோதும் அவரால் எதுவும் செய்ய முடியவில்லை. தற்பொழுது அவர் தனது பெயரும் புகழும் விளங்க வேண்டுமென்று அக்கறைப்படுகிறாரே தவிர என்னுடன் விசுவாசமாக நடந்துகொள்ளவில்லை. அவரது சில நடவடிக்கைகள் எனக்கு மட்டுமல்ல பாடசாலைச் சமூகத்தினருக்கும் பிடிப்பதில்லை. அவற்றைச் சொன்னால் அவருக்குப் பிடிப்பதுமில்லை. பரீட்சைப் பெறுபேறுகளல்லக் கல்வி. அதைவிட எத்தனையோ விடங்கள் இருக்கு..''

''உண்மைதான். இருப்பினும் உங்கள் சேவையை நாம் பாராட்ட வேண்டும்'' என்றார் வேலாயுதபிள்ளை.

''இப்பொழுது பாராட்டுங்கள் கேட்கிறேன். மனதில் ஒன்றை வைத்துக்கொண்டு உதட்டில் பூமாரி சொரிவது எனக்குப்பிடிப்பதில்லை. குற்றங்களை நேரிற்சொல்ல வேண்டும். எனக்குப் பலவழிகளாலும் துரோகம் இழைத்த ஒருவர் நேற்று வீட்டுக்கு வந்து விம்மி விம்மி அழுது தனக்கு நேர்ந்தவற்றைச் சொன்னார். இதற்கு முன்பு தனது அதிகாரத்தால் என்னைப் பதினாறு வருடங்கள் ஒரே பாடசாலையில் இருக்கப் பண்ணிய அதிகாரி மனம் வருந்தினார். காலம் எல்லாவற்றுக்கும் விடை தரும். வேண்டுமானால் உங்கள் மூவரினதும் வீட்டிற்கு வருகிறேன். உணவு தாருங்கள்'' என்றார் விக்னேஸ்வரமூர்த்தி .

தணிகாசலம் சிரித்தார். ''நாங்கள் பெரும் விருந்து ஒன்று வைக்கத்தான் போகிறோம். இது சம்பிரதாயமானது. கட்டாயம் நீங்கள் ஒத்தக்கொள்ளல் வேண்டும். பலர் உங்களைக் குறை கூறினாலும் சிலராவது அன்பு வைத்துள்ளார்கள். அதை நீங்கள் எற்க வேண்டும்'' என்றார் வேலாயுதபிள்ளை.

''சரி.. சரி.. வாற சனிக்கிழமை வையுங்கோ. ஆனால் ஒன்று, பரிசில்கள் எவையும் எனக்குத்தரக்கூடாது. அது நான் செய்த சேவைக்கு அவமானமானதாய் இருக்கும்'' என்றார்.

''நாம் அபிவிருத்திச் சங்கத்தால் பாராட்டுவிழாச் செய்யாவிட்டால் மக்கள் பரிகசிப்பர். எமதுநிலையைச் சற்றுச் சிந்தித்தப் பாருங்கள்'' என்றார் தணிகாசலம்.

''வர்றன் என்று சொல்லிவிட்டேன் தானே..'' என்றார் விக்னேஸ்வரமூர்த்தி.

மூவரும் விக்னேஸ்வரமூர்த்தியிடம் விடைபெற்றுக் கொண்டு வெளியே வந்தனர்.

''கேட்கின்றவர்களுக்கு விரும்பம் உண்டாகும்படி தனது எண்ணங்களைச் சொல்லி, பிறர் சொல்வதிலுள்ள நியாயங்களை ஆராய்ந்து ஏற்றுக் கொள்ளும் உயர்ந்த பண்பு உடையவர் விக்கினேஸ்வரமூர்த்தி. அதனால்தான் அவரும் உயர்ந்தார் பாடசாலையும் உயர்ந்தது'' என்றார் தணிகாசலம்.

“அதிபா் சொன்னது முற்றிலும் சரி. அவருக்குப் பயந்துதான் இப்பவும் ஆசிரியா்கள் கடமை புரிகின்றனா். முன்பு அவா் கடமை புரியாத பலரை இடமாற்றம் செய்வித்தவா். இப்பவும் செய்வாா். பலா் அவருக்குப் பயந்துதானே அதிபா் தரமில்லாத உப அதிபரை அதிபராய் ஏற்றனா். அதைவிட எத்தனை மொட்டைக்கடிதம் போட்டவை. அந்த மனிஷன் தான் நினைத்ததைத்தான் செய்யும். உயிரைக் கொடுத்தும் தான் நினைத்ததை நிலைநாட்டும்” என்றாா் வேலாயுதபிள்ளை.

**646. வேட்பத்தாம் சொல்லிப் பிறா்சொல் பயன்கோடல்**
**மாட்சியின் மாசுஅற்றாா் கோள்.**

பிறா் விரும்பும் படியாகத் தனது கருத்துக்களைச் சொல்லி, பிறா் சொல்லும் போது அவா் சொல்வதில் உள்ள பயனை ஆரய்ந்து ஏற்றுக் கொள்ளுவது மாசற்ற பெரியவா்களின் பண்பாகும்.

## வெல்லமுடியாதவன்

அன்று சனிக்கிழமை கணபதி மத்தி மகாவித்தியாலயப் பிரதான மண்டபத்தில் பெற்றோா்கூடியிருந்தனா். பதினாறு வருட காலம் அப்பாடசாலையில் அதிபராகப் பணிபுரிந்த விக்னேஸ்வரமூா்திக்குச் சேவை நலம் பாராட்டு விழா தணிகாசலத்தின் தலைமையில் நடைபெற்றுக்கொண்டிருந்தது.

இளைப்பாறிய கல்விப்பணிப்பாளா் சுந்தரலிங்கம் உரையாற்றிக்கொண்டிருந்தாா் “திரு விக்னேஸ்வரமூா்த்தியைப் பற்றிப் பேசுவதானால் நாம் வாா்த்தைகளைத் தேடுதல் வேண்டும். அந்தளவிற்கு ஒப்புயா்வில்லாத உயா்ந்த சேவையாளன் அவா். அவரது திறமையை அறிந்து பதினேழு வருடங்களுக்கு முன்பு அதிபா் தரமில்லாத அவருக்கு நான் அதிபா் பதவியை வழங்கி இப்பாடசாலைக்கு அதிபராக நியமனஞ் செய்தேன். அதன்பின் வெளிநாடான்றிற்குப் புலமைப்பரிசில்பெற்றுச் சென்றேன். அதிபா் தரம் இல்லாததாலும் வேறு பல காரணங்களுக்காகவும் அவரை மகா வித்தியாலயாத்திற்குச் சாதாரண ஆசிரியராக இடம் மாற்றினா். நான் ஒருவருடம் முடிந்து வந்து பதவியேற்றதும் அவரை மீண்டும் இப்பாடசாலைக்கு அதிபராக நியமித்தேன். பதினாறு ஆண்டுகள் மிகவும் உன்னதமான சேவையை அவா் செய்தாா். அதனால் இப்பாடசாலை மிகவும் உயா்ந்த நிலையை அடைந்துள்ளது. அன்பான சுபாபமும், எளிமையும், அஞ்சாத தன்மையும் கொண்ட விக்னேஸ்வரமூா்த்தியின் வரலாறு ஒரு சரித்திரம். அதுயாவும் உங்களுக்குத் தெரியும். எனவே அவரை வாழ்த்தி விடைபெறுகிறேன்” என்றாா்.

“அதிபா் அவா்கள் ஏற்புரை நிகழ்த்துவாா்” என்று தலைவா் கூறிவிட்டு அமா்ந்ததும் விக்னேஸ்வரமூா்த்தி எழுந்து சபையை வணங்கினாா் “இன்று எனது

சேவையைப் பாராட்டுகிறீர்கள். இது தேவைதானா....? என்று எனது மனம் கேட்கிறது. நான் முதலில் அதிபராக நியமிக்கப்பட்டதும் நூற்றி இருபதுவருடங்களுக்கு மேலாக இயங்கிக் கொண்டிருக்கும் இப்பாடசாலை மாணவர்களுக்கு நீர் வசதி செய்ய முற்பட்டபோது இடமாற்றம் பெற்றேன். மறுவாரம் முன்னால் இருக்கும் வயலில் உள்ள கிணற்றில் மாணவன் ஒருவன் தவறி விழுந்து உயிரிழந்தான். பின்பு நான் மீண்டும் இப்பாடசாலைக்கு அதிபராக நியமிக்கப்பட்டேன். எனது சேவையால் எமது பாடசாலைக்கு அருகில் உள்ள எட்டுப் பாடசாலைகளுக்கும், அயல் கிராமத்திலுள்ள பத்துப் பாடசாலைகளுக்கும் மாணவர்கள் செல்லவில்லை. அதனால் பல பிரமுகர்கள் என்னைப் பிள்ளைகளைச் சேர்க்கவேண்டாமெனக் கோரினர். கல்விப் பணிப்பாளரிடமும் முறையிட்டனர். அவர் ‘‘விக்னேஸ்வரமூர்த்தியை எல்லாப் பாடசாலைகளுக்கும் அதிபராக நியமித்தால் தான் அப்பிரச்சினை தீரும்’’ என்று விகடமாகச் சொன்னார். இப்பாடசாலையை நான் முள்ளில் நடப்பதைப்போல நடந்து தான் முன்னேற்றினேன். ஆதரிப்பவர்களைவிட எதிர்ப்பவர்களே கூடுதலாக இருந்தனர். அதுவும் மறைமுகமாக எதிர்ப்பவர்களே பலர். என்னிடம் பல்வேறுவிதமான உதவிகளைப் பெறுவார்கள் தம்மை நம்பிக்கையுடையவர்களாகக் காட்டிக்கொள்வார்கள். ஆனால் மேலதிகாரிகளிடம் நடக்காதவற்றையும் கூறுவார்கள். நான் யாரையும் நம்புவதில்லை. அத்துடன் இரகசியமான எந்தவிடயத்தையும் யாரிடனும் கலந்தாலோசிப்பதுமில்லை. ஒன்று நடைபெறும். இன்னொன்று நடைபெறவுள்ளதாகக் கூறுவேன். பதினாறு வருடங்களிலும் நடைபெற்றவை எனது மனதில் உள்ளன. எதையும் நான் மறக்கவில்லை. பேரூர் தெரியாது பாடசாலை இயங்கிக்கொண்டிருந்த வேளையில் எமக்கு உதவியோர் பலர். பதினைந்து வருடங்களுக்கு முன்பு நாம் உடற்பயிற்சிப் போட்டியில் மாவட்டத்தில் முதலிடம் பெற்றவேளையில் உதவியோர் பலர். மகாபாரத யுத்தத்தின் போது அணிலொன்று உதவிய கதையுண்டு. அதை மிகப் பெரிதாக மதித்து எழுதப்பட்டுள்ளது. அதுபோல பதினாறு ஆண்டுகள் என்னுடன் உடனிருந்து செயலாற்றியவர்களின் வரலாறு முழுவதையும் தொகுத்து வெளியிடவுள்ளேன். அப்பொழுது ஒளிவு மறைவின்றிச் சகல செய்திகளும் வெளிவரும்.

இன்று எனது சேவையைப் பாராட்டிப் பேசி, எனது சேவையை உணர்ந்து கொண்ட நல்லுள்ளங்கள் யாவருக்கும் நன்றிகூறி விடைபெறுகின்றேன்’’ என்றார் விக்னேஸ்வரமூர்த்தி.

‘‘இவ்வளவு நேரமும் அதிபர் அவர்கள் உரையாற்றினார்கள். அதிபர் அவர்கள் எப்பொழுதும் தனது கருத்தைப் பிறருக்குத் தெளிவாக எடுத்துக் கூறுவதில் வல்லவர். சொல்லும் பொழுது நன்கு திட்டமிட்டு, திட்டமிட்டவற்றை மறக்காமல் கூறக்கூடியவர். அத்துடன் சபைக்கு அஞ்சாதவராகவும் உள்ளவர். அதனால் தான் எந்தவிடயத்திலும் அவரை வெல்ல முடிவதில்லை. அவரின் எதிர்காலம் சிறப்படைய வேண்டுமென எல்லாம் வல்ல நாவலர் ஸ்ரீ வித்தியா மகா கணபதியைப் பிரார்த்தித்து இக்கூட்டத்தை நிறைவு செய்கிறேன்’’ என்றார் தணிகாசலம்.

**647. சொலல்வல்லன் சோர்வுஇலன் அஞ்சான் அவனை**

**இகல்வெல்லல் யார்க்கும் அரிது.**

தான் கருதியவற்றை விளங்கும்படியாகச் சொல்ல வல்லவனாகவும், சொல்ல நினைத்தவற்றை மறக்காமல் சொல்லக் கூடிய வனாகவும், சபைக்கு அஞ்சாதவனாகவும் இருப்பவனை யாரும் வெல்ல முடியாது.

## காத்திருக்கும்

''கூட்டம் முடிவடைந்ததும் நூற்றுக்கணக்கான மாணவர்கள் விக்னேஸ்வர மூர்தியைச் சூழ்ந்து நின்றனர். பலர் அவருக்கு மலர்மாலை சூடி விழுந்து வணங்கி ஆசி பெற்றனர்.

பழைய மாணவர்கள் பலர் பரிசுப்பொருட்களுடன் வந்து அவரிடம் பரிசுப்பொருட்களைக் கொடுத்தனர் ''ஐயா, நீங்கள் இப்பாடசாலைக்கு அதிபராக வந்த பின் இப்பாடசாலையில் கற்ற பலர் பெரிய பெரிய உத்தியோகங்களில் இருக்கின்றனர். அதற்கு முன்பு கற்றவர்கள் யார் நன்றாக இருக்கிறார்கள்?. கல்வியை விட எத்தனை விடயங்களை நீங்கள் எமக்குக் கற்பித்தீர்கள். அதனால்தான் நாம் இன்று சீரும் சிறப்புமாக இருக்கிறோம். எனது தந்தையார் உங்களை ஒருபோதும் மதிப்பதில்லை. அதனால் நான் அவரை மதிப்பதில்லை'' என்றான் ஒரு மாணவன்.

அதைக் கேட்டு விக்னேஸ்வரமூர்த்தி கலங்கிப் போனார் அவரது கண்கள் நிரம்பின் ''மகனே! தந்தையை மதிக்காதவன் கடவுளை வணங்கினாற் கூட பயன்பெற மாட்டான். ''தந்தை சொல் மிக்க மந்திரமில்லை'' என்று எம்முன்னோர் கூறியுள்ளனர். என் மீதுள்ள அபிமானத்தால் நீ தந்தையைக் கோபிக்க, அவர் உன்னை நான்தான் தூண்டிவிட்டு தன்னைத்தண்டிப்பதாக நினைப்பார். எனவே அவருடன் சமாதானமாக நடந்து கொள்'' என்றார்.

அந்த மாணவன் கண்கலங்கினான். அவனாற் பேசமுடியவில்லை. விம்மி விம்மி அழுதான். விக்னேஸ்வரமூர்த்தி அவனை ஆதரவுடன் தடவினார்.

''ஐயா, உங்களால்தான் நான் இந்த நிலைக்கு வந்தேன். வீட்டார் என்னைக் கவனிக்காததால் நான் பாடசாலைக்கு வருவதில்லை. நீங்கள் வீட்டுக்கு வந்து என்னை அழைத்து வந்து புத்திமதிகள் கூறிக் கற்பித்தமையால்தான் நான் இன்று வைத்தியராக கடமை புரிகிறேன். அதை நான் என் வாழ்நாளில் மறக்க மாட்டேன் என்றான் ஒரு மாணவன்.

''என்னுடைய மகள் கற்கும் போது பல பிரச்சினைகளுக்குட்பட்டாள். அவளைக் கடத்துவதற்காக எனது எதிரிகள் திட்டமிட்டனர். அதை முறியடித்து எனது வாழ்வை வளம்படுத்தியவர் நீங்கள்'' விம்மினான் மணிவண்ணன்.

“குடிகாரனாகத்திரிந்த என்னை திருத்தி மனிதனாக்கியது நீங்கள்தான்” கண்கலங்கினான் கணேசமூர்த்தி.

“விளையாட்டு மைதானக் கொள்ளவனவின் போது உங்களைப் பலர் ஏமாற்றியபோதும் நீங்கள் கலங்கவில்லை. அத்துடன் அஞ்சாது திடமான முடிவுகளை எடுத்து நடைமுறைப்படுத்தியமையால் தான் இன்று இப்பாடசாலை வளர்ந்தது. அதனால் நாமும் உயர்ந்தோம்” என்றான் இன்னொரு மாணவன்.

“மிகவும் திறமையான நிர்வாகி நீங்கள். உங்களது பதவியுயர்வு இப்பாடசாலைக்குப் பெரும் இழப்பு. உங்களை மாதிரிச் செயற்றிறன் உள்ளவர்கள் யார் இங்கே இருக்கிறார்கள்?. பலர் சம்பளத்திற்காகப் பாடசாலைக் கதவைத் திறந்து பூட்டுகிறார்கள்” என்றார் பரமேஸ்வரன்.

“இந்த ஊருக்கு நான் புதியவன். நான் சந்தித்த மாணவர்கள் எல்லோரும் உங்களைக் கடவுளாக எண்ணி வணங்குகிறார்கள். உங்களுக்காக எதையும் செய்யச் சித்தமாயிருக்கிறார்கள். நீங்கள் நல்லதொரு மாணவர் பரம்பரையை உருவாக்கி விட்டீர்கள். அப்படியொரு மாணவர் பரம்பரையை உருவாக்க எல்லோராலும் முடியாது” என்றார் கணநாதன்.

“சொற்கள் மந்திர சக்தி உடையவை. கருத்தக்களை ஒழுங்குபடுத்திச் சொல்ல வேண்டியவற்றை சொல்ல வேண்டிய முறைப்படி இனிமையாகச் சொன்னால் அதைக் கேட்டு இயங்க உலகம் சித்தமாக இருக்கும். அதிபர் செய்ய வேண்டிய செயல்களைப் பற்றி நன்கு சிந்தித்து, திட்டமிட்டு சொல்ல வேண்டிய முறைப்படி மிகவும் இனிமையாகத் தனது மாணவர்களுக்குச் சொல்வார். அதனால் மாணவர்கள் அவரின் சொல்லை வேதவாக்காக ஏற்றுச் செயற்படுவர். பாடசாலையில் மாணவர்களுக்கும் ஆசிரியர்களுக்கும், ஆசிரியர்களுக்கும் ஆசிரியர்களுக்கும் பிரச்சினைகள் வரும். அதையும் நல்ல முறையில் தீர்த்து வைத்து விடுவார். அவர் எதிரிகள் என்று யாரையும் நினைத்துப் பார்ப்பதில்லை பழிவாங்கியதுமில்லை. அவரைப் பழிவாங்க நினைப்பவர்கள் தான் பாதிப்படைவதுண்டு” என்றார் தணிகாசலம்.

“உண்மை உண்மை” என்றான் மணிவண்ணன்.

விக்னேஸ்வரமூர்த்தி அனைவரிடமும் விடைபெற்றார். பெற்றோரும் மாணவர்களும் அவருடன் அவரது வீட்டிற்குச் சென்றனர்.

வீட்டுக்குச் சென்ற எல்லோருக்கும் தேநீர் கொடுக்கும்படி மனைவிக்குச் சொன்னார் விக்னேஸ்வரமூர்த்தி. நூற்றுக்கணக்கானோர் இருக்க இடமில்லாததால் வீட்டு வளவிலும் ஒழுங்கையிலும் நின்றனர். அவர்கள் அவரிடமிருந்து ஒவ்வொருவராக விடைபெற்றுச் செல்ல வெகு நேரம் எடுத்தது.

**648. விரைந்து தொழில் கேட்கும் ஞாலம் நிரந்துஇனிது**
**சொல்லுதல் வல்லார்ப் பெறின்.**

கருத்துக்களை நன்கு ஒழுங்கு படுத்தி இனிமையாக அவற்றைச் சொல்லவல்லவனின் சொல்லைக் கேட்டு நடக்க உலகம் காத்துக் கொண்டிருக்கும்.

## நீண்டநேரம் பேசுவோர்

அன்று நாவலர் ஸ்ரீவித்தியா மகாகணபதி ஆலயத்தில் மகாசிவராத்திரி விழா கொண்டாடப்பட்டது. முதற் சாமப் பூசை முடிந்ததும் சுவாமியார் அருளுரை வழங்கினார் ‘‘அடியார்களே இன்று மகாசிவாராத்திரி. பல ஆயிரம் வருடங்களாகத் தேவர்களும் மனிதர்களும் இவ்விழாவைச் சிறப்பாகக் கொண்டாடி வருகிறார்கள். தேவருலகில் பிரம்மாவும் விஸ்ணுவும் தேவையில்லாத வார்த்தைகளை அளவுக்கதிகமாகப் பேசித் தம்முள் யார் பெரியவர்கள் என வாதிட்டனர். வாதம் முற்றி கைகலப்பானது. பல நாட்கள தொடர்ந்து இருவரும் போரிட்டனர். அப்பொழுது ஒரு பேரொளி அங்கு தோன்றியது. அத்துடன் ‘இவ் ஒளியின் அடியையும் முடியையும் தேடிக் கண்டு பிடிப்பவர்களே பெரியவர்’’ என்று ஓர் அசரீரியும் எழுந்தது. ஒளியின் அடியையும் முடியையும் தேடிய வரலாற்றுச் சிறப்பு மிக்கநாள்த் தான் சிவராத்தி’’

‘‘நாம் இறைவன் படைத்துள்ள எல்லாவற்றையும் அளவுக்கதிகமாக உபயோகிக்கக்கூடாது. எல்லாவற்றையும் ஒரு வரையறைக்குட்பட்டே அனுபவிக்க வேண்டும். அதிகமாக உணவு இருக்கிறது என்பதற்காக அளவுக்கதிகமாக உண்ணக்கூடாது. ‘‘அளவுக்கு மிஞ்சினால் அமிர்தமும் நஞ்சாகும்’’ என்பார்கள். இன்று மகாசிவராத்திரி நாள். இன்று முழுவதும் நாம் யாருடனும் பேசாமலிருந்து சிவனை வழிபடுவோமானால் நாம் விரும்பியன யாவும் கிடைக்கும். வார்த்தைகளால் பேசுவதை விடச் செயல்களை மனதால் நினைத்தாலும் நினைப்பவனுக்குக் கேடும் உண்டாகும். நோயற்ற வாழ்வு வாழ வேண்டுமானால் வார்த்தைகளைக் குறைக்க வேண்டும் உணவைக் குறைக்க வேண்டும். தேவையில்லாத சிந்தனையைக் குறைக்க வேண்டும். உணவைக் குறைப்பவனுடைய ஆயுள் அதிகரிக்கும். அதனால் எமது சமயம் உணவு விடயத்தில் அதிக கவனம் எடுத்துள்ளது. விரதங்களுக்கு முக்கியத்துவம் கொடுக்கிறது. முனிவர்களும் ரிஷிகளும் உணவையும் சுவைகளையும் குறைத்ததால்தான் அவர்களால் பல சித்துக்களைச் செய்ய முடிந்தது. குற்றமில்லாத சில சொற்களைப் பேச முடியாதவர்கள், பயனற்ற பல சொற்களை நீண்ட நேரம் பேசிக்கொண்டிருப்பார்கள்’’

‘‘சுவாமியார் சொல்லுவது முற்றும் சரி. அதிபர் எப்போதாவது தேவையில்லாத சொற்களைப் பேசியுள்ளரா..? கேட்டதற்கு மட்டும் பதில் சொல்வார். அதுவும் இரண்டொரு சொற்களில். பாடசாலையிலும் ஆசிரியர்களுக்குப் பாடம் சம்மந்தமாகவோ அல்லது வேறு விடயம் சம்மந்தமாகவோ ஓரிரு ொசற்களிலேயே அத்தனையையும்

தெரியப்படுத்தி விடுவார்: “மந்திரம் தெரியாதவனது பூசை விடியவிடிய என்று சொல்வார்கள்” வேலாயுதபிள்ளை சிரித்தார்.

“சுவாமியார் அருளுரை நிகழ்த்தும் போது நாம் பேசுவதை அவர் விரும்ப மாட்டார். அத்துடன் பேச்சை இயன்றளவு குறைத்துச் செயலில் ஈடுபடுமாறு சுவாமியார் பேசிக்கொண்டிருக்கும் போது தேவையில்லாதவற்றைப் பேசுவது சரியல்ல” என்றார் தணிகாசலம்.

“பேசுவபன் இன்னும் கொஞ்ச நேரம் பேசமாட்டானா..? என்ற உணர்வை கேட்பவனுக்கு உண்டாக்கும்படி பேசுபவன் பேசுதல் வேண்டும். வார்த்தைகளின் பெறுமதியை உணராது. கண்டபடி பேசுபவனும், கண்டபடி கதைப்பவனும் மக்களால் நிராகரிக்கப்படுவார்கள். நல்ல முறையில் தனது கருத்தைச் சொல்லத் தெரியாதவன் நீண்ட நேரம் பேசுவான்” என்றார் சுவாமியார்.

இரண்டாம் சாமப்பூசை ஆரம்பமானது குருக்கள் மகாகணபதிக்கு பஞ்சாராத்தி காட்டிக் கொண்டிருந்தார். அப்பொழுது பூசையைக் கவனியாது சின்னத்தம்பியும், பரிபூரணனும் கதைத்தக் கொண்டு நின்றனர். அவர்களது தேவையற்ற பேச்சு பக்தர்களுக்கு இடையூறாக இருந்தது.

“இப்ப சனத்திற்கு காசு மெத்திப் போச்சு. வெளிநாடுகளிலிருந்து கண்டபடி பணம் அனுப்புவதால் தேவையில்லாமல் செலவு செய்கிறார்கள். பெண்கள் விதம் விதமான சேலைகளைக் கட்டிக்கொண்டு கண்காட்சிக்கு வருவது போலக் கோயிலுக்கு வருகிறார்கள். சேலைக்கு அவர்கள் போட்டிருக்கும் சட்டையைப் பார். முதுகு முழுவதும் தெரிகிறது. இதில் பார்க்க சட்டை போடாமல் வந்திருக்கலாம். இந்தப் புண்ணிய நாளில் மனமுருகிக் கும்பிட முடியவில்லை” என்றான் பரிபூரணன்.

“தம்பி, கோயிலடியிலை. கண்டபடி கதைக்கக்கூடாது” என்றார் தணிகாசலம்.

இருவரும் அதன் பின் கதைக்கவில்லை. பூசை முடிந்த பின்பு பஜனை ஆரம்பமானது. ஆரூரன் தேவாரங்களைச் சொல்ல, மற்றவர்கள் இசையுடன் பாடினர்.

**649. பலசொல்லக் காமுறுவர் மன்றமாசு அற்ற**
**சிலசொல்லல் தேற்றா தவர்.**

குற்றமில்லாத சில நல்ல சொற்களைச் சொல்லத் தெரியாதவர்கள், பயனற்ற பல சொற்களைச் சொல்லிக் கொண்டிருப்பர்.

## வாசமில்லாத மலர்

பஜனை முடிந்ததும் வெளியூரில் இருந்து வந்திருந்த தயாபரன் என்பவர் உரையாற்றினார்.

“இன்று மகாசிவராத்திரி நாள். நாம் விரதம் அனுஷ்டித்து அதைக் கோலாகலமாகக் கொண்டாடுதல் வேண்டும்..”

“இவன் என்ன பேசுகிறான். சிவராத்திரியை எப்படிக் கோலாகலமாகக் கொண்டாடுவது. பக்தி சிரத்தையுடன் விரதம் அனுஷ்டித்துச் சிவனை மனப்பூர்வமாக நினைத்து, சிவனின் நாமங்களை உச்சரித்தும், சிவனின் திருவிளையாடல்களையும், பெருமைகளையும் கேட்டு அமைதியாக இருந்து பிரார்த்திப்பதே சிவராத்திரி விரதமாகும். இவன் அதை விட்டு விட்டு ஏதேதோ சொல்கிறான்” என்றார் வேலாயுத பிள்ளை.

“அடியார்களே வருடத்திற்கு ஒருமுறை வரும் பெருமை மிக்க இவ்விரதத்தை அனுஷ்டித்த பலர் முத்தியடைந்துள்ளனர். வழி தவறிய வேடனொருவன் மிருகங்களுக்குப் பயந்து மரத்திலேறியிருந்து இரவு முழுவதும் பயத்தோடு நித்திரை விழித்தமையால் அவன் முத்தியடைந்ததாக வரலாறு கூறுகிறது”

“இதென்ன புதுக்கதை கூறுகிறான். நடந்த கதையை அந்தக் கதையை அறியாத சிறுவர்கள் அறிந்து கொள்ளும்படி தெளிவாகச் சொல்லுதல் வேண்டும். அதை விட்டுவிட்டுப் பிள்ளைகள் விளங்கிக் கொள்ள முடியாதவாறு கதை சொல்கிறான். “தான் கற்ற கருத்துக்களை மற்றவர்கள் புரிந்து கொள்ளும்படி தெளிவுபடச் சொல்லும் ஆற்றல் இல்லாதவர்கள், கொத்தாய் மலர்ந்தாலும் கூட மணம் பரப்பாத மலரைப் போன்றவர்களாவர்” என்று பெரியவர்கள் சொல்வார்கள். இவர் மிகப்பெரிய பாடசாலை ஒன்றில் ஆசிரியராகக் கடமையாற்றுகிறன். அத்துடன் க.பொ.த உயர்தர வகுப்பிற்குத் தமிழ் கற்பிக்கிறான். பட்டதாரி ஆசிரியர். பல்கலைக்கழகத்தில் நடைபெற்ற பரீட்சையில் முதல் வகுப்பில் சித்தியடைந்தவன். அதனால் பல்கலைக்கழக நிர்வாகம் பல்கலைக்கழகத்தில் தமிழ் விரிவுரையாளராக நியமித்தது. இவர் கற்பதில் கெட்டிக்காரனே தவிர கற்பித்தல் மிகவும் மோசமானது. வகுப்பில் கற்பிக்க வேண்டியவற்றை ஒழுங்காகக் கற்பிக்க முடியாது திணறுவாராம்” என்றார் தணிகாசலம்.

“சிவசுந்தரமூர்த்தி, இவர் சரியான கெட்டிக்காரன், பல்கலைக்கழக விரிவுரையாளரென்று சொன்னதால்தான் அழைத்தோம். ஆனால் இவரைக் கற்பிக்கத் தெரியாதவரென்று பல்கலைக்கழகம் வேலையால் நிறுத்திவிட்டதாம். அதன்பின்தான் ஆசிரியர் நியமனங் கிடைத்தது. அப்பாடசாலை அதிபர் இவரை வேண்டாமென்று கல்வித் திணைக்களத்திற்கு அறிவித்து விட்டாராம். சபையைக் கவரும்படி பேசத் தெரியாதவன். மேடைகளிற் பேசி உள்ள மானத்தையும் போக்குவதை விறட்டுவிட்டுப் பேசாமல் இருக்கலாம்” என்றார் வேலாயுதபிள்ளை.

“சித்திரமும் கைப்பழக்கம் செந்தமிழும் நாப்பழக்கம்” என்பார்கள் தன்னைத் தயார் செய்து கற்பித்தல் வேண்டும். இந்த உலகில் செய்ய முடியாதது எதுவும் இல்லை. முயற்சி செய்ய வேண்டும்” என்றார் தணிகாசலம்.

“இவர் எந்த முயற்சி செய்தாலும் உருப்பட மாட்டார். பதட்டத்தால் நா சிக்குண்டு வார்த்தைகள் உரிய உச்சரிப்பை இழந்தே வருகின்றன. வார்த்தைகளை

அறுத்துறுத்துப் பேசுதல் வேண்டும். ஆரூரன் பேசும் போது இரசித்துக் கேட்ட பிள்ளைகள் இப்போது கதைத்து விளையாடுகிறார்கள்'' என்றார் தணிகாசலம்.

''யார் இவரைச் சிபாரிசு செய்தது. இவரின் பேச்சு சமயத்தைக் கொச்சைப் படுத்தகிறது. அதை அனுமதிக்கக்கூடாது.'' என்றார் தனபாலசிங்கம்.

''பேசாமலிரப்பா பேசுகிறவனை நாம் பரிகசிக்ககக்கூடாது. இனிமேல் அவனைப் பேச்சுக்கு அழைக்காமல் விட்டாற் சரி'' என்றார் தணிகாசலம்.

''மகனே! அமைதியாக இருங்கள் தமது மனதில் உள்ள கருத்துக்களை மற்றவர்களுக்கு விளக்கமாகச் சொல்லத் தெரியாத பலர் உலகில் வாழ்கின்றனர். இவர்களுள்ப் பலர் கற்றவர்கள். அது அவர்களது குறைபாடாகும். அதற்காக நாம் பரிதாபப்பட வேண்டுமே தவிரப்பரிகசிக்கக் கூடாது. ஒரு காலத்தில் ஆரூரனும் இப்படித்தான் இருந்தான்'' என்றார் சுவாமியார் அதன்பின் யாரும் பேசவில்லை.

''சிவ விரதங்களில் மகிமை பெற்றது சிவராத்திரி விரதம். சிவராத்திரி தினத்தில் கண்விழித்திருப்போர் எல்லையில்லாத இன்பத்தைப் பெறுவார்கள். தாளம்பூ சிவராத்திரியன்று பொய் கூறியமையால் அது கடவுளுக்கு அர்ச்சிப்பதற்காக எடுக்கப்படுவதில்லை''

''நான் வரப்போறன். தோட்டத்தில் கொஞ்ச வேலை இருக்கு. போய்ச் செய்துவிட்டு வந்து நான்காம் சாமப் பூசையைப் பார்ப்போம்'' என்று எழுந்தார் தணிகாசலம்.

**650. இணர்ஊழ்த்தும் நாறா மலர் அனையர் கற்றது**
**உணர விரித்துஉரையா தார்.**

தாம் கற்றறிந்த நல்ல நூல்களின் பொருளை மற்றவர்கள் புரிந்து கொள்ளும் படி கூற முடியாதவர்கள், கொத்தாக மலர்ந்திருந்த போதும் மணம் கமழாத மலரைப் போன்றவர்களாவர்.

## எல்லாம் கொடுப்பவை.

பரமேஸ்வரனின் வீட்டுக்கு கஜேந்திரன் வந்த போது இரவு ஒன்பது மணி. மாலை நான்கு மணிக்கு வருவதாகக் கூறிவிட்டுச் சென்ற கஜேந்திரன் இரவு ஒன்பது மணி வரையும் வராமையால் பரமேஸ்வரன் படுப்பதற்காக எழுந்தார்.

''உங்களுக்குக் கஜேந்திரனைப் பற்றித் தெரியாது. அவன் வருவதாகச் சொன்னால் கட்டாயம் வருவான். கொஞ்சநேரம் பொறுத்திருங்கள் அவனுக்கு என்னென்ன வேலையோ..?'' என்று கவலைப்பட்டார் தணிகாசலம்.

“அப்பொழுது மோட்டார் வண்டி ஒன்று வந்து வீட்டு வாசலில் நின்றது. அதிலிருந்து கணநாதனும் அவரது சகோதரன் ஜெகநாதனும் கஜேந்திரனும் இறங்கிவந்தனர்.

கணநாதனுடனும் கெங்காதரனுடனும் கஜேந்திரன் கூட வருவதைக் கண்ட தணிகாசலமும் பரமேஸ்வரனும் ஆச்சரியத்துடன் பார்த்துக் கொண்டிருந்தனர். “இவர், கஜேந்திரன். தம்பியினுடைய மாணவன்” என்றார் கணநாதன்.

“ஐயா, நான் குருநாதருடன் பல்கலைக்கழக விடயமாகச் செல்ல வேண்டிய நிலை ஏற்பட்டு விட்டது. நான் பல்கலைக்கழகத்திற்குச் சென்ற பின்பு தான் எனது குரு விஷயத்தைச் சொன்னார். சென்றுவர நேரமாகிவிட்டது” என்று வருந்தினான் கஜேந்திரன்

“நான்கு மணிக்கு ஒருவரைச் சந்திப்பதாகச் சொன்னனான். அவரிடஞ் சொல்லி விட்டு வந்துவிடுகிறேன் என்று கஜேந்திரன் சொன்னவன் நான்தான் விடவில்லை. அவன் சந்திக்கவிருந்த பிரமுகர் நீங்கள் என்று தெரிந்திருந்தால், நான் உங்களுடன் தொலைபேசியில் தொடர்பு கொண்டு தெரிவித்திருப்பேன்”. என்றார் ஜெகநாதன்.

“கஜன், நீர் நாளைக்கு வந்து சந்தியும். இப்போ எனக்குக் கொஞ்ச வேலை இருக்கு” என்றார் பரமேஸ்வரர்.

“சரி, நான் சென்று வருகிறேன்” என்று புறப்பட்டான் கஜேந்திரன்.

“பல்கலைக்கழகத்தில் கற்கும் உன்னிடம் கைத்தொலைபேசி இல்லையா..?” என்று கேட்டார் கணநாதன்.

கஜேந்திரன் எதுவும் பேசாமல் நின்றான் “சரி, சரி நீ போ தம்பி” என்ற தணிகாசலம் சற்று யோசித்து விட்டுக் கேட்டார் “ எப்படிப் போகப் போகிறீர்”

“கிட்டத்தானே நான் நடந்து சென்றுவிடுவேன்” என்றான் கஜேந்திரன்

“இல்லை, மோட்டார் வண்டியிற் செல்லும்” என்ற கணநாதன் மோட்டார் வண்டிச் சாரதியை அழைத்து கஜேந்திரனை அவனது வீட்டில் கொண்டு சென்று விட்டுவிடும்படி கூறினார்.

“பாவம் நல்ல பிள்ளை. தகப்பன் கமம் செய்கிறார். வருமானம் குறைவு” என்றார் தணிகாசலம்.

“அப்படியா..? அவனுக்கு நான் ஒரு கைத்தொலைபேசி ஒன்று வாங்கிக் கொடுக்கிறேன். அவனிடம் தொலைபேசி இல்லாததால் தான் நான் இவ்வளவு நேரமும் காத்திருக்க வேண்டியதாயிற்று” என்றார் பரமேஸ்வரன்.

“மிகவும் நல்ல மாணவன். அத்துடன் சிறந்த அறிவாளி. சகல விடயங்களிலும் எமக்கு உதவி செய்பவன். வீட்டுக்கு காய்கறிகள் வாங்கித் தருவதிலிருந்து, பல்கலைக்கழகத்தில் முதலாம் இரண்டாம் வருட மாணவர்கள் எழுதும் கட்டுரைகளைத் திருத்தியும் தருவான். இந்த வருடம் பரீட்சை எழுதுகிறான். முதலாம் வகுப்பில் சித்தியடைவான். சித்தியடைந்தால் விரிவுரையாளர் பதவி கொடுக்கிறதாகத் தீர்மானித்திருக்கிறோம்” என்றார் ஜெகநாதன்.

“பல்கலைக்கழகத்தில் கல்வி கற்கும் காலங்களில் மாணவர்களில் பெரும்பான்மையானோா் கல்வியைத் தவிர வேறு எந்த விடயங்களிலும் ஈடுபடுவதில்லை. அத்துடன் அவர்கள் பல்கலைக்கழகத்தில் கற்கும் இளைஞர்களோடு சேர்ந்து ஊர்சுற்றிப் பொழுதை ரம்மியமான முறையில் செலவு செய்வார்கள் ஆனால் கஜேந்திரன் சமூகத்திற்காக எவ்வளவு தொண்டுகள் செய்கிறான். அதற்காக நான் அவனுக்கு மாதாமாதம் கொஞ்சப் பணம் கொடுக்கலாமென நினைத்தேன். ஆனால் அவன் வாங்க மறுத்துவிட்டான். அதனால் கணநாதனுக்குச் சொல்லி தொழிற்சாலையில் தொழிலாளர்களின் கல்விக்குப் பொறுப்பானவனென்று ஒரு பதவியைச் சிருஷ்டித்து அவனுக்குக் கொடுக்கச் சொன்னேன். வாரத்தில் இருமுறை தொழிலாளர்களுக்கு அவன் வகுப்பெடுப்பான். அதற்கான சம்பளத்தை நான் கணநாதனுக்குக் கொடுத்துக் கஜேந்திரனுக்குக் கொடுக்கச் சொல்லியுள்ளேன்” என்றார் பரமேஸ்வரன்.

“ஒரு மனிதனுக்கு நல்லவர்களின் துணை செல்வத்தைக் கொடுக்கும். அவன் செய்யும் நல்ல செயல்கள் விரும்பிய எல்லாவற்றையும் கொடுக்கும்” என்று பெரியவர்கள் சொல்வார்கள். அதன்படி கஜேந்திரன் ஏராளமான நல்லவர்களுடன் சேர்ந்திருக்கிறான். அதே போலப் பல நல்ல செயல்களையும் செய்கிறான். அவனுக்கு எந்தக் காலத்திலும் குறைகள் எதுவும் வராது” என்றார் தணிகாசலம்.

“ எனக்கொரு பெண்பிள்ளை இருக்குமாயிருந்தால் நான் சாத்திரம் சாதகம் எதுவும் பாராமல் அவனுக்குக் கட்டிக் குடுத்திருப்பன். அவ்வளவு நல்லவன் குடும்பத்தைக் கோயிலாக நினைப்பவன்” கண்கலங்கினார் பரமேஸ்வரன்.

**651. துணைநலம் ஆக்கம் தரூஉம் வினைநலம்**
**வேண்டிய எல்லாம் தரும்.**

ஒருவனுக்கு வாய்த்த துணையின் நன்மை செல்வத்தைக் கொடுக்கும்; செய்யும் தொழிலின் நன்மை அவன் விரும்பிய எல்லாவற்றையும் கொடுக்கும்.

## செய்யக்கூடாதவை

தணிகாசலத்தின் தூரத்து உறவினன் அருணாசலம். மிகவும் வசதியானவன். தணிகாசலம் தனக்குப் பணத்தட்டுப்பாடு ஏற்படும் வேளைகளிலெல்லாம் அருணாசலம் வசிக்கும் இருபாலைக்குச் சென்று அவரிடம் பணம் மாறுவார். பின் கையில் பணம் புரளும் போது கொடுப்பார். அருணாசலம் தணிகாசலத்திற்குக் கொடுக்கும் பணத்தைக் கணக்கில் வைப்பதில்லை. தேவையேற்படும் போது தனது வீட்டில் இருந்து எட்டு மைல் தொலைவில் உள்ள அருணாசலத்தின் வீட்டுக்குச் செல்வார் தணிகாசலம்.

அந்த வருடம் ஐந்தாம் வகுப்புப் புலமைப் பரிசில் பரீட்சை எழுதிய அருணாசலத்தின் இளையமகள் துர்க்கா அப்பரீட்சையில் சித்தியடையவில்லை. அதனால் அருணாசலம் மனம் உடைந்து போனார். தரம் ஆறிற்குப் புலமைப் பரிசில்

பரீட்சையில் சித்தியடைந்தால்தான் தேசிய பாடசாலையில் சேர்ப்பார்கள். அருணாசலம் தேசிய பாடசாலையில் தனது மகள் துர்க்காவைச் சேர்ப்பதற்குத் தன்னாலான முயற்சிகள் அத்தனையையும் எடுத்தார். ஒன்றுஞ்சரிவரவில்லை. கடைசியாக ஊர்ப்பிரமுகர் ஒருவரை அழைத்துக் கொண்டு பாடசாலை அதிபரைச் சந்திப்பதற்காகச் சென்றார். அவர் சென்ற நேரம் அதிபர் தனது அலுவலகத்தில் இருக்கவில்லை. சுமார் இரண்டு மணித்தியாலத்தின் பின்பே அவர் அலுவலகத்திற்கு வந்தார். அதற்கு முன்பு ஊர்ப்பிரமுகரை நன்கு அறிந்திருந்த உபஅதிபர், அவரை அழைத்துச் சென்று இரகசியமாகச் சொன்னார் ''புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியடையாத எந்த மாணவரையும் பாடசாலையிற் சேர்க்கக்கூடாதென்று புதிதாக வந்த கல்விப்ப ணிப்பாளர் உத்தரவிட்டிருக்கிறார் நீங்கள் நிற்பதில் பிரயோசனமில்லை''

''ஊர்ப்பிரமுகர் கேலியாகச் சிரித்தார் ''இப்படியான எத்தனை உத்தரவுகளைக் கேள்விப்பட்டனான். காசைக் கொஞ்சம் கூடுதலாக எதிர்பாப்பினை. நீ பயப்படாதை'' என்றார்.

அதிபர் வந்தமர்ந்ததும் ஊர்ப்பிரமுகர் அருணாசலத்தை விட்டு விட்டு உள்ளே சென்றார். ஏற்கனவெ அவரைத் தெரிந்திருந்தமையால் அதிபர் அவரைப் புன்னகைத்து வரவேற்றார்.

''தரம் ஆறிற்கு ஓர் அனுமதி வேண்டும். பாடசாலையின் அபிவிருத்திக்கு நீங்கள் கேட்கும் தொகை தரலாம்''

'' இந்த முறை தரம் ஐந்து புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியடையாத மாணவர்கள் எவரையும் அனுமதிக்கக்கூடாது என்று புதிதாக வந்துள்ள கல்விப் பணிப்பாளர் விக்னேஸ்வரமூர்த்தி ஐயா அறிவித்துள்ளார். புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியடைந்தால்கதையுங்கோ'' என்றார் அதிபர்.

''இரண்டு புள்ளிகள் காணாது. எதிர்பார்ப்பதை விடக் கூடுதலாகத் தரலாம்'' ஊர்ப்பிரமுகர் பேசிக் கொண்டிருக்கும் போது அதிபர் குறுக்கிட்டுச் சொன்னார் ''கடைசி வரையும் அனுமதி கிடையாது. விக்னேஸ்வரமூர்த்தி ஐயா சாதாரணமானவர் அல்லர், மிகவும் நேர்மையானவர் கண்டிப்பு நிறைந்தவர். அதனால் அவரது உத்தரவை மீறி என்னாற் செயற்பட முடியாது'' என்றார் அதிபர்.

''வந்த புதிதில் அப்படித்தான் சொல்வார்கள். வேண்டுமானால் அவருக்கும் ஏதாவது கொடுக்கலாம்'' என்றார் ஊர்ப்பிரமுகர்.

''அவர் அதிபராக இருந்த காலத்தைப் பற்றி ஒவ்வொருவரும் கதை கதையாகச் சொன்னார்கள். அவர் கடமையேற்ற ஒரு வாரத்தின் பின் அதிபர்களை அழைத்துக் கூட்டம் வைத்தபோது சொன்னார் ''மாணவர்களின் பிரம்மாக்கள் அதிபர்கள் தான். அவர்கள் நல்ல முறையில் கடமையாற்றினால் மாணவர்களின் விதி மாற்றியமைக்கப்படும். நான் பதினாறு வருட காலம் அதிபராகப் பணிபுரிந்து அரிய பல செயல்களைச் செய்தேன். ஓர் அதிபர் நினைத்தால் மாணவரின் விதியை மாற்றலாம். நான் இதுவரை புகழையும் அறத்தையும் தராத தூய்மையற்ற செயல்கள் எதையுஞ்

செய்யவில்லை. அது போல நீங்களும் புகழையும் அறத்தையும் தாரத தூய்மையற்ற செயல்களைச் செய்யக்கூடாதென்றவர். நீங்கள் அவரிடஞ் சென்று ஒரு கடிதம் வாங்கி வாருங்கள். இல்லா விட்டால் எனக்குச் சொல்லச் சொல்லுங்கள்'' என்றார்

வீட்டுக்கு வந்த அருணாசலத்திற்குக் ''விக்னேஸ்வரமூர்த்திக்குத் தணிகாசலம் மிகவும் வேண்டியவர். அவரைச் சென்று சந்தித்துப் பாருங்கள்'' என்றாள் அவரது மனைவி.

தணிகாசலத்தின் வீட்டுக்கு வந்த அருணாசலம் யாவற்றையும் விபரமாகச் சொன்னார். அதைக் கேட்ட தணிகாசலத்திற்குத் தர்ம சங்கடமாக இருந்தது ''எப்படிச் சொல்வது? சொன்னால் ஏற்பானா...?'' என்று எண்ணினார் தணிகாசலம்.

''என்ன யோசிக்கிறியள்? உங்களால் முடியுமென்று ஊருக்கை கதைக்கினை'' என்றான் அருணாசலம்.

''தணிகாசலம் சிரித்தார் ''அருணாசலம், உனக்கு அவரைப்பற்றித் தெரியாது. தனது பிள்ளை தரம் ஐந்தில் சித்தியடையாது விட்டாலும் நீதிக்குப் புறம்பாக அவர் செயற்பட மாட்டார். புகழையும் அறத்தையும் கெடுக்கும் எந்தச் செயலையும் அவர் தனக்குக்கூடச் செய்யமாட்டார். இதை நான் அவரிடஞ் சென்று கேட்க முடியாது. நான் உனக்கு நிறையக் கடமைப்பட்டுள்ளேன். எனது உயிரை வேண்டுமானாலும் தரலாம். ஆனால் அவரிடம் தர்மமில்லாத எந்தக் காரியத்தையும் எதிர்பார்க்க முடியாது'' கண்கலங்கினார் தணிகாசலம்.

வெகு நேரம் ஆடாது அசையாது சிலை போல இருந்த அருணாசலம், பின் எழுந்து எதுவும் சொல்லாது நடந்து சென்றான். அவன் கவலையுடன் செல்வதைப் பார்க்கத் தணிகாசலத்திற்குக் கவலையாக இருந்தது.

**652. என்றும் ஒருவுதல் வேண்டும் புகழொடு**
**நன்றி பயவாவினை.**

புகழையும் அறத்தையும் தராத தவறான செயல்களை ஒருவன் எக்காலத்திலும் செய்யக் கூடாது.

## செய்யக்கூடாதவை

விக்னேஸ்வரமூர்த்தி தேசிய பாடசாலைக்கு வந்தார். அதிபர் அவரை எழுந்து மரியாதையுடன் வரவேற்றார். தரம் ஆறு வகுப்பிற்குரிய விண்ணப்பப் பதிரங்கள் யாவற்றையும் பரிசீலனை செய்தார் ''இம்முறை புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியடையாத எந்த மாணவனையும் தரம் ஆறில் சேர்க்கக்கூடாதென்று கல்வி அமைச்சு உத்தரவிட்டுள்ளது. இரண்டு,மூன்று அரசியல் பிரமுகர்கள் எனது

அலுவலகத்திற்கு வந்து புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியடையாத மாணவர்களுக்கு அனுமதி கேட்டனர். நீங்கள் அவர்களுக்குச் சட்ட திட்டங்களை விளக்கிக்கூறவேண்டியது தானே. அவர்கள் ஏற்கமறுத்தால் அரசாங்கத்தின் சுற்றறிக்கையை எடுத்துக் காட்டியிருக்க வேண்டும். அதைவிடுத்து என்னை ஏன் சந்திக்கச் சொன்னீர்கள். இது கல்வி அமைச்சின் உத்தரவு. அதைக்கூறுவதை விட்டு விட்டு என்னிடம் கடிதம் வேண்டி வரும்படி கூறுதல் தவறு. அவர்கள் என்னையல்லவா குற்றவாளியாகக் கருதுவார்கள்'' என்றார்.

''முன்பும் இதே உத்தரவு இருந்தது. நான் பிரமுகர்களின் பிள்ளைகள் சிலருக்கு அனுமதி வழங்கியுள்ளேன். அரசாங்கம் பாடசாலைகளுக்கு நிதியுதவி செய்வது குறைவு. ஊர்ப்பிரமுகர்கள் தேவையான உதவிகளைச் செய்வார்கள். அதனால் இரண்டொரு மாணவர்களைச் சேர்க்க அனுமதித்தல் வேண்டும்'' என்றார் அதிபர்.

''நீர் வயதில் இளமையானவர். இன்னும் எத்தனையோ பதவி உயர்வுகள் உம்மைத் தேடி வரும். மேலும் மேலும் உயர்வடைய வேண்டுமென விரும்புவோர் தமது புகழ் கெட்டுப்போவதற்குரிய செயல்களைச் செய்யக் கூடாது. அப்படி நினைத்தால் உமக்கு முன்னேற்றம் வராது'' என்றார் விக்னேஸ்வரமூர்த்தி.

அதிபர் மனதிற்குள்ச் சிரித்தார் ''அறிவுரை சொல்கிறார். ஊர்ப்பிரமுகர்களைப் பகைத்தாரானால் பெற்ற பதவி உயர்வும் இல்லாமல் போய்விடும். பிழைக்கத் தெரியாத மனிதன்'' என்று நினைத்தார்.

''ஒவ்வொருசெயலுக்கும் நாம் கணக்குக் காட்டுதல் வேண்டும். இன்பம் அளிக்கிறதென்பதற்காகத் தீய செயல்களை மனதால்கூட நினைப்பது பாவம். நான் இன்று ஒரு தீய செயலைச் செய்தால், அது வட்டியும் முதலுமாகச் சேர்த்து என்னிடம் திரும்பி வரும் என்று நான் நினைப்பவன். அத்துடன் என்னைப் போல நீதியாகவும் நியாயமாகவும் என்னுடன் பணிபுரிபவர்களும் இருக்க வேண்டும் என்றும் நினைப்பவன் அதனால் தான் சொன்னேன்.'' என்றார்.

அதிபர் எதுவும் பேசவில்லை. மேலும் சில நிமிடங்கள் அதிபருடன் நிர்வாக விடயங்களைப் பற்றி பேசிய விக்னேஸ்வரமூர்த்தி பின் எழுந்து சென்றார்.

அன்று மாலை தணிகாசலம் விக்னேஸ்வரமூர்த்தியின் வீட்டுக்கு வந்தார். அவருடன் பரமேஸ்வரனும் வந்திருந்தார்.

''எமது பாடசாலைக்குக் கட்டிடத் தேவை இருக்கிறது என்பது உங்களுக்குத் தெரியும். வெளிநாட்டு நிறுவனங்கள் கட்டங்கள் தேவையில்லாத பல பாடசாலைகளுக்குக் கட்டிடங்களைக் கட்டிக் கொடுப்பதாக மக்கள் கதைக்கிறார்கள். நீங்கள் எங்கள் பாடசாலையில் அதிபராகப் பதினாறு வருடங்கள் கடமை புரிந்தனீங்கள் அதனால் யாவும் உங்களுக்குத் தெரியும். எனவே ஒரு கட்டடத்திற்குச் சிபார்சு செய்யுங்கள்'' என்றார் தணிகாசலம்.

''நான் முன்பு இந்தப் பாடசாலைக்கு மட்டும் அதிபராகக் கடமையாற்றினேன். இப்பொழுது நூற்றுக்கு மேற்பட்ட பாடசாலைகளுக்குப் பொறுப்பான அதிகாரியாகக்

கடமை புரிகிறேன். அதனால் குறையுள்ள பாடசாலைக்கே முதலில் இடம் கொடுத்தல் வேண்டும். உங்கள் பாடசாலையை விட வேறுபல பாடசாலைகளின் நிலைமை மிகவும் மோசமாக உள்ளது. அவற்றைக் கவனித்து விட்டுத்தான் உங்களது பாடசாலையைக் கவனிக்க வேண்டும்'' என்றார் விக்கினேஸ்வரமூர்த்தி.

''விக்னேஸ்வரமூர்த்தி இவ்வளவு காலமும் பாடசாலையை எங்கள் பாடசாலை எனது பாடசாலை என்று சொன்னார். ஆனால் இன்று உங்கள் பாடசாலை என்று சொன்னதால் தணிகாசலம் சற்றுத் திகைத்து விட்டார். அதனால் உடனடியாக அவரால் பேச முடியவில்லை. அவரது எண்ணத்தைப் புரிந்து கொண்ட விக்னேஸ்வரமூர்த்தி சொன்னார் ''இப்பொழுது நான் எனது பாடசாலையென்று பல பாடசாலைகளைச் சொல்ல வேண்டியுள்ளது. அப்படியிருக்க எனது பாடசாலையென்று ஒன்றைமட்டும் கூறமுடியாது. அத்துடன் எமது ஊர்ப் பாடசாலைக்கு உதவிகள் செய்தால் அது மக்களின் கண்களை உறுத்தும். என்னைப் பற்றித் தவறான கருத்துக்களை உருவாக்கும். குற்றமில்லாமல் இருக்க விரும்புவோர் தவறுகள் செய்யக்கூடாது. அத்துடன் மேலும் மேலும் புகழ்தர வேண்டும் என்று விரும்புவோர், தம் புகழ் கெட்டுப் போவதற்கான செயல்களைச் செய்யக்கூடாது. எல்லாப் பாடசாலைகளுக்கும் தேவை கருதி உதவி செய்வேன்'' என்றார் விக்னேஸ்வரமூர்த்தி.

**653. ஓஒதல் வேண்டும் ஒளிமாழ்கும் செய்வினை**
**ஆஅதும் என்னு மவர்.**

மேலும் மேலும் உயர்வடைய விரும்பிச் செயலில் ஈடுபடுவார்கள், தம்முடைய புகழ் கெடுவதற்குக் காரணமான செயல்களைச் செய்யாமல் விட வேண்டும்.

## செய்யமாட்டார்.

பரமேஸ்வரன் விக்னேஸ்வரமூர்த்தியைச் சில கணங்கள் உற்றுப்பார்த்தார் ''இப்படியும் ஒரு மனிதன் இருக்கிறானா..?'' என்று எண்ணினார்.

''நான் பதவி உயர்வு பெற்றதுடன் எனது குணமும் மாறிவிடும் என்று நீ நினைக்கிறாயா தணிகாசலம். நான் பிறந்து விருத்தெரிந்த நாளிலிருந்து ஓரே மாதிரித்தான் இருக்கிறேன். படிக்கும் போதும் சரி, ஆசிரிய நியமனம் கிடைத்த போதும் சரி, அதிபராக நியமனம் பெற்ற போதும் சரி, இப்போது கல்விப் பணிப்பாளராக வந்த போதும் சரி ஒரே மாதிரியாகத் தான் இருக்கிறேன். இதுவரை கைவிரலில் ஒரு மோதிரம் போட்டிருக்கிறேனா...? கழுத்திலை சங்கிலி... எப்பவும் நான் ஒருமாதிரித்தான் வாழ்வன். உனக்குத் தெரியும் தானே நான் எவ்வளவு கஷ்டப்பட்டு முன்னுக்கு வந்தனான் என்று. வாழ்க்கையில் ஏற்பட்ட எவ்வளவு சவால்களை முறியடித்துள்ளேன். என்னுடன் நீ பதினாறு வருட காலம் பாடசாலைப் பணியின் போது கடமை புரிந்தனீ. ஆசிரியர்களும், அதிகாரிகளும் எவ்வளவு துன்பங்களை எனக்குத்

தந்தனர். ஒரு முறை ஞாபகமிருக்கின்றதா..? அன்று விளையாட்டுப்போட்டி எமது பாடசாலை நூறாண்டு காலமாக அயற்பாடசாலை மைதானத்தில் தான் விளையாட்டுப் போட்டியை நடாத்துவது. ஒரு வாரத்தக்கு முன்பே நாம் விளையாட்டுப் போட்டிக்கான திகதியை அதிபருக்கு அறிவித்து விட்டோம். விளையாட்டுப் போட்டியன்று வழமையாக ஒரு மணிநேரம் முன்பாகப் பாடசாலையை விட்டு விட்டு மைதானத்தை தரும் அதிபர் அன்று பாடசாலையை விடவில்லை. அத்துடன் விளையாட்டு உபகரண்ங்கள், நாற்காலிகள், சிற்றூண்டிச்சாலை உபகரனங்கள் எவையும் தரவில்லை. அதற்குப் பொறுப்பானவர்களை அவர் வேறு தேவைகளுக்கு அனுப்பிவிட்டார். மூன்று மணிக்குப் பின்பு நாம் மைதானத்திற்குச் சென்றோம். எதுவும் இல்லாத நிலை. மக்கள் எவ்வளவு கொதித்தனர். அவர்கள் ஒவ்வொரு பொருளையும் வேறெங்காவது இருந்து பெற்றுவர முனைந்தனர். நான் விரும்பவில்லை. அதிபருடன் கதைத்துச் சமாதானமாக அப் பொருட்களைப் பெற்றேன். சிற்றுண்டிச்சாலை பூட்டப்பட்டிருந்ததால் வெளியான ஓர் இடத்தில் வேறு இடங்களில் இருந்து உபகரணங்கள் எடுத்து வந்து சிற்றுண்டி வகைகளைத் தயாரித்து விளையாட்டுப் போட்டியை நடத்தினோம்''

''பிரதம விருந்தினர் விழா முடிந்து உரையாற்றுகையில் அந் நிகழ்வுக்காக வருத்தப்பட்டார். ஆனால் நான் மகிழ்ந்தேன். ஏனென்றால் அந்தச் சம்பவம் எமக்கொரு பாடத்தைப் புகட்டியது. இனிமேல் எந்தக் காரணங் கொண்டும் விளையாட்டுப் போட்டியை இரவல் மைதானத்தில் வைப்பதில்லை என்று தீர்மானித்தேன். மறு வருடம் கோயில் வீதியிலும், பாடசாலையில் இருந்த சிறு இடத்திலும் வைத்தோம். பின் சொந்தமாக விளையாட்டு மைதானத்தை வாங்கினோம். ''அறிவுடையவர்கள் பெரும் துன்பம் வந்த போதும் அத்துன்பத்தைத் தீர்ப்பதற்காகக்கூட இகழ்வான எந்தச் செயல்களையும் செய்ய மாட்டார்கள்'' என்று பெரியவர்கள் கூறக்கேட்டுள்ளேன். ஆகையால் எந்தச் சந்தர்ப்பத்திலும் எனது பாடசாலை என்ற எண்ணம் எனக்கு வராது. இப்பொழுது எல்லாம் எனது பாடசாலைகள்'' என்றார் விக்னேஸ்வரமூர்த்தி. பரமேஸ்வரனுக்கு ஆச்சரியமாக இருந்தது. ஆனால் தணிகாசலம் அதைப் பெரிதாக எடுத்துக்கொள்ளவில்லை.

**654. இடுக்கண் படினும் இளிவந்த செய்யார்**
**நடுக்கற்ற காட்சி யவர்.**

உறுதியான தெளிந்த அறிவை உடையவர்கள், துன்பம் வந்த போதும் அத் துன்பத்தைத் தீர்க்க இழிவான எந்தச் செயலிலும் ஈடுபட மாட்டார்கள்.

## மீண்டும் செய்யாதவை

''எனது பாடசாலை வாழ்க்கையில் நான் யாரையும் துன்பப்படுத்தியதில்லை. எவரையும் பழிவாங்கியதுமில்லை. எல்லோரையும் அன்புள்ளவர்களாகவே மதித்து

நடந்து வந்தேன். கிருஷ்ணமூர்த்தி என்ற ஆசிரியரைத் தான் எனது பாடசாலைக்கு வேண்டாமென்றேன். அவருக்கு நான் என்னால் முடிந்தளவு உதவினளைச் செய்தேன். அவர் ஒரு நோயாளியாக இருந்தமையால் அவருக்குக் கருணை காட்டினேன். அவர் இரண்டு தினங்களுக்கொரு முறை மின்கதிர் வைத்தியத்திற்காக வைத்தியசாலைக்குச் சென்று வந்தார். அத்துடன் அவரது மனைவியைப் பத்து மைல்களுக்கப்பால் உள்ள ஒரு பாடசாலைக்கு இடம் மாற்றிவிட்டனர். அவரைப் பற்றிய விபரங்களைக்கூறி இடமாற்றத்தை இரத்துச் செய்து கொடுத்தேன். இப்படிப்பல உதவிகள் செய்தேன். செய்ததைச் சொன்னால் செய்ததில் உள்ள பலன் அற்றுப் போய்விடும். அப்படிப்பல உதவிகள். செய்ய, அவர் ஓர் உளவாளியாகவே நடந்து கொண்டார். பாடசாலையில் நடைபெறாத விடயங்கள் பலவற்றை அவர் நடந்ததாகப் பல இடங்களிலும் கூறுவார். நான் அதைக் கணக்கில் எடுப்பதே இல்லை. ஒரே ஒரு விசயத்தை அவர் செய்தது எனக்குப் பிடிக்கவில்லை. அந்த விஷயம் என்னவென்பதை நான் சொல்ல மாட்டன். தணிகாசலத்தற்கு அது தெரியும்...'' விக்னேஸ்வரமூர்த்தி கூறிக் கொண்டிருந்தார்.

''என்னதான் கற்றாலும், உயர்ந்த பதவியிலிருந்தாலும் சிலருக்குச் சில கெட்டபழக்கங்கள் இருக்கின்றன. சிலர் இல்லாததைச் சொல்வார்கள், பொதுச் சொத்தைச் சூறையாடுவார்கள்'' என்று நினைத்தார் தணிகாசலம்.

''அச்செயலை ஏன் செய்தோம் என்று எண்ணி நான் இப்பொழுதும் கவலைப்படுவதுண்டு. அவர் கூடாதவர். அவரைத் திருத்த வேறுவழியில்லாததால் தான் அப்படியான ஒரு நடவடிக்கையை எடுத்தேன். ஆனால் அதை இப்போது நினைக்கக் கவலையாக உள்ளது. ஒரு முறை தவறு செய்து விட்டேன். மீண்டும் அவ்வாறு செய்யமாட்டேன்'' என்றார் விக்னேஸ்வரமூர்த்தி.

''நீங்கள் செய்தது தவறல்ல. முழுக்க முழுக்க சரியான செயல். பாடசாலைக்கு நஷ்டமேற்படுத்துபவர்களைத் தண்டித்தே தீரவேண்டும்'' என்றார் தணிகாசலம்.

''அப்படிச் சொல்லக்கூடாது. பிறருக்கு நாம் செய்த தீமைகளையும், பிறர் எமக்குச் செய்த நன்மையையும் ஒரு போதும் மறக்கக்கூடாது. பிறர் நமக்குச் செய்த தீமைகளையும், பிறருக்கு நாம் செய்த நன்மைகளையும் உடனே நாம் மறந்து விடல் வேண்டும். அப்படி வாழ்ந்தால்தான் நாம் வாழும் வாழ்வில் அர்த்தம் இருக்கும். பழிக்குப் பழிவாங்குவது மனிதனுக்கு அழகல்ல. என்னால் செய்யக்கூடியளவு நன்மைகளைப் பிறருக்குச் செய்யவேண்டும். பிறர் செய்யும் தீமைகளையெல்லாம் மன்னித்து விடல் வேண்டும். ''உன்னிடம் நன்மை பெற்றவன், அதை நினையாது உனக்குத் தீமைகள் செய்தால் அது தான் தனக்குக் கொடுக்கும் தண்டனையாக இருக்குமே தவிர உனக்குப் பாதிப்பு வராது'' என்று நூலொன்றில் வாசித்திருக்கிறேன். என்னால் நீதிக்குப் புறம்பான எந்தச் செயல்களையும் செய்ய முடியாது. அதனால் தான் தேசிய பாடசாலை அதிபர், தரம் ஐந்து புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடையாத பிரமுகர்களின் பிள்ளைகளைச் சேர்க்கலாமென்ற போது மறுத்தேன். அத்துடன் நான் எனது முன்னைய பாடசாலைக்கு உதவி செய்தால், என்னைக் குற்றம்

பிடிக்கக் காத்திருப்போருக்கு வாய்ப்பாகி விடும். அதனால் அந்த விஷயத்தைத் தயவு செய்து கேட்க வேண்டாம். தேவையைப் பொறுத்து உங்கள் பாடசாலைக்கு உதவி செய்வேன்'' என்றார் விக்னேஸ்வரமூர்த்தி.

''உங்களைப் பற்றி முழுமையாக அறிந்தவன் நான். பதினாறு வருடங்கள் உங்களின் அருகிலேயே இருந்தேன். அதனால் உங்களைப் பற்றிய அனைத்து விடங்களும் எனக்குத் தெரியும். இருப்பினும் மனம் கேட்கவில்லை. முன்னைய கல்விப் பணிப்பாளருடன் நான் நட்புறவுடன் உரையாடுவதால், அவரைப் பல உதவிகள் கேட்டேன். நீங்களும் சேர்ந்து கேட்டீர்கள். அவர் மகிழ்வுடன் உதவினார். அதே போல உங்களோடும் நான் உறவு பூண்டுள்ளேன். அதனால் தான் கேட்டேன்'' என்றார் தணிகாசலம்.

விக்னேஸ்வரமூர்த்தி பதில் எதுவும் சொல்லாது சிரித்தார். அந்தச் சிரிப்பில் பல அர்த்தங்கள் புதைந்திருப்பதாகத் தணிகாசலம் நினைத்தார். எனினும் அவர் எதுவும் பேசாது சிலநிமிடங்கள் இருந்தார்.

''அதிபர் களைத்துப் போய் வந்திருப்பார். ஓய்வெடுக்கட்டும் நாங்கள் செல்வோம்'' என்று எழுந்தார் பரமேஸ்வரன்.

''எனக்குக் களைப்பில்லை நீங்கள் இருந்து கதையுங்கோ'' என்ற விக்னேஸ்வரமூர்த்தி சில கணங்கள் பொறுத்துச் சொன்னார் ''தருணம் வரும் போது கட்டாயம் உதவி செய்வேன்''

**655. எற்றுஎன்று இரங்குவ செய்யற்க செய்வானேல்**
**மற்றுஅன்ன செய்யாமை நன்று.**

செய்து விட்டு பிறகு நினைத்து வருந்துவதற்குக் காரணமான செயல்களைச் செய்யக் கூடாது. ஒரு முறை தவறிச் செய்தாலும் கூட மீண்டும் அத்தகைய செயல்களைச் செய்யாமல் இருப்பதே நல்லது.

## எதுவந்தாலும்

அருணாசலம் சுவாமியாரின் மீது அளவற்ற பக்தியுள்ளவன். நாவலர் ஸ்ரீ வித்தியா மகா கணபதி ஆலயத்திற்கு வெகுதூரத்தில் அவன் இருந்தாலும், தணிகாசலத்தின் நெருங்கிய இனத்தவன். அதனால் அவன் கோயில் திருவிழாக்காலங்களில் குடும்பத்துடன் தணிகாசலத்தின் வீட்டிற்கு வந்து நின்று மகாகணபதியின் திருவிழாவில் கலந்து கொள்வான். அத்துடன் சுவாமியார் மீது அளவற்ற பக்தியுடையவனாதலால் செவ்வாய், வெள்ளிக்கிழமைகளில் தனியாகவோ, குடும்பத்தினருடனோ கோயிலுக்கு வருவான். வரும்போது சுவாமியாரையும் தரிசிப்பான் சுவாமியாரின் அறிவுரைகளையும் கேட்பான்.

அன்று வெள்ளிக்கிழமை அருணாசலமும் அவனது இளைய மகள் துர்க்காவும் நாவலர் ஸ்ரீ வித்தியா மகாகணபதி ஆலயத்திற்கு வந்திருந்தனர். இரவுப்பூசை முடிந்ததும் மக்கள் சுவாமியாரின் அருளுரை இடம் பெறாததால் வீட்டுக்குச் செல்ல ஆரம்பித்தனர். சுவாமியாரை அரசமரத்தின் கீழ்க் காணவில்லை. நேரம் ஒன்பது மணிக்கு மேலாகியதால் அனேகமாக எல்லோருஞ் சென்றுவிட்டனர். அருணாசலம் சுவாமியார் இருக்கும் அரசமரத்தின் கீழ் வந்து நின்றான். எப்படியாவது சுவாமியாரிடம் தனது மனக்குறையைக்கூற வேண்டும் என்று நினைத்தான். சுவாமியாரின் நாய் அரசமரத்தின் கீழ்ப்படுத்திருந்தது. அதனால் சுவாமியார் வருவார் என்ற நம்பிக்கை அவனின் மனதில் துளிர்த்தது.

அப்போது அங்கே தணிகாசலம் வந்தார். துர்க்கா ஓடிவந்து அவரது கையைப் பிடித்தாள். தணிகாசலம் அவளைத் தூக்கி முத்தமிட்டார். அவளைப் பார்க்க அவருக்குத் துக்கமாக இருந்தது. தேசிய பாடசாலையிற் சேராமையால் அவள் பாடசாலை தொடங்கி மூன்று வாரங்கள் கழிந்தும் எந்தவொரு பாடசாலைக்கும் செல்லவில்லை ‘‘கற்றறிந்த பெரியவர்களுக்கே சிலவற்றைச் சொல்ல முடியாமல் உள்ளது. விருத்தெரியாத அந்தப் பாலனுக்கு எப்படி விக்னேஸ்வரமூர்த்தியின் கொள்கைகளைப் பற்றிச் சொல்ல முடியும்’’ என்று நினைத்தார்.

அப்பொழுது சுவாமியார் அங்கே வந்தார். அருணாசலமும் அவரது மகளும் வேலாயுதபிள்ளையும் தணிகாசலமுமே அங்கிருந்தனர். துர்க்கா சுவாமியாரைக் கண்டதும் குதூகலத்துடன் ‘‘சுவாமி’’ என்று அன்பொழுக அழைத்துக் கொண்டு அவரின் அருகே ஓடிச்சென்றாள். சுவாமியார் அவளைத் தூக்கித் தனது மடியில் உட்கார வைத்தார்.

‘‘என்ன அருணாசலம்..? தூரத்தில் இருக்கும் நீ மகளையும் வைத்துக் கொண்டு இவ்வளவு நேரமும் ஏன் நின்றாய்..? என்று கேட்டார் சுவாமியார்.

அருணாசலம் சில கணங்கள் எதுவும் பேசாது நின்றான். அவனது கண்கள் கலங்கின் ‘‘சுவாமி எனது இளைய மகள் துர்க்கா தரம் ஐந்து புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியடையவில்லை. அதனால் தேசிய பாடசாலையில் சேர்க்கமுடியவில்லை’’ என்றான்.

‘‘மகனே! விக்னேஸ்வரமூர்த்தி ஒரு சிறந்த மனிதன். தனக்கெனச் சில கொள்ளைகளை வகுத்து அதிலிருந்து அணுவளவும் பிசகாமல் வாழ்ந்து வருபவர். அவர் கணபதி மத்திய மகா வித்தியாலயத்தில் கடமையாற்றுங் காலத்திலும் நெறிமுறை தவறவில்லை. அதனால் அவருக்கு எவ்வளவோ துன்பங்கள் வந்தன. துன்பங்களைக் கண்டு பயப்படுபவர்களும், தனது வசதி வாய்ப்புகளுக்காக நீதிக்குப் புறம்பான செயல்களைச் செய்பவர்களையும் சமூகம் அவ்வப்போது போற்றினாலும் பின் இகழும். ஆனால் திடமான மனமுடையவர்கள் எந்தத் துன்பம் வந்தாலும் கலங்க மாட்டார்கள். தமது நன்மைக்காகக் கீழான எந்தச் செயல்களையும் செய்யமாட்டார்கள். பெற்றதாய் பசியால் வருந்துவதைக் காண நேர்ந்தாலும் விக்னேஸ்வரமூர்த்தி அறிவுடையோர் பழிப்பதற்குக் காரணமான இழிந்த செயலைச் செய்ய மாட்டார். அது எனக்கல்ல இந்த ஊரில் நேர்மையாக வாழும் அனைவருக்கும் தெரியும். அதனால்

தான் உனக்கு மிகவும் நெருங்கிய இனத்தவனான தணிகாசலம் விக்னேஸ்வரமூர்த்தியுடன் உனது மகளைப் பற்றிக் கதைக்கவில்லை. அதைப் பற்றி அவருடன் கதைத்தால் அவர் கதைப்பவர்களைப் பற்றி இழிவாக நினைப்பார். நீ நினைக்கலாம் சுவாமியார் கதைத்தால் சம்மதிப்பார் என்று'' என்று கூறிவிட்டுச் சில கணங்கள் மௌனமாக இருந்தார் சுவாமியார்.

அருணாசலத்தின் மனம் பரபரத்தது. ''மகாகணபதியே! சுவாமியாரை விக்னேஸ்வரமூர்த்தியுடன் கதைக்கச் செய்...'' மனதுள் வணங்கினான் அருணாசலம்.

''அருணாசலம், விக்னேஸ்வரமூர்த்தி நானனல்ல, மகா கணபதி மனித உருப்பெற்று வந்து சொன்னாலும் கேட்க மாட்டார். அவரது குணம் அப்படியானது. ஒரு முறை குருக்கள் தனது நண்பர் ஓருவரின் பிள்ளையின் அனுமதி தொடர்பாகக் கதைத்ததை விரும்பாத விக்னேஸ்வரமூர்த்தி, குருக்களிடம் பல காலம் திருநீறு வாங்கவில்லை. பூசை முடிந்ததும் சென்றுவிடுவார். அப்படியானவர் நான் கேட்டால் என்னைச் சந்திக்க வரமாட்டார்'' என்றார் சுவாமியார்.

**656. ஈன்றாள் பசிகாண்பான் ஆயினும் செய்யற்க**
**சான்றோர் பழிக்கும் வினை.**

பெற்றதாய் பசியால் வருந்துவதைக் காண நேர்ந்தாலும் கூட ஒருவன் சான்றோர் பழிப்பதற்குக் காரணமான இழிவான செயலைச் செய்யக் கூடாது.

## வறுமை சிறந்தது

அருணாசலத்திற்கு இறுதியாக இருந்த ஒரு சிறிய நம்பிக்கை ஒளியும் அணைந்து விட்டது. அவனுக்குத் துக்கமாக இருந்தது ''துர்க்காவுடன் கற்ற பலர் தேசிய பாடசாலையில் கற்கும் போது, துர்க்கா மட்டும் எப்படிச் சிறிய பாடசாலையில் கற்பது'' என்று நினைக்க அவனுக்குத் தாங்க முடியாத துக்கமாக இருந்தது. கண்கள் கலங்கின.

''மகனே, பாடசாலை கற்பதில்லை. மாணவர்கள் தான் கற்கிறார்கள். பெரிய பாடசாலையாக இருந்தாலென்ன சிறியபாடசாலையாக இருந்தாலென்ன அக்கறையுடன் கற்கும் மாணவன் கட்டாயம் சித்தியடைவான். தேசிய பாடசாலையில் புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த இருநூறுக்கும் அதிகமான மாணவர்கள் மட்டும் தான் கற்கின்றனர். மிகுதியாக உள்ள ஆயிரக்கணக்கான மாணவர்கள் வேறு பாடசாலைகளில் கற்கின்றனர். இவர்களெல்லாம் உயர்பதவி வகிக்கவில்லையென்று நீ நினைக்கிறாயா..? எம்மவர் கல்வி கற்பது பதவிகள் பெறவென்று நினைக்கிறார்கள். அது தவறான எண்ணம். கல்வி கற்பது வாழ்வைச் சிறப்பிப்பதற்காக என்பதை எமது மக்கள் புரிந்து கொள்ளல் வேண்டும். தான் கற்ற கல்வியைச் சமுதாயத்தின்

நன்மைக்காகச் செலவிடுதல் வேண்டும். தான்கற்ற கல்வியின் மூலம் இன்று பலர் இழிந்த பல செயல்களைச் செய்கிறார்கள். பதவி உயர்வுகள் கிடைத்தால் அதன் மூலம் எவ்வளவு சம்பாதிக்கலாமென்று நினைக்கிறார்கள். அதற்காகப் பல குறுக்குவழிகளை நாடுகிறார்கள். இது நல்லதல்ல. கற்ற கல்வியின் மூலம் அடுத்தவனை வருத்திப் பணம் சம்பாதிக்காது, நேர்மையான முறையில் வாழ்ந்து பேரும் புகழையும் நிலைநாட்டி சமுதாயத்திற்குத் தொண்டு செய்வதே சான்றோரின் கடன். பல அறிவுபுகட்டும் சிறந்த நூல்களைக் கற்றுத் தேர்ந்தவன், தான் கற்றுத் தேர்ந்தவற்றை நல்ல விஷயங்களுக்குக்காகப் பயன்படுத்தல் வேண்டும். அந்த வகையில் வாழ்பவர் தான் விக்னேஸ்வரமூர்த்தி. அப்படி மக்கள் வாழ வேண்டுமென்று நான் தினமும் அருளுரை வழங்கிவிட்டு, உனது நன்மைக்காக நான் அவரிடம் கொண்ட கொள்கையை மாற்று என்று கேட்கலாமா....? சொல் அருணாசலம்'' என்றார்.

அருணாசலம் ஊர்ப்பிரமுகர் ஒருவரிடஞ்சென்று விக்னேஸ்வரமூர்த்தியை அவரது அலுவலகத்தில் சந்தித்தார். அப்பொழுது விக்னேஸ்வரமூர்த்தி சொன்னது அருணாசலத்தின் காதில் ஒலித்தது ''நேர்மைக்குப் புறம்பான எந்தச் செயல்களையும் நான் எனது உயிர்போனாலும் செய்ய மாட்டேன். பழிக்குக் காரணமான இழிவான செயல்களைச் செய்து பெறுகின்ற செல்வத்தை விட நேர்மையானவராக இருந்து தூய்மையோடு வாழ்வதையே நான் விரும்புகிறேன். அதனால் எனது பதவிபறிபோனாலும் பரவாயில்லை. நீங்கள் கூறுவதைப் போலத் தேசிய பாடசாலையில் புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியடையாத மாணவர்கள் பலர் சேர்க்கப்பட்டதை நான் அறிவேன். மற்றவர் தீய செயலொன்றைச் செய்கிறார் என்பதற்காக நான் அத்தீய செயலைச் செய்ய வேண்டுமா..? பொருள், பதவி, அந்தஸ்து, கௌரவம், யாவும் வரும் போகும். அதற்காக நான் எனது கொள்கைகளை விட்டுக்கொடுக்க முடியாது. தற்செயலாக நீங்கள் எனது மேலதிகாரியின் அனுமதியோடு இந்தப்பிள்ளையைச் சேர்க்கலாம். அப்படிச் சேர்த்தால் இந்தப் பதவியில் நான் ஒரு கணங்கூட இருக்கமாட்டன்''

''அருணாசலம் ஒரு நேர்மையான மனிதனைச் சமூகந்தான் தீயவனாக்குகிறது. அன்பு, ஆதரவு, வற்புறுத்தல், கட்டளை என்பன மனித மனங்களை மாற்றுகின்றன. விக்னேஸ்வரமூர்த்தியை எவற்றாலும் மாற்ற முடியாது. நான் அவருக்குத் துர்க்காவை அனுமதிக்கும்படி கூறினால், அவர் வேலையை விட்டு விடுவார். நல்லதொரு மனிதனின் சேவை நாட்டிற்கு இல்லாது போய்விடும்'' என்றார் சுவாமியார்.

''நீ, நான் விக்னேஸ்வரமூர்த்தி ஐயாவுடன் கதைத்துச் செய்து தரவில்லை என்று நினைத்திருப்பாய். விக்னேஸ்வரமூர்த்தி ஐயாவைக் கேட்க எல்லாம் வல்ல சுவாமியாரே அஞ்சுகிறார். உயர் பதவியிலிருந்து கொண்டு பழிக்குக் காரணமான இழிந்த செயல்களைச் செய்து பெறுகின்ற செல்வத்தைவிடச் சான்றோராகவிருந்து தூய்மையோடு வாழ்ந்து வருவதையே விக்னேஸ்வரமூர்த்தி விரும்புவார். அதனால் வரும் கொடிய வறுமையைப் பற்றியும் அவர் பொருட்படுத்தமாட்டார்'' என்றார் தணிகாசலம்.

“இதற்கு மேல் எதுவும் செய்ய முடியாது” என்று நினைத்த அருணாசலம் வேறுபாடசாலையில் தனது மகளைச் சேர்ப்பதென முடிவெடுத்துவிட்டுச் சுவாமியாரிடமும் தணிகாசலத்திடமும் விடைபெற்றுச் சென்றான்.

**657. பழிமலைந்து எய்திய ஆக்கத்தின் சான்றோர்**
**கழிநல் குரவே தலை.**

பழியை மேற்கொண்டு இழிவான தொழிலைச் செய்து பெறும் செல்வத்தை விடச் சான்றோர் தூய்மையோடு வாழ்ந்து பெறும் பொல்லாத வறுமையே சிறந்தது.

## முடிவில்துன்பம்

கணபதி, அங்குசனின் வீட்டில் மிகவும் மகிழ்வுடன் வேலை செய்து கொண்டிருந்தான். அங்குசனின் மனைவி கௌரியின் குடும்பம் வசதி குறைந்த குடும்பமானதால் விநாயகரத்தினம் அவர்களை மதிப்பதில்லை. அதனால் அவர் அண்மைக்காலம் வரை கௌரியின் வீட்டில் நடைபெறும் எந்தக் காரியத்துக்கும் செல்லவில்லை.

விநாயகரத்தினம் தனது உயிர் நண்பனான சிவகுமாரனின் மகள் ரதினியை அங்குஷனுக்குத் திருமணஞ் செய்வதுவைப்பதாக வாக்குக் கொடுத்திருந்தார். சிவகுமாரன் அவரது உயிர் நண்பன். அவருக்காக அவனும், அவனுக்காக அவரும் எதையும் செய்வார்கள். ஓய்வான வேளைகளில் இரு குடும்பங்களும் ஒரு வீட்டிலேயே இருக்கும். ரதினி நல்ல அழகி. அத்துடன் குணவதி விநாயகரத்தினத்தை அவள் தனது தந்தையைப் போலவே நேசித்தாள். தான் செய்யப்போகும் செயல்களைத் தனது தந்தைக்குக் கூறி அனுமதி பெற்றுவிட்டு, விநாயகரத்தினத்திடமும் கூறி அனுமதி பெறுவாள். அதனால் விநாயகரத்தினம் அவளைத் தனது உயிராக நினைத்தார் பெருநாட்கள் வந்தால் விலையுயர்ந்த பட்டுப் பிடைவைகள் வாங்கிக் கொடுப்பார். அவளது ஒவ்வொரு பிறந்த தினத்திற்கும் விலையுயர்ந்த பரிசுகள் அளிப்பார். அவருக்குப் பெண்பிள்ளை இல்லாததால் அவளை அவர் தனது வீட்டுத் திருமகள் என்றே நினைத்திருந்தார்.

அங்குஷன் கண்டி வைத்தியசாலையில் வேலைக்குச் சென்ற போது கௌரியைக் கண்டு காதலித்தான். ரதினியைத் தான் திருமணஞ் செய்யாவிட்டால் தனது சகோதரர்களில் ஒருவருக்கு அவளைத் திருமணஞ் செய்து வைக்கலாமென்று நினைத்தான்.

ரதினிக்கும் அங்குஷனுக்கும் திருமண நாளைக்குறித்தார் விநாயகரத்தினம். அதை அறிந்த அங்குஷன் தான் கௌரியைக் காதலிக்கும் விஷயத்தைச் சொன்னார். அதற்கு விநாயகரத்தினம் சம்மதிக்கவில்லை. அதனால் அங்குஷன் வீட்டிற்கு வருவதை நிறுத்திவிட்டார்.

விஷயத்தை அறிந்த சிவகுமாரன் கவலைப்படவில்லை ‘‘இரத்தினம் எம்மைப்போல நாம் எமது பிள்ளைகளை நினைக்கக்கூடாது அங்குஷனுக்கு ரதினியைத் திருமணஞ் செய்ய விருப்பமில்லையென்றால் ஏன் அவனை வற்புறுத்துகிறாய்? விருப்பமில்லாதவனுக்கு எனது பெண்ணைச் செய்து கொடுத்து விட்டு, அவனால் அவள் துன்பப்படுவதை என்னால் பார்த்துச் சகிக்க முடியாது. சகல செல்வங்களுடனும் வளர்ந்த எனது மகள் சிறிதளவாவது கண்கலங்குவதை என்னால் பொறுத்தக் கொள்ள முடியாது. நான் கவலைப்படவில்லை. மகிழ்ச்சியடைகிறேன். ஏனென்றால் அங்குஷன் தனது முடிவைச் சொன்னமையால் எனது மகளின் எதிர்காலம் துன்பமில்லாமற் போய்விட்டது’’ என்றார். அத்துடன் அன்று போல இன்றும் பழகி வருகிறார்.

கௌரியை அங்குஷன் கோயிலில் வைத்துத் திருமணஞ் செய்தான். திருமணத்திற்கு விநாயகரத்தினம் செல்லவில்லை. அதே போல கௌரியும் அவரது வீட்டக்கு இதுவரை வரவில்லை. இப்பொழுது அவளும் பிள்ளைகளும் வைத்தியசாலை விடுதியில் அங்குஷனுடன் சேர்ந்திருக்கிறார்கள். அவர்களுடன் விநாயகரத்தினமும் மனைவியும் இருக்கின்றனர். இருந்த போதும் விநாயகரத்தினம் அவளோடு கதைப்பதில்லை. இது கௌரிக்கும் அங்குஷனுக்கும் கவலையை அளித்தது.

கணபதியின் மனைவி தெய்வானை கணபதியோடு வந்து அங்குஷனின் வீட்டில் தங்கிவிட்டாள். அவள் கணபதியோடு அன்னியோன்னியமாகப் பழகும் விதம் விநாயகரத்தினத்துக்கு வியப்பைக் கொடுத்தது. முன்பு அவளைக் கணபதி எத்தனை தரம் அடித்துக் காயப்படுத்தியிருப்பான். ஒரு முறை அவள் கணபதி தாக்கியதால் ஐந்து தினங்கள் மயக்க நிலையில் இருந்ததாக அவர் அறிந்துள்ளார்.

தெய்வானை மிகவும் நல்லவள். அவளைக் கௌரி தனது வீட்டு வேலைககாரி போல நடத்துவதில்லை. கௌரி தனது மாமனார், தன்னுடன் கதைக்காதது தனக்குப் பெரும் கவலை என்று தெய்வானைக்குச் சொல்லி அடிக்கடி அழுவாள். அதனால் தெய்வானையும் கவலைப்படுவாள்.

அன்று எல்லோரும் வெளியே சென்றுவிட்டனர். விநாயகரத்தினமும் தெய்வானையும் கணபதியும் மட்டும் வீட்டில் இருந்தனர். தெய்வானை விநாயகரத்தினத்துக்குத் தேனீர் கொண்டு வந்தாள். அவர் சாய்வு நாற்காலியில் படுத்திருந்தார். அவரது கண்கள் கலங்கியிருந்தன. அதைக்கண்டு தெய்வானை பதறிப்போனாள்.

‘‘ஐயா, ஏனப்பா அழுகிறீர்கள். ஏழைகளான நாங்களே மிகவும் மகிழ்வாக இருக்கும் போது உங்களுக்கு அப்படியென்ன கவலை வந்தது’’ துடிதுடித்தாள் தெய்வானை.

‘‘ஒன்றுமில்லை’’ சமாளித்தார் விநாயகரத்தினம்.

‘‘ஐயா, நீங்கள குறை நினைக்காவிட்டால் நான் ஒன்று சொல்லட்டா...?’’ நிறுத்தினாள் தெய்வானை.

‘‘சொல்லு’’

அவள் தயங்கினாள் ‘‘சொல்லு தெய்வானை’’ என்றார் விநாயகரத்தினம்.

‘ஐயா நான் அதிகம் படிக்கவில்லை. நான் சொல்வதைத் தயவு செய்து கேளுங்கோ. நீங்கள் பெரிய பணக்காரர் வசதியானவர்கள் நல்ல குடும்பத்தவர்கள். ஆனால் எல்லோரும் ஒருவரை ஒருவர் அறியாது துன்பப்பட்டுக் கொண்டிருக்கிறீர்கள். அங்குஷன் ஐயா அழுகிறார் கௌரி அம்மா அழுறர் உங்களது மனைவி அழுறா .... நீங்கள் அழுறியள். இதைப்பார்த்துக் கொண்டு நாங்கள் இருவரும் இங்கு நிம்மதியாக இருக்க முடியவில்லை. நாங்கள் போறமையா...’’ கலங்கினாள் தெய்வானை.

விநாயகரத்தினம் எதுவும் பேசவில்லை. அதனால் தெய்வானை சொன்னாள் ‘‘செய்யத் தகாத செயல்களைச் செய்த எனது கணவருடனேயே நான் இன்பமாக இருக்கிறேன். அங்குஷன் ஐயா என்ன தவறு செய்தார்? தான் விரும்பிய பெண்ணைத் திருமணஞ்செய்தார். இது பிழையா? அது நடந்து முடிந்து விட்டது. இப்பொழுது அவர் இரண்டு பிள்ளைகளுக்குத் தந்தை. ஐயா, செய்யத்தகாத செயல்கள் எனப் விலக்கப்பட்ட செயல்கள் சிலவேளை வெற்றியாக முடிந்தாலும் முடிவில் அவை துன்பத்தையே தரும் என்பார்கள். அங்குஷன் ஐயா, பெரியவர்களால் செய்யக்கூடாது என்று விலக்கி வைக்கப்பட்ட எந்தச் செயலையும் செய்யவில்லையே. காந்தர்வ மணத்தை எமது இலக்கியங்களும் புராணங்களும் ஏற்றுக்கொண்டுள்ளன. ஆனால் நீங்கள்தான் செய்யத்தகாதவையென பெரியவர்களால் விலக்கப்பட்ட செயல்களைச் செய்துவிட்டீர்கள். அது உங்களுக்கு வெற்றி என்று நினைத்தீர்கள். ஆனால் அது கொடிய துன்பம் என்பதை அனுபவித்தும் உணர்கிறீர்கள் இல்லை. பெற்ற பிள்ளையுடனேயே போட்டி போடுகிறீர்கள்’’

விநாயகரத்தினத்தின் கண்கள் உடைப்பெடுத்தன் ‘‘உண்மைதான் ஒரு தகப்பன் செய்யக்கூடாத பல தீமைகளை அக்குஷனுக்கும் கௌரிக்கும் செய்தேன். அதனால் அவர்கள் துன்பப்படுவார்கள் என்று நினைத்தேன். ஆனால் துன்பப்படுவது நானும் எனது மனைவியும் தான்’’ என்று நினைத்தார் விநாயகரத்தினம்.

**658. கடிந்த கடிந்து ஓரார் செய்தார்க்கு அவைதாம்**
**முடிந்தாலும் பீழை தரும்.**

செய்யத் தகாத செயல்களென விலக்கி வைக்கப்பட்ட செயல்களைச் செய்பவர்களுக்குச் சில வேளை அது நிறைவேறினாலும் முடிவில் துன்பத்தையே தரும்.

## போனாலும் நன்மை

‘‘விநாயகரத்தினது மனம் அமைதி கொள்ளாது பரிதவித்தது. அவருக்கு உடனடியாக ஆறுதல் தேவைப்பட்டது. அதனால் எழுந்து கால் நடையாக நாவலர் ஸ்ரீ

வித்தியா மகாகணபதி ஆலயத்திற்கு வந்தார். அரசமர நிழலில் சுவாமியார் மட்டும் இருந்தார். அவரது காலடியில் வீமன் படுத்திருந்தது.

சுவாமியாரின் அருகிற் சென்ற விநாயகரத்தினம், அவரது பாதங்களைத் தொட்டு வணங்கினார் ‘‘சுவாமி எனது மனம் அல்லற்படுகிறது. மகன் எனது விருப்பமில்லாமல் கௌரி என்ற பெண்ணை மணந்து விட்டான். அதை என்னால் இப்பொழுதும் பொறுத்துக் கொள்ள முடியவில்லை’’ கண்கலங்கினார் விநாயகரத்தினம்.

‘‘மகனே ! உறவென்பது ஒருவன் முற்பிறப்பில் செய்த நன்மை தீமைகளுக் கேற்பவே ஏற்படுகிறது. இல்லாவிட்டால் முன்பின் தெரியாத இருவர் எப்படி வாழ்க்கையில் இணைய முடியும்..? உனது மகன் கௌரியைத் திருமணஞ் செய்யாதிருந்தால் அவனது வாழ்க்கை நாசமாகியிருக்கும். காதல் என்பது உயிரோடு கலந்தது. காதலில் தோல்வியடைந்தால் அவர்களை விட்டு உயிர் பிரிந்து விடும். அவர்கள் நடைப்பிணமாகவே உலாவுவார்கள். அந்த ஏமாற்றத்தைத் தாங்க முடியாது அந்த இழப்பை ஈடுசெய்ய முடியாது. இதைப் பெற்றோர் உணர்ந்து கொள்ளல் வேண்டும். பிள்ளைகளை எப்போதும் மன்னிக்கும் சுபாவம் பெற்றோருக்கு இருத்தல் வேண்டும். நீ யாரை மன்னிக்கப் போகிறாய்..? சிந்தித்துப்பார். உன்னைத் தான் நீ மன்னிக்கப் போகிறாய். உனது மகன் யார்..? நீதான் ... நீயில்லாமல் அவன் உருவாகவில்லை. அத்வைதம் ஆன்மா ஒன்றென்று கூறுகிறது. பிரமமும் ஆன்மாவும் ஒன்றென்று கூறுகிறது் அதன்படி நீதான் அவன். எனவே மன்னித்துவிடு. சொர்க்கம் உனது காலடிக்கு வந்துவிடும். அங்குஷனின் இரு பிள்ளைகளும் உன்னைப் போலவே இருக்கின்றனர். அவர்களை வெறுத்தொதுக்க உனக்கு எப்படி மனம் வந்தது’’

விநாயகரத்தினத்துக்கு வியர்த்தது ‘‘சுவாமியார் சொல்வது அத்தனையும் உண்மை’’ என்று நினைத்தார்.

‘‘மகனே எதுவும் காரணமின்றி நிகழாது. இந்த ஊரில் வாழ்பவர்களைப் பார். விக்னேஸ்வரமூர்த்தி மிகவும் நேர்மையானவர். சேவையே தனது உயிர் மூச்சென்று நினைப்பவர். அவரது குடும்பம் எவ்வளவு இன்பமாக வாழ்கிறது. அவர் பிள்ளைகளுக்காகச் செல்வத்தைத் தேடவில்லை. செயல்களைச் செய்தார் செல்வம் குவிகிறது. தணிகாசலம் ஒரு கூலிக்காரன். மருமகன் வைத்தியர். மகன் பொறியியலாளர். அவன் பணம் தேடவில்லை. ஆனால் நல்ல வழியில் வாழ்ந்தமையால் குபேர சம்பத்துக்களுடன் வாழ்கிறான். மனிதனாகப் பிறந்தவன் வாழும் வாழ்க்கையின் தன்மையைப் பொறுத்தே அவனது எதிர்காலம் அமைகிறது. பிறரை வருத்தி ஒருவன் பொருள் தேடினால் அவனது பொருள் ஒரு நாளைக்கு அவன் வருந்தி அழும்படி அவனை விட்டு நீங்கும். நல்ல வழியில் வந்த பொருள் அவனை விட்டு நீங்கினாலும், பிறகு நன்மையுடன் வந்து சேரும். இதை ஏன் நான் சொல்கிறேன் என்றால் நீ மிகவும் நல்லவன். நல்ல வழியில் பொருளைச் சேர்த்துள்ளாய். முன்பு கணநாதன் தனது தொழிற்சாலையில் உற்பத்தியான பொருட்களை அன்னிய நாட்டு வர்த்தகனொருவருக்குக் கடனாகக் கொடுத்தார். அப்பொழுது அந் நாட்டில் அசம்பாவிதம் நடந்தது. கோடிக்கணக்கான ரூபா திரும்பி வராது எனக் கவலைப்பட்டு

வந்து என்னிடம் சொன்னார். அப்போது நான் சொன்னேன் ‘‘மகனே பிறரை வருத்தித் தேடிய பொருள் அனைத்தும் அவன் வருந்தியழும்படி போய்விடும். நல்ல வழியில் வந்த பொருள் கட்டாயம் திரும்பி வரும். நீ எப்படித் தேடினாயோ எனக்குத் தெரியாது. இதுதான் இயற்கை விதியென்றேன். ஆறுமாத காலத்துள் அப்பொருள் திரும்பி வந்துவிட்டதென்று பரமேஸ்வரனுடன் வந்து சொல்லிக் கணநாதன் மகிழ்ந்தார். அப்போது பரமேஸ்வரன் என்ன சொன்னார் ‘‘உண்மைதான் சுவாமி, கணநாதன் நேர்மையான முறையில் பொருளைத் தேடினான் திரும்பி வந்து விட்டது. நான் தொழிலார்களை வருந்தித்தேடினேன். தீக்கிரையாகி விட்டது. இனி அது திரும்பி வராது’’ என்றார். இது கர்மயோக விதி. உலகில் பிறந்த எல்லா உயிர்களுக்கும் இந்த விதி பொருந்தும். எனவே நீ சென்று உனது மருமகளுடனும் மகனுடனும் இன்பமாக வாழ். நாம் வாழ்வது சில காலம். அந்தச் சிறிய காலத்தை ஏன் சண்டை சச்சரவுகளிலும் மோதல்களிலும் கழிப்பான்’’

விநாயகரத்தினம் வீட்டுக்குச் சென்றபோது கௌரி முற்றத்தில் நின்றாள். அவரைக் கண்டதும் உள்ளே செல்ல முயன்றாள். விநாயகரத்தினம் அன்பொழுகக் ‘‘கௌரி’’ என்று அழைத்தார். கௌரி திகைத்துப் போனாள். ‘‘என்னை மன்னித்துக் கொள்ளம்மா..’’ மேலே அவரால் பேசமுடியவில்லை.

கௌரி அவரது கால்களைக் கட்டிப்பிடித்து விம்மினாள். மகாலட்சுமியும் அங்குஷனும் கணபதியும் தெய்வானையும் கண்கள் நிறையப் பார்த்துக் கொண்டு நின்றனர்.

**659. அழக்கொண்ட எல்லாம் அழப்போம் இழப்பினும்**
**பிற்பயக்கும் நற்பா லவை.**

பிறரை வருத்தி ஒருவன் தேடிய பொருள் அனைத்தும் பின்னொரு காலத்தில் அவன் வருந்தும் படி அவனை விட்டுச் சென்று விடும். நல்ல வழியில் தேடிய பொருள் இழக்கப்பட்டாலும் பின் ஒரு காலம் வந்து சேரும்.

## பச்சை மண் பாத்திரம்

அமிர்தினி, பரமேஸ்வரனைத்தேடி, தணிகாலசத்தினது வீட்டுக்கு வந்தாள். அவர் விநாயகரத்தினத்தின் வீட்டிற்குச் சென்றுவிட்டதாகத் தணிகாசலம் சொன்னமையால் அவள் விநாயகரத்தினத்தின் வீட்டுக்கு வந்தாள்.

பரமேஸ்வரன் அவளை எதிர்பார்க்கவில்லை. அவள் கடந்த சில நாட்களாகத் தொலைபேசியில் தொடர்பு கொண்டு கதைத்தாள். பரமேஸ்வரன் யாருக்கும் சொல்லாது தனது தொழில் ஸ்தாபனங்களைக் கணநாதனிடம் ஒப்படைத்தமையால், கணநாதன் அமிர்தினியை முன்பிருந்த சாதாரண வேலையில் அமர்த்தி விட்டார். அத்துடன் முன்பு அவளின் பொறுப்பிலிருந்த தொழிற்சாலை தற்பொழுது கைமாறியதால் தொழிலாளர்கள் அவளை மதிப்பதில்லை. அது அவளுக்கு வேதனையைக் கொடுத்தது.

தொலைபேசியில் அவள் பரமேஸ்வரனுடன் தொடர்பு கொண்டு கணநாதனிடம் சொல்லித் தனக்கு பழைய வேலையைப் பெற்றுத் தரும்படி கேட்டாள். அதற்குப்

பரமேஸ்வரன் ஒத்துக்கொள்ளாததால் அவள் நேரில் அவரைச் சந்தித்துக் கதைக்க வந்திருந்தாள்.

“நான் தொலைபேசியில் யாவற்றையும் விபரமாகக் கூறியிருந்தேன். பின்பு ஏன் என்னைத் தேடி இங்கு வந்தாய்...? நான் தொழிற்சாலையின் பொறுப்புக்கள் யாவற்றையும் கணநாதனிடம் ஒப்படைத்து விட்டேன். இனி எனக்கும் அத் தொழிற்சாலைக்கும் எந்தவிதமான உறவும் இல்லை. இப்பே அதை விற்று விடுவதாக முடிவு செய்துவிட்டேன். எனது மகன் வைத்தியன். அவனால் எனது தொழிற்சாலைகளைக் கவனிக்க முடியாது. அவனுக்கும் இத் தொழிலுக்கும் எந்தவிதமான சம்பந்தமும் இல்லை. அத்துடன் அவன் தனது வைத்தியத்துறையில் நிபுணத்துவம் பெறவே விரும்புகிறான். முற்றத்தில் நட்டதென்னம் பிள்ளையைக் கூட நல்ல முறையில் கவனிக்காவிட்டால் உரிய பயனைத் தராது. அப்படியிருக்க பெரியதொழிற்சாலையை நிர்வகிப்பது எப்படி?” என்று கேட்டார் பரமேஸ்வரன்.

“நான் நிர்வகிக்கிறேன். நீங்கள் இங்கேயே இருங்கள். கணநாதன் தருவதிலும் பார்க்க கூடுதலான பணம் நான் தருகிறேன்” என்றாள் அமிர்தினி.

“நான் அவருக்கு அறுதியாக அதைக் கொடுத்து விட்டேன். இனி அவரிடமிருந்து அத்தொழிற்சலையைப் பெற நான் விரும்பவில்லை. அத்துடன் உன்னை நம்ப முடியாது. என்னுடன் தொடர்பு வைத்துக்கொண்டு இன்னும் பலருடன் தொடர்பு வைத்திருந்தாய். இப்பவும் அப்படிச் தான். வேண்டுமானால் நீ அத் தொழிற்சாலையை விலைக்கு வாங்கு” என்றார் பரமேஸ்வரன்.

அமிர்தினி சிரித்தாள். அவளது மோகனச் சிரிப்பு பரமேஸ்வரனின் அடி உணர்வுகளை மெல்லத் தட்டியது “என்னிடமுள்ள பணமெல்லாம் செலவாகிவிட்டது. இப்பொழுது வீட்டுச் செலவுக்கே சிரமம்படுகிறேன்” என்றாள் அமிர்தினி.

பரமேஸ்வரன் அவளை வியப்புடன் பார்த்தார். அவளது கழுத்து, கை யாவும் வெறுமையாக இருந்தது “உனது நகைகள் எல்லாம் எங்கே...? நான் தந்த பணம் யாவும் செலவு செய்து விட்டாயா...?”

“ஆடம்பர வாழ்வு வாழப் போய் யாவும் செலவாகிவிட்டன. முன்பு நான் தொழிற்சாலை முகாமையாளராக இருந்தபோது நீங்கள் தந்த பணத்திலும் பார்க்கப் பத்திலொருபகுதி பணம் தான் இப்பொழுது சம்பளமாகக் கிடைக்கிறது” விம்மினாள் அமிர்தினி.

பரமேஸ்வரன் சிரித்தார்” “நீதியற்ற முறையில் பொருளைச் சேர்த்துப் பாதுகாப்பது பச்சை மண் பாத்திரத்தில் நீரை ஊற்றிப் பாதுகாப்பதைப் போன்றது என்று நான் உனக்குப் பல முறை சொல்லியிருக்கிறேன். நீ நான் சொல்வது எதையும் கேட்காது உனது விருப்பப்படி நடந்தமையால் தான் இந்த நிலைக்கு ஆழாளாய். அத்துடன் உன்னில் எனக்கு நம்பிக்கையில்லை. அதனால் தான் நான் தொழிற்சாலையைக் கணநாதனிடங் கொடுத்தேன். தயவு செய்து இங்கிருந்து போய்விடு. இனிமேல் இங்குவராதே” என்றார் பரமேஸ்வரன்.

“நீங்கள் எனக்கு உதவி செய்வீகளென்ற நம்பிக்கையுடன் தான் நான் உங்களைத் தேடி வந்தேன். எனக்கு உங்கள் மீது அன்பிருக்கிறது. எனது அன்பைப் புரிந்து கொள்ளுங்கள். எனக்கு உதவி செய்யுங்கள்” என்று கூறிவிட்டு எழுந்து சென்றாள் அமிர்தினி.

அவள் சென்றதும் விநாயகரத்தினம் அவரின் அருகில் வந்து அமர்ந்தார்.

“அவளைக் கண்டதும் நீங்கள் இரங்கிவிடுவீர்கள் என்று நினைத்தேன்” என்றார். விநாயகரத்தினம்.

“இவளுக்கிரங்கினால் பேய்க்கு இரங்கியமைக்கு ஒப்பாகும். என்னிடம் எவ்வளவு பணத்தைப் பெற்றாள். அத்துடன் எனக்குத் தெரியாமல் எவ்வளவு பணத்தை வஞ்சகமான முறையில் எடுத்தாள். இப்போது எல்லாவற்றையும் இழந்து என்னிடம் வந்திருக்கிறாள்” என்றார்.

“வஞ்சகமான முறையில் சேர்க்கும் பணம் ஒரு போதும் நிலைத்து நிற்க மாட்டாது. அது பச்சைம ண் பாத்திரத்தில் சேர்த்து வைக்கும் நீரைப் போன்றதாகும்” என்றார் விநாயகரத்தினம்.

**660. சலத்தால் பொருள்செய்துஏம் ஆர்த்தல் பசுமண்**
**கலத்துள் நீர் பெய்துஇரீஇ யற்று.**

வஞ்சகமான வழியால் பொருளைச் சேர்த்துக் காப்பது, பச்சை மண் கலத்துள் நீரை விட்டுக் காப்பாற்றுவதைப் போன்றது.

## மனவலிமை

“உணர்வுகளை ஒருவன் அடக்கினானேயானால், அவனது எண்ணங்கள் ஒரு போதும் தீயனவாக இருக்கமாட்டாது. எண்ணங்கள் தீயனவாக இல்லாவிட்டால் அவனது செயல்கள் யாவும் நன்மை பயக்குவனவாகவே இருக்கும். நல்ல செயல்களைச் செய்பவன் எப்போதும் நன்மையே அடைவான். இதுதான் உலக நியதி. அதை நான் தொழில் செய்யும் போது உணரவில்லை. இங்கு வந்த பின்புதான் உணர்ந்து கொண்டேன். தணிகாசலம், அதிபர், வேலாயுதபிள்ளை போன்றோரின் எண்ணங்கள் தூய்மை மிக்கனவாக இருந்தன. அவர்களது செயல்களும் நன்மை செய்வனவாகவே இருந்தன. அதனால் பயனும் நல்லவையாகவே இருக்கின்றன. அதிபரது இரண்டு பெண்பிள்ளைகளுக்கும் சீதனம் இல்லாமல் நல்ல மாப்பிள்ளைகள் கிடைத்தனர். தணிகாசலத்தின் மகளை எனது மகன் வத்சல்யன் திருமணஞ்செய்யப் போகிறான். தீய எண்ணங்களை மனதில் உருவாக்கித் தீய செயல்கள் பலவற்றை நான் செய்தபோதும் அவை நிறைவேறாமைக்குக் காரணம் தணிகாசலம் நல்லவற்றை எண்ணி நல்லவற்றைச் செய்தமையே ஆகும்” என்றார் பரமேஸ்வரன்.

“ஒரு செயலின் வலிமை என்பது செயலில் ஈடபடுபவனின் மனவலிமையே ஆகும். மற்ற எல்லா வலிமைகளும் மன வலிமைக்குப்பிறகு தான் என்பார்கள். நான்

தொழிற்சாலையை ஆரம்பித்த போது என்னால் செய்து முடிக்க முடியும் என்ற மன வலிமை இருந்தது. அதனால் வெற்றி பெற்றேன். அங்குஷன் கௌரியை விரும்பிய போது அவர்களிருவரையும் என்னால் பிரிக்க முடியுமா என்றொரு சந்தேகமிருந்தது. அதனால் தான் அவர்களைப் பிரிக்க முடியவில்லை. நீங்கள் தொழிற்சாலையில் பலத்த நட்டமேற்பட்ட பின் அமிர்தினியின் விஷயத்தில் மனவலிமை உள்ளவராக இருந்தீர்கள். இப்பொழுது அவளைக் கண்டதும் உங்கள் மனவலிமை அற்றுவிடுமோ எனப் பயந்தேன். நல்ல வேளை நீங்கள் அவளை வரவேண்டாமென்று கூறிவிட்டீர்கள்'' என்றார் விநாயகரத்தினம்.

'' நான் எப்போதும் மனவலிமை மிக்கவனாகவே இருந்து வந்தேன். அதனால் தான் தொழில் என்னால் வெற்றியடைய முடிந்தது. பின் அமிர்தினி என்னைத் தவறாக வழி நடத்திய போது நீங்கள் எல்லோரும் பலவாறு எடுத்துக்கூறியும் நான் கேளாமைக்குக் காரணம் நான் மேற்கொண்ட செயலில் உறுதியாக இருந்தது தான்'' என்றார் பரமேஸ்வரன்.

''விக்னேஸ்வரமூர்த்தியின் மகளைக் கண்டு விட்டு அங்குஷன் தனது சகோதரனுக்கு அவளைத் திருமணஞ் செய்ய விரும்புவதாகச் சொன்னான். அதற்கு ''உனது சகோதரன் சம்மதிப்பானாவென்று'' நான் அங்குஷனைக் கேட்டேன். அதற்கு அங்குஷன் ''அவன் கட்டாயம் சம்மதிப்பான்'' என்று உறுதியுடன் கூறினான். அதன்படி அவன் சம்மதித்து விட்டான் அத்துடன் அங்குஷனின் மனைவியை எனக்கு கண்டாலே பிடிக்காது. அதனால் நான் அவளை வெறுத்தேன். அப்பொழுது அங்குஷன் சொன்னான் '' அப்பா வாழ்க்கை என்பது அன்பை மூலதனமாகக் கொண்டதே தவிர வேறு எதையும் மூலதனமாகக் கொண்டதல்ல. நீங்கள் பணம் தான் வாழ்க்கை என்று நினைக்கிறீர்கள். அப்படியல்ல அன்பு தான் வாழ்க்கை என்பதை ஒரு நாள்ப் புரிந்து கொள்வீர்கள். அது வரை நான் கௌரியையும் பிள்ளைகளையும் பிரிந்திருக்கிறேன். ஒரு செயலின் வலிமை மனதில் தான் உள்ளது. எனது இலட்சியம் கௌரியை அடைவதென்று நினைத்தேன். அடைந்து விட்டேன். அவளால் என்னை நினைத்துக்கொண்டு மனவலிமையோடு வாழ முடியும். என்னாலும் அப்படி வாழ முடியும். ஆனால் இந்த விடயத்தில் உங்களால் மனஉறுதியுடன் வாழ முடியாது. நான் எனது மனவலிமையால் யாவற்றையும் வெல்வேன்'' என்றான். அது உண்மை. பிள்ளைப் பாசத்திற்கு முன்னால் என்னால் தாக்குப்பிடிக்க முடியவில்லை. ஆனால் அவன் கௌரி மீது கொண்ட காதலின் வலிமையால் வென்றுவிட்டான்'' என்றார் விநாயகரத்தினம்.

பெருமூச்சு விட்டார் பரமேஸ்வரன் ''எல்லாச் செயலிலும் மனவலிமையுடன் செயற்பட்ட நான், அமிர்தினியின் விஷயத்தில் பலவீனமடைந்து விட்டேன். அதனால் தான் தொழிற்சாலையில் பல இலட்ச ரூபா நட்டமேற்பட்டது. இனிமேல் அமிர்தினியல்ல வேறு எவரால் கூட எனது வலிமையைத் தகர்க்க முடியாது'' என்றார் பரமேஸ்வரன்.

**661. வினைத்திட்பம் என்பது ஒருவன் மனத்திட்பம்**

**மற்றைய எல்லாம் பிற.**

ஒரு தொழிலின் உறுதி என்று சொல்லப்படுவது செய்பவனுடைய மனவலிமையே ஆகும். மற்றவையெல்லாம் வேறானவையாகும்.

## வலிமையுடையவரின் செயல்கள்

பரமேஸ்வரன் கணநாதனுடன் தொலைபேசியில் தொடர்பு கொண்டு, அமித்தினி தன்னை வந்து சந்தித்துக் கதைத்த விடயங்களைக் கூறினார். அதனால் மறுநாள் அமிர்தினியைத்தனது அலுவலக அறைக்கு அழைத்தார் கணநாதன். மிகவும் ஆடம்பரமான அறை அது. அதற்குள் வந்ததும் அமிர்தினிக்கு நெஞ்சு வலித்தது. அந்த ஆடம்பரமான சகல வசதிகளும் பொருந்திய அறைக்குள் தானிருந்த காலங்களை எண்ணிப்பார்த்தாள். பரமேஸ்வரன் எந்த நேரமும் அவளது அணைப்பிலேயே இருப்பார். குளிரூடப்பட்ட அந்த அறைக்குள் அழைப்பில்லாமல் யாரும் உள்ளே வரமாட்டார்கள். செய்தி சொல்லுவதானால் தொலைபேசியில் தான் சொல்வார்கள். அரைகுறை ஆடைகளுடன் அவள் அதற்குள் வந்துவிட்டால் பரமேஸ்வரன் நினைவிழந்து விடுவார். பின்பு அவள் சொல்பவற்றிற்கெல்லாம் மறுபேச்சின்றிச் சம்மதித்து விடுவார். இப்பொழுது அவள் அவ்வறைக்குள் வருவதில்லை ''நேற்றுப் பரமேஸ்வரனைச் சந்தித்தேன். அவர் தான் ஏதாவது கூறியிருப்பார். பல வருடகாலமாக என்னுடன் கூடிக் குதூகலித்த அவர் என்னை மறக்கமாட்டார்'' என்று நினைத்தாள் அமிர்தினி.

அறைக்கு வந்த அமிர்தினியை நிமிர்ந்து பார்த்தார் பரமேஸ்வரன். அவள் மிகவும் கவர்ச்சியாக இருந்தாள். அழகான வட்ட முகத்தில் குங்குமமிட்டிருந்தாள். கட்டைக் கையுடைய மேற்சட்டை. அதன் முன்புமும் பின்புறமும் நிண்ட வெட்டு. முதுகின் பெரும் பகுதி சமவெளி போலத் தெரிந்தது.

''முதலில் பெண்களைப் போல உடை உடுத்து. சட்டையின் முன்பகுதியும் பின்பகுதியும் எவ்வளவு தூரம் தெரிகிறது. வயிற்றுப் பகுதியும் அளவுக்கதிகமாகத் தெரிகிறது. இங்கு வேலை செய்யும் தொழிலாளர்கள் உனது சட்டைக்கு வெளியே தெரியும் அங்கங்களைப் பார்த்துத் தமக்குள்ச் சிரிக்கிறார்கள். ஒரு பெண் தனது கணவனுக்கு மட்டும் காட்டக்கூடிய அங்கங்கள் பலவற்றை ஆயிரம் பேருக்குக் காட்டுவது தான் நாகரீகமா..? உடைகள் எப்படியோ உணர்வுகளும் அப்படியே, உணர்வுகள் எப்படியோ அப்படியே ஒழுக்கமும் அமையும். ஒழுக்கம் எப்படியோ அப்படியே செயல்களும் அமையும். செயல்கள் எப்படியோ அப்படியே நடத்தைகள் மாறும். அது சமுதாயத்தின் ஒழுக்கத்தை மாற்றியமைக்கும். நீ வேலை செய்வதானால் ஒழுங்காக வேலை செய். இல்லாவிட்டால் உனக்கு ஒரு தொகைப்பணம் தருகிறேன் தொழிற்சாலையை விட்டுப் போ'' என்றார்.

“அமிர்தினி விக்கி விக்கி அழுதாள் “ஒழுங்காக உடையணிந்தால் மனமும் தூய்மையானதாக இருக்கும். உனது நடத்தை சரியில்லை. நேற்று நீ பரமேஸ்வரனைக் கண்டு இத் தொழிற்சாலையை உன்னிடம் ஒப்படைக்கும்படி கேட்டுள்ளாய். அத்துடன் இங்கு தொழிற் செய்யும் சிலருடன் கூட்டுச் சேர்ந்து தொழிற்சாலைக்கு நஷ்டமேற்படுத்தத் திட்டமிட்டிருக்கிறாய். ஒரு காலத்தில் உனது வனப்பில் மயங்கிய பரமேஸ்வரன், உன்மீது கொண்ட மோகத்தால் தொழிற்சாலைப் பொறுப்புக்களை உன்னிடம் ஒப்படைத்தார். அந்தளவில் நீ திருப்திப்படாமல் அவருடைய எதிரிகளுடன் சேர்ந்து நாச வேலைகளில் ஈடுபட்டாய். பின் அவரை விட்டுவிட்டு உனது உடலைக் காட்டி இன்றும் சிலரை உனது வலையில் விழுத்தினாய். நீ பெண்ணா..? நான் பரமேஸ்வரனுக்குப் பெரிய துன்பம் வரப்போகிறது என்று பல முறை எச்சரித்தேன். அவர் கேட்கவில்லை. அதனால்தான் துன்பம் வந்ததும் மனம் தளர்ந்து தொழிற்சாலையை நடத்த முடியாது திண்டாடினார். பின்பு அத்தொழிற்சாலையை என்னிடம் ஒப்படைத்தார். முன்பை விடப் பல மடங்கு இலாபம் எனக்குக் கிடைக்கிறது. துன்பம் வருமுன் கவனமாகக் காத்துக் கொள்வது, தப்பித்தவறித் துன்பம் வந்து விட்டால் மனம் தளராமல் இருப்பது ஆகிய இரண்டும் தொழில் வலிமையுடையவனின் கொள்கைகள் ஆகும். உன்னால் துன்பங்கள் பல வரும் என்பதைப் பரமேஸ்வரன் உணர்ந்து கொள்ளவில்லை. அதனால் தான் மனந்தளர்ந்தார். ஆனால் நான் அப்படியல்ல . உன்னால் எனக்குத் துன்பங்கள் பல வரப்போகின்றது என்று எனக்குத் தெரிகிறது. அதனால் நீ நஷ்டஈட்டைப் பெற்றுக்கொண்டு வேலையை விட்டுச் செல். இல்லாவிட்டால் உன்னை வேலையால் நீக்கி விடுவேன்” என்றார் கணநாதன்.

அமிர்தினி விக்கி விக்கி அழுதாள். முகத்தில் பூசப்பட்டிருந்த பல வகையான நிறப்பூச்சுக்கள் கண்ணீரில் கரைந்து அவளது முகத்தை விகாரமாக்கின. விம்மி, விம்மி அழுததாலும் கண்களைக் கைளால் கசக்கியதாலும் அவளது கண்கள் சிவந்திருந்தன. அந்தக் கோலத்தில் அவளைப்பார்க்க அவருக்கு அருவருப்பாக இருந்தது.

**662. ஊறுஓரால் உற்றபின் ஒல்காமை இவ்விரண்டின்**
**ஆறுஎன்பர் ஆய்ந்தவர் கோள்.**

துன்பம் வருவதற்கு முன்பே அதை வராமல் காத்துக் கொள்ளுதல், துன்பம் வந்தால் மனம் தளராமல் இருத்தல் ஆகிய இரண்டும் தொழிலைப் பற்றி ஆராய்ந்து அறிந்தவர்களின் கொள்கை ஆகும்.

## தொழில் வலிமை

“உன்னையும் உனது செயல்களையும் அவதானிக்கும்படி பலருக்கு நான் இரகசியமாகக் கூறியிருந்தேன். அவர்கள் கூறும் செய்திகளைக் கேட்க எனக்குப் பயமாக உள்ளது. நீ முன்பு எமது பொறியியலாளர் ஒருவர் உனது

நடவடிக்கைகளுக்கு ஒத்துழைக்கவில்லை என்பதற்காகப் பரமேஸ்வரனிடங் கூறி அவரை வேலையிலிருந்து நீக்கப்பண்ணினாய். அதைத்தவறு என்று உணர்ந்த பரமேஸ்வரன் என்னிடம் தொழிற்சாலையை ஒப்படைக்கும் போது, அப் பொறியியலாளரை வேலையில் சேர்த்துக் கொள்ளுமாறு கேட்டுக்கொண்டார். அவர் மூன்று மாதங்கள் வேலைக்கு வரவில்லை. அந்த மூன்று மாத காலச் சம்பளத்தையும் பரமேஸ்வரன் அவருக்குக் கொடுத்தார். அவரை ஏன் நீ வேலையால் நிறுத்தச் சொன்னாய்...? யோசித்துப்பார். தொழிற்சாலைக்கு வாங்கவிருந்த சில பொருட்களை வாங்காமல், வாங்கியதாக எழுத்து மூலம் தரும்படி அவரைக் கேட்டாய். பல இலட்ச ரூபா பெறுமதியான பொருட்களை அவர் எப்படி வாங்காமல் தருவது என்று கேட்க, நீ அவர் உன்னுடன் வம்புக்கு வருகிறார் என்று பரமேஸ்வரனுக்குக் கூறினாய். அதனால் தான் அவர் வேலையில் இருந்து நீக்கப்பட்டார். இப்பொழுது நீ அவரின் இடத்துக்குப் புதிதாகவந்த பொறியியலாளருடன் நெருங்கிப் பழகுகிறாய். அத்துடன் தொழிலாளர் சங்கத்தலைவனும் கலகலப்பாகப் பழகுகிறாய். நீ நினைப்பதைப் போல அவர்கள் மடையர்களல்ல. முன்பு தொழிற்சாலையில் நீ நாடகமாடிய விஷயங்கள் முழுவதும் அவர்களுக்குத் தெரியும். அதனால் நீ கதைப்பவற்றை எனக்குச் சொல்லி விடுகிறார்கள்'' என்றார் கணநாதன்.

அமிர்தினி விக்கி விக்கி அழுதாள். பின் சொன்னாள் '' முன்பும் நான் பரமேஸ்வரன் ஐயாவுடன் தவறாக நடக்கவில்லை. நடக்க விருந்த பல சம்பவங்களை நான் அவருக்குப் பலமுறை எடுத்துக்கூறினேன். அவர் பிடிவாதமுள்ளவர். அதனால் தான் தொழிலாளர்களுடன் சமாதானமாகச் செல்ல மறுத்தார். இது அவரது பிழையே தவிர எனது பிழையில்லை. ஒன்றாக வேலை செய்பவர்களுடன் அன்புடன் பழகி வருகிறேன். அது பிழையென்றால் நான் இனிப் பழகவில்லை''

''நான் நன்கு ஆராய்ந்து முடிவெடுத்து விட்டேன். பரமேஸ்வரனும் உன்னை வேலையிலிருந்து நீக்கும்படி கூறிவிட்டார்'' என்ற கணநாதன், மேசையில் இருந்த அழைப்பு மணியை அடித்தார். வெளியே நின்ற தொழிலாளி ஒருவன் கதவைத் திறந்து கொண்டு உள்ளே வந்தான்.

''நிர்வாக மேலாளர் திருமாறனை வரச் சொல்'' என்றார் கணநாதன்.

தொழிலாளி சென்ற சில நிமிடங்களில் நிர்வாக மேலாளர் திருமாறன் ஒரு கடிதத்துடன் உள்ளே வந்தார்.

''இருங்கோ...'' என்ற கணநாதன் அமிர்தினியின் பக்கம் திரும்பிச் சொன்னார் ''செய்யும் செயலை நிறைவேற்றிய பின்பே வெளியில் தெரிவிப்பது தொழில் வலிமையாகும். இடையிற் வெளிப்படுத்தினால் அது தீங்காக முடியும். அதனால் தான் நான் உன்னை வேலையை விட்டு நீக்குவதைப்பற்றி முன்பே சொல்லவில்லை. ஒரு தொழிலாளியை வேலையை விட்டு நீக்குவதானால் குறைந்தது ஆறுமாதங்களுக்கு முன்பே அறிவித்தல் வேண்டும். உனக்குத் தெரிவித்தால் நீ பல முறை கேடான செயல்களில் ஈடுபடுவாய். அதனால் ஆறுமாதச் சம்பளம் தருகிறேன். பெற்றுச் செல்'' என்றார் கணநாதன்.

அதை எதிர்பாராத அமிர்தினி திகைத்துப் போனாள். அவளால் பேச முடியவில்லை. விம்மி. விம்மி அழுதாள்.

“பிறரை வருத்தி அவரின் முன்னேற்றங்களைத் திட்டமிட்டு அழித்துப் பொருள் தேடுபவர்கள் ஒரு காலத்தில் மிகவும் துன்பப்படுவார்கள்” என்று பெரியவர்கள் கூறுவார்கள். நீ பரமேஸ்வரனுடன் தொடர்பு கொண்டதைப் பற்றி நான் கவலைப்படவில்லை. அன்பு காரணமாக விரும்பாமல் பொருள் காரணமாக விரும்பும் விலைமகளைப் போல நீ பரமேஸ்வரனுடன் வாழ்ந்திருந்தால் பரவாயில்லை. நீ அவரின் எதிரிகளோடு சேர்ந்து அவரை அழிக்கத் திட்டமிட்டாய். இப்பொழுதும் அதையே செய்ய நினைக்கிறாய். இல்லாவிட்டால் நீ பரமேஸ்வரனைச் சென்று சந்தித்திருப்பாயா...? அவருக்கு எத்தனை துரோகங்களைச் செய்தாய்...? இப்போ எப்படி அவரைச் சென்று சந்தித்தாய்? அன்று நீ செய்தவற்றை இப்பொழுது செய்ய ஆரம்பித்துள்ளாய். அதனால் உன்னை வேலையில் இருந்து நீக்கத் தீர்மானித்து விட்டேன்” என்ற கணநாதன் திருமாறனின் பக்கம் திரும்பிச் சொன்னார் “அமிர்தினியின் கணக்கைப் பார்த்துக் கொடுப்பனவுகளைக் கொடுத்து வேலை நீக்கக் கடிதத்தைக் கொடுங்கள்” என்றார். திருமாறன் எழுந்து செல்ல, அமிர்தினி அவனைப் பின்தொடர்ந்து சென்றாள்.

**663. கடைக்கொட்கச் செய்தக்கது ஆண்மை இடைக்கொட்கின்**
**எற்றா விழுமம் தரும்.**

செய்யும் செயல் முடிவடைந்த பின் வெளிப்படுத்துவதே ஆண்மையாகும். இடையில் வெளிப்பட்டால் அது நீங்காத துன்பத்தைக் கொடுக்கும்.

## எளிதும் அரிதும்

கணநாதனது தொழிற்சாலையில் வெளிநாட்டில் இருந்து கொண்டு வந்து பொருத்திய இயந்திரமொன்று எதிர்பாராதவாறு இயங்க மறுத்துவிட்டது. பிரதம பொறியியலாளரான விதுஷனும், இயந்திரம் இயக்குனனான சிவகுருவும் கடந்த இரண்டு நாட்களாக அவ் இயந்திரத்தைப் பரிசோதனை செய்தனர். இருந்தும் பயனேற்படவில்லை.

“இது புதிய இயந்திரம். முன்னைய இயந்திரங்களை விட வித்தியாசமானது. அதனால் இதைப் பற்றி எதுவும் புரியவில்லை.” என்றான் விதுஷன்.

பல இலட்ச ரூபாவுக்குக் கொள்வனவு செய்த அந்த இயந்திரம் திடீரென்று இயங்க மறுத்தமையால் தினமும் பல இலட்ச ரூபா நட்டமேற்படும். எப்படியும் விரைவாகத் திருத்தி விடவேண்டுமென்று நினைத்துத் தொழிற்பட்டார் கணநாதன்.

“ஐயா, இவ்வியந்திரத்தை நாங்கள் வாங்கி ஒரு வருடங்கூடப் பூர்த்தியாகவில்லை. மூன்று வருடங்கள் பழுதாகாதென்றும், அப்படிப் பழுதடைந்தால் தாம் இலவசமாகத் திருத்தித் தருவதாகவும் இயந்திரத்தை உற்பத்தி செய்த நிறுவனத்தினர் கூறியுள்ளனர். எனவே நாம் இதன் பழுதைப் பார்ப்பதைவிட இதை உற்பத்தி செய்த நிறுவனத்திற்கு அறிவிப்பது தான் நல்லது” என்றான் விதுஷன்.

‘தேவையில்லை நான் இதைத் திருத்துவேன். இதன் அமுக்கக் குழாயில் தான் பழுதேற்பட்டுள்ளது. அதனால் இயந்திரத்திலிருந்து வெளியேற வேண்டிய அமுக்கம் குறைவடைந்துள்ளது. எனவே இயந்திரத்தின் சில்லைக் கழற்றிவிட்டு மேலே உள்ள அமுக்கக் குழாயின் ஆணியைக் கழற்ற வேண்டும்” என்று சொல்லிக் கொண்டிருந்தான் சிவகுரு.

“சிவகுரு, இத்தொழிலை இவ்வாறு செய்து முடிக்கலாமென்று சொல்வது மிகவும் எளிது. சொன்னபடி செய்து முடிப்பதென்பது மிகவும் அரியதாகும். விதுஷன் மிகவும் கெட்டிக்காரன். அவனாலேயே கண்டு பிடிக்க முடியவில்லையென்றால் நாம் சற்றுச் சிந்தித்தல் வேண்டும். எதற்கும் சரியாகத் தெரியாமல் இயந்திரத்தைகக் கழற்றக்கூடாது” என்றார் கணநாதன்.

“இல்லை ஐயா, அமுக்கக் குழாயில் தான் பிரச்சினை. அமுக்கம் காணாமையினால் தான் இயந்திரத்தின் பாரிய சில்லகள் உருளவில்லை. சில்லைக் கழற்றிப்பார்ப்போம்” என்றான் சிவகுரு.

“அமுக்கக் குழாயில் பிரச்சினை இல்லை. அமுக்கத்தை உண்டுபண்ணும் கருவியில்தான் பிழை உள்ளது. எதற்கும் நாம் இயந்திரத்தை உற்பத்தி செய்த நிறுவனத்திற்கு அறிவிப்பது தான் புத்திசாலித்தனமானது” என்றான் விதுஷன்.

“சிவகுரு, நட்டம் ஏற்பட்டாலும் நம் ஆறுதலாக யோசித்து நிதானமாகத்தான் எதையும் செய்தல் வேண்டும். ஒரு நாள் எனது மனைவி “சமைப்பது கஷ்டமாக இருக்கிறது” என்று சொன்னாள். நான் சிரித்தேன். காய்கறிகளை வெட்டிச் சட்டியில் போட்டு விட்டு தேங்காயைத் துருவி பால் பிழிந்து அதனுள் விட்டு விட்டு வெங்காயமும் மிளகாயும் இட்டுக் கொதிக்க வைப்பது பெரிய வேலையா..?” என்று கேட்டேன்.

“அப்படியானால் நீங்கள் இன்று சமையுங்கள்” என்றாள் எனது மனைவி. நான் சரியென்று கூறிச் சமைத்தேன். யாரும் உண்ணவில்லை. எமது வீட்டு நாய்கூட மணந்து பார்த்து விட்டு தின்னாமல் சென்றுவிட்டது. அதனால் நாம் சிறிய செயல்களானாலுங் கூட அதை அப்படிச் செய்யலாம், இப்படிச் செய்யலாமென்று கூறுவது மிகச் சுலபம். அதைச் செய்து முடிப்பதுதான் மிகவும் சிரமம். விதுஷன் சொல்வதைப் போல இயந்திர உற்பத்தி நிறுவனத்திற்கு அறிவிப்போம்” என்றார் கணநாதன்.

மறு நாள் இயந்திர உற்பத்தி நிறுவனத்தைச் சேர்ந்த பொறியியராளரும் இரண்டு தொழிலாளர்களும் வந்தனர். இயந்திரத்தை இயக்கிப் பார்த்து விட்டு அதை

நிறுத்தினர். இயந்திரத்திற்கும் அதன் சில்லுக்கும் பொருத்தப்பட்டிருந்த பட்டியின் ஆணி சற்று இழகி இருந்தது. அதை இறுக்கிப் பூட்டினர். இயந்திரம் வேலைசெய்ய ஆரம்பித்தது.

“இந்திரத்தின் அமுக்கக் குழாயில் தான் பழுதேற்பட்டதென்று கூறி எமது இயந்திர இயக்குனர் அதைக் கழற்ற முயன்றார். ஆனால் விதுஷன் விடவில்லை” என்றார் கணநாதன்.

“ஐயையோ தப்பி விட்டீர்கள். அமுக்கக் குழாயைக் கழற்றினால் அதைப் பொருத்துவதற்கு இரண்டு மூன்று நாட்களாகும். வேலை தெரியாது இயந்திரத்தைக் கழற்றக்கூடாது” என்று சொன்னார் பொறியியலாளர்.

**664. சொல்லுதல் யார்க்கும் எளிய அரியஆம்**
**சொல்லிய வண்ணம் செயல்.**

எச் செயலையும் செய்து முடிக்கலாம் என்று சொல்வது எல்லோருக்கும் எளியது; சொல்லியபடி செய்த முடித்தல் அரியதாகும்.

## போற்றப்படுபவர்கள்

திடீரென்று அன்று வீசிய புயற்காற்றினால் வேரோடு பாறிய ஒரு வேப்பமரம் கணபதி மத்திய மகாவித்தியாலய வகுப்பறைக் கட்டிடத்தின் மீது விழுந்தமையால் பாரிய சேதமேற்பட்டு விட்டது. செய்தி அறிந்த அதிபர் கனகலிங்கம் பாடசாலைக்கு வந்தார். அன்று சனிக்கிழமையாதலால் வகுப்பறையில் மாணவர்கள் இருக்கவில்லை. அதனால் ஏற்படவிருந்த பெருஞ்சேதம் தவிர்க்கப்பட்டு விட்டதாகக் கனகலிங்கம் நினைத்தார்.

தொழிலாளியை அழைத்து தணிகாசலத்தை கூட்டி வருமாறு பணித்தார்.

“ஐயா, தணிகாசலம் அண்ணை பரமேஸ்வரனுடன் கொழும்புக்குச் சென்று விட்டார். அவர் திரும்பிவர ஒருவாரகாலமாகும்” என்றான்.

அவன் கூறிய பின்பு தான் கனகலிங்கத்திற்குத் தணிகாசலம் கொழும்புக்குச் செல்வதாகக் கூறியது நினைவுக்கு வந்தது “இப்போ என்ன செய்வது..? விக்னேஸ்வரமூர்த்தி ஐயாவும் இல்லை” என்றார் கனகலிங்கம். அவரால் எதையும் தீர்மானிக்க முடியவில்லை. செய்தி அறிந்த வேலாயுதபிள்ளையும் தனபால சிங்கமும் பல பெற்றோரும் பாடசாலைக்கு வந்தனர்.

“புயலால் மரம் பாறியதைக் கல்வித்திணைக்களத்திற்கு அறிவித்து விட்டு மரத்தை வெட்டித் துப்பரவு செய்வோம்” என்றார் வேலாயுதபிள்ளை.

“இல்லை. இல்லை கல்வித்திணைக்களத்தினர் வந்து பார்த்த பின்பு தான் நாம் நடவடிக்கை எடுக்க வேண்டும்:” என்றார் கனகலிங்கம்

“இன்று சனிக்கிழமை. திங்கட்கிழமை தான் நாங்கள் அறிவிக்க முடியும். அதன்பின்பு தான் அவர்கள் வருவார்கள். பின் மரத்தை அகற்ற இரண்டு தினங்கள் செல்லும். பின் வகுப்பறையைத் திருத்த நாலைந்து தினங்கள் செல்லும். அதுவரை பாடசாலை நடக்காது” என்றார் தனபாலசிங்கம்.

“அதற்காகச் சட்டதிட்டங்களை மீறமுடியாது” என்றார் கனகலிங்கம்.

அப்பொழுது விக்னேஸ்வரமூர்த்தி அங்கே வந்தார் “என்ன கனகலிங்கம் சிலை மாதிரி விறைத்துப் போய் நிற்கிறாய். கல்விப்பணிப்பாளரின் வீட்டுக்குச் சென்று மரம் வகுப்பறையின் மேல் விழுந்ததை அறிவி. அதற்கிடையில் துப்பரவு செய்வதற்கு தொழிலாளர்களை அமர்த்து” என்றார் விக்னேஸ்வரமூர்த்தி.

கனகலிங்கம் கல்விப் பணிப்பாளரிடம் சொல்லப் புறப்பட்டார் “இதுக்கெல்லாம் நீர் போகத்தேவையில்லை. ஓர் ஆசிரியரிடம் கடிதம் எழுதிக் கொடுத்துவிடு” என்றார் விக்னேஸ்வரமூர்த்தி. பின் அங்கிருந்த ஒருவனிடம் சொன்னார், “கஜேந்திரனைக் கூட்டிவா”

சிறிது நேரத்தில் அங்கு கஜேந்திரன் வந்தான். அவன் வரும் போது நாலைந்து இளைஞர்களை அழைத்து வந்தான். வந்த இளைஞர்கள் கோடரிகள் கொண்டு வந்தனர்.

இரண்டு மணித்தியாலங்களுக்குள் அங்கிருந்தவர்களின் உதவியுடன் கஜேந்திரன் மரத்தைத் தறித்துத் தூக்கி ஒரு கரையில் அடுக்கினான்.

அப்போது கல்விப் பணிப்பாளர் பாடசாலைக்கு வந்து பார்வையிட்டார். பின் சம்பவத்திரட்டுப்பத்தகத்தில் மரம் விழுந்ததால் பாடசாலைக்கு ஏற்பட்ட சேத விபரத்தை எழுதிவிட்டு வகுப்பறையைத் திருத்தவதற்கு அனுமதியளித்தார். தச்சுத் தொழிலாளர்களைக் கஜேந்திரன் அழைத்து வந்து கூரை மரங்களைச் சீர்செய்தான். அன்று மாலை வகுப்பறை திருத்தி முடிக்கப்பட்டது.

“கனகலிங்கம் பாடசாலையை நடத்தமாட்டுது. அதிபர் விக்னேஸ்வரமூர்த்தி தன்னுடன் கூடவிருந்து எல்லாம் செய்தவர் என்பதற்காகத் தனது செல்வாக்கைப் பாவித்து அதிபர் பதவியைக் கொடுத்தவர். திறமையுள்ளவனால் தான் ஒரு தொழிலைச் செய்து முடிக்க முடியம். இவ்வளவு பேர் ஊரில் இருக்கையில் விக்னேஸ்வரமூர்த்தி கஜேந்திரனைத் தானே அழைத்து வரச்சொன்னவர். அவன் கெட்டிக்காரன். தொழிலில் மட்டுமல்ல சகல வேலைகளையும் திறம்படச் செய்வான்” என்றார் வேலாயுதபிள்ளை.

“செய்து முடிக்கும் திறமையால் புகழ் பெற்றவரின் செயல் ஆற்றலை எல்லோரும் புகழ்வார்களள. கஜேந்திரனது செயலாற்றலை அன்று பரமேஸ்வரனின் வீட்டுக்கு வந்த கணநாதன் ஐயாவின் சகோதரர் பேராசிரியர் ஜெகநாதன் ஐயா எப்படிப் புகழ்ந்தவர் அவன்தான் தன்னுடைய வாரிசென்றும், அவனுக்குக் கணித விரிவுரையாளர் பதவி கொடுக்கப் போவதாகவுஞ் சொன்னவர். அவர் தானே பல்கலைக்கழகத்திலை கணிதத்துறைத் தலைவர்” என்றார் தனபாலசிங்கம்.

''செயல்களைச் செய்து முடிக்கும் தன்மையால் புகழ் பெற்றவரின் செயலாற்றலைக் கணிதத்துறைத் தலைவரல்ல நாட்டை ஆளும் அரசனும் போற்றுவான். செயல்வீரர்களால் தான் நாடு முன்னேறும்'' என்றார் வேலாயுதபிள்ளை.

''கஜேந்திரனைப் போலப் பல இளைஞர்கள் உருவாக வேண்டும்'' என்றார் தனபாலசிங்கம்.

**665. வீறுஎய்தி மாண்டார் வினைத்திட்பம் வேந்தன்கண்**
**ஊறுஎய்தி உள்ளப் படும்.**

செயலைச் செய்யும் ஆற்றலால் பெருமை பெற்று உயர்ந்தவனின் செயல் திறனானது, நாட்டை ஆளும் அரசனால் அறியப்பட்டுப் போற்றப்படும்.

## செயலில் உறுதி

அன்று மாலை நாவலர் ஸ்ரீ வித்தியா மகா கணபதி ஆலயப் பூசை முடிவடைந்ததும் அரசமரத்தடிக்கு விக்னேஸ்வரமூர்த்தி வந்தார். அவர் வருவதற்கு முன் தனபாலசிங்கமும் வேலாயுதபிள்ளையும் சுவாமியாருடன் கதைத்துக் கொண்டிருந்தனர். விக்னேஸ்வரமூர்த்தியைக் கண்டதும் சுவாமியார் சொன்னார் ''பாடசாலைக்குப் பாரிய சேதமேற்பட்டுள்ளது. மகா கணபதியின் அருளால் உயிர்ச்சேதமேற்படவில்லை. பாடசாலை நடக்கும் போது வேப்ப மரம் பாறியிருந்தால் பல மாணவர்கள் உயிரிழந்திருப்பார்கள் என்று தானே நினைக்கிறீர்கள். இறைவனின் செயல்கள் விசித்திரமானவை. எம்மாற் புரிந்து கொள்ள முடியாதவை. நன்மையையும் தீமையையும் இறைவனிடம் அர்ப்பணித்துவிடல் வேண்டும். இறைவன் உயிர்களைப் படைத்துக் காத்தருள்பவன் என்பது உங்களுக்குத் தெரியாதா..? அதை மறந்து சிலர் பேசுவதை நான் கேட்டேன். ஒரு நிகழ்வு தேவையில்லாமல் நடைபெறமாட்டாது. தீர்மானிக்கப்படாமலும் நடக்க மாட்டாது என்பதை நான் உங்களுக்கு எத்தனை தடவைகள் கூறியிருக்கிறேன். எண்ணங்கள் எப்படியோ செயல்களும் அப்படியே இருக்கும். செயல்களின் படி தான் பலன்கள் உண்டாகும் என்று உங்களுக்குத் தெரியும். அப்படியிருக்க ஏன் விபரீதமாக எண்ணுகிறீர்கள். கெட்டன நடந்தாலும் நல்லவற்றை எண்ண வேண்டுமென்று பெரியவர்கள் கூறியிருப்பதை நீங்கள் அறியவில்லையா..? கெட்டன நடைபெற்றாலும் கடவுளே இந்தளவிற்கு நன்மை செய்து விட்டீர் என்று எண்ணுதல் வேண்டும்'' என்றார். அப்பொழுது கஜேந்திரன் அங்கே வந்தான்.

''ஒரு செயலின் வெற்றியும் தோல்வியும் செயலைச் செய்பவனின் மனவுறுதியில் தான் தங்கியுள்ளது. எண்ணியவர் எண்ணியபடி செயலாற்றுவதில் உறுதியாக இருந்தாரேயானால், அவர் எண்ணியபடியே செயலில் வெற்றியடைவார். இது புதிதல்ல. இறைவனுக்கு யாருடைய சேவையும் தேவையில்லை. பூசைகளும் புனஸ்காரங்களும் அவசியமானவை அல்ல. பொங்கலும் படையலும் திருவிழாக்களும் தேவையானவை

அல்ல. அவர் விரும்புவது நலித்தவர்களுக்குச் சேவை செய்வதையே. அனைத்தையும் உயிர்களுக்கு அளித்த இறைவனுக்குத் தனக்குத் தேவையானவற்றைச் செய்ய முடியாதா..? அவர் எம்மிடமா வாங்கி உண்ண வேண்டும்..?'' என்று கேட்டார் சுவாமியார்.

''சுவாமி ! புயலால் சேதமடைந்த பாடசாலை மண்டபத்தை எனது செலவில் திருத்திக் கொடுக்கிறேன்'' என்றார் கணநாதன்.

''இயற்கை அழிக்கும் போது, அதை ஆக்குவதற்கு இறைவன் யாரோ ஒருவரைப் படைப்பான். இல்லாவிட்டால் இயற்கையால் அழிக்கப்பட்டன வெல்லாம் திருத்தப்படாமலே இருந்துவிடும்'' என்றார் சுவாமியார்.

''மிகவும் நன்றி ஐயா, கல்வித் திணைக்களம் சேதமடைந்த பொருட்களையோ கட்டிடங்களையோ திருத்தும்படி கூறும். ஆனால் நாம் தான் திருத்துதல் வேண்டும். பின் அதற்கான செலவைப் பெற ஒருவருடங்கூட ஆகலாம். பாடசாலையில் நிதியில்லை. நீங்கள் உதவியதற்கு நன்றி'' என்ற கனகலிங்கம், கஜேந்திரனின் பக்கம் திரும்பிச் சொன்னார் ''கஜன், நீரில்லாவிட்டால் இன்று வகுப்பறை திருத்தப்பட்டிராது. நான் செய்வதானால் ஆறேழு நாட்கள் சென்றிருக்கும். அதனால் தொடர்ந்து பாடசாலைக்கு உமது உதவி தேவை'' என்றார்.

''உதவிகள் செய்வது தான் எனது நோக்கம். நானும் எனது நண்பர்களும் தொடர்ந்து உதவிகள் செய்வோம்'' என்றா கஜேந்திரன்.

''மனிதப் பண்புகள் அனைத்திலும் சிறந்தது சேவை செய்யும் பண்பாகும். ஒவ்வொரு மனிதனும் சேவை செய்யத் தயாராக இருத்தல் வேணம். அன்பு, அகிம்சை, சத்தியம், தா்மம், என்றெல்லாம் பல மனிதப் பண்புகள் இருக்கின்றன. அப்படியான பல மனிதப் பண்புகளை உருவாக்குவது சேவை. இவற்றை கூறிக்கொண்டிருந்தால் மட்டும் போதாது. அதை நடைமுறைப்படுத்துதல் வேண்டும். பசித்தவர்களுக்கு அன்பு காட்டுவதாலோ, இரக்கப்படுவதாலோ பிரயோசனமும் இல்லை் அா்த்தமுமில்லை. அவனுக்கு ஒரு பிடி சோறு கொடுக்க வேண்டும். அது தான் சேவை் செயல் தொழில் காரியம் என்று பெரியவர்கள் சொல்வார்கள். சேவை செய்யத் தயாராகுபவன் மற்றெல்லா மனிதப் பண்புகளையும் பெற்றவனாகிறான். சேவையின் பின் எல்லாம் செல்லும். அப்படிச் சேவை செய்பவன் எண்ணியபடி செயலாற்றுவதில் உறுதியுடன் இருந்தால், அவன் எண்ணியபடி எல்லாச் செயல்களும் வெற்றியை அளிக்கும்'' என்றார் சுவாமியார்.

**666. எண்ணிய எண்ணியாங்கு எய்துப எண்ணியார்**
**திண்ணியர் ஆகப் பெறின்.**

எண்ணிய எண்ணப்படி செயலாற்றுவதில் ஒருவர் உறுதியாக இருந்தால், அவர் எண்ணியவற்றை எண்ணியவாறே அடைந்தே தீருவர்.

## உருவத்தில் இல்லை.

பதினைந்து நாட்களாக வித்தியாவைக் காணமுடியாததால் கஜேந்திரனால் இயங்கமுடியவில்லை. இன்று எப்படியாவது வித்தியாவைச் சந்தித்துவிட வேண்டும் என்ற துடிப்பில் இருந்தான். அப்பொழுது நேரம் இரண்டு மணி ‘‘எப்படி வித்தியாவைச் சந்திப்பது? அவளது நண்பிகளான வளர்மதி, சுவர்ணா, அர்ச்சகா, காயத்திரி போன்றவர்களையும் காணமுடிவதில்லை’’ என்று எண்ணியபடி கிழுவானை ஒழுங்கையால் வந்தான். அந்த ஒழுங்கையில் உள்ள சிலருக்கு அவனைத் தெரியும் அவன் வித்தியாவைத் தேடித்தான் அவ்வழியால் வருகிறான் என்பதும் தெரியும். அதனால், அவனுக்கு அப்பாதையால் செல்லச் சற்றுப்பயமாக இருந்தது ‘‘யாராவது கண்டு விட்டு வித்தியாவின் தாயாருக்கு சொன்னால் கரைச்சல். வீணாக வித்தியாவிற்குத் துன்பம் ஏற்படும்’’ என்று நினைத்தவாறு துவிச்சக்கர வண்டியில் வந்தான். எதிரே நகுலன் வந்தான்.

‘‘நீ எங்கை திரிகிறாய். அதிபரும் வேலாயுதமண்ணையும் உன்னைத்தேடித் திரியினம். ஐந்து மணிக்கு யாரோ முக்கிய பிரமுகர் வருவதாகச் சொன்னவராம். உன்னைக் கூட்டிவரச் சொன்னவர்’’ என்றான் நகுலன்.

‘‘பதினைந்து நாட்களாக நான் வித்தியாவைச் சந்திக்கவில்லை. அதனால் இன்று மிகவும் பலவீனமாக இருக்கு. இந்த நிலையில் எந்தப் பிரமுகரைச் சந்தித்தாலும் என்னால் செயற்படமுடியாது. இன்று நான் அவளைப் பார்க்க வேண்டும்’’ என்றான் கஜேந்திரன்.

நகுலன் சிரித்தான் ‘‘உன்ரை கதையைக் கேட்க எனக்குச் சிரிப்பு வருது. முந்தின காலங்களில் முனிவர்களும் அரக்கர்களும் தமது உயிர்களைப் பறவைகளிலும், விலங்குகளிலம் வைத்திருப்பதாகக் கதைகளில் வாசித்துள்ளேன். உன்ரை உயிரை நீ வித்தியாவிடம் வைத்திருக்கிறாயோ..?’’ என்று கேட்டான் நகுலன்.

கஜேந்திரன் சிரித்தான் ‘‘உனக்கு இவற்றை விளங்கப்படுத்த முடியாது. எனது உயிர் மட்டுமில்லை, என்னுடைய உணர்வுகள், இயக்கம், மனவலிமை, எல்லாமே அவளிடம் தான் இருக்கு. சூறாவளி வீசிய அன்றும் இப்படித்தான் பலவீனமாக இருந்தேன். பாறிய மரத்தால் பாடசாலைக்கு ஏற்பட்ட சேதத்தைப் பார்க்கவென வித்தியா பாடசாலைக்கு வந்தாள். அவளைக் கண்டதும் பலவீனம் மறைந்து பலம் வந்துவிட்டது. அதுவும் அசுர பலம். அதனால் ஐந்து நாட்கள் செய்ய வேண்டிய வேலையை ஐந்து மணித்தியாலத்தில் செய்து முடித்து விட்டேன். நீ போ நான் அவளைச் சந்தித்து விட்டு வருகிறேன்’’ என்றான்.

‘‘இப்ப அதிபருக்கு என்ன சொல்ல?’’ நகுலன் கேட்டான்.

‘‘என்னைக் காணவில்லை என்று ஒரு பொய் சொல்லடா..?’’ என்றான் கஜேந்திரன்.

“ஏற்கனவே நான் சோம்பேறி செயலைச் செய்யத் தெரியாதவன் என்று நினைத்திருக்கிறார்கள். அப்படியிருக்க நான் உன்னைக் காணவில்லை என்று சொன்னால நான் உன்னைத் தேடவில்லை என்று தான் நினைப்பார்கள். அதனால் நேரஞ்செல்ல வென்றாலும் வந்துவிடு. நான் சமாளிக்கிறேன்” என்றான் நகுலன்.

ஐந்து மணியாகியும் கஜேந்திரன் வராமையால், சுனாமியால் பாதிக்கப்பட்டவர்களுக்கு வீடு அமைத்துக் கொடுக்கவென வந்திருந்த ஸ்கந்ததேவா பொறுமையை இழந்தான் “இந்தக் கிராமத்தில் சேவை செய்யக்கூடிய ஒரு மனிதன் இல்லையா..? தணிகாசலம் அண்ணை இல்லாவிட்டால் எதுவும் செய்யமுடியாதா.? அவர் கொழும்பால் வந்த பின் வருகிறேன்” என்றான் ஸ்கந்ததேவா.

“அதிபர் பதவி உயர்வு பெற்றதால் அவர் வரும் நேரத்தைக் குறிப்பிட்டுச் சொல்ல முடியாது கஜேந்தி...” என்று வேலாயுதபிள்ளை சொல்லிக் கொண்டிருக்கும் போது கஜேந்திரன் அங்கு வந்தான். அவனது முகம் வாடிச் சோர்ந்திருந்தது நடையில் தளர்ச்சி. அவனைக் கண்ட ஸ்கந்ததேவா வேலாயுதபிள்ளைக்கு இரகசியமாகச் சொன்னார் “இவனைப்பார்க்க விசரன் மாதிரிக் கிடக்கு. இவனை நம்பி இந்தப்பெரிய வேலையை ஒப்படைக்கலாமா? நான் மட்டும் இதற்குப் பொறுப்பில்லை. அதற்கென ஒரு குழு இருக்கிறது. பின் நான் நாளைக்கு கேவலப்பட வேண்டி வரும்.

வேலாயுதபிள்ளை பலமாகச் சிரித்தார் “அவன் பல்லைகலைக்கழகத்தால் வருகிறான். களைத்திருப்பான். பெரிய தேர் ஓட மிகச் சிறிய அச்சாணிதான் காரணம். அதே போல ஒருவனது வெளித்தோற்றத்தைக் கண்டு அவனை அளவி விடக் கூடாது. அவன் தணிகாசலத்தை விடப் பத்து மடங்கு செயலில் உறுதி உள்ளவன்” என்றார்.

“எனக்கு நம்பிக்கை இல்லை. நகுலனிடம் கொடுத்தாலென்ன ..?” ஸ்கந்ததேவா கேட்டான்.

“கஜன் என்ன சோர்ந்திருக்கிறாய்” என்று கேட்டார் வேலாயுதபிள்ளை. திடீரென்று அவர் அப்படிக் கேட்டதால் சற்றுத் தடுமாறினான் கஜேந்தின் “அவருக்கு, வித்தியாவைப் பார்க்காததால்தான் எனது மனமும் உடலும் சோர்ந்துள்ளது என்று கூறமுடியுமா..?”

“மத்தியானம் சாப்பிட நேரம் கிடைக்கவில்லை அண்ணை. தேநீரைத் தேநீரைக் குடித்துக் கொண்டிருந்தேன்” என்றான் அப்போது அங்கே வந்த விக்னேஸ்வரமூர்த்தி “கஜேந்திரன் இருக்கும் போது என்னை ஏன் தேடித்திரிகிறீர்கள். அவன் என்னனைவிடச் செயல் வீரன்” என்றார்.

கஜேந்திரனுக்கு அவ்வார்த்தைகள் மகிழ்ச்சியைக் கொடுத்தன. ஸ்கந்ததேவா நிமிர்ந்து கஜேந்திரனைப் பார்த்தான் “இப்ப திருப்திதானே. அதிபரும் நான் சொன்னபடி தான் சொல்லியிருக்கிறார். “அவன் மகா கெட்டிக்காரன்” என்றார் வேலாயுதபிள்ளை.

“ஒருவனது உருவத்தைப் பார்த்து அவனை எடைபோடக்கூடாது” என்று நினைத்தான் ஸ்கந்ததேவா.

**667. உருவுகண்டு எள்ளாமை வேண்டும் உருள்பெருந்தேர்க்கு**
**அச்சு ஆணிஅன்னார் உடைத்து.**

உருளும் பெரிய தேருக்கு சிறிய அச்சாணியே முதன்மையானது. அச்சாணி போல் உருவில் சிறியவர்கள் பலர் உலகில் உள்ளனர். அவர்களின் உருவத்தின் சிறுமையைக் கண்டு இகழக் கூடாது.

## முயற்சியுடன் செய்.

வித்தியாவைச் சந்திக்காததால் அன்று அவனால் உற்சாகமாக இருக்கமுடியவில்லை. அதனால் ஸ்கந்ததேவா சொல்வதையும் அவனால் கிரகிக்க முடியவில்லை. அவனுக்கு அவர்கள் பேசுவதைக் கேட்க என்றுமில்லாதவாறு கோபம் வந்தது. எனினும் சிரமப்பட்டு அடக்கிக் கொண்டான். அவனது முகத்தில் உணர்வுகள் மாறுவதை உணர்ந்த ஸ்கந்த தேவா சொன்னான் “ கஜேந்திரன் பகல் உணவை உண்ணாமையால் களைத்திருக்கிறார். நாம் உணவை உண்டுவிட்டு இருப்பதால் உற்சாகமாக இருக்கிறோம். உணவை உண்ணாமல் இருப்பவனுடன் நாம் கதைப்பது பாவம். அவரைச் சென்று உணவை உண்டுவிட்டு வரச்சொல்லுங்கள். நான் ஒரு வாரம் இங்கு தங்கியிருப்பேன்” என்றான் ஸ்கந்ததேவா.

“கஜன் நீ போய்ச் சாப்பிட்டு விட்டுவா” என்ற கணநாதன், ஸ்கந்த தேவாவைப் பார்த்துச் சொன்னார் “நீ நினைப்பதைப் போலுள்ளவன் அல்ல கஜேந்திரன். முன்பு நானும் உன்னைப் போலத்தான் அவனை நினைத்தேன். தேவையில்லாமல் யாருடனும் பழகமாட்டான். பழகினால் விடமாட்டான். கடின உழைப்பாளி. அவனைப்பற்றிச் சில சம்பவங்களைச் சொன்னால் நீ நம்பமாட்டாய். அவனது தாய் நோயாளி. அவன் தான் வீட்டில் சமைப்பது. தோட்ட வேலை செய்வது. அதைவிட ஆயிரம் பொது வேலைகள், எப்படிச் செய்கிறானோ தெரியவில்லை? தான் ஏற்றுக்கொண்ட தொழில்களை மனங்கலங்காமல், காலந்தாழ்த்தாமல், தளராமல் செய்து முடித்து விடுவான். நாளைக்கு முடிப்பதாகச் சொன்ன செயலை இன்றே செய்து முடித்து விடுவான். அப்படிப்பட்ட வீரன் அவன். செயலினைக் கொடுத்தவிட்டுப் பார் அவனது வேகத்தை”

சாப்பிடுவதற்கென வந்த கஜேந்திரனது மனம் வித்தியாவைக் காண வேண்டுமென அவதிப்பட்டது. அதனால் அவன் கடற்கரைக்குச் சென்றான். வழமையாக அவர்கள் சந்திக்கும் இடத்தில் வித்தியா இருந்தாள். அவனால் தனது கண்களை நம்ப முடியவில்லை.

வித்தியாவின் அருகிற் சென்றான். அவள் அவனது முகத்தைப் பார்த்துக்கொண்டே இருந்தாள். கண்கள் கலங்கி கண்ணீர் கன்னங்களால் வழிந்தது
“வித்தி என்ன...?” அவனது குரல் தழுதழுத்தது. வலது கை அவளது கன்னத்தால் வடியும் கண்ணீரைத் துடைத்தது. வித்தியா விம்மினாள்.

“உம்மால்தான் எல்லாம். நான் பொது வேலைகள் செய்ய முடியாதென்று சொல்ல, நீர்தான் சுவாமியாருக்காகச் செய்யச்சொன்னீர் இப்ப ஒப்பாரி வைப்பு”

வித்தியா அழகாகச் சிரித்தாள். அந்த மோகனச்சிரிப்பு அவனை மோகிக்க வைத்தது “ இன்று உம்மைக் காணாததால் எனது இதயம் இயங்க மறுத்துவிட்டது. வெளிநாட்டிலிருந்து ஒரு பிரமுகர் எமது கிராமத்திற்கு உதவி செய்வதற்காக வந்திருந்தார். அவரும் அதிபரும் கதைத்ததொன்றும் எனக்குக் கேட்கவில்லை. நான் களைத்திருப்பதாக எண்ணிய கணநாதன், என்னைச் சாப்பிட்டுவிட்டு வரும்படி கூறினார். நான் சாப்பிடும் சாட்டாக இங்கு வந்தேன். சோர்ந்து வாடியிருந்த உணர்வுகள் உம்மைக் கண்டதும் துளிர்த்து விட்டன” என்றான்.

“இப்போது என்னாலும் உங்களைப் பார்க்காது இருக்கமுடிவதில்லை. உங்களை வரவேண்டாம் ‘ என்னைப் பார்க்க வேண்டாம் என்று கூறிவிட்டு நான் சித்திரவதை அனுபவிக்கிறேன்” என்றாள் வித்தியா.

பொழுது போவது தெரியாமல் இருவரும் வெகுநேரம் வரை கதைத்துக் கொண்டிருந்தனர். நன்றாக இருண்டதால் கஜேந்திரன் அவளைத் துவிச்சக்கர வண்டியில் ஏற்றிச்சென்று அவளது வீட்டின் அருகே விட்டுவிட்டு கணநாதனிடம் வந்தான்.

அவனது பொலிவைக் கண்ட ஸ்கந்ததேவா சொன்னான் “அப்போது பார்த்ததற்கும் இப்போது பார்ப்பதற்கும் எவ்வளவு வித்தியாசம் இருக்கு. முன்பு ஊமைபோல இருந்தவன். இப்போது புலியைப் போல இருக்கிறான். பசிவந்தால் பத்தும் பறந்து விடும் என்பர்கள்.. கஜன் இனிமேல் எந்த வேலையிருந்தாலும் உரிய நேரத்திற்குச் சாப்பிட்டுவிடு” என்றான் ஸ்கந்ததேவா.

அதை நினைக்க கஜேந்திரனுக்கு அடக்க முடியாத சிரிப்பு வந்தது. அதை சிரமம்பட்டு அடக்கினான் “ விபத்துக்குள்ளாகி மரணப்படுக்கையில் நான் இருந்தாலும் வித்தியாவைக் கண்டால் இயமனையும் ஏமாற்றிவிட்டு வித்தியாவுடன் சென்றுவிடுவேன்” என்று நினைத்தான்.

“கஜன், இது ஒரு நல்ல திட்டம். எமது கிராம மக்கள் இதன் மூலம் நிறையப் பயனடைவார்கள். ஸ்கந்ததேவா கூறியபடி யாவற்றையும் செய்து முடித்து விடு. ஏற்றுக்கொண்ட தொழிலை மனங்கலங்காமல், காலம் தாழ்த்தாமல், தளராமல் முயற்சியோடு செய்து முடிக்கக்கூடியவன் நீ. அதனால்தான் உன்னை நம்பி இந்த வேலையை ஒப்படைக்கிறேன்” என்றார் கணநாதன்.

**668. கலங்காது கண்ட வினைக்கண் துளங்காது**
**தூக்கம் கடிந்து செயல்.**

மனம் கலங்காது ஆராய்ந்து செய்து முடிப்பேன் என்று துணிந்து ஏற்ற தொழிலைச் சோர்வு கொள்ளாமலும் காலம் தாழ்த்தாமலும் செய்து முடிக்க வேண்டும்.

# துணிவோடு முடி

இரவு ஒன்பது மணிக்கு தோட்டத்தால் வந்த இராசகோபாலுக்கு இரவு உணவைக் கொடுத்தாள் வள்ளிம்மை. அவன் மற்றைய நாட்களில் இரசித்துச் சுவைத்து உணவை உண்பான். உண்ணும்போது அடிக்கடி ‘‘குழம்பு மிகவும் அருமையாக இருக்கு. மனிசி சமைத்தால் அமிர்தம் தான். தேவர்கள் தினமும் உண்ணும் அமிர்தத்தை தினமும் நானும் உண்கிறேன். உண்மையில் வேலை செய்வது போல இன்பம் உலகில் வேறெதுவும் இல்லை. நான் வேர்க்க விறுவிறுக்க வேலை செய்துவிட்டு வந்தால் உடலில் நோ உண்டாகும். அதைப் போக்க மனிசி உடலை வருடிவிட்டால் சொர்க்கம் தெரியும். நான் இவ்வளவு காலமும் அதைப் புரியாது வாழ்ந்து விட்டேன்’’ என்பான். ஆனால் அன்று எதுவும் பேசாது பிட்டையும் பருப்பையும் வெண்டிக்காய் பொரித்த குழம்பையும் பிசைந்து கொண்டிருக்கும் கணவனை ஆச்சரியத்துடன் பார்த்தாள் வள்ளியம்மை ‘‘ஏன் ஏதாவது சுகமில்லையா..?’’

வள்ளியம்மை கேட்டது அவனுக்குக் கேட்கவில்லை. அதனால் வள்ளியம்மை அவனது தோளைப்பிடித்து உலுப்பினாள். ‘‘ என்ன...? என்ன..?’’ தடுமாறினான் இராசகோபால்.

‘‘ஏதாவது சுகமில்லையா? உங்களுக்கு மிகவும் பிடித்த வெண்டிக்காயைப் பொரித்த குழம்பு வைத்துள்ளேன். சாப்பிடாது பிசைந்து கொண்டு இருக்கிறீர்கள்’’

‘‘யோசனை கூடினால் உணவு சுவைக்காது’’ என்றான் இராசகோபால்

‘‘அப்படி என்ன யோசனை...?’’

‘‘தணிகாசலம் மாமாவின் தோட்டத்திற்கு வெண்காயம் நடலாமென யோசிக்கிறேன். ஓர் இலட்சம் ரூபா வேண்டும். ஏற்கனவே காணிக்குப்பட்ட கடன் இலட்சக்கணக்கில் இருக்கு. ஓர் இலட்சம் ரூபா யாரிடமாவது கடனாகப் பெற்றால் வெங்காயம் விளைந்ததும் காணிக்கடனையும் கொடுத்துவிடலாம்’’ என்றான் இராசகோபால்.

‘‘அகலக் கால் வைக்கக் கூடாது என்று பெரியவர்கள் கூறுவார்கள்’’ என்று வள்ளியம்மை கூறிக்கொண்டிருக்கும் போது இராசகோபால் குறுக்கிட்டான் ‘‘முயற்சி செய்தல் வேண்டும். என்னால் உழைக்க முடியும். உழைக்கும் நேரத்தில் சோம்பியிருந்தால் முன்னேற முடியாது. தணிகாசலம் மாமாவிடம் சொன்னால் மணிவண்ணனிடம் தேவையான பொருட்களைக் கடனாக வாங்கித் தருவார். இந்த முறை கட்டாயம் வெங்காயம் நட வேண்டும்’’ என்றான் இராசகோபால்.

அவன் தீர்மானித்து விட்டால் எதைச்சொன்னாலும் கேட்கமாட்டான். என்று வள்ளியம்மைக்குத் தெரியும் ‘‘ நீங்கள் தணிகாசலம் சித்தப்பாவின் தோட்டத்திற்கும், வேறு தோட்டங்களுக்கும் வெங்காயத்தை நடுங்கோ. இப்ப சாப்பிடுங்கோ’’ என்றாள் வள்ளியம்மை.

“மனிசிக்கு இப்ப என்னில் அக்கறை அதிகம்” எனிறவாறு சாப்பிட்டான் இராசகோபால்.

“இராசகோபால் தணிகாசலத்தின் தோட்டத்திற்கு வெங்காயம் நட்டான். ஒரு மாதம் சென்றது. பயிர் நன்கு செழித்து வளர்ந்தது. உரம், பூச்சிநாசினி போன்றவற்றை மணிவண்ணனிடம் கடனாகப் பெற்றான் இராசகோபால். ஆனால் அன்றன்று தோட்டத்தில் வேலை செய்யும் தொழிலாளர்களுக்குச் சம்பளம் வழங்கவும் உணவு கொடுக்கவும் தினமும் பல ஆயிரம் ரூபா தேவைப்பட்டது. அதற்காகப் பலரிடம் கடன் பெற்றான் இராசகோபால். அன்று அவனுக்கு பத்தாயிரம் ரூபா தேவைப்பட்டது. யாரிடமும் கடன் கேட்க முடியாத நிலை. தரக்கூடியவர்கள் எல்லோரிடமும் கடன் பெற்றாயிற்று. அதனால் வள்ளியம்மையுடன் கதைத்தான்.

“பத்தாயிரம் ரூபா தேவை. நகையும் உன்னிடம் இல்லை. கடன் தரக்கூடியவர்கள் எல்லோரிடத்திலும் கேட்டு வாங்கி விட்டேன் இனி யாரிடமும் கேட்க முடியாது. என்ன செய்வதென்று தெரியவில்லை”

“ஏன் என்னிடம் நகையில்லை. நீங்கள் கட்டிய பத்துப் பவுண் தாலிக்கொடி இருக்குத்தானே. கொண்டு சென்று அடைவு வையுங்கள். பதினைந்து வருடமாகக் கட்டாத தாலி இப்போது எதற்கு? முடிவில் இன்பம் கொடுக்கும் தொழிலைச் செய்யும் போது, இடையில் துன்பங்கள் பல தோன்றும். அதற்காகச் சோம்பியிருக்க முடிமா...? துணிவோடு செயற்படுங்கள்”. என்றாள் வள்ளியம்மை.

“மூன்று மாதங்கள் கழிந்தன. இராசகோபால் வெங்காயத்தை அறுவடைசெய்தான். அவனுக்கு இரண்டு இலட்சம் ரூபா இலாபமாகக் கிடைத்தது அதனால் அவன் வீட்டுக்குப் பெற்ற கடன் தீர்க்கப்பட்டது.

“இலாபம் தரும் தொழிலைச் செய்ததால், பல துன்பங்கள் வரத்தான் செய்யும். அதைப் பொருட்படுத்தினால் முன்னேறமுடியாது” என்றாள் வள்ளியம்மை.

**669. துன்பம் உறவரினும் செய்க துணிவு ஆற்றி**
**இன்பம் பயக்கும் வினை.**

முடிவில் இன்பத்தைக் கொடுக்கும் தொழிலைச் செய்யும் போது துன்பங்கள் பல வந்தாலும் துணிவுடன் அதைச் செய்து முடிக்க வேண்டும்.

## உலகம் மதியாதவர்

ஒழுங்கையால் வந்து வீதியில் ஏறிய மோட்டார் வண்டியொன்று சமநிலை தவறியதால் துவிச்சக்கர வண்டியில் தனது பக்கமாக வந்த கஜேந்திரனை மோதிவிட்டுத் தப்பிச் சென்றுவிட்டது. கடுங்காயங்களுடன் வீதியோரமாக மயங்கிக் கிடந்த கஜேந்திரனை வீதியால் வந்தவர்கள் வைத்தியசாலையில் கொன்டு சென்று சேர்த்தனர்.

கஜேந்திரன் வைத்தியசாலையில் சேர்ந்த சில மணித்தியாலங்களில் மயக்கம் தெளிந்து எழுந்து கட்டிலில் உட்கார்ந்து விட்டான். தணிகாசலமும், பரமேஸ்வரனும் கணநாதனும், ஸ்கந்ததேவாவும் நகுலனும் அவனைப் பார்க்கவென வந்து வைத்தியசாலையில் நின்றனர்.

‘‘பயப்படும்படியாக இல்லை. கஜேந்திரனின் தலையில் ஏற்பட்ட காயத்தால் மயங்கிவிட்டான். வலது கையில் நோ இருக்கிறது. ஓரிரு வாரங்களில் சரியாகிவிடும்’’ என்றார் வைத்தியர் அங்குசன்.

‘‘நீ வேலைவேலையென்று இரவும் பகலும் ஓடித்திரிவாய். இரண்டு கிழமைக்குப் படுத்திருந்து ஓய்வெடு’’ என்றார் தணிகாசலம்.

‘‘கஜேந்திரன் ஓய்வெடுத்தால் கனபேர் பாதிக்கப்படுவினை. முதலில் பாதிக்கப்படுவது நான் தான். சுனாமியால் பாதிக்கப்பட்டவர்களுக்கு வீடுகட்டிக் கொடுக்கும் திட்டத்திற்குப் பொறுப்பு கஜேந்திரன் தானே. கூரை வேலை செய்யத் தொடங்கியாயிற்று. கூரைவேலை செய்பவர்களுக்குப் பொருட்கள் கொடுக்க வேண்டும். சில பொருட்கள் வாங்க வேண்டும். சம்பளம் கொடுக்க வேண்டும். இதெல்லாம் இந்த மாதத்தில் முடிவுற்றால் தான் கொடுப்பனவுகளைப் பெறமுடியும். இந்த நிலையில் கஜேந்திரன் படுத்தால் எப்படியிருக்கும்....?’’ என்று கவலைப்பட்டான் ஸ்கந்ததேவா.

‘‘நோயாளிக்குக் கஷ்டம் கொடுக்கக் கூடாது. நகுலனிடம் சொல்லிச் செய்விப்போம்’’ என்றார் பரமேஸ்வரன்.

தணிகாசலம் பரமேஸ்வரனைப் பார்த்தார். அந்தப் பார்வையின் பொருள் பரமேஸ்வரனுக்கு விளங்கியது ‘‘ஒன்றும் செய்யமுடியாது மச்சான். முழுநாளும் தொழிலாளர்களுடன் நிற்கக் கூடிய ஒருவர் தேவை’’ என்ற பரமேஸ்வரன், நகுலனின் பக்கம் திரும்பி ‘‘நகுலா மிகவும் முக்கியமான வேலை. பிற நாட்டுநிறுவனங்கள் பணஉதவி செய்வதால் யாவும் ஒழுங்காக இருத்தல் வேண்டும். இரண்டு மூன்று தினங்களுக்கு எல்லா வேலைகளையும் முடித்துவிட்டுக் கூரை வேலை செய்பவர்களுடன் நின்று உதவி செய். அவர்கள் வேலை செய்யும் போது தேவையான பொருட்களைக் கொடுக்க நம்பிக்கையான ஒருவர் தேவை’’ என்றார்.

‘‘சரி ஐயா, நான் எங்கும் செல்ல மாட்டேன்’’ என்றான் நகுலன். வைத்தியசாலைக்கு வந்தவர்கள் எல்லோரும் சென்ற பின் வித்தியா வந்து அழுதாள்.

‘‘எனக்கு ஒன்றுமில்லையென்று வைத்தியர் கூறிவிட்டார். நீர் ஏன் அழுகிறீர். அழாதையும்’’ என்றான் கஜேந்திரன்.

அவன் அப்படிச் சொன்னதும் வித்தியாவின் அழுகை அதிகரித்தது. விம்மி விம்மி அழுதாள்.

கஜேந்திரன் பலமாகச் சிரித்தான் ‘‘மனிசிக்கு என்னிலிருக்கிற அன்பை அழுகை காட்டுது....’’ என்றான். வித்தியா கோபத்துடன் ஏசினாள் ‘‘உங்களுக்கு எந்த நேரமும் பகிடி. கையிலும் தலையிலும் பெரிய கட்டுப்போட்டிருக்கு. அதோடை மயங்கியதாகவும்

அறிந்தேன்....'' என்று அவள் கூறும்போது வேலாயுதபிள்ளை அங்கே வந்தார். அதனால் வித்தியா கண்களைத் துடைத்தவிட்டு வைத்தியசாலையை விட்டு வெளியே சென்றாள்.

இரண்டு தினங்கள் கழிந்தன. அங்குசன், வைத்தியசாலையில் தங்கிச் சிகிச்சை பெற்ற கஜேந்திரனை வீட்டுக்குச் செல்லுமாறு கூறினார். அவன் வீட்டுக்குப் புறப்பட்டுச் செல்லும் போது வீடுகள் கட்டுமிடத்தைப் பார்க்கவென்று சென்றான். அங்கு பதினைந்து தொழிலாளர்கள் வேலை செய்யாது நின்றனர்.

''தம்பி, நாம் விரைவாக வேலை செய்ய வேண்டுமென்பதற்காகக் காலை ஏழு மணிக்கு வந்துவிட்டோம். இப்போது பத்துமணி. இன்னும் நகுலனைக் காணவில்லை. நேற்றும் இப்படித்தான்''. என்றான் ஒரு தொழிலாளி.

''அவர் சரிவரமாட்டார். இங்கு வந்தாலும் பொறுமையாக நிற்கமாட்டார். அடிக்கடி எங்கோ சென்றுவிடுகிறார். நாம் பொருட்கள் இல்லாவிட்டால், அவர் வரும்வரை பொறுத்திருக்க வேண்டும். ''நல்ல பணக்காரன் திறமையுள்ளவன் படிப்பில் கெட்டிக்காரன். ஆனால் ஒரு வேலையை நம்பிக் கொடுக்க முடியாது'' என்றான். இன்னொரு தொழிலாளி.

''வேறு செயல்களில் எவ்வளவு தான் திறமையுள்ளவராக இருந்தாலும், தான் பொறுப்பேற்ற செயலை உரிய நேரத்தில் செய்து முடிக்கத் தவறுபவர்களை உலகம் மதிக்காது. இவரால் பதினைந்து தொழிலாளர்கள் வேலையில்லாமல் இருக்கிறார்கள். இது எவ்வளவு நட்டம். அத்துடன் நேரம் வீணாகக் கழிகிறது'' என்றார் தணிகாசலம். அவரது வார்த்தைகளில் சினம் கொப்பளித்தது.

**670. எனைத்திட்பம் எய்தியக் கண்ணும் வினைத்திட்பம்**
**வேண்டாரை வேண்டாது உலகு.**

வேறு செயல்களில் உறுதியுடையவராக இருந்தாலும் எடுத்த செயலில் உறுதியில்லாத வரை உலகம் மதித்துப் போற்றாது.

## தீமையானது

''கல்வியறிவு இல்லாதவன், தான் ஏற்றுக்கொண்ட செயலைக் குறித்த நேரத்தில் செய்யாவிட்டால், அதை அறியாமையினால் அவன் செய்யாது விட்டு விட்டான் என்று ஏற்றுக்கொண்டு அவனை மன்னிக்கலாம். நகுலன் அப்படியானவனல்ல படித்தவன் அதுவும் பல்கலைக்கழகத்தில் படித்தவன் நல்லது எது கெட்டது எது என்று பகுத்து உணரக்கூடியவன். அத்துடன் வேலை செய்பவர்களுக்குப் பொருட்கள் கொடுக்கா விட்டால் அவர்களால் வேலை செய்ய முடியாதென்றும், அதனால் பெரும் நட்டமேற்படும் என்றும் தெரிந்தவன். அதைவிட வெளி நாட்டு நிறுவனத்தினர் குறித்த தவணைக்கு முன்பு வேலையை முடிக்கும்படி வற்புறுத்திக் கொண்டிருக்கிறார்கள்.

இவற்றையெல்லாம் நன்கு புரிந்த நகுலன் இப்படிச் செய்யக்கூடாது. இப்பொழுது நேரம் பதினொரு மணி. இவ்வளவு நேரமும் தொழிலாளர்கள் தொழிற்செய்யாது இருக்கிறார்கள். படித்த முட்டாள்'' என்று ஏசினான் ஸ்கந்ததேவா.

''நகுலனைக் காணவில்லை. தாயாரிடம் களஞ்சிய அறைத் திறப்பைவாங்கி வந்தேன்'' என்று கூறிவிட்டு களஞ்சிய அறைத்திறப்பை எடுத்து நீட்டினார் வேலாயுதபிள்ளை.

கஜேந்திரன் அதை வாங்கக் கையை நீட்டினான். அதைக் கண்ட தணிகாசலம் பதறிப்போனார் ''உனக்கு வருத்தம் தம்பி. நீ ஓய்வெடு. ஒரு கிழமைக்கு எல்லா வேலைகளையும் ஒதுக்கி வைத்துவிட்டு நான் இங்கு நிற்கிறேன். முன்பே நான் அதைச் செய்திருக்கலாம்'' என்றார் தணிகாசலம்.

''எனக்குப் பெரிதாக வருத்தம் எதுவும் இல்லை. வைத்தியர் ஓய்வெடுக்குமாறு கூறுகிறார். இதிலிருந்து ஓய்வு எடுக்கலாம் தானே. களஞ்சிய அறைத்திறப்பை வைத்துக்கொண்டிருந்தால் தொழிலாளர் பொருள் தேவைப்படும் நேரத்தில் என்னிடம் திறப்பைப் பெற்றுப் பொருட்களை எடுக்கலாம். நானென்ன வேலையா செய்யப் போகிறேன்'' என்றான் கஜேந்திரன்.

''வேண்டாம் தம்பி நீ வீட்டைபோ. நாளைக்கு ஊரவை குறையாகச் சொல்லுவினை'' என்றார் தணிகாசலம்.

''யாரும் எதையும் கூறட்டும். நான் அதைப்பற்றிக் கவலைப்பட மாட்டேன். நன்றாக ஆராய்ந்த பின்புதான் எனது முடிவைச் சொன்னனான். ஆராய்ந்து முடிவெடுத்த பின்பு அதை மாற்றுவது என்னால் முடியாத காரியம். உங்கள் ஒருவருக்கும் நேரமில்லாததால்தானே நகுலனிடம் பொறுப்பை ஒப்படைத்தீர்கள். ஆராய்ந்து எண்ணி முடிவாக, நாம் ஒரு வாரத்துள் வீட்டுத் திட்டத்தை முடித்துவிடுவோமென வெளிநாட்டு நிறுவனத்திடம் கூறிவிட்டோம். அப்படிச் சொன்ன பின்பு காலம் தாழ்த்துவது தீமையாகவே முடியும். இன்னொரு திட்டத்திற்கு எம்மை அவர்கள் நம்பமாட்டார்கள். நாவலர் வித்தியாலயத்திற்குச் சிறுவர் பாதுகாப்பு நிறுவனத்தினர் ஐந்நூறு உழவு இயந்திரப் பெட்டி மண் போடுவதற்கு இரண்டு லட்சம் ரூபா கொடுத்தனர். அதிபர் ஆராய்ந்து எண்ணித் துணிவைப் பெற்றுக் காலந் தாழ்த்தாமல் இரண்டு தினங்களில் அவர்கள் குறிப்பிட்டளவு மண்ணிலும் பார்க்கக் கூடுதலான மண்ணைப் போட்டார். அதனால் மகிழ்ந்த சிறுவர் பாதுகாப்பு நிறுவனத்தினர் மேலும் இரண்டு இலட்சம் ரூபாவைக் கொடுத்தனர். அத்துடன் ஒலிபெருக்கியும் கொ:த்தனர். அத்துடன் போரினால் அழிக்கப்பட்ட விளையாட்டு மைதானத்தின் ஒரு பக்கச் சுவரையும் கட்டி, மூன்று அழகிய வேலைப்பாடமைந்த படலைகளையும் செய்து விளையாட்டு மைதானத்திற்கும், பாடசாலைக்கும் போட்டனர். ஆகையால் குறித்த தவணைக்கு முன் காலந்தாழ்த்தாது செய்து முடித்தல் வேண்டும். நான் அதற்குத் தயாராக இருக்கின்றேன். நீங்கள் கவலைப்பட வேண்டாம்'' என்றான் கஜேந்திரன்.

'' ஒப்புக் கொண்ட வேலையைக் குறித்த நேரத்தில் செய்து முடிப்பவன்தான் சிறந்த மனிதன். ஒழுக்கம் என்பது வாய்மை தவறாத சொற்கள் பேசுவது மட்டுமல்ல,

சொன்னபடி நடப்பது. சொன்னபடி செய்யாவிட்டால் எந்தச் செல்வமிருந்தாலும் அவனை யாரும் மதிக்கமாட்டார்கள். எண்ணும் எண்ணம், சொல்லும் சொல், செய்யும் செயல் இவை மூன்றும் ஒத்திருத்தல் வேண்டும். எண்ணும் எண்ணப்படி சொல்லல் வேண்டும். சொன்ன சொற்படி படி நடப்பதும் ஒழுக்கம் தான் வேண்டும். அப்படி நடக்காவிட்டால் அது குற்றமுடையதாகக் கணிக்கப்படும்'' என்றார் தணிகாசலம்.

''எல்லாவற்றையும் மறந்து விடுங்கள். இரவு பகலாக நாம் வேலை செய்து குறித்த தவணைக்குள் முடிப்போம்'' என்றான் கஜேந்திரன்.

தணிகாசலம் சிரித்தார் ''ஆராய்ந்து எண்ணுவதன் முடிவு துணிவைப் பெறுவதேயாகும். அத்தகைய உயர்ந்த முடிவைப் பெற்ற நீ காலந்தாழ்த்தினால் தீமை வரும் என்பதை உணர்ந்தவன். ஆகையால் நான் இனிக்கவலைப்படமாட்டேன்'' என்றார்.

**671. சூழ்ச்சி முடிவு துணிவுஎய்தல் அத்துணிவு**
**தாழ்ச்சியுள் தங்குதல் தீது.**

ஆராய்ந்து எண்ணுவதன் முடிவு துணிவு ஆகும். துணிந்த பின்பு காலந் தாழ்த்துவது தீ தாகும்.

## வேளை அறிந்து செய்

பதினொன்றரை மணிக்கு நகுலன் வேர்த்து விறுவிறுக்க வந்தான். தணிகாசலம் அவனைக் கண்டதும் அவ்விடத்தை விட்டு மெல்ல நகர்ந்தார். அவனோடு பேசினால் ஆயிரம் முறை மன்னிப்புக் கேட்பான். இல்லாத காரணங்களெல்லாம் சொல்வான். தான் செய்த தவறுக்குக் காரணம் சொல்பவனைத் தணிகாசலத்திற்குப் பிடிக்காது. ஒரு முறை தவறு செய்துவிட்டுக் காரணம் கூறினால் பரவாயில்லை, தினமும் தவறுகள் செய்துவிட்டுச் சாட்டுக்கள் சொல்பவர்களை அவரால் மன்னிக்க முடியாது. அதனால் அவனுடன் கதைக்கவிரும்பாது சென்றார்.

''தணிகாசலம் அண்ணை'' நகுலன் அழைத்தான். தணிகாசலம் அவன் அழைப்பதைக் கேளாதவர் போலச் சென்றார். நகுலன் விரைவாக வந்து தணிகாசலத்திற்கு முன்னால் நின்றான். அவனது முகத்தைப் பார்க்கவே அவருக்கு அருவருப்பாக இருந்தது.

''அண்ணை, அவசரமாக ஓர் இடத்திற்குப் போகவேண்டியிருந்தது. போன இடத்தில் எதிர்பாராதவிதமாகத் தாமதம் ஏற்பட்டு விட்டது''

''நீ எதுவும் சொல்லத் தேவையில்லை. உன்னைப் பற்றி முழுமையாக அறிந்திருந்தும் பொறுப்பை உன்னிடம் தந்த எம்மில் தான் பிழை. உனக்கு எந்த

நாளும் அவசரமான அலுவல்கள் பல இருக்கும். அதைப்பற்றி நாங்கள் தவறாக நினைக்கவில்லை'' என்று சொல்லியபடி நடந்தார் தணிகாசலம்.

''கணபதி மத்தியமகா வித்தியாலய அதிபர் கனகலிங்கத்துடன் சென்றேன்...'' என்று நகுலன் கூறிக்கொண்டிருக்கையில் தணிகாசலம் குறுக்கிட்டுச் சொன்னார் ''கனகலிங்கத்துடன் பாடசாலை விளையாட்டு மைதானத்தில் திறந்த வெளியரங்கு கட்டுவது சம்பந்தமாகக் கல்விப் பணிப்பாளரைச் சந்திக்கச் சென்றாய். அப்படித்தானே...''

ஓமண்ணை...'' உற்சாகத்துடன் கூறினான் நகுலன்.

''உன்னை மாதிரி விடுபேயன் யார் இருக்கிறார்கள். கல்விப்பணிப்பாளரைச் சந்திப்பதானால் களஞ்சிய அறைத்திறப்பைக் கொண்டு வந்து என்னிடம் தந்துவிட்டுச் சொல்லி விட்டுச் சென்றிருக்கலாம். அதைவிட இப்போ இங்கு தச்சுத் தொழிலாளர்களும் கொத்தனார்களும் மும்முரமாகச் சுனாமியால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு வீடு கட்டிக்கொண்டிருக்கின்றார்கள். அவர்கள் இந்த வேலையை விட்டு விட்டு இரண்டு வார காலத்திற்கு எந்த வேலையும் செய்ய மாட்டார்கள் என்பது உனக்குத் தெரியாதா..? அதைவிடக் கல்விப்பணிப்பாளரை இரவில் சென்று வீட்டில் சந்திக்கலாம். உனக்கு மூளை இல்லை. முன்பு கனகலிங்கம் வகுப்பறை மீது வேப்பமரம் பாறி விழுந்த போது சுலபமாகச் செய்ய வேண்டிய வேலையை எவ்வளவு சிரமப்பட்டுச் செய்ய முற்பட்டார். விக்னேஸ்வரமூர்த்தி வராவிட்டால் என்ன நடந்திருக்கும்...?'' என்ற தணிகாசலம், மூச்சு விட்டு விட்டுச் சில கணங்கள் பேசாமல் நின்றார். அவருக்குக் கடுமையான கோபம் வந்தது.

''காலந்தாழ்த்திச் செய்யவேண்டிய செயல்கள் எது..? உடனே செய்ய வேண்டிய செயல்கள் எதுவென்று உங்கள் இரண்டு பேருக்கும் தெரியாமல் போய்விட்டது. தொழிலாளர்கள் எல்லோரும் இங்கு வேலை செய்யும் போது அதற்குப் பொறுப்பாக இருக்கும் நீ எங்கோ சென்றுவிட்டாய்..? காலந்தாழ்த்திச் செய்ய வேண்டிய செயல்கள் எதுவென்று தெரியாதவர்களிடம் பொறுப்பை ஒப்படைத்தவர்கள் தான் குறிறவாளிகள். நீ போ'' என்றார் தணிகாசலம்.

அவரது வார்த்தைகள் நகுலனுக்குக் கோபத்தை உண்டாக்கின. எனினும் ''அவர் மீது கோபங்கொண்டால் ஊரில் உள்ள அனைவர் மீதும் கோபங் கொண்டதற்குச் சமன்'' என்று நினைத்துப் பேசாமல் நடந்தான் நகுலன்.

கஜேந்திரன் ஒரு நாற்காலியில் அமர்ந்திருந்தான் ''நீ வைத்தியசாலையால் வந்துவிட்டாயா..? வீட்டுக்குச் செல்லாமல் இங்கு ஏன் இருக்கிறாய்...?'' என்று கேட்டான் நகுலன்.

''உடனே செய்ய வேண்டிய செயல்களை நோய் நொடியென்று என்று தாமதித்துச் செய்யலாமா...?'' என்று கேட்டான் கஜேந்திரன்.

''நீ போ, நான் இருக்கிறேன்'' என்றான் நகுலன்.

“எனக்குப் பெரிதாக வருத்தமில்லை என்று வைத்தியர் கூறி, வீட்டுக்குச் சென்று ஓய்வெடுக்கும்படி கூறினார். வீட்டில் இருந்தாலென்ன இதிலிருந்தாலென்ன இரண்டும் ஒன்று தானே” என்றான் கஜேந்திரன்.

“அதுவும் சரிதான்” என்று கூறிவிட்டுக் கஜேந்திரனின் அருகே அமர்ந்தான் நகுலன்.

**672. தூங்குக தூங்கிச் செயற்பால; தூங்கற்க**
**தூங்காது செய்யும் வினை.**

காலம் தாழ்த்திச் செய்ய வேண்டியவற்றைக் காலம் தாழ்த்தியே செய்தல் வேண்டும். விரைந்து செய்ய வேண்டிய செயல்களைச் செய்யக் காலம் தாழ்த்துதல் கூடாது.

## முடியாததையும் செய்.

“நீ விபத்துக்குள்ளானதை வித்தியாவுக்குச் சொன்னனான். மிகவும் துக்கப்பட்டாள். தான் இருந்த சூழ்நிலையையும் மறந்து பலத்து அழுதாள். பல்கலைக்கழக மாணவர்கள் எல்லோரும் அவள் அழுவதைப் பார்த்துப் பயந்துவிட்டனர். அத்துடன் அவளைச் சமாதானப்படுத்த வெகுநேரம் சென்றது...” என்று நகுலன் சொல்லிக் கொண்டிருக்கும் போது கஜேந்திரன் குறுக்கிட்டுச் சொன்னான் “உனக்கு எத்தனை தரம் எதைச் சொன்னாலும் புரியாது. ஒரு தகவலைச் செல்வதானால் இடம், பொருள், ஏவல் என்ற மூன்றையும் பார்த்துத்தான் சொல்ல வேண்டும். அத்துடன் மிகவும் ஆபத்தான விஷயங்கள் என்றாலும் சிறிய விஷயம் போலச் சொல்ல வேண்டும். நீ நான் விபத்துக்குள்ளானதைப் பெரிதுபடுத்திச் சொல்லியிருப்பாய். நான் செத்துப்போவன் என்று நினைத்து வித்தியா கத்தியிருப்பள். மாணவர்களெல்லாம் சேர்ந்து துக்கம் விசாரித்திருப்பினை. எமது சமூதாயத்தில் உண்மைக்குப் புறம்பானவற்றைக் கூடியிருந்து கதைப்பது தானே பெரிய பொழுதுபோக்கு. அந்த நேரங்களில் உருப்படியான ஏதாவதென்றைச் செய்யலாம். இதனால் வித்தியாவுக்கு எத்தனை பிரச்சினைகள் வருமென்று நீயேன் யோசித்துப் பார்க்கவில்லை. அவளது வீட்டாருக்கு நான் அவளைக் காதலிப்பது தெரியும். குமர்ப்பிள்ளை பல்கலைக்கழகத்தில் கற்கிறாள் என்று பாராமல் தாய் மனிசி அவளைத் தண்டிக்கிற விஷயமும் உனக்குத் தெரியும். அப்படியிருந்தும் ஆராயாமல் கதைத்திருக்கிறாய். உன்னைத் திருத்த முடியாது. அதோடு அவள் நான் விபத்துக்குள்ளானதை அறிந்த பிறகு பச்சைத் தண்ணீரும் குடித்திராள்”. பெருமூச்சு விட்டான் கஜேந்திரன்.

“ எட, இதைப் பெரிதாக நீ ஏன் எடுக்கிறாய். அவள் அறியத்தானே வேண்டும். என்றான் நகுலன்.

கஜேந்திரன் எதுவும் பேசவில்லை. பேசினாலும் அவனுக்கு அது விளங்காது என்று அவனுக்குத் தெரியும்.

அப்போது கஜேந்திரனது தந்தை பகலுணவுடன் அங்கு வந்தார். அவர் நன்றாகக் களைத்திருந்தார் ‘‘தம்பி, நீ வைத்தியசாலையால் வந்தது எங்களுக்குத் தெரியாது. அம்மா உன்னைப் பார்க்க வேண்டுமென்று துடியாய்த் துடிக்கிறா. இப்ப தானும் வரப்போவதாகச் சொன்னவா. நான் பின்நேரம் கூட்டிக்கொண்டு போவதாகச் சொன்னனான். ஆஸ்பத்திரியாலை வீட்டை வந்திட்டு இங்கு வந்திருக்கலாம். நான் ஆஸ்பத்தரிக்குப் போக அங்குஷன் ஐயா திகைத்துப் போனார். உனக்கு வழியில் ஏதாவது நடந்திட்டுதோ என்று அவதிப்பட்டார். காலைமை எட்டு மணிக்கு வீட்டை போக என்று புறப்பட்டனியாம். இப்ப இரண்டு மணி. வீட்டை வராவிட்டால் யாரிடமாவது சொல்லி அனுப்பியிருக்கலாம். நானும் பயந்திட்டன். வேலாயுதம் தான் நீ இங்கிருப்பதாகச் சொன்னவன். படித்த நீ கொஞ்சம் யோசித்திருக்கலாம்’’ என்றார்.

‘‘என்னப்பா செய்கிறது. காலையில் களஞ்சியசாலையின் திறப்பை நகுலன் கொண்டுவராததால் தொழிலாளர்கள் பலர் பதினொரு மணிவரையும் வேலை செய்ய முடியாமல் போய்விட்டது. அதனால் நான் மறந்திட்டன்’’

‘‘செய்யக்கூடிய இடங்களில் நல்ல செயல்களைத் தாமதியாது செய்து முடித்துவிட வேண்டும் என்றும், முடியாத போதும் தக்க வேறு வழிகளை ஆராய்ந்து செயற்பட வேண்டும்’’ என்றும் பெரியவை சொல்லுவினை. அது உண்மை தான். ஆனால் நீ நோயாளி அப்பூ. உனக்கேதாவது ஒன்று நடந்தால் என்னால் தாங்கிக் கொள்ள முடியுமே. அன்டைக்கே நான் செத்துப் போவன்’’ விம்மினார் கஜேந்திரனின் தந்தை.

‘‘ இதென்னப்பா....? எனக்கு எந்த வருத்தமும் இல்லையென்று வைத்தியர் சொன்னவர். இப்ப நான் முன்பு போல உற்சாகமாய் இருக்கிறேன்...’’ என்று கஜேந்திரன் சொல்லிக்கொண்டிருக்கும் போது தணிகாசலம் குறுக்கிட்டுச் சொன்னார் ‘‘களஞ்சிய அறைத்திறப்பை என்னட்டைத் தந்திட்டு, நீ வீட்டை போய்க் குளிச்சுச் சாப்பிடு. போ’’ என்றார் தணிகாசலம்.

கஜேந்திரன் ஏதோ கூற முற்பட்டான் ‘‘நீ எதுவும் சொல்ல வேண்டாம். வீட்டை போ. கொம்மா வருத்தக்காரி. மனிசி துக்கத்தில மாய்ந்து போயிருக்கு. போய் அந்த மனிசியின்ரை கண்ணிலை ஒரு தடவை காட்சி கொடு போ. எந்த வேலைகளையும் நீ சரியாய்த் திட்டமிட்டுச் செய்து முடிப்பாய். உன்னலை முடியாது என்று சொல்ல எந்தச் செயலுமில்லை. அதற்காக நீ சுகப்பட வேண்டும்.’’ என்று சிரித்தார் தணிகாசலம்.

‘‘ஒவ்வொருவரும் தம்மால் முடியாதென ஒவ்வொரு செயலை ஒதுக்கி வைத்தால் சமூகத்தில் இலட்சக் கணக்காண செயல்கள் செய்ய முடியாமல் போகும். அதனால் உற்சாகமாக இருக்க வேண்டும்’’ என்றான் கஜேந்திரன்.

‘‘சரி... சரி நீ போ... போடாப்பா....’’ என்றார் தணிகாசலம்.

**673. ஒல்லும்வாய் எல்லாம் வினைநன்றே; ஒல்லாக்கால்**
**செல்லும்வாய் நோக்கிச் செயல்.**

செய்ய வேண்டியவற்றை இயலுமான இடங்களிலெல்லாம் உடன் செய்து முடித்தல் நன்று. முடியாத போது அது பயன்படும். இடத்திலாவது செய்ய வேண்டும்.

## தீர்க்காத பகை

நான்கு மணிக்கு வீட்டு வேலைகள் செய்யும் தொழிலாளர்களுக்குச் சம்பளம் வழங்குவதற்காகப் பரமேஸ்வரனும், ஸ்கந்ததேவாவும் வந்தபோது கஜேந்திரன் அங்கு இருந்தான்.

“கஜன், உனக்கு வருத்தமெல்லே. வைத்தியசாலையில் இருந்து நேரே இங்கே வந்துவிட்டதாகவும், உனது தந்தையார் வைத்தியசாலைக்குச் சென்று அங்கு உன்னைக் காணாமையால் பயந்ததாகவும் தணிகாசலம் கூறினார். வைத்தியசாலையால் விட்டது தான் பிழை. அங்குசனிடம் சொல்லி இன்னும் ஒரு வாரத்திற்கு உன்னை அங்கு தங்க வைத்திருத்தல் வேண்டும்” என்று சிரித்தார் பரமேஸ்வரன்.

“ஆரம்பத்தில் கஜனில் எனக்கு நம்பிக்கை வரவில்லை. அவன் அன்று உணவு உண்ணாமையால் சோம்பியிருந்ததை நான் தவறாக நினைத்துவிட்டேன்” என்றார் ஸ்கந்ததேவா.

கஜேந்திரன் சிரித்தான் “நாம் தொடங்கிய தொழிலைத் திட்டமிட்டதை விட விரைவாகச் செய்து முடித்தல் வேண்டும். நகுலனைப் போல இருந்தால் குறிப்பிட்ட நாளில் செய்து முடிக்க முடியாது. அதனால் வெளிநாட்டு நிறுவனத்தினர் வேலையை இடைநிறுத்தினால் என்ன ஆகும். தொடங்கப்பட்டு இடையில் நிறுத்தப்பட்ட தொழிலும், தீர்க்காத பகையும் சாம்பளுள் நெருப்புப் போல இருந்து பின் பெரிதாகித் துன்பத்தை உண்டுபண்ணும் என்று நான் கேள்விப்பட்டிருக்கின்றேன்” என்று கஜேந்திரன் கூறிக்கொண்டிருக்கும் போது அங்கு வந்த அங்குசன் சொன்னார் “உண்மை. உண்மை அதைநான் ஆதாரபூர்வமாகக் கண்டு கொண்டேன். எமது வீட்டில் வேலை செய்யும் கணபதி பலருடன் பிரச்சினைப்பட்டவன் என்பது உங்களுக்குத் தெரியும். அதனால் அவன் செய்த தீமைகளைப் பிறர் நினைத்து வைத்துச் சந்தர்ப்பம் ஏற்படும் வேளைகளில் எல்லாம் அவனைத் தாக்குகின்றனர். முன்பொருமுறை சின்னத்தம்பியும் கிருஷ்ணனும் கணபதியைக் கடுமையாகத்தாக்கியவர்கள். நேற்றும் அடித்துவிட்டார்கள்.. கணபதியின் பிள்ளைகள் காவல் நிலையத்திற்குச் சென்று புகாரிட்டனர். காவல்துறை அதிகாரி இருவரையும் அழைத்துச் சமாதானப்படுத்தியுள்ளார். எனினும் அவர்கள் பகையை மறக்கவில்லை. அதனால் இன்று காலையில் கிருஷ்ணனையும்,

சின்னத்தம்பியையும் அழைத்துப் பேசி சமாதானம் ஏற்படுத்தியுள்ளேன். அவர்கள் இருவரும் எனக்காகக் கணபதியை மன்னித்து விடுவதாகச் சத்தியஞ் செய்தனர். தீர்க்கப்படாத பகை, கஜேந்திரன் கூறியதைப்போல அணைக்காமல் விட்ட சிறு நெருப்புப்போல இருந்து பின் பெரிதாகித் துன்பத்தை உண்டாக்கும்.''

''உண்மைதான், கனகர் செய்த தீமைகளால் தானே அவருக்கு அடிக்கடி யாரோ மறைந்திருந்து தாக்குறார்கள்'' என்றார் தணிகாசலம்.

''இந்த வேலையைக் குறையாக விட்டால் எத்தனை கோடி ரூபா நட்டம் ஏற்படும். அத்துடன் இவ்வளவு பணத்திற்கும் பெறுமதியில்லாமற் போய்விடும். அத்துடன் முடிக்கப்படாத இவ்வீடுகள் கிராமத்தவர்களுக்குப் பல வழிகளாலும் தொல்லைகளைக் கொடுக்கும்'' என்றான் ஸ்கந்ததேவா.

அப்போது நகுலன் வந்து கஜேந்திரனுக்கு இரகசியமாகச் சொன்னான் ''மகா கணபதி ஆலயத்தில் வித்தியா வந்து நிற்கிறாள். உன்னைப் பார்க்க வேண்டுமாம்''

''நான் வீட்டுக்குச் சென்று வருகிறேன்'' என்றான் கஜேந்திரன்.

கஜேந்திரன் மகாகணபதி ஆலயத்திற்கு வந்தான். வெளி மண்டபத்தில் வித்தியா வாடிச் சோர்ந்த கொடியைப் போல நின்றாள். அவளது கண்களில் நீர் துளித்துப் பளபளத்தது.

உமிழ்நீரை விழுங்கிவிட்டுக் கஜேந்திரன் வித்தியாவைப் பார்த்தான். முழுமையானதொரு புன்னகை அவனது உதட்டில் மலர்ந்தது. அப்படி அவன் சிரித்தால் அவன் ''பூரணமான மகிழ்வில் இருக்கின்றான்'' என்று வித்தியாவுக்குத் தெரியும். மெல்லத் தலையைக் குனிந்து கண்களால் வழியத் தயாராக நின்ற கண்ணீரைக் கையால் துடைத்தாள். கஜேந்திரன் கோயிலின் உள்ளே செல்வதைப்போல அவளின் அருகே வந்து ''விசர் எனக்கு ஒன்றுமில்லை. நீர் அழுது என்னை வருத்த வேண்டாம்'' என்றான்.

வித்தியா நிமிர்ந்து அவனைப் பார்த்தாள். அவனது முகம் பிரகாசமாக இருந்தது.

''மகனே ஏன் வைத்தியசாலையால் வந்தாய். இன்னும் இரண்டு நாட்கள் தங்கியிருக்கலாமே ..'' என்றார் சுவாமியார்.

நேரகாலந் தெரியாமல் அருகில் வந்து நலம் விசாரித்த சுவாமியாரை அசடு வழியப் பார்த்தான் கஜேந்திரன்.

''உன்னை நான் அறிவேன். மகா கணபதியைத் தரிசித்துவிட்டுவா'' என்று கூறிவிட்டுச் சென்றார் சுவாமியார். எதை நினைத்துச் சுவாமியார் அப்படிக் கூறினார் என்று புரியாது தவித்தான் கஜேந்திரன்.

**674. வினைபகை என்றுஇரண்டின் எச்சம் நினையுங்கால்**
**தீஎச்சம் போலத் தெறும்.**

செய்யத் தொடங்கிய செயல், கொண்ட பகை என்ற இரண்டினதும் குறை, அணைக்காமல் விட்ட சிறு நெருப்புப் போலத் தெரியாமல் இருந்து வளர்ந்து அவனைக் கெடுக்கும்.

## ஐந்துடன் ஆராய்ந்து செய்தால்.

''உன்னை நான் அறிவேன். மகா கணபதியைத் தரிசித்துவிட்டு வா'' என்று கூறிவிட்டுச் செல்லும் சுவாமியாரை வெகு நேரம் பார்த்துக் கொண்டு நின்றான் கஜேந்திரன். அவர் கூறிய வார்த்தைகள் அவனை அச்சுறுத்தின. ''கடவுளைப் போல எல்லாவற்றையும் அறிந்தவர்அவர். அதனால் வித்தியாவை நான் விரும்புவதையும் அறிந்திருப்பாரோ...?'' ''மகா கணபதியைத் தரிசித்து விட்டு வா'' என்று சொன்னதன் அர்த்தம் என்னவாக இருக்கும்'' கஜேந்திரனது மனம் குழம்பியது.

கஜேந்திரன் சுவாமியாரைப் பார்த்துக் கொண்டு நின்றமையால் எரிச்சலுற்ற வித்தியா அவனின் அருகில் வந்தாள் ''விபத்துக்குள்ளானால் இரண்டு நாட்களாவது ஒய்வெடுக்க வேண்டும். நீங்கள் இல்லாவிட்டால் எந்தக் காரியமும் நடக்காது என்று நினைக்கின்றீர்கள் போல இருக்கிறது. காயப்பட்ட உடம்பைக் கவனிக்க வேண்டும். பின் நோய்கூடினால் யார் பார்ப்பது? அம்மாவும் நோயாளி?'' கையைக் கூப்பியபடி மெதுவாகக் கஜேந்திரனுக்குக் கேட்கும்படி சொன்னாள் வித்தியா.

''இவ்வளவு நாளும் இல்லாத அக்கறை இப்ப மனிசிக்கு வந்திட்டுது. நோய் கூடினால் உம்முடைய வீட்டில் வந்து படுக்கின்றேன்'' என்றான் கஜேந்திரன்.

கண்களை மூடியவாறு மகா கணபதியைக் கும்பிடுவது போலப் பாசாங்கு செய்த வித்தியா சிரிப்பை அடக்க முடியாது அவதிப்பட்டாள்.

''கல்லு மாதிரி மனிசி இருக்கு. மோதிய வாகனம் சற்றுப் பலமாக மோதியிருந்தால் மனிசியை வீட்டை கூட்டிக் கொண்டு போயிருக்கலாம்''

''நல்ல ஆள்த்தான் கூட்டிக்கொண்டு போறவர். அதற்கு ஒரு துணிவு இருக்க வேண்டும்'' என்றாள் வித்தியா.

அப்போது குருக்கள் விபூதி மடலுடன் வந்து சொன்னர் ''கஜேந்திரன் இப்படி வந்திரு. மந்திரித்து விபூதியைப் போட்டு நூல் கட்ட வேண்டும். உனக்குக் கண்பட்டு விட்டது'' என்றார்.

வித்தியா சற்று விலகி நின்றாள். குருக்கள் கஜேந்திரனுக்கு விபூதியைக் கொடுத்துவிட்டு ''பிள்ளை வித்தியா, நீயும் பூசம்மா'' என்று கூறிவிட்டுச் சிரித்தார்.

குருக்களுக்கு அவர்களது காதல் விடயம் தெரியும். வித்தியா அடிக்கடி வந்து கஜேந்திரனின் பெயரில் அர்ச்சனை செய்வாள் ''அர்ச்சனைத் தட்டு எங்கையம்மா.

கஜேந்திரனின் பெயரில் தானே...'' என்று குருக்கள் முடிக்கு முன் ''ஆம்'' என்று தலையை அசைத்தாள் வித்தியா.

கஜேந்திரனுக்கு மந்திரித்து விபூதி போட்டு நூல்கட்டிய குருக்கள் வித்தியாவிடம் அர்ச்சனைத் தட்டை வாங்கிக் கொண்டு கோயிலுள் சென்றார்.

''கஜேந்திரன் திருகோணம் என்றனீர். வித்தியா அனுசம் என்று சொல்லி இருக்கலாம் தானே'' என்றான் கஜேந்திரன்.

''அது குருக்களுக்குத் தெரியும்'' என்றாள் வித்தியா. அவளது முகம் மெல்லச் சிவந்தது.

அர்ச்சனைத் தட்டுடன் வந்த குருக்கள் அதை வித்தியாவிடம் கொடுத்துவிட்டு விபூதிச் சரை ஒன்றைக் கஜேந்திரனிடம் கொடுத்தார். பின் ''இரண்டு பேரினதும் பெயரிலும் தான் அர்ச்சனை செய்தனான்'' என்றார். வித்தியா தலை குனிந்தாள். வெக்கமாக இருந்த போதும் அளவில்லாத மகிழ்ச்சி அவளது மனதுள் குடி கொண்டிருந்தது.

'' நான் போய்வருகிறேன். கண்டபடி அலையாதைங்கோ. உடம்மைப் பார்த்துக் கொள்ளுங்கோ'' என்று கூறிவிட்டு நடந்தாள் வித்தியா. அவள் செல்லும் திசையைப் பார்த்துக் கொண்டு நின்றான் கஜேந்திரன்.

கஜேந்திரன் சுவாமியாரின் அருகில் வந்த போதுஅங்கே சுவாமியாருடன் வேலாயுத பிள்ளையும், தணிகாசலமும், பரமேஸ்வரனும் கதைத்துக்கொண்டு நின்றனர்.

''அனேகமாக இந்த வாரம் வீட்டு வேலைகள் யாவும் முடிந்துவிடும். ஒரு நல்ல நாளில் மக்களுக்கு வீட்டைக் கொடுப்போம். நாம் உற்சாகமாக வேலை செய்தமையால் குறித்த தவணைக்கு ஒரு மாதத்திற்கு முன்பே வேலைகளை முடித்துவிட்டோம். அதனால் மகிழ்ந்த வெளிநாட்டு நிறுவனத்தினர் அடுத்த வேலைத்திட்டத்தையும் எம்மிடம் தருவதாகக் கூறியுள்ளனர்'' என்றார் தணிகாசலம்.

''மகனே ஒரு செயல் வெற்றியடைய வேண்டுமானால் தொழில் செய்வதற்கு வேண்டியளவு பொருள் இருத்தல் வேண்டும். அது நம்மிடம் இருந்தது. தொழில் செய்வதற்குத் தேவையான கருவிகள் இருத்தல் வேண்டும். அதுவும் இருந்தது. தக்க காலம் அறிந்து வேலையைத் தொடங்கினோம், அத்துடன் அத்தொழிலில் தேர்ச்சி பெற்ற தொழிலாளர்கள் பலர் இருந்தனர். அத்துடன் ஏற்ற இடத்தையும் தெரிவு செய்தோம். தொழில் செய்வதற்கு வேண்டிய பொருள், தேவையான கருவிகள், தக்ககாலம், செய்யவேண்டிய முறை, தொழில் செய்வதற்கேற்ற இடம் என்ற ஐந்தையும் தெளிவாக ஆராய்ந்து செய்தால் அத்தொழில் பெரிய வெற்றியைத் தரும்.'' என்று பெரியவர்கள் சொல்வார்கள். அவை அனைத்தும் சிறந்த முறையில் இருந்ததால் வெற்றி கிடைத்துள்ளது''. என்றார் சுவாமியார்.

''பெரியதொரு வேலையை முடித்துவிட்டோம். அதனால் மகிழ்ச்சியாக இருக்கிறது'' என்றார் தணிகாசலம்.

**675. பொருள்கருவி காலம் வினைஇடனொடு ஐந்தும்**
**இருள்தீர எண்ணிச் செயல்.**

வேண்டிய பொருள், ஏற்ற கருவி, தக்ககாலம், பொருத்தமான தொழில், உரிய இடம் ஆகிய ஐந்தினையும் தெளிவாக எண்ணிச் செய்தல் வேண்டும்.

## ஆராய்ந்து செயற்படு

"இந்த வேலையை முடிக்க நாங்கள் பட்ட கஷ்டம் கொஞ்ச நஞ்சமில்லை. ஸ்கந்ததேவா நூறு வீடுகள் கட்டுவதற்குரிய பணம் முழுவதையும் உடனடியாக வெளிநாட்டு நிறுவனம் ஒன்றிடமிருந்து பெற்றுத் தருவதாகச் சொன்ன போது நான் மிகவும் மகிழ்ச்சியடைந்தேன். அதிபர் அதைக்கேட்டதும் அதிர்ச்சியடைந்து போனார் "சிறிய ஓலைக் குடிசைகளில் வாழ்ந்து கொண்டு காலம் பூராவும் கஷ்டப்பட்டு உழைக்கும் பணத்தைக் கொண்டு வீடு மேய்ந்து வாழும் மக்கள் தற்பொழுது சுனாமியால் உள்ள வீடுகளையும் இழந்து நிர்க்கதிக்குள்ளாகி விட்டனரே, அவர்களது கஷ்டங்களைப் பார்த்துக்கொண்டு உயிர் வாழும் நாம் பாவிகள்" என்று சொல்லிக் கவலைப்பட்ட அதிபர் திடீரென நூறு வீடுகள் கட்டப் பணம் கிடைத்து விட்டதெனக் கேள்விப்பட்டதும் அதிர்ச்சியடைந்தது நியாயம் தான். ஆனால் செயலைத் தொடங்கு முன்பே எமக்குப் பல இடையூறுகள் வந்துவிட்டன. கடற்கரைக்கு வெகு தூரத்தில் இருந்த அரசாங்கத்துக்குச் சொந்தமான நிலத்தைத் தன்னுடையது என்று கனகசபாபதி சொல்லி அங்கு செல்லக்கூடாது என்று தடைவிதித்தான். பிறகு நாம் கச்சேரிக்குச் சென்று மூல உறுதியை எடுத்து நீதிமன்றதத்திற்குச் சென்று காணிக்குள்ச் செல்ல கட்டளை எடுத்துக்கொண்டு வர ஒரு மாதம் முடிந்துவிட்டது. அதற்குள் ஸ்கந்ததேவா எவ்வளவு கரைச்சல்படுத்தினார் "அண்ணை உங்களை நன்கு தெரிந்தமையால் தான் இத்திட்டத்தை இங்கு தந்தேன். செய்ய முடியாவிட்டால் விடுங்கோ. நான் வேறு இடத்திற்கு மாற்றுகிறேன்" என்றார். அவரைச் சமாளிக்கவே போதும் போதும் என்றாகிவிட்டது" என்றார் தணிகாசலம்.

"ஒரு செயலைச் செய்வதென்றால் இலகுவான காரியமா...?" "தொடங்கப் போகும் செயலை நல்ல முறையில் செய்துமுடிக்கும் வகையையும் இடையே வரக்கூடிய இடையூறுகளையும் அச்செயல் முடிந்த பின்பு கிடைக்கும் பெரும் பயனை ஆராய்ந்த பின்பே தொழிலைத் தொடங்கவேண்டும்" என்று சுவாமியார் முதல்நாளே சொன்னவர். அதனால் நாம் யாவற்றையும் நன்கு திட்டமிட்ட பின்பே தொடங்கினோம். காணிப் பிரச்சினையாக நாம் கச்சேரிக்கும் நீதிமன்றத்திற்கும் சென்று கொண்டிருக்கையில் அதிபரும் கஜேந்திரனும் மற்றைய விடயங்களை நல்ல முறையில் கவனித்தனர். இருபதினாயிரம் பை சீமெந்து தேவைப்பட்டது. நூறு தொன் கம்பி தேவைப்பட்டது. ஏராளமான மரங்கள் தேவைப்பட்டன. இவற்றின் தேவையைக் கணக்கிட்டு, வேலை தொடங்கிய பின் இப்பொருட்களுக்குத் தட்டுப்பாடு எற்படுமென

உணர்ந்து முற்கூட்டியே பெரிய வர்த்தகர்களோடு கஜேந்திரனும் அதிபரும் தொடர்பு கொண்டு அவற்றிற்கு எற்பாடு செய்யாதிருந்தால் நாம் கஷ்டப்பட்டிருப்போம். இரண்டு மாதங்களுக்கு முன்பு நாட்டில் ஏற்பட்ட குழப்பம் காரணமாக எந்தப் பொருட்களும் இங்கு வரவில்லை. தொழில் செய்வதற்குப் போதிய பணமும் பொருட்களும் இருந்தமையால் தான் வேலையை விரைவாக முடித்தோம்'' என்றார் வேலாயுதபிள்ளை.

''இவ்வீட்டுத் திட்டத்தால் நூறு குடும்பங்களைச் சேர்ந்த அறுநூற்றுத் தொண்நூற்றாறு பேர் பெரும் பயனடையப் போகிறார்கள் என்பதை நினைக்க மிகவும் மகிழ்ச்சியாக இருக்கிறது'' என்றார் தணிகாசலம்.

''எல்லாவற்றிலும் பெரிய இடையூறு கஜேந்திரன் விபத்துக்குள்ளானது தான். அதனால் இரண்டு மூன்று தினங்கள் வேலை நடக்கவே இல்லை. அதை என்னால் மறக்க முடியாது'' என்றார் வேலாயுதபிள்ளை.

''வீடுகளை மக்களுக்குக் கையளிக்கும் வைபவத்தை எளிமையான முறையில் கொண்டாடுவோம்'' என்றார் விக்னேஸ்வரமூர்த்தி.

''கோலாகலமாக வேலைகளைச் செய்து முடித்தல் வேண்டும். எளிமையான முறையில் அதைக் கொண்டாடுதல் வேண்டும். எடுத்த செயலை நம் வாழ்க்கையென நினைத்து அந்தக் கனவிலேயே வாழ்ந்து, செயலுக்காக நீங்கள் உங்களை அர்ப் பணித்தமையால் தான் இவ்வேலை மிகவும் சிறப்பாக முடிவடைந்தது. சில பாக்கியவான்கள் உலகில் வாழ்ந்தால் தான் பாவிகள் வாழ்வு பெறுவார்கள். விளக்கும் திரியும் எண்ணெயும் இருந்தாலும் இருட்டு நீங்காது. அதைக் கொழுத்த தீ வேண்டும். பொருட்கள், கருவி, காலம் என்பன சரியாக அமைந்தாலும் திறமையாக வேலை செய்வோர் அமைதல் வேண்டும். தொடங்கிய செயலைச் செய்து முடிக்க வேண்டுமென்று உறுதியாக நீங்கள் இருந்த ஒரேயொரு காரணத்தினால் தான் செய்து முடித்தீர்கள். இப்படிப்பட்ட தன்மை இல்லாமற் போனதால் தான் நாட்டில் பல திட்டங்கள் செயலற்றுப்போகின்றன. இவ்வரிய செயலைச் செய்தமைக்காக மகிழ்ச்சியடையுங்கள் திருப்திப்படுங்கள் கடவுளுக்கு நன்றி சொல்லுங்கள்'' என்றார் சுவாமியார்.

**676. முடிவும் இடையூறும் முற்றியாங்கு எய்தும்**
**படுபயனும் பார்த்துச் செயல்.**

செயலை முடிக்கும் வகைகளையும், செயலைச் செய்யும் போது வரும் இடையூறுகளையும், முடியும் போது கிடைக்கும் பெரும் பயனையும் ஆராய்ந்த பின்பே ஒரு செயலைச் செய்தல் வேண்டும்.

**அனுபவங்களை அறி**

‘‘விக்னேஸ்வரமூர்த்தியைக் கணபதி மத்திய மகா வித்தியாலயத்தின் விளையாட்டுப் போட்டிக்குப் பிரதம விருந்தினராக அழைப்பதற்காக அதன் தற்போதைய அதிபர் கனகலிங்கம், விக்னேஸ்வரமூர்த்தியின் வீட்டுக்கு அதிகாலையில் சென்றார். அப்பொழுது விக்னேஸ்வரமூர்த்தி அலுவலகத்துக்குப் புறப்பட்டுக் கொண்டிருந்தார் ‘‘இன்று சங்காபிஷேகம். அதை விட்டு விட்டு இங்கு வந்திருக்கின்றீர்கள்’’

‘‘எனக்குத் துடக்கு. அதனால் மற்றய ஆசிரியர்களிடம் பொறுப்பைக் கொடுத்துள்ளேன். நீங்கள் பிரதம விருந்தினராக எமது பாடசாலை விளையாட்டுப் போட்டிக்கு வரவேண்டும்’’. என்றார் கனகலிங்கம்.

‘‘எந்த ஒரு செயலிலும் நடிப்பு இருக்கக்கூடாது. நான் உம்மை மிகவும் நேசித்ததால் தான் பல்வேறு எதிர்ப்புக்களுக்கு மத்தியில் பாடசாலையின் அதிபர் பதவியை உம்மிடம் ஒப்படைத்தேன். பேராசிரியர் சூரியகுமாரின் நினைவுப் பரிசில் நாளில் நீர் நடந்து கொண்ட முறை எனக்குப் பிடிக்கவில்லை. அதனால் தான் நீர் மாலை போடுவதை நான் விரும்பவில்லை. பின் மங்களவிளக்கும் ஏற்றவில்லை’’ விக்னேஸ்வரமூர்த்தி கூறிக்கொண்டிருக்கும் போது கனகலிங்கம் குறுக்கிட்டார் ‘‘இனிமேல் அப்படியான தவறுகள் நடைபெறமாட்டாது’’.

‘‘ சரி, பாடசாலையின் நிறுவுனர் இறந்தாலும் அப்பாடசாலையில் அவரது ஆத்மா இருப்பதாக நான் நம்புபவன். அத்துடன் மகா கணபதியின் ஆசியும் அப்பாடசாலைக்குண்டு. அதனால் வருகிறேன்’’

‘‘சரி…’’ என்று கூறிவிட்டுச் சென்றார் கனகலிங்கம்.

அன்று பகல் கனகலிங்கம் இன்னொரு ஆசிரியரையும் அழைத்துக்கொண்டு இன்னொரு பிரமுகரை விளையாட்டுப் போட்டிக்குச் சிறப்பு விருந்தினராக அழைப்பதற்காகச் சென்றார். அதைக்கேள்விப்பட்ட விக்னேஸ்வரமூர்த்தி கணபதி மத்திய மகா வித்தியாலய அதிபருக்குத் தவிர்க்க முடியாத காரணத்தினால் பிரதமவிருந்தினராக வரமுடியவில்லை என்று கடிதம் எழுதினார்.

அன்றிரவு கனகலிங்கம் கைத்தொலைபேசியில் விக்னேஸ்வரமூர்த்தியுடன் தொடர்பு கொண்டார். விக்னேஸ்வரமூர்த்தி அவருடன் கதைக்கவிரும்பாது தொடர்பைத்துண்டித்தார்.

அந்த விஷயத்தை கனகலிங்கம் தணிகாசலத்திடம் சொன்னார் ‘‘ஒரு போதும் விக்னேஸ்வரமூர்த்தி தவறாகப் பேசக்கூட மாட்டார். எந்த விஷயத்தையும் நன்கு ஆராய்ந்து திட்டமிட்டுத் தனக்கு நம்பிக்கையுடையவர்களிடம் ஆலோசனை கேட்டபின்பு தான் செயற்படுத்துவார். அதனால் அவர்திட்டமிட்டுச் செயற்படுத்த எண்ணிய எந்தச் செயலையும் யாராலும் மாற்ற முடியாது’’ என்று தணிகாசலத்திற்குத் தெரியும். அதனால் அவருடன் வேறு விடயம் கதைப்பது போலக் கதைக்கலாம் என்று அவரது வீட்டுக்குச் சென்றார்.

“வா தணி. தயவு செய்து விளையாட்டுப் போட்டி சம்பந்தமாக எதையும் கதைக்கக்கூடாது. ஒருவரது முகத்தையும் கண்களையும் வார்த்தைகளையும் கொண்டு நான் யாவற்றையும் தீர்மானித்துவிடுவேன். கனகலிங்கத்தின் கண்களும் முகமும் பதவியேற்ற பின் முற்றாக மாறிவிட்டன. நடிக்கிறார் அளவுக்கதிகமாக நடிக்கிறார். பொய், புரட்டு, ஏமாற்று, நன்றி கெட்ட தன்மை அத்தனையும் அவரிடமிருக்கு. நான் அதிபராக இருந்த காலத்தில் எனக்கு விசுவாசமாக இருப்பவர் போல நடித்தார். ஆசிரியர்களிடமும் பெற்றோர்களிடமும் என்னைப் பற்றித் தவறாகச் சொல்வார். ஆனால் என்னிடம் வந்து அவர்களைப் பற்றிக் கோள்மூட்டுவார். ஆரம்பத்தில் நான் அவரை அளவுக்கதிகமாக நம்பினேன். பின்பு விஷயத்தை அறிந்து அவரை விலக்கிக் வைத்தேன் ஜெயராசா சொன்னவன் “அதிபர், கனகலிங்கம் வாத்தியாரை நம்பாதைங்கோ. அவர் தனது நன்மைக்காக எதையும் செய்வார்.” அது நூறு வீதம் உண்மை” என்றார் விக்னேஸ்வரமூர்த்தி. அவரது குரல் தழுதழுத்தது.

விக்னேஸ்வரமூர்த்தி இப்படிக் கவலைப்பட்டதைத் தணிகாசலம் இதுவரை கண்டதில்லை “நீங்கள் அவரிடம் பொறுப்பைக் கொடுத்தது எனக்கு விருப்பமில்லை. அவர் உங்களுக்கு எதிராகச் செயற்பட்ட ஆசிரியர்களோடு மிகவும் நட்பாக இருந்தவர். நான் பலமுறை சொல்ல நினைத்தனான். எனினும் நீங்கள் அறிவு மிக்கவர். ஆராயாது எதையும் செய்யமாட்டீர்கள் என்று நினைத்துப் பேசாமல் இருந்தேன்” என்றார் தணிகாசலம்.

“சில விஷயங்களில் அளவுக்கதிகமாக அவருக்குக் கடமைப்பட்டு விட்டேன். எனக்கு அவரது குணங்கள் தெரிந்தாலும் இனியாவது திருந்துவார் என்று நம்பினேன். எனது நம்பிக்கை வீணாகி விட்டது. எமக்குத் தீமை செய்தவர்களுக்கும் நன்மை செய்ய வேண்டும். ஆனால் நிர்வாகத்தில் பங்கு கொடுக்கக்கூடாது. நம்பக்கூடாதவர்களையும் நம்புவது போல நடிக்க வேண்டும் என்று நினைக்கிறார். அது ஆபத்தில் தான் போய் முடியும்”

“எடுத்துக்கொண்ட செயலில் வெற்றியடைய விரும்புகின்றவன், முன்னரே அது போன்ற செயல்களில் ஈடுபட்டு வெற்றியடைந்தவர்களின் ஆலோசனைகளைப் பெற வேண்டும். அதைவிட்டு விட்டு வேடதாரிகளை நம்பினால் மானம் கெடவேண்டிய நிலை உருவாகும். அது விரைவில் நடக்கும்” என்றார் தணிகாசலம்.

“என்னுடைய பிள்ளை பாடசாலை தான். இப்ப எனக்கு அங்கு போகவே விருப்பமில்லை. நான் அங்கு செல்வதையும் கனகலிங்கம் பெரிதாக விரும்புவதில்லை. நான் சென்றால் தனது பொட்டுக்கேடுகள் வெளியாவிடும் என நினைக்கின்றார். பாடசாலை கெட்டுப் போவதை என்னால் அனுமதிக்க முடியாது.” என்றார் விக்னேஸ்வரமூர்த்தி.

தணிகாசலத்திற்குக் கவலையாக இருந்தது. தணிகாசலம் விளையாட்டுப் போட்டிக்குப் பிரதம விருந்தினராக விக்னேஸ்வரமூர்த்தியை அழைக்கச் சொல்லியிருந்தார். ஆனால் இப்பொழுது விக்னேஸ்வரமூர்த்தி அங்கு செல்வதை தணிகாசலம் விரும்பவில்லை.

" எனக்கும் இப்பாடசாலைக்குச் செல்ல விரும்பமில்லை.

"தவறான செயலைச் செய்துவிட்டேனோ......?" என்ற எண்ணம் மெல்ல விக்னேஸ்வரமூர்த்தியின் மனதில் நுழைந்தது.

**677. செய்வினை செய்வான் செயல்முறை அவ்வினை**
**உள்ளறிவான் உள்ளம் கொளல்.**

செயலைச் செய்யத் தொடங்க முன் அச் செயலைச் செய்ய வேண்டியமுறைகளை, அந்தச் செயலின் உண்மையான இயல்பை அறிந்தவனிடம் கேட்டுத் தெளிந்து கொள்ளல் வேண்டும்.

யானையை வைத்து.

"ஒருவன் ஒரு செயலைச் செய்யும் போது, அதற்குத் தொடர்பான மற்றொரு செயலையும் சேர்த்து முடித்துக் கொள்ளுதல் என்பது, ஒரு யானையை வைத்து மற்றொரு யானையைப் பிடிப்பது போன்றது." என்று நீங்கள் அடிக்கடி கூறுவீர்கள். ஒவ்வொரு செயலிலும் அந்த முறையைக் கடைப்பிடிப்பீர்கள். ஸ்கந்ததேவா பாடசாலைக்கு வந்த போது தனது தந்தையாரின் நினைவாக நூறு கணணிகளைத் தந்தார். பின் அக்கணணிகள் வைப்பதற்கு ஒரு நவீன வசதிகளமைந்த மண்டபத்தைக் கட்டித் தந்தார். அத்துடன் வெளிநாட்டு நிறுவனத்தினருடன் தொடர்பு கொண்டு சுனாமியால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நூறு வீடுகளைக் கட்டித்தந்தார். ஒரு செயலை ஒருவனைக் கொண்டு செய்விக்கும் போது அவர் வேறு பலசெயல்களைச் செய்யவிரும்பும் மனநிலையை உருவாக்குதல் வேண்டும். அத்துடன் அதைப் பார்க்கும் பிரமுகர்கள் தாமும் பல செயல்களைச் சமூகத்திற்குச் செய்ய வேண்டும் என்ற நிலையை உருவாக்குதல் வேண்டும். அப்படி நீங்கள் பல செயல்களைச் செய்து இரட்டிப்புப் பலன்களைப் பெற்றுள்ளீர்கள். அதைப்போல உங்களிடம் ஆலோசனைகள் பெற்று மக்களும் ஏனைய பாடசாலை அதிபர்களும் செயலாற்றினர். நாவலர் தமிழ் வித்தியாலய அதிபர் உங்களிடம் பெற்ற ஆலோசனையின் பயனால் தான் அன்ரன் சில்வெஸ்ரரைக் கொண்டு முன்நூறு அடி மதில் கட்டுவித்தார். அதன் பின் அவரைக் கொண்டு ஐந்து லட்சம் ரூபாவுக்குப் பொருட்களைப் பெற்றார். பின்னர் சிறுவர் பாதுகாப்பு நிறுவனத்தினருடன் தொடர்பு கொண்டு ஐந்நூறு உழவு இயந்திரப் பெட்டி மண் பாடசாலைக்குப் போட்டுப் பள்ளத்தை நிரவினார். அதனால் திருப்திப்பட்ட சிறுவர் பாதுகாப்பு நிறுவனத்தினர் பாடசாலை விளையாட்டு மைதானத்திற்கு மதில் கட்டி அலங்காரப் படலைகளையும் செய்து கொடுத்தனர். எப்பொழுதும் செயல் வீரன் ஒரு கல்லில் இரண்டு மாங்காய்களைப் பெறுவான். ஆனால் கனகலிங்கம் தரம் ஒன்று கால்கோள் விழாவிற்கு ஊர்பேர் தெரியாத தனது நண்பர் ஒருவரின் தாயாரை அழைத்து வந்து விழாவைக் கொண்டாடினார். அவர்கள் இந்த ஊரவர்களல்ல.

தற்பொழுது அவ்ஆசிரியையின் மகள் பத்துமைல்களுக்கப்பால் இருக்கும் கிறிஸ்தவ தனியார் பாடசாலையில் தனது மகளைத் தரம் ஒன்று வகுப்பில் நாற்பதினாயிரம் ரூபா நன்கொடையாகக் கொடுத்துச் சேர்த்துள்ளார். இதை மக்களும், ஆசிரியர்களும் பெரும் விஷயமாகக் கதைத்தனர். இது கனகலிங்கத்துக்குத் தெரியாது. கனகலிங்கம் தான் செய்யும் சிறிய விடியங்களையும் பெரிதாக எண்ணி மகிழ்வார். அத்துடன் தன்னைப் பற்றிப் புகழ்பவர்கள் எல்லோரும் உண்மையாகத் தான் புகழ்கின்றனர் என்று நினைத்து மகிழ்ச்சியடைகிறார். இது ஆரோக்கியமானதல்ல. அவரைப்புகழ்பவர்கள் அவரைப்போல இருப்பவர்கள் என்று ஏன் அவருக்குப் புரியவில்லை என்று நான் நினைத்துக் கலங்குறேன்'' என்றார் தணிகாசலம்.

''நல்ல மனம் உள்ளவர்களுக்குத் தான் உலக நடப்பு விளங்கும். நான் தவறு செய்துவிட்டேனோ என்று பயப்படுகிறேன். நான் கட்டி வளர்த்த பாடசாலை. மாகாணக் கல்விப்பணிப்பாளரில் இருந்து சாதாரண தொழிலாளி வரை இப்பாடசாலையின் முன்னேற்றத்தைத் தடுக்கப் பெரும் பிரயத்தனப்பட்டவை. பெரிய பெரிய அதிகாரிகளாலோ அயற்பாடசாலை அதிபர்களாலோ கெடுக்க முடியாத இப்பாடசாலையைக் கனகலிங்கம் கெடுத்துவிடுவான் போலத் தெரிகிறது'' என்றார் விக்னேஸ்வரமூர்த்தி.

''இப்போ பாடசாலையில் என்ன நடைபெறுகிறது என்று தெரியவில்லை. எல்லாம் மூடு மந்திரம் போல இருக்கு. விஷயம் முடிந்து பத்துப்பதினைந்து நாட்களுக்குப் பின் அரைகுறையாக ஏதைவது சொல்கிறார். அதற்கு முன்பே நான் செய்திகளை அறிந்து விடுவேன். தன்னுடைய பகைவர்கள், தனக்கு விரோதமானவர்கள் என்று கனகலிங்கம் சொல்பவர்களுடன் தான் நெருங்கிப் பழகுகிறார்.'' என்றார் தணிகாசலம்.

''எல்லாம் நடிப்பு. பதினாறு வருடங்களாக என்னுடன் நடித்தவர் இப்ப பலருடன் நடிக்கிறார். அதுமிகவும் ஆபத்தானதென்று அவருக்குப் புரியவில்லை. இவரது எதிரிகள் இப்போது சந்தர்ப்பம் சரியில்லையென்று நினைத்துப் பதுங்கி இருக்கின்றார்கள்'' என்று விக்னேஸ்வரமூர்த்தி கூறிக்கொண்டிருக்கும் போது தணிகாலசம் குறுக்கிட்டார் ''நீங்கள் ஆசிரியர் தினத்திலும், பிரியாவிடையின் போதும் ஆசிரியர்களின் குழுக்கூட்டங்களிலும் பேசியதை நினைத்துப் பயப்படுகிறார்கள். ''நீங்கள் இது எனது பாடசாலை. எனது இனத்தவர்களினதும், அயலவர்களினதும், நண்பர்களினதும் பிள்ளைகள் தான் இங்கு கற்கின்றனர். இப்பாடசாலைக்குக் கனகலிங்கம் தான் அதிபர். அவருடன் முரண்பட்டால் முரண்படுவோர்களை இடமாற்றஞ் செய்வேன் என எச்சரிக்கும் உரையை நீங்கள் ஆற்றியதால் உங்களுக்குப் பயப்படுகிறார்கள். அப்படியிருந்தும் கேவலமான பல குற்றச்சாட்டுக்கள் கல்வித் திணைக்களத்திற்கு வந்த போதும் அதை நீங்கள் சமாளித்து விட்டீர்கள்'' என்றார் விக்னேஸ்வரமூர்த்தி.

“அவையெல்லாம் உண்மை. ஆனால் நான் அவற்றைத் தவறென்று கூறி மறைத்துவிட்டேன்.” கவலைப்பட்டார் விக்னேஸ்வரமூர்த்தி. அவரைப் பார்க்க தணிகாசலத்திற்குக் கவலையாக இருந்தது.

**678. வினையால் வினையாக்கி கோடல் நனைகவுள்**
**யானையால் யானையாத் தற்று.**

ஒரு செயலைச் செய்யும் பொழுது அதற்குத் தொடர்பான மற்றொரு செயலையும் செய்து முடித்தல் என்பது, ஒரு யானை மூலம் மற்றொரு யானையைப் பிடித்தலைப் போன்றது.

## விரைவாகச் செய்ய வேண்டியது

“நான் செய்த தவறு நண்பர்களானவர்களுக்குத் தொடந்தும் நன்மை செய்து கொண்டிருந்தேனே தவிரப் பகைவரை நண்பர்களாக்கிக் கொள்ளவில்லை. நண்பர்களுக்கு நன்மை செய்வதை விட மிக விரைவாகச் செய்ய வேண்டியது பகைவர்களை நண்பர்களாக்கிக் கொள்ள வேண்டுமென நான் அப்போது உணரவில்லை. மிகவும் நல்ல ஆசிரியர்களான கலாவையும், முத்துக்குமாரசாமியையும் இடமாற்றஞ் செய்தது மிகப் பெரிய தவறென நினைக்கிறேன். மிகவும் நம்பிக்கைக்குரியவரென நான் கனகலிங்கத்தை நம்பியதால் தான் அந்தத் துர்ப்பாக்கிய நிகழ்வு நடந்தது. கனகலிங்கம் தன் நலனுக்காக எதையுஞ் செய்வார். அந்தச் சந்தர்ப்பத்தை இன்னொரு ஆசிரியரோடு சேர்ந்து தனக்குச் சாதகமாகப் பயன்படுத்திக் கொண்டார். அதை நான் அப்பொழுது உணரவில்லை.” என்றார் விக்னேஸ்வரமூர்த்தி.

“அப்பவே நான் இதைச் சொன்னனான். கனகலிங்கம் இரட்டை வேடம் போடுவதிலும் நம்பியவர்களைக் கெடுப்பதிலும் வலு சூரன். அவரது இளமைக் காலத்தை எடுத்துப் பார்த்தால் யாவும் புரியும்.. நான் திரும்பத்திரும்பச் சொன்ன போதும் நீங்கள் முத்துக்குமாரசாமியின் விடியத்தில் அக்கறை காட்டவில்லை. அப்பொழுது என்னைச் சந்தித்த முத்துக்குமாரசாமி சொன்னார் “தணியண்ணை என்ரை சேவை உங்களுக்குத் தெரியும். பாடசாலைக்காக நான் மட்டுமல்ல எனது குடும்பமும் தம்மை அர்ப்பணித்தது. நாங்கள் குடும்பமாக எந்த விழாவில் கலந்து கொள்ளவில்லை. அதிபர் நன்றி கெட்டத் தனமாக மயக்கு மொழிகளையும் ஏமாற்று வார்த்தைகளையும் நம்பிப் பாடசாலைக்கு அர்ப்பணிப்புடன் நடந்த என்னைப் பாடசாலையை விட்டு வெளியேற்றுகிறார். இது மகா தவறு என்று அவர் ஒரு காலம் உணருவார். அத்துடன் தான் அதிபராக இப்பாடசாலைக்கு வரவேண்டுமென்ற நோக்கில் அவர் நம்பிக்கையானவர் மாதிரி நடிக்கிறார். அந்த உண்மையும் வெளிவரும் போது

அதிபருக்கு இரத்த அழுத்தம் வரும். இருந்து பாருங்கோ…'' என்றவர் இப்ப அது சரியாக இருக்கு''

''உண்மைதான். கனகலிங்கம் பல விடயங்களில் என்னைச் சிந்திக்க விடவில்லை. நான் தவறாக நடந்தது உண்மை தான். முத்துக்குமாரசாமியின் பக்கம் நின்று பிரச்சினையைத் தொடங்கிய ஆசிரியை தான் இப்பொழுது கனகலிங்கத்துடன் சேர்ந்து இவ்வளவும் செய்கிறாள். அவளைப் பற்றிப் பலமுறை நான் எடுத்துச் சொல்லியும் கனகலிங்ம் கேட்பதாக இல்லை. அவள் தன் மீது பொய்ச்குற்றச் சாட்டுக்களைக் கல்வித் திணைக்களத்திற்கு எழுதிவிடுவாளெனப் பயப்படுகிறார். அவளோடு எப்படிப் பழகினாலும் அவளது குணத்தை மாற்ற முடியாது. என்னால் மற்றவர்களுக்குக் கூற முடியாத சில தகவல்களைத் தெரிவிப்பதற்காக அவளிடம் சொல்வேன். அதை அவள் நம்பி எல்லோருக்கும் சொல்வாள். ஆனால் நான் பின்வேறு நடவடிக்கைகள் தான் எடுப்பேன்'' என்றார் விக்னேஸ்வரமூர்த்தி.

''நீங்கள் கனகலிங்கத்தை எப்படி நினைக்கின்றீர்கள்?. அவர் ஆசிரியையை நம்புகிறாரென்று நினைக்கிறீர்களா...? கரும்பலகையில் செய்திகளை எழுதவும் வழித்துணைக்குக் கூட்டிச் செல்லவும் தான் பாவிக்கிறார். அன்று அப்பிரமுகரைச் சந்திக்கக் கூட்டிச் சென்று வாசலில் விட்டுவிட்டுத் தான் மட்டும் உள்ளே சென்றார்'' என்று தணிகாசலம் கூறிக்கொண்டிருக்கையில் விக்னேஸ்வரமூர்த்தி குறுக்கிட்டுச் சொன்னார் ''தணி எத்தனை நாட்களுக்குப் போலியாக நடந்து கொள்ள முடியும். நண்பர்களை விசுவாசிக்க வேண்டும். எதிரிகளை மதிக்க வேண்டும். இதைப் போலியாகச் செய்தால் பிரச்சினை வந்த காலத்தில் உதவ யாரும் இருக்க மாட்டார்கள்.''

''ஏன் நீங்கள் இருக்கின்றீர்கள் தானே. இரத்தினபுரி மாவட்டத்திலை ஆசிரியர்களாக இருந்த கணவன் மனைவி இருவருக்கும் சொந்த ஊருக்கு இடமாற்றம் பெற்றுக்கொடுத்தீர்கள். பின் அவரது மனைவியின் விருப்பத்திற்கு மாறாக இடமாற்றம் செய்தமையால் அவருக்காகக் கல்விப் பணிப்பாளரை எதிர்த்தீர்கள். அவர் பின் உங்களுக்கெதிராக எத்தனை நடவடிக்கைகளில் ஈடுபட்டார். அதை அறிந்த பிறகும் உதவி செய்தீர்கள். நாளைக்குக் கனகலிங்கம் வந்து மயக்கு வார்த்தைகளைக்கூற மனம் மாறிவிடுவீர்கள். எனக்கென்றால் நீங்கள் அந்த நேர ஆத்திரத்தில் விளையாட்டுப் போட்டிக்கு வரமாட்டன் என்று கடிதம் எழுதிவிட்டீர்கள். கனகலிங்கம் வந்ததும் உருகிவிடுவீர்கள். அவரது ஏமாற்றுப் பேச்சில் மயங்கிவிடுவீர்கள்.'' என்றார் தணிகாசலம்.

''இப்ப நான் மூன்று மாத காலமாக அவரின் வீட்டுக்குச் செல்லவில்லை. நான் போகமாட்டன்'' என்றார் விக்னேஸ்வரமூர்த்தி.

''நான் இருந்து பார்க்கத்தான் போறன்'' என்று தணிகாசலம் சொல்ல விக்னேஸ்வரமூர்த்தி சிரித்தார்.

**679. நட்டார்க்கு நல்ல செயலின் விரைந்ததே**

**ஒட்டாரை ஒட்டிக் கொளல்.**

நண்பர்களுக்கு உதவிகள் செய்வதை விட, மிக விரைவாகச் செய்ய வேண்டியது பகைவர்களாக உள்ளவர்களை நண்பராக்கிக் கொள்வது.

## வலிமையைப் பொறுத்து

விக்னேஸ்வரமூர்த்தியைச் சந்தித்துக் கதைத்துவிட்டு சொல்கிறேன்'' என்று கூறிவிட்டுச் சென்ற தணிகாசலம் இரண்டு நாட்கள் கழிந்தும் கனகலிங்கத்தைச் சந்திக்கவில்லை. அவர் கனகலிங்கத்தைச் சந்திப்பதைத் தவிர்த்து வந்தார். அந்த இரண்டு நாட்களும் பாடசாலைத் தொழிலாளர்களைத் தணிகாசலத்தின் வீட்டுக்கு அனுப்பித் தணிகாசலத்தைத் தன்னை வந்து சந்திக்கும்படி சொல்லியனுப்பினார் கனகலிங்கம். அவர்கள் வந்து தணிகாசலத்திடம் அதைச் சொன்ன போது அவர் சந்திப்பதாகக் கூறினாரே தவிரச் சென்று சந்திக்கவில்லை. அது கனகலிங்கத்துக்குச் சற்றுக் கவலையைக் கொடுத்தது. அத்துடன் பரிசளிப்பு விழாவுக்கு அழைப்பிதழ் கொடுத்தும் கோட்டக்கல்வி அதிகாரி அவ்விழாவுக்கு வரவில்லை. விளையாட்டுப் போட்டிக்குச் சிறப்பு விருந்தினராக வருகை தரும்படி கோட்டக் கல்வி அதிகாரியைக் கேட்டும் அவர் மறுத்துவிட்டார். அதுவும் கனகலிங்கத்திற்குக் கவலையைக் கொடுத்தது. அதனால் கனகலிங்கம் வேலாயுதபிள்ளையைச் சந்தித்துக் கதைக்கலாமென்று சென்றார்.

சனசமூக நிலையத்திற்கு முன்னால் நின்ற வாகை மரத்தின் கீழ் அமர்ந்திருந்தார் வேலாயுதபிள்ளை. அவரைக் கண்டதும் காணாதவர் போல பத்திரிகையைத் தலைக்குச் சற்று மேலாக உயர்த்திப் பிடித்தார்.

''வேலாயுதம்''

''கனகலிங்கம் வாத்தியாரே....? எட ட ட நான் அப்படிச் சொல்லக்கூடாது. அதிபர் வாங்கோ....'' என்று சிரித்தார்.

அந்த வார்த்தைகள் அவரைக்கேலி செய்வதைப்போல இருந்தது. ''உன்னுடன் ஒன்று கதைக்க வேண்டும்'' என்றார் கனகலிங்கம்.

''சொல்லுங்கோ'' என்றார் வேலாயுதபிள்ளை.

''விளையாட்டுப்போட்டி...''என்று கூறிவிட்டு நிறுத்தினார் கனகலிங்கம். அதன் பின் வெகு நேரம் வரை கனகலிங்கம் பேசாததால் வேலாயுதபிள்ளை சொன்னார் ''நீங்கள் பதவியேற்ற காலத்திலிருந்து நடந்து கொள்ளும் முறை சரியில்லை. இங்குள்ள யாரும் விக்னேஸ்வரமூர்த்தி அதிபர் கூறுவதற்குப் பதில் பேச்சுக் கூறமாட்டினை. அத்துடன் பாடசாலை ஆசிரியர்களும் அவருக்குப் பயந்து தான் பிரச்சினைகள் தராமல் இருக்கிறார்கள். நீங்கள் அதை மறந்து உங்களின்

திறமையால் தான் யாவும் நடைபெறுவதாக நினைக்கிறீர்கள். அது அழிவுக்குத் தான் வழிவகுக்கும். விக்னேஸ்வரமூர்த்தி யாருக்கும் கெடுதல் நினைக்க மாட்டார் அதைவிடத் தீமையான செயல்கள் எதுவும் செய்யமாட்டார். இப்பவும் காலம் கடந்துவிடவில்லை. நீர் திருந்தி நடக்கலாம்'' என்றார் வேலாயுதபிள்ளை.

''விளையாட்டுப் போட்டிக்குப் பிரதம விருந்தினராய் அவரை அழைப்பதாக எல்லோரிடமும் சொல்லிவிட்டோம். இப்ப அவர் மறுத்தால் எல்லோரும் என்னைக் குறைகூறுவார்கள்'' என்றார் கனகலிங்கம்.

''எல்லாவற்றையும் முன்பே நீங்கள் நினைத்திருத்தல் வேண்டும். விக்னேஸ்வரமூர்த்தி கொள்கைக்காக வாழ்பவர். அவரால் திருகுதாளங்களைச் சீரணிக்க முடியாது. அவருடன் பல காலம் பழகிய உங்களுக்கு அவரின் குணங்களைப் பற்றித் தெரியாதா...? தணிகாசலத்திடம் நீர் சொல்லிவிட்டும் அவர் விக்னேஸ்வரமூர்த்தியின் வீட்டுக்குச் செல்லவில்லை. ஏனென்றால் தீயவற்றைக் கதைப்பதையே அவர் விரும்பமாட்டார். தணிகாசலம் உமக்காகக் கதைத்தால் அவர் தணிகாசலத்துடனும் கதைக்க மாட்டார். வலிமை குறைந்தவன் வலிமையுள்ளவனோடு பகைக்கக்கூடாது. அப்படிப் பகைத்தாலும் வெல்ல முடியாது. பணிந்து செல்வது தான் பிழைக்கத் தெரிந்த வழி. இல்லாவிட்டால் கரைச்சல் தான். நீதிநூலொன்றில் நான் படித்த வாக்கியங்கள் இப்போது எனக்கு நினைவுக்கு வருகின்றன. சொல்கிறேன் கேளுங்கள். ''வலிமை குறைந்தவர், தம்மைச் சார்ந்துள்ளவர்கள் துன்பப்படுவார்கள் என்பதற்காகத் தான் அஞ்சி, வேண்டியது கிடைக்குமானால் வலிமை மிக்கவனைப் பணிந்து ஏற்றுக்கொள்வர்'' நீர் பகைத்தால் பாடசாலைக்கும் மாணவர்களுக்கும் எவ்வளவு நட்டம் வரும் தெரியுமா...? அர்ப்பணிப்புடன் வேலை செய்த அவரைப் பார்த்தாலே புண்ணியம் கிடைக்கும்'' என்றார் வேலாயுதபிள்ளை.

''நான் வாறன் வேலாயுதம். இந்த முறை விக்னேஸ்வரமூர்த்தி தான் விளையாட்டுப் போட்டிக்குப் பிரதம விருந்தினராக வரவேண்டும். அந்த உதவியைச் செய்து தாருங்கள்'' என்று கூறிவிட்டுப் புறப்பட்டார் கனகலிங்கம்.

''எந்தப் பெரிய பாடசாலைக்கு அதிபராக்கிவிட்டார் என்ற நன்றியில்லாமல் பாடசாலைக்கும் அதிபருக்கும் விரோதமானவர்களுடன் கூட்டுச்சேர்ந்து கொண்டு பொய்யும் புரட்டும் ஏமாற்றும் செய்யும் உமக்குக் கட்டாயம் அதிபர் வருவார்'' என்று மனதுக்குள் நினைத்தார் வேலாயுதபிள்ளை.

**680. உறைசிறியார் உள்நடுங்கல் அஞ்சிக் குறைபெறின்**
**கொள்வர் பெரியார்ப் பணிந்து.**

வலிமை குறைந்தவன், தனது பகைவனின் வலிமையைக் கண்டு தன்னைச் சார்ந்தவர்கள் அஞ்சி நடுங்கும் நிலை நேர்ந்தால் அதற்காகத் தான் அஞ்சி, வலிமை மிக்கவனைப் பணிந்து அவனை ஏற்றுக் கொள்வான்.